
நெஞ்சமெல்லாம்
நேசிப்பாயா
பிரேமா

# முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே!

உங்களை என்னுடைய இருபத்தி இரண்டாவது கதையில் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இக்கதாநாயகனின் குறும்பும் நாயகியின் வெகுளித் தனமும் உங்கள் முகத்தில் புன்னகையை வரவழைக்கும் என நம்புகிறேன்.

என்னுடைய கதைகளின் நிறை குறைகளை என்னுடைய மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் முகநூல் பக்கத்தின் மூலமாகவும் அனுப்பி வைத்து என்னை உற்சாகப்படுத்தும் அனைத்து நல்இதயங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பதிப்பாளர் அருணோதயம் திரு.அருணன் ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள் பல உரித்தாகுக.

அன்புடன்,

**பிரேமா**

premaarumugamyahoo.com

Facebook Page : Prema Novels

# நெஞ்சமெல்லாம் நேசிப்பாயா

## 1

புது டில்லியில் இருந்து கிளம்பிய விமானம் சென்னையில் தரை இறங்கியது. பயணிகள் அனைவரும் பரபரப்பாய் வெளியேற ஆரம்பித்தார்கள்.

விக்ரம் கொஞ்சம் கூட அவசரம் காட்டாமல் நிதானமாய் வெளியேறினான். காத்திருந்து தன் பெட்டிகளை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

அங்கே இருந்த டாக்சி கவுண்டருக்கு சென்று டக்கென ஒரு வாடகை காரை அமர்த்தி கொண்டான்.

அதில் ஏறி அமர்ந்து அடையாறை நோக்கி பயணிக்க ஆரம்பித்தான். ஐம்பது வயதை தாண்டிய ஒரு ஓட்டுநர்

காரை ஓட்டிக் கொண்டே அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

''அடையாறுல எங்கே தம்பி போகணும்?''

''இந்த அட்ரஸுக்கு போகணும்.'' என்று விலாசத்தை வாசித்துக் காண்பித்தான்.

''இப்போ தான் முதல் தடவையா போறீங்க போல! நான் சொன்னது சரி தானே?''

''ஆமாம்.'' என்று அவன் சொன்னதும் அந்த ஓட்டுநர் கேள்வி மேல் கேள்வியாய் கேட்டு அவனை துளைத்தெடுத்தார்.

''டில்லி ஃபிளைட்டில இருந்து தானே இறங்கி இருக்கீங்க. அப்போ அங்கேயே தான் பிறந்து வளர்ந்தீங்களோ?''

''ஆமாம்.''

''ஆனா தமிழ் குடும்பம் போல. அதான் தமிழ் நல்லா பேசுறீங்க.''

''நான் எப்போ வாயை திறந்து பேசினேன்? நீங்க தான் வாய் மூடாது பேசுறீங்க'' என்று விக்ரம் தன் மனதோடு நினைத்துக் கொண்டான்.

''அம்மா, அப்பால்லாம் டில்லில இருக்காங்களோ?''

''ஆமாம்.''

''தம்பிக்கு கல்யாணம் ஆகிடுச்சா?''

''இல்லை.''

''அப்போ பொண்ணு பார்க்க தான் சென்னை வந்திருக்கீங்களா? சரி தான். என்ன தான் வடநாட்டில் பிறந்து வளர்ந்தாலும் நம்ம ஊர் பொண்ணை தான்

கட்டணும்னு நினைக்கிறீங்க பாருங்க... அங்க தான் தம்பி நீங்க உசந்துட்டீங்க.''

''..........................''

''உங்க கூட அம்மா அப்பா வரலையா?''

''இல்லை.''

''கடைசி நிமிஷத்துல வேலை வந்துடுச்சா? பொண்ணு வீட்டை ஏமாத்தக் கூடாதுன்னு நீங்க மட்டும் கிளம்பி வந்தீங்களா?''

''ம்ம்ம்...''

''உண்மையிலே உங்களுக்கு பெரிய மனசு தம்பி. நீங்க ரொம்ப உசந்துட்டீங்க.''

''பார்த்து ரொம்ப உசந்து உங்க வண்டி கூரையை பிச்சுடப் போறேன்'' என்று மனதோடு நக்கல் செய்து கொண்டான்.

அவன் சொன்ன விலாசத்தில் அவனை கொண்டு வந்து இறக்கி விட்டு சென்றார்.

விக்ரம் தன் பெட்டிகளை தள்ளிக் கொண்டு மின் தூக்கியை நோக்கி சென்றான். முதல் மாடியில் இருந்த [illegible] வீட்டின் முன் சென்று நின்றான்.

தன் பேண்ட் பாக்கெட்டில் கை விட்டு ஒரு சாவியை எடுத்தவன் வீட்டை திறந்தான். பெட்டிகளை இழுத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

விஸ்தாரமான வரவேற்பறையும், குளியலறை வசதி உடன் கூடிய மூன்று படுக்கை அறைகளும், நவநாகரீக சமையலறையும் கொண்ட அந்த வீட்டினைச் சுற்றி பார்வையால் ஓட்டினான். அனைத்து இடங்களும் காலியாய் இருந்ததால் மிகவும் பெரிதாகத் தோன்றியது.

'என் ஒருத்தனுக்கு இந்த வீடு ரொம்ப பெருசோ?' என்று எண்ணினான்.

அவனது அலைபேசி அப்பொழுது சிணுங்கியது. அவனது நண்பன் கைலாஷ் அழைத்திருந்தான்.

''சொல்லுடா பிஸி பிசினஸ் மேன்.''

''சாரிடா விக்ரம். கடைசி நிமிஷத்துல ஒரு அர்ஜெண்ட் வொர்க். அதான் என்னால ஏர்போர்ட்டுக்கு வர முடியலை.''

''நான் உன்னை எதுவுமே கேட்கலையேடா. ஐ கேன் மேனேஜ்னு நான் தான் அப்பவே உன்கிட்ட சொன்னேன்ல.''

''எப்படியாவது வந்துடலாம்னு தான் நினைச்சேன்.''

''போதும் நிறுத்துடா. விட்டால் என் காதுல ரத்தம் வரும் வரைக்கும் புலம்புவே. நான் சொன்னதை செஞ்சியா இல்லையா. அதை மட்டும் சொல்லு.''

''நீ சொன்ன மாதிரி உன்னோட ரூம்க்கு ஏசி பிட் பண்ணிட்டேன். நீ ஆர்டர் பண்ணின கட்டிலும் மெத்தையும் வந்துடுச்சு.''

''அது போதும்டா. நான் தூங்கப் போறேன். ரம்பம் போடாமல் போனை வை.''

''உன்னோட திங்ஸ் எல்லாம் எப்போடா வரும்?''

''நாளைக்கு வந்துடும். அதை அடுக்கி வைக்கவே ரெண்டு நாள் ஓடிப்போயிடும்.''

''சரிடா விக்ரம். சாப்பிட்டியா?''

''எல்லாம் ஆச்சு. நான் போய் தூங்கிறேன். இப்போ போனை வைக்கிறேன்.'' என்றவன் அழைப்பை துண்டித்தான்.

உடையை மாற்றியவன் படுக்கை அறைக்குள் சென்று ஏசியை இயக்கி படுக்கையில் விழுந்த அடுத்த நிமிடம் தூங்கிப் போனான்.

ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்கு புலம் பெயர்வது என்றால் அவ்வளவு எளிதா என்ன?

கடந்த சில தினங்களாய் அதிகப்படியாய் செய்த வேலையினால் சரிவர தூங்காமல் இருந்தான். அதனால் படுக்கையில் விழுந்த அடுத்த நொடி அவனை நித்திரா தேவி தழுவிக் கொண்டாள்.

மறுநாள் வேலைக்கு செல்ல வேண்டிய தேவை எதுவும் இல்லாததால் காலை ஒன்பது மணி வரை அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

அவன் குளித்து முடித்து சாப்பிட செல்லலாம் என நினைக்கும் பொழுது அவன் நண்பன் கைலாஷ் தன்னிடம் உள்ள சாவி கொண்டு வீட்டை திறந்து உள்ளே நுழைந்தான்.

''என்னடா எழுந்துட்டியா? நான் வந்து தான் திருப்பள்ளி எழுச்சி பாடணும்னு நினைச்சேன்.''

''செம தூக்கம்டா. இப்போ கூட பசி வயிறை கிள்ளலைன்னால் இன்னும் கொஞ்ச நேரம் தூங்கி இருப்பேன்.''

''சாப்பாடு கொண்டு வந்திருக்கேன். சாப்பிடு.'' என்றதும் விக்ரம் வேறு எதையும் பேசாமல்

மடமடவென்று சமையல் மேடையில் உணவினை வைத்து உண்ண ஆரம்பித்தான்.

எந்தெந்த வேலைக்கு யார் யார் வருவார்கள் போன்ற விவரங்களை கைலாஷ் தெரிவித்தான்.

"புது பைக் வாங்கிற வரைக்கும் ஓட்டுறதுக்கு உனக்கு ஒரு பைக் வேணும்னு கேட்ட இல்ல. அதுவும் இப்போ வந்துடும். அதோட ஒரிஜினல் டாக்குமெண்ட்ஸ் இதிலே இருக்கு." என்று ஒரு கவரை விக்ரமிடம் கொடுத்தான்.

"தாங்க்ஸ்டா."

"அடி வாங்குவடா. எனக்கு வேலை இருக்கு. இல்லைன்னா நானே பக்கத்திலே இருந்து எல்லாத்தையும் முடிச்சு தருவேன்."

"நீ இவ்வளவு செஞ்சதே அதிகம் தான்டா. நான் பார்த்துக்குவேன். நீ உன் வேலையை பாரு."

"சரி விக்ரம் நான் கிளம்புறேன். எதுவும் வேணும்னா எனக்கு ஒரு கால் பண்ணு. பை." என்று சொல்லி கைலாஷ் விடைபெற்றான்.

அவனுடைய பொருட்கள் எல்லாம் டில்லியில் இருந்து வந்து இறங்கின. கைலாஷ் அனுப்பிய ஆட்களின் உதவியோடு காலியாய் இருந்த அந்த இடம் வசிக்கும் வீடாய் மாறியது.

விக்ரம் வெளியே சென்று சோபா, உணவு மேஜை போன்றவற்றை வாங்கினான். அவை எல்லாம் மறுநாள் வந்து இறங்கின. பொருட்களை வாங்குவதிலும் அடுக்குவதிலும் அவனுக்கு இரு நாட்கள் செலவாகின.

இதற்கு இடையே இரு சக்கர வாகனமும் கார் ஒன்றும் வாங்குவதற்கு பணம் கட்டிவிட்டு வந்தான். அவை இரண்டும் வருவதற்கு சில நாட்கள் ஆகும்.

ஞாயிறு மாலை விக்ரம் எதிர் பிளாட்டிற்கு சென்று அழைப்பு மணியை அடித்தான். ஒரு வயதானவர் வந்து கதவை திறந்தார்.

''என் பேர் விக்ரம். எதிர் பிளாட்டில் புதுசா குடி வந்திருக்கேன்.'' என்று தன்னை தானே அறிமுகம் செய்து கொண்டான்.

இரு நாட்களாக அவனது நடமாட்டத்தை அவரும் பார்த்துக் கொண்டு தான் இருந்தார். ஆனால் விக்ரமை நெருங்கி சென்று பேச முற்படவில்லை. இன்று அவனே அவரை தேடி வரவும் புன்னகைத்தார்.

''வாங்க.'' என்று தன் வீட்டிற்குள் கூட்டிச் சென்றார்.

அழைப்பு மணியை அடித்தது யார் என்று பார்ப்பதற்காக அவரது மனைவியும் வரவேற்பறைக்கு வந்[illegible]றார்.

''ஹாய் ஆன்ட்டி! நான் விக்ரம். எதிர் வீட்டுல புதுசா குடி வந்திருக்கேன்.'' என்று மீண்டும் ஒரு முறை தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''[illegible]த்துல இருந்து ஆள் நடமாட்டம் அதிகமா [illegible] ஆள் குடி வந்துட்டாங்கன்னு நினைச்சேன். [illegible] தம்பி. உட்காருங்க.''

''[illegible]க்கிழமை நைட்டே வந்துட்டேன். வீட்டை [illegible]க்கிறதிலே உங்களை உடனே வந்து பார்க்க [illegible].''

"நீங்க பேசிக்கிட்டு இருங்க நான் போய் காபி போடுறேன்."

"இல்லை ஆன்ட்டி நான் காபி குடிச்சிட்டு தான் வந்தேன். நீங்களும் உட்காருங்க." என்றாலும் அவர் தன் கணவர் அருகே சென்று அமர்ந்தார்.

"எதிரெதிர் பிளாட்டுல இருக்கப் போறோம். ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சு வச்சுக்கிறது முக்கியமில்லையா. அதான் உங்க ரெண்டு பேர்கிட்டயும் பேசிட்டு போகலாம்னு வந்தேன்."

"உங்களை பத்தி தெரிஞ்சுக்கிறதுக்கு முன்னாடி முதல்ல எங்களை பத்தி நான் சொல்லுறேன்" என்றவர் தன்னை பற்றி சொல்ல ஆரம்பித்தார்.

"நான் வேலையில் இருந்து ரிடையர் ஆகிட்டேன். நாங்க ரெண்டு பேருமே சென்னையிலே பிறந்து வளர்ந்தவங்க தான். எங்களுக்கு ரெண்டு பசங்க ரெண்டு பேருமே அமெரிக்காவில் இருக்காங்க. எங்களுக்கு அந்த ஊர் சரிப்படலை. அதான் நாங்க சென்னையிலே இருக்கோம். சொந்த பந்தமெல்லாம் இங்கே தானே இருக்காங்க. அதனால அவங்க வீட்டு விசேஷத்துக்கு போகிறது, கோவில் குளம்னு எங்க பொழுதை ஓட்டுறோம் தம்பி. இது தான் எங்க கதை." என்று சுருக்கமாய் முடித்தார்.

"திருக்குறளுக்கு விளக்கவுரை சொல்லுற மாதிரி உங்களை பத்தி சொல்லி முடிச்சிட்டீங்க அங்கிள்."

"இப்போ நீங்க உங்களை பத்தி சொல்லுங்க." என்றதும் விக்ரம் அகலமாய் புன்னகைத்தான்.

"என்னாச்சு தம்பி? எதுக்கு சிரிக்கிறீங்க?"

''தப்பா நினைச்சுக்காதீங்க அங்கிள். ஒரு சிலரை பார்த்ததும் இவங்களோட நமக்கு ஒத்து போகும்னு தோணும்ல. அது மாதிரி உங்களை பார்த்ததும் எனக்கு தோணுச்சு.''

இப்பொழுது புன்னகைப்பது பெரியவர்களின் முறை யானது.

''அதனால தான் உங்ககிட்ட வந்து அறிமுகப் படுத் திக்கலாம்னு நானே வலிய உங்க வீடு தேடி வந்தேன். நீங்க எடுத்த உடனே என்னை பத்தி ஏதாச்சும் கெஸ் பண்ணி நீ இப்படி தானேன்னு கேள்வி கேட்காமல் உங்களை பத்தி சொல்லுங்கன்னு சொன்னீங்களா... அது எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு.''

என்ன சொல்ல வருகிறான்? என்பது போல் அவர்கள் அவனை குழம்பிப் போய் பார்த்தார்கள்.

''என்கிட்ட ஒரு கெட்ட பழக்கம் இருக்கு அங்கிள். அது என்னன்னா... என்னை பத்தியோ என் காரெக்டர் பத்தியோ யாராச்சும் தன்னைத் தானே துப்பறியும் புலின்னு நினைச்சுக்கிட்டு தப்பு தப்பா கண்டுபிடிச்சு நீங்க அப்படி தானேன்னு கேட்டாங்கன்னு வச்சுக் கோங்க. நான் அவங்களுக்கு பதிலே சொல்ல மாட்டேன். நீங்க நினைச்சது தான் சரின்னு சொல்லாமல் சொல் லிட்டு போய்கிட்டே இருப்பேன்.''

அவன் சொல்வதை ஆச்சரியமாய் கேட்டுக் கொண் டிருந்தார்கள்.

''உதாரணத்திற்கு ஒரு விஷயம் சொல்லுறேன் கேளுங்க. வெள்ளிக்கிழமை இப்படி தான்... ஏர்போர்ட்

டில் இருந்து டாக்சியில் வந்தேனா.. அந்த டிரைவர் அவர் இஷ்டத்துக்கு ஏகத்துக்கும் என்னை பத்தி அவராவே தப்பு தப்பா கேள்வி கேட்டார்.

நான் எல்லாத்துக்கும் ஆமாம்னு சொல்லி கம்முன்னு இருந்துட்டேன். பொண்ணு பார்க்க தான் சென்னைக்கு வந்திருக்கேனான்னு கேட்டார். பொண்ணு இந்த பிளாட்டில் தான் இருக்காளான்னு வேற கேட்டார். பொண்ணு பார்க்க வருபவன் இத்தனை பெட்டி எதுக்கு கொண்டு வரான்னு கூட அவர் யோசிக்கலை.''

பெரியவர்களின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''ஏன் தம்பி அவர் சொன்னதெல்லாம் தப்புன்னு மாத்தி சொல்லி இருக்கலாமில்ல.''

''அவரை நான் திரும்ப பார்க்க போறேனா என்ன? புலன் விசாரணை மூலமா உண்மையை கண்டுபிடிச்ச போலீஸ்காரர் ரேஞ்சுக்கு தன்னை பத்தி பெருமையா நினைச்சிருப்பார். அதை எதுக்கு வீணா கெடுத்துக் கிட்டு.''

''நீங்க சொல்லுறதும் சரி தான்.''

''அந்த டிரைவர் மாதிரி தான் எங்க அம்மாவும். அவங்களாவே தப்பு தப்பா கெஸ் பண்ணுவாங்க.''

''உங்க அம்மாகிட்டவாவது அது தப்புன்னு எடுத்து சொல்லுவீங்களா?''

''ஊகும் சொன்னதில்லை.''

''உங்க அம்மாகிட்ட கூடவா? ஏன் தம்பி?''

''இந்த டிரைவராவது தப்பு தப்பா என்னை பத்தி கணிச்சார். அவ்வளவு தான். ஆனா எங்க அம்மா என்ன

நடந்துச்சுன்னு விசாரிக்காமல் தப்பா தீர்ப்பே சொல்லி முடிச்சுடுவாங்க.'' என்று கூறி சிரித்தான்.

அவனையும் அறியாமல் தன் தாயை பற்றி வெளி வந்த சில வார்த்தைகளோடு அந்த பேச்சிற்கு முற்று புள்ளி வைக்க நினைத்தான்.

''எங்கேயோ ஆரம்பிச்ச பேச்சு எங்கேயோ போயிடுச்சு. என் பேரை அப்பவே சொல்லிட்டேன். நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் திருச்சியில். அம்மா அப்பா அங்கே தான் இருக்காங்க. நான் இங்கே சென்னை ஐ.ஐ.டியில் தான் இஞ்சினியரிங் பண்ணினேன்.''

'ஓ! ஐ.ஐ.டில் படிச்சவர்னா ரொம்ப பெரிய உத்யோகத்தில் இருக்கணும். பார்க்க ஆள் கம்பீரமா இருக்கானேன்னு நினைச்சேன். ஆள் பார்ப்பதற்கு மட்டும் சூப்பர் இல்லை, படிப்பும் கூட சூப்பர் தான்' என்று அப்பெரியவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

''இவ்வளவு வருஷமும் டில்லில வேலை பார்த்தேன். இப்போ சென்னையிலே வேலை செய்யலாம்னு நினைச்சு இங்கே வந்துட்டேன்.''

''இங்கே எங்கே ஆபீஸ்?'' என்று கேட்டு விபரம் தெரிந்து கொண்டார்கள்.

''எனக்கு ஒரு அண்ணன் இருக்கான். அவனும் இஞ்ஜினியர் தான். ஓசூர்ல இருக்கான். அவனுக்கு கல்யாணம் ஆயிடுச்சு. அவனுக்கு ஒரு பொண்ணு இருக்காள். நான் சிங்கிள் தான்.''

''அன்னைக்கு வீடு பால் காய்ச்ச வந்தவங்க தான் நீங்க இருக்கிற வீட்டோட ஓனரா?''

“இது என்னோட சொந்த வீடு தான் ஆன்ட்டி. நான் வாடகைக்கு குடி வரலை.”

“அப்போ அன்னைக்கு வந்தவங்க உங்க அம்மாவும் அண்ணனுமா?”

“இல்லை அங்கிள். அது என்னோட பிரண்டு கைலாஷோட குடும்பம். அவங்க தான் வீட்டுக்கு செய்ய வேண்டிய சம்பிரதாயமெல்லாம் செஞ்சாங்க.”

ஏன் உங்க அம்மா அப்பா வரவில்லை என்ற கேள்வி அவனது சொந்த விஷயத்திற்குள் அதீதமாய் மூக்கை நுழைப்பது போல் இருக்கும் என நினைத்த அப்பெரிய வர்கள் அக்கேள்வியை தவிர்த்தனர்.

அவர்கள் அவ்வாறு கேட்காததால் அவர்களை அவனுக்கு கூடுதலாய் பிடித்துப் போனது.

“திங்கள் முதல் வெள்ளி வரை என்னை பார்க் கிறது கொஞ்சம் கஷ்டமான விஷயமா இருக்கும். சனி ஞாயிறு ரெண்டு நாளும் வீட்டுல ஃப்ரீயா தான் இருப்பேன். உங்களுக்கு ஏதாச்சும் உதவி தேவைப்பட் டால் யோசிக்காமல் என்கிட்ட நீங்க தாராளமா கேட்கலாம்.”

“கண்டிப்பா விக்ரம்.” என்று அவர்கள் மகிழ்வோடு தலை அசைத்தனர்.

சிறிது நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தவன் அங்கிருந்து கிளம்பினான்.

# 2

**வான்மதி சூடிய கணவர் சொக்கேசருடன்**
**மாணிக்க தேரினில் மரகதப்பாவை வந்தாள்**
**வான்மதி சூடிய கணவர் சொக்கேசருடன்**
**வைரமுடி மின்னிட மரகத பாவை வந்தாள்**
**வானவர் பூமாரி பொழிந்திடவே**
**சிவ கானமும் ஒலித்திட தேவி வந்தாள்**
**மீனாட்சி வந்தாள் - அந்த அழகிய மாநகர் மதுரையிலே.**

என்று ஸ்பீக்கரில் அலறிய பாடலுடன் தானும் சேர்ந்து மனதோடு பாடிக் கொண்டே மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் உள்ளே நுழைந்தாள் கயல்விழி.

‘தாயே மீனாட்சி! நான் எப்பவும் வேண்டுறதை தான் இன்னைக்கும் வேண்டப் போறேன். எங்க அப்பாவுக்கு கஷ்டம் கொடுக்காத வரனை எனக்கு மாப்பிள்ளையா அனுப்பி வை.’ என்று வேண்டிக் கொண்டாள்.

எல்லோரும் தன் வருங்காலக் கணவனை பற்றி பலவிதமாய் கற்பனை செய்வார்கள். அதே போல் மாப்பிள்ளைகள் அமைய வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்.

ஆனால் கயல்விழிக்கு அவ்வாறெல்லாம் எந்த ஆசையும் கிடையாது. தன் வீட்டின் நிதி நிலைமையை

கணக்கில் கொண்டு அவள் எப்பொழுதும் இப்படி தான் வேண்டுவாள்.

அம்மனை தரிசித்து விட்டு பொற்றாமரை குளத்தின் படியில் வந்து அமர்ந்தாள். தன் கண்களை மூடி தியானித்தாள்.

வாரம் ஒரு முறையேனும் அவளுக்கு மீனாட்சி அம்மனை தரிசிக்கவில்லை என்றால் மனம் நிம்மதி அடையாது. சிறு வயது முதல் பழகிய பழக்கம்.

தியானத்தில் இருந்து கண் விழித்தவள் கோவில் கோபுரத்தை பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டு அங்கிருந்து வெளியேற ஆரம்பித்தாள். கோவிலில் இருந்து வீட்டிற்கு வந்தவளை அவளது தந்தை கணேசன் வாசலில் நின்று வரவேற்றார்.

''என்னம்மா சாமி கும்பிட்டாச்சா?''

''ம்ம் நல்ல தரிசனம்பா.'' என்று சொல்லியவாறே வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவளது தந்தை தன்னுடைய டி.வி.எஸ்-50 வண்டியை தள்ளிக் கொண்டே தெருவிற்கு சென்றார்.

''கேட்டை பூட்டிக்கோ.'' என்று சொல்லியவர் தன் வண்டியை கிளப்பிக் கொண்டு சென்றார்.

அது மிகச் சிறிய வீடு. கேட்டை தாண்டியதும் இரண்டு இரு சக்கர வாகனங்கள் நிறுத்தி வைத்தால் நடக்கும் அளவிற்கே இடம் இருக்கும்.

வலதுபுறம் மொட்டை மாடிக்கு செல்வதற்கான படிக்கட்டு இருக்கும். அதைத் தாண்டி உள்ளே சென்றால் மிக சிறிய அளவில் வராண்டா இருக்கும். பத்துக்கு

பன்னிரண்டு அடியில் ஒரு வரவேற்பறை, அதே அளவி லான ஒரு படுக்கையறை, மிகச் சிறிய சமையலறை என்று மூன்று அறைகள் உண்டு.

சமையலறை தாண்டினால் சிறிய கொல்லைப்புறம் இருக்கும். அங்கு தான் குளியலறை உண்டு. அந்த வீட்டில் கட்டில் மெத்தை சோபா என்று எந்த பொருட் களும் கிடையாது. நான்கு பிளாஸ்டிக் நாற்காலிகள் மட்டும் ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் சிறிய மேஜை ஒன்று போடப்பட்டு சிறிய வண்ண தொலைக்காட்சி ஒன்று இருந்தது.

இதுவே அவளின் வீடு.

கயல்விழி உள்ளே சென்று தன் தாய் தங்கத்திற்கு உதவ ஆரம்பித்தாள். கயல்விழிக்கு சமையல் செய்வது என்றால் மிகவும் பிடித்தமான ஒன்று.

அன்று மாலை அவளது தம்பி அழகர் பள்ளியில் இருந்து திரும்பி வந்தான். அவன் பதினொன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான்.

அவன் கை கால் கழுவி வந்ததும், ''இந்தாடா அழகர்!'' என்று அவள் ஒரு தட்டை நீட்டினாள்.

''என்னக்கா யாருக்காவது பிளவுஸ் தச்சு குடுத்து பணம் வாங்கினியா? உடனே புது டிபன் செஞ்சுட் டியா?''

''ஆமாடா அழகர். எனக்கு சமைக்க ரொம்ப பிடிக்கும். ஆனால் தினமும் டிபன் செய்ய நம்ம வீட்டு நிதி நிலைமை இடிக்கும். இப்படி பணம் வரும் போது டிரை பண்ணி பார்க்க வேண்டியது தான்.''

''உனக்காக ஏதாச்சும் வாங்கிக்க வேண்டியது தானேக்கா?''

''என்ன வாங்க சொல்லுறே? பாசி, பொட்டு, கிளிப் புன்னா...? எனக்கு அதெல்லாம் பிடிக்கிறதில்லை. புதுசு புதுசா சமைக்க தான் பிடிச்சிருக்கு.''

''சாப்பிட்டு பார்த்தவன், சூப்பரா இருக்குக்கா.'' என்று பாராட்டினான்.

''இன்னைக்கு ஏதோ டெஸ்ட் இருக்குன்னு சொன் னியே. எப்படிடா பண்ணினே?''

''அதெல்லாம் சூப்பரா பண்ணினேன்.''

''எப்படியும் இஞ்சினியரிங் காலேஜில் சீட் வாங்கிடுவ தானே.''

''கண்டிப்பாக்கா. நான் சென்னை அண்ணா யூனிவர் சிட்டியில் கூட சீட் வாங்கிடுவேன். எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆனால்...''

''என்னடா இழுக்கிறே?''

''அங்கே போய் படிக்க நம்மகிட்ட வசதி தான் இல்லை.''

''அது கவர்மெண்ட் காலேஜ் தானேடா. அப்படின்னா பீஸ் கம்மி தானே.''

''ஆமாக்கா. ஆனா ஹாஸ்டல் பீஸ் கட்டணும். நான் ஊருக்கு போக வரன்னு அது வேற செலவாகும். இங்கே மதுரை தியாகராஜாவில் படிச்சால் அந்த செலவெல்லாம் பண்ண தேவை இருக்காதுல்ல. அதனால நான் எவ்வளவு மார்க் வாங்கினாலும் மதுரை காலேஜை தான் தேர்ந்தெடுக்கணும்.''

"இப்பவே அதை பத்தி எல்லாம் யோசிக்காதேடா அழகா். அதுக்கு இன்னும் நிறைய டைம் இருக்குல்ல. அதை அப்போ யோசிப்போம். இப்போதைக்கு நீ படிப்பை மட்டும் பாரு."

"அப்போ மட்டும் என்ன நடந்திடும்?" என தோன்றினாலும் தன் அக்காவை வருத்தப்பட வைக்க விரும்பாமல் சரி என்னும் விதமாய் தலையாட்டினான்.

தம்பியின் ஆசையை அறிந்த கயல்விழி வருத்தப் பட்டாள். அவள் அப்பா பார்க்கும் சாதாரண வேலையில் கிடைக்கும் சம்பளத்தை கொண்டு அவர்கள் நால்வரும் மிக எளிமையான வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தனர்.

அவளது பெற்றோர் அவளுக்காக மூன்று வருடங் களாக மாப்பிள்ளை பார்த்து வருகிறார்கள். கயல்விழிக்கு என்று பத்து பவுன் நகைகள் தான் இருந்தன.

அதற்கு மேல் வாங்குவதற்கு அவர்களது நிதி நிலைமை இடம் கொடுக்கவில்லை. அவ்வளவு ஏன் வைத்திருக்கும் நாலு பவுன் செயினை மெல்லிய ஆரமாக மாற்றலாம் என்றால் அதற்கு கூட அவர்களுக்கு வசதி பற்றவில்லை.

மிகவும் எளிய முறையில் அவளது திருமணத்தை நடத்தி வைப்பதற்கு கூட அவள் தந்தை கடன் தான் வாங்க வேண்டும்.

இவர்களின் வசதியின்மையால் தான் அவளுக்கு எந்த வரனும் இதுவரை அமையவில்லை. இதுவரை இருவர் பெண் பார்க்கவென வந்தனர். பெண்ணை பிடித் திருந்தும் அவர்கள் கேட்ட வரதட்சணையை கயலின்

தந்தையால் தர முடியாததால் அவளை நிராகரித்துவிட்டு சென்றனர்.

வீட்டின் நிதி நிலைமை தெரிந்ததால் தான் அழகர் தன் லட்சியத்தை நிறைவேறாத கனவாக நினைக்கிறான்.

தன் தம்பியின் கனவு நிறைவேற வேண்டும் என்று கயல்விழி தன் இஷ்ட தெய்வமான மீனாட்சியை பிரார்த்தித்தாள்.

# 3

திருச்சியில் தன் வீட்டில் அமர்ந்து செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்த நடராஜன் அலைபேசி அடிக்கவும் அதை தேடிச் சென்றார்.

விக்ரம் என்ற பெயரை பார்த்தவர் மகிழ்ச்சியோடு அதை ஏற்று பேச ஆரம்பித்தார்.

''சொல்லு விக்ரம். நல்லா இருக்கியா?''

''நான் நல்லா இருக்கேன்பா. நீங்களும் அம்மாவும் எப்படி இருக்கீங்க?''

''நாங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்லா இருக்கோம்.''

''நானே உனக்கு போன் பண்ணனும்னு இருந்தேன்.''

''என்ன விஷயம்பா. சொல்லுங்க.''

''டில்லில ஓவரா மழை பெய்யுதுன்னு டிவில பார்த்தேன். அதான் நீ இருக்கிற ஏரியா எப்படி இருக்குன்னு விசாரிக்கலாம்னு நினைச்சேன்.''

''நான் என் வேலையை சென்னைக்கு மாத்திட்டு வந்துட்டேன்பா. அதை சொல்ல தான் உங்களுக்கு போன் பண்ணினேன்.''

''அப்படியா விக்ரம்? பக்கத்துல வந்துட்டியா. ரொம்ப சந்தோஷம். எப்போ வந்தே?''

''இப்போ தான்பா. ஒரு பத்து நாள் முன்னாடி வந்தேன். சரிப்பா வேற எதுவும் விஷயம் இருக்கா?''

''இல்லை விக்ரம்.''

''சரிப்பா நான் போனை வைக்கிறேன். அம்மாவை கேட்டதா சொல்லுங்க.'' என்று சொல்லி விக்ரம் அழைப்பை துண்டித்தான்.

''யாருங்க போனில்?'' என்று கேட்டுக் கொண்டே விக்ரமின் தாய் சிவகாமி அங்கே வந்தார்.

''விக்ரம் தான் பேசினான்.''

''என்னை கூப்பிட்டு குடுத்து இருக்கலாம்ல. நானும் ரெண்டு வார்த்தை பேசி இருப்பேன்ல.''

''அவன் உன்னை கூப்பிட சொன்னால் நான் கூப்பிட்டு இருப்பேன் சிவகாமி. ஆனா அவன் அப்படி எதுவும் சொல்லலையே.'' என்றதும் சிவகாமி மௌனமானார்.

''இந்தப் பையன் ஏன் நம்மகிட்ட ஒட்டவே மாட்டேங்கிறான்? தனியா எங்கேயோ வாழ்ந்துக்கிட்டு இருக்கான்.''

"வேலையை மாத்திக்கிட்டு சென்னைக்கு வந்துட்டானாம்."

"வந்துட்டானா? இல்லை வரப் போறானா?"

"சென்னைக்கு வந்து பத்து நாள் ஆச்சாம்."

"இப்பவாவது தகவல் சொன்னானேன்னு நாம சந்தோஷப்படணுமோ? வேற என்ன சொன்னான்?"

"நீ எப்படி இருக்கேன்னு விசாரிச்சான். உன்னை கேட்டதா சொல்லச் சொன்னான்."

"உங்களையாவது மதிச்சு அவனா போன் பண்ணி ரெண்டு வார்த்தை பேசுறான். இதுவே நான் போன் பண்ணினால் எப்படி இருக்கீங்கம்மான்னு கேட்டுட்டு அதுக்கு அப்புறமா கம்முன்னு இருப்பான். என்ன பிள்ளையோ?"

"விடு சிவகாமி. ஐஐடி'ல படிக்கிறது அவனோட கனவா இருந்துச்சு. அதுக்காக ஒரு நல்ல ஸ்கூலில் சேர்த்து விடுங்கன்னு சொன்னான். அவன் ஆசையை பூர்த்தி செய்யணும்னு நினைச்சு அவனை பத்தாம் வகுப்புக்கு அப்புறமா வேற ஊருக்கு அனுப்பி ஹாஸ்டலில் சேர்த்து விட்டேன். அப்படியே தனியா இருந்தே பழகிட்டான்."

"அதுக்கு முன்னாடி வீட்டுல இருந்தப்போ மட்டும் கலகலன்னு பேசி சிரிச்சானாக்கும்."

"நாம அவனை சரியா கவனிச்சுக்கலை. அவனும் நம்மகிட்ட ஒட்டாமல் போயிட்டான்."

இருவருமே சில நொடிகள் அமைதியாக இருந்தனர். அப்பொழுது நடராஜனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

"சிவகாமி! நாம ஏன் நம்ம விக்ரமுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கக் கூடாது?"

"இன்னொரு கல்யாணமா?" என்று சிவகாமி அதிர்ச்சியுடன் கேட்டார்.

"என்ன சிவகாமி நீயே இப்படி ஷாக் ஆகுறே? அவனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கிற திலே என்ன தப்பு இருக்கு சொல்லு."

"தப்பு இல்லை தான்."

"அவனுக்கு இப்போ தான் இருபத்தியெட்டு வயசு முடிஞ்சிருக்கு. முதல் கல்யாணம் மூலமா அவனுக்கு குழந்தையும் இல்லை. அவன் நல்லா வாழ வேண் டாமா?"

"நானா வேண்டாம்னு சொல்லுறேன். அவனே ஒரு ஹிந்திக்கார பொண்ணை லவ் பண்ணி கல்யாணம் பண்ணினான். அவள் அல்பாயுசுல ஆறே மாசத்தில் போயிட்டாள்."

"நடந்து முடிஞ்சதை இப்போ எதுக்கு பேசிக்கிட்டு இருக்க? நடக்கப் போறதை பத்தி மட்டும் பேசு. அவன் குடும்பமா வாழ ஆரம்பிச்சால் நம்ம கூட எல்லாம் கொஞ்சம் ஒட்டிப் பழகுவான்னு நான் நினைக்கிறேன்."

"எனக்கு அந்த நம்பிக்கை இல்லை."

"அவன் நம்ம கூட பழகுறானோ இல்லையோ அது வேற விஷயம். ஆனா அவனுக்கு ஒரு நல்லதை நடத்தி வைக்க வேண்டியது நம்மளோட கடமை இல்லையா?"

"இவனுக்கு ரெண்டாம் தாரமா யார் பொண்ணு தருவாங்க?"

''என்ன சிவகாமி நீயே இப்படி நம்ம பிள்ளையை மட்டமா எடை போடுறே?''

''நான் ஏன் என் பிள்ளையை பத்தி மட்டமா நினைக்கப் போறேன்? அவன் பார்க்க ராஜா மாதிரி இருக்கான். இஞ்சினியரா இருக்கான். இது மட்டும் முதல் கல்யாணமா இருந்தால் நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு பொண்ணு குடுப்பாங்க. ஆனா ரெண்டாந் தாரம்னு சொன்னால்... யோசிப்பாங்களே. நமக்கு ஒரு பொண்ணு இருந்தால் நாம அப்படி ஒரு மாப்பிள்ளைக்கு கட்டி குடுப்போமா சொல்லுங்க.''

நடராஜனால் எந்த பதிலையும் கூற முடியவில்லை.

''அவன்கிட்ட கல்யாணத்தை பத்தி பேசுவோமாங்க?''

''வேணாம் சிவகாமி. முதல்ல அவனுக்கு பொண்ணு பார்க்க ஆரம்பிப்போம். அவன் சம்மதம் சொல்லி பொண்ணு அமைய லேட்டானால் அப்புறமா அவன் எனக்கு கல்யாணமே வேண்டாம்னு சொன்னாலும் சொல்லிடுவான். எதுக்கு வம்பு.''

''அதுவும் சரி தான்.''

அவர்களின் திட்டப்படி அறிந்தவர் தெரிந்தவர் களிடம் எல்லாம் விக்ரமிற்கு திருமணம் செய்யப் போவதாக தகவல் பரப்பினர்.

இவர்களுக்கு தெரிந்த பெண் வீட்டினரிடம் தூது சொல்லி விட்டனர். அனைவருமே இரண்டாம் தாரம் என்று காரணம் சொல்லி மறுத்துவிட்டனர்.

இந்த நிலையில் ஒரு நாள் அவர்களின் மூத்த மருமகள் சந்திரலேகா சிவகாமியை அலைபேசியில் அழைத்துப் பேசினாள்.

‘ஒரு நாளும் இல்லாத திருநாளா இவள் என்னை கூப்பிடுறாள். என்னவா இருக்கும்?’ என யோசித்துக் கொண்டே சிவகாமி அவளிடம் பேச ஆரம்பித்தார்.

“நல்லா இருக்கியாம்மா? செல்வம் எப்படி இருக்கான்? என் பேத்தி பல்லவி எப்படி இருக்காள்?” என்று சிவகாமி அனைவரை பற்றியும் நலன் விசாரித்தார்.

“எல்லோரும் நல்லா தான் இருக்கோம். உங்க சின்ன பையனுக்கு பொண்ணு தேடுறீங்கன்னு சொன்னாங்க.”

“ஆமா லேகா. அவன் இப்படியே தனியா இருந்திட முடியாது இல்லையா?”

“எங்க சொந்தத்தில் ஒரு பொண்ணு இருக்காள். அதான் உங்க பையனுக்கு சொல்லலாம்னு போன் பண்ணினேன்.”

‘எங்கேயோ இடிக்குதே’ என சிவகாமி நினைத்து கொண்டே, “பொண்ணை பத்தின விவரம் சொல்லும்மா.” என்றார்.

“பொண்ணுக்கும் இது ரெண்டாம் கல்யாணம் தான்.” என்று அவள் தொடங்கியதும் சிவகாமி மனம் துணுக்குற்றார்.

இருப்பினும், ‘என் பிள்ளைக்கும் ரெண்டாவது கல்யாணம் தானே. இப்பெல்லாம் இது சகஜம் தானே’ என நினைத்துக் கொண்டு, “மேல சொல்லும்மா.” என்றார்.

“எட்டு வயசுல ஒரு பெண் குழந்தை இருக்கு.” என்றதும் சிவகாமி கடுப்பானார்.

“எட்டு வயசுல குழந்தை இருக்குன்னா அந்த பெண்ணுக்கு என்ன வயசு?”

''அதிகம் இல்லை அத்தை. முப்பது வயசு தான்.''

''அப்படின்னா விக்ரமை விட ரெண்டு வயசு பெரியவள்.''

''இந்த காலத்திலே இதெல்லாம் பார்க்கக் கூடாது அத்தை.''

''என் பையனுக்கு நானே பொண்ணு பார்த்துக்கிறேன் லேகா. நீ ஒண்ணும் பார்க்க வேண்டாம்.'' என்று சொல்லி அழைப்பை துண்டித்தார்.

''என்னடா என்னைக்கும் இல்லாமல் இந்தப் பக்கம் பாச மழையை பொழியுறாளேன்னு பார்த்தேன். என் பிள்ளைக்கு என்ன குறைச்சல்னு இப்படி ஒரு பொண்ணை நான் அவனுக்கு கட்டி வைக்கணும்?'' என்று வாய் விட்டுப் புலம்பினார்.

அப்போது அங்கே வந்த நடராஜன் என்னவென்று விசாரிக்க அவரிடம் விவரம் உரைத்தார். நடராஜன் மனம் சோர்ந்து போனார்.

'கடவுளே! என் மகனுக்கு கொஞ்சம் நல்லது நடக்கக் கூடாதா? அவன் வாழ்க்கையை நல்லபடியா அமைச்சு குடுத்து விடு. நான் வேறெதையும் உன்னிடம் கேட்கலை.' என்று அவரது மனம் மகனுக்காய் பிரார்த்தனை செய்தது.

## 4

மாதங்கள் மூன்று உருண்டோடின. அதன் பின்பும் அவர்கள் நினைத்தபடி எந்த வரனும் அவனுக்கு அமையவில்லை.

அந்த சமயத்தில் சொந்தக்காரர் ஒருவர் அவர்களை பார்க்க வந்தார்.

பேச்சு வாக்கில், ''விக்ரமுக்கு பொண்ணு பார்க்கிறீங் கன்னு கேள்விப்பட்டேன். நம்ம தூரத்து சொந்தத்தில் ஒரு பொண்ணு இருக்காள். நல்லா மூக்கும் முழியுமா லட்சணமா இருப்பாள். ஆனா பொண்ணு வீடு வசதி இல்லாதவங்க. அதனால தான் நான் இத்தனை நாளா உங்ககிட்ட சொல்லலை. அவளை பார்ப்போமா?'' என்று விசாரித்தார்.

''பொண்ணுக்கு என்ன வயசு?''

''இருபத்தி மூணு வயசாகுது.''

தன் மகனுக்கு ஏற்ற வயது தான் என்றதும், ''பொண்ணை பத்தின மீதி விவரத்தை சொல்லுங்க.'' என்றார்.

''டிகிரி படிச்சிருக்காள். அவளுக்கு ஒரே ஒரு தம்பி. பதினோராம் வகுப்பு முடிக்கப் போறான். அப்பா மட்டும் வேலை பார்க்கிறவர். சொந்த வீடு தான். ஆனா வீடு ரொம்ப சின்னது. உங்க அளவுக்கு வசதி பத்தாது.''

''வசதி இல்லைன்னா பரவாயில்லை. உங்ககிட்ட பொண்ணு போட்டோ இருக்கா?''

''பொண்ணு போட்டோவா?'' என்று யோசித்தவர், சமீபத்துல ஒரு கல்யாணத்துல எடுத்த குரூப் போட் டோல அவள் இருப்பாள். அதுல பார்க்கிறீங்களா?'' என்று கேட்டு தன் அலைபேசியில் தேடி கயல்விழியின் புகைப்படத்தை அவர்களுக்கு காட்டினார்.

பொண்ணை பார்த்த சிவகாமிக்கு திருப்தியாய் இருந்தது. நடராஜனுக்கும் அந்த வரன் பிடித்து இருந்தது.

சிவகாமி தன் மகனின் ஜாதக நகல் ஒன்றை கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்.

''விக்ரம் போட்டோவை நான் உங்களுக்கு வாட்ஸ் அப்ல அனுப்புறேன். அதை அவங்ககிட்ட காட்டி நம்ம விக்ரமுக்கு பொண்ணு தராங்களான்னு கேட்டு பாருங்க. அவங்க சம்மதிச்சாங்கன்னா அப்புறமா நாங்க விக்ரமை கூட்டிட்டு பொண்ணு பார்க்க வரோம்.''

''நல்ல குடும்பம். அந்த பொண்ணுக்கு ஒரு நல்லது நடந்தால் சரி. ரெண்டு குடும்பத்தையும் தெரிஞ்சவன் என்ற முறையில் சொல்லுறேன். இந்த சம்பந்தம் முடிஞ்சால் ரெண்டு பேருமே அதிர்ஷ்டம் பண்ணினவங்க தான். அவங்ககிட்ட கலந்து பேசிட்டு சொல்லுறேன். அப்போ நான் கிளம்புறேன்.'' என்று சொல்லி அவர் களிடம் இருந்து விடைபெற்றார்.

அவர் கிளம்பி சென்றவுடன், ''உங்ககிட்ட ஏதுங்க விக்ரம் போட்டோ? அவன் எப்போ நம்ம கூட சேர்ந்து போட்டோ எடுத்தான்? இல்லைன்னா நமக்கு போட்டோ அனுப்பினான்?'' என்று சிவகாமி தன் கணவரிடம் கேட்டார்.

''என்ன சிவகாமி இப்படி கேட்கிறே! நானே உனக்கு அவன் போட்டோ எத்தனை தடவை காட்டி இருக்கேன். நல்லவேளை அவர் முன்னாடி இந்த கேள்வியை கேட்காமல் போனே.''

''என்கிட்ட நீங்க காண்பிச்சதெல்லாம் அவனோட வாட்ஸ் அப் கணக்குல அவன் வச்சிருக்கிற போட்டோ தானே. அது உங்ககிட்ட எப்படி இருக்கும்?''

"அதை எல்லாம் நாம பதிஞ்சு வச்சுக்கலாம் சிவகாமி. நான் அவன் போட்டோ எல்லாத்தையும் அப்படியே சேவ் பண்ணிக்குவேன். என்கிட்ட எப்படியும் பத்து பதினைஞ்சு போட்டோக்கு மேல இருக்கும். எதை அனுப்பலாம்னு நீயே பார்த்து சொல்லு."

சிவகாமி ஒன்றை தேர்ந்தெடுத்து கொடுக்கவும் பெண் வீட்டினர் பார்ப்பதற்கென்று அதை அந்த உறவினரின் எண்ணிற்கு நடராஜன் அனுப்பி வைத்தார்.

அந்த வார இறுதியில் அந்த உறவினர் கயலின் தந்தை கணேசனை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து விக்ரமை பற்றிய தகவல்களையும், ஜாதகத் தையும் கொடுத்தார்.

தன் அலைபேசியில் நடராஜன் அனுப்பி வைத்த புகைப்படத்தையும் காட்டினார்.

"நீங்க உங்க வீட்டுல கலந்து பேசிட்டு சொல்லுங்க கணேசன். அதுக்கு அப்புறமா நான் மாப்பிள்ளை வீட்டுல பேசுறேன்." என்று சொல்லி அவர் கிளம்பினார்.

அன்று மதியம் விடுமுறை என்பதால் நேரத்தோடு வீடு வந்த கணேசன் கயல்விழி வெளியே செல்வதற்காக காத்திருந்தார். கயல்விழி கோவிலுக்கு செல்வதாக கூறி வெளியேறினாள்.

கணேசன் கொல்லைப்புறத்தில் இருந்து தன் மனைவியை அழைத்து வந்தார்.

அவர் பின்பக்கம் சென்றிருந்த போது மொட்டை மாடி கொடியில் துணிகளோடு காய்ந்து கொண்டிருந்த கைக்குட் டையை எடுத்து வர கயல்விழி மாடிக்கு சென்றாள். அதை எடுத்துக் கொண்டு அவள் கீழே வந்தாள்.

''கயல் எப்போ வெளியே போவாள்னு காத்திருந் தேன்.'' என்ற வசனம் காதில் விழவும் அவள் சுவரோடு சாய்ந்து நின்று ஒட்டுக் கேட்க ஆரம்பித்தாள்.

''கயலுக்கு ஒரு வரன் வந்திருக்கு.'' என்று கணேசன் தொடங்கவும்,

''இதுவா தான் இருக்கும்னு நினைச்சேன்'' என்று கயல்விழி எண்ணிக் கொண்டாள்.

''பையன் என்ன படிச்சிருக்கான்?''

''இஞ்சினியருக்கு படிச்சிருக்கான். சென்னையிலே வேலை செய்யுறான். நம்மளை விட ரொம்ப வசதியான இடம்.''

''சாதாரண கிளார்க் வேலை செய்யுற மாப்பிள்ளை கேட்ட வரதட்சணை பணத்தையே நம்மளால குடுக்க முடியலை. இதுல பையன் இஞ்சினியர்னு சொல்லுறீங்க. வசதியான இடம்னு சொல்லுறீங்க. அப்புறம் எப்படி நம்ம வீட்டுக்கு சொல்லி விட்டிருக்காங்க?'' என்று தங்கம் சந்தேகம் கேட்டார்.

''அவங்க பக்கம் ஒரு குறை இருக்குது தங்கம்.'' என்று கணேசன் சொல்லவும், கயல் அதிர்ந்தாள்.

''பையனுக்கு இது ரெண்டாவது கல்யாணம்.'' என்று கணேசன் தயக்கத்தோடு கூறினார்.

''என்னது ரெண்டாம் தாரமா?! என்னங்க சொல்லு றீங்க?! முடியாதுன்னு சொல்லிட்டீங்க தானே?''

''அவசரப்படாதே தங்கம். பையனுக்கு வயசு இருபத்தி எட்டு தான் ஆகுது. லவ் பண்ணி கல்யாணம் பண்ணி இருப்பான் போல. பொண்ணு ஆறே மாசத்தில்

விபத்துல இறந்துடுச்சாம். பையன் போட்டோ காண் பிச்சார். ராஜா மாதிரி இருக்கான்.''

''எங்கே போட்டோ காட்டுங்க பார்ப்போம்.''

அவர் போனில் காண்பிச்சார். ''நான் சாதாரண போன் தானே வச்சிருக்கேன். அதனால அந்த போட்டோவை என்னால வாங்கிட்டு வர முடியலை.''

''ம்ம்.''

''நம்ம கயல் ஜாதகத்தை பார்த்த ஜோசியர் என்ன சொன்னாருன்னு ஞாபகம் இருக்கா? பொண்ணுக்கு ரெண்டாம் தாரமா கல்யாணம் பண்ணி போகிற யோகம் இருக்குன்னு சொன்னார் தானே. எல்லாத்தையும் யோசிச் சுட்டு தான் அவர்கிட்ட நான் வீட்டுல கலந்து பேசி சொல்லுறேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

''எனக்கு என்ன சொல்லுறதுன்னு தெரியலைங்க.''

''நாம முதல்ல ஜாதகம் பார்ப்போம். ஜாதகம் பொருந்தி இருந்தால் கயலை கேட்டுப் பார்ப்போம்.''

''ம்ம்ம். சரிங்க.''

''நான் போய் முகம் கழுவிட்டு வரேன். நீ போய் கயல் ஜாதகத்தை எடுத்துட்டு வா.''

அவர்கள் இருவரும் முன்னறையில் இல்லை என்ற தும் கயல்விழி சப்தம் எழுப்பாமல் வீட்டை விட்டு வெளியேறினாள்.

அவளது உள்ளம் ஓடும் ரயிலை விட அதிகமாய் [illegible]த்தது. அவளுக்கு வியர்த்து வழிய ஆரம்பித்தது. [illegible]கள் இருண்டு கீழே விழுந்து விடுவோமோ என்று [illegible] அஞ்சினாள்.

தெருமுனை கோவிலுக்குள் சென்று பிரகாரத்தில் அமர்ந்தாள். தன் கண்களை மூடி தன்னை தானே நிதானப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தாள். ஐந்து நிமிடங்கள் கடந்த பின் எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

நேரே மீனாட்சி அம்மன் கோவிலுக்கு தான் சென்றாள்.

''தாயே மீனாட்சி! எங்க அப்பாவுக்கு செலவு வைக்காத கல்யாணம் வேணும்னு நான் உன்கிட்ட கேட்டேன் தான். அதுக்காக நீ இப்படி ஒரு வரனை அனுப்பி வைப்பேன்னு நினைக்கலையே. இப்ப நான் என்ன செய்ய?''

''அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இந்த வரனைப் பிடிச்சு இருக்கு. அவங்க இந்த மாப்பிள்ளைக்கு என்னைக் கட்டி வைக்க முடிவு பண்ணிட்டாங்க. இல்லைன்னா ஜாதகம் பார்க்கணும்னு நினைக்க மாட்டாங்க.''

''எனக்காக நீ அனுப்பி வைக்கும் மாப்பிள்ளை இவர் தானா? நினைவு தெரிஞ்ச நாளில் இருந்து உன்கிட்ட தான் நான் என்னோட கஷ்ட நஷ்டத்தை சொல்லி புலம்பிக்கிட்டு இருக்கேன். நீயே எனக்கு ஒரு முடிவை சொல்லு.'' என்று வேண்டினாள்.

யாரோ அவள் முகத்தை திருப்புவது போல் தோன்ற தன் கண்களை திறந்து பார்த்தாள். அருகில் நின்றிருந்த பெண்ணின் கையில் இருந்த குழந்தை தான் இவளை தொட்டு விளையாடிக் கொண்டிருந்தது.

இவள் கண்களை திறந்து பார்க்கவும் அது தன் பொக்கை வாய் காட்டி சிரித்தது. அதனின் சிரிப்பு இவளுக்கும் தொற்றிக் கொண்டது.

அந்த புன்னகையுடன் அர்ச்சகர் கொடுத்த குங்குமத்தை வாங்கி கொண்டு சன்னதியை விட்டு வெளியேறினாள்.

வழக்கம் போல் பொற்றாமரை குளத்தின் படிகளில் அமர்ந்தாள்.

'வீட்டுக்கு போகவே பிடிக்கலை. அப்பா கேட்டால் நான் என்ன பதில் சொல்ல? மீனாட்சி! நான் உன்கிட்ட இந்தக் கேள்வியை தானே கேட்டுக்கிட்டு இருந்தேன். என்னை பாதியில் திசை திருப்பி வெளியே அனுப்பி வச்சுட்டியே!' என நினைத்த பொழுது தான் அவளுக்கு அந்தக் குழந்தையினால் தான் புன்னகைத்த விஷயம் நினைவிற்கு வந்தது.

'மீனாட்சி! ஒருவேளை அது தான் நீ எனக்கு சொன்ன பதிலா? ஒண்ணும் கவலைப்படாதேன்னு சொல்லி என்னை சிரிக்க வச்சு அனுப்பினியா?

அப்படின்னா அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இந்த வரன் பிடிச்சிருந்தால் நானும் சம்மதம் சொல்லிடவா?' என்று தனக்குள் அந்த தாயிடம் கேள்வி கேட்டவள் தன் வீடு நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள்.

இவள் வீடு சென்ற பொழுது தங்கமும் கணேசனும் இவளின் வரவிற்காக ஆவலாக காத்திருந்தனர். அவர்களின் மலர்ந்த முகமே ஜாதகம் பொருந்தி இருப்பதை அவளுக்கு சொல்லாமல் சொல்லியது.

தனக்கு தெரிந்தது போல் காட்டிக் கொள்ளாமல் கயல்விழி சாதாரணமாக நடமாடினாள்.

கயல்விழியின் பெற்றோருக்கு மகளை இரண்டாம் தாரமாய் கட்டிக் கொடுப்பதில் இஷ்டமில்லை. அப்படி

இருந்தும் கணேசன் ஒத்துக் கொண்டதற்கு காரணம் விக்ரமின் வயசும், புகைப்படத்தில் அவர் பார்த்த அவனுடைய தோற்றமும்.

தங்கம் ஏற்றுக் கொண்டதற்கு காரணம் மகளிற்கு கல்யாணம் என்பது கனவாய் போய் விடுமோ என்று அவர் மனதில் சமீபமாக எழுந்த பயம்.

அவர்களது சொந்தத்தில் கயல்விழியின் வயதில் உள்ளவர்களுக்கு எல்லாம் திருமணம் நடக்கும் பொழுது தன் மகளுக்கு அப்படி ஒரு கொடுப்பினை என்று வருமோ என்று அந்த தாயுள்ளம் ஏங்கும்.

''மாப்பிள்ளைக்கு ரெண்டாம் கல்யாணமா இருந் தாலும் வயசு ஒண்ணும் அதிகமில்லை. போட்டோவில் நல்லா இருக்கார்னு கயல் அப்பா சொல்லுறார். வசதி யான வீடுன்னும் சொல்லுறார். நான் தான் அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடுற வாழ்க்கை வாழுறேன். என் மகளாச்சும் நல்லா வாழணும்.''

என்ன ஒண்ணு ரெண்டாந்தாரம் என்ற பேர் அவ ளுக்கு கிடைக்கும். அவள் அதை தாங்கிக்கணும். ஒண்ணை விட்டால் தான் ஒண்ணை பிடிக்க முடியும்னு சொல்லுவாங்க. ஒரு வசதி இல்லாதவனை முதல் தாரமா கட்டிக்கிட்டு அவளும் என்னை மாதிரி கஷ்டப்படுறதை விட இந்த மாப்பிள்ளைக்கு ரெண்டாம் தாரமாய் அவளை கட்டி வைக்கிறதே மேல் என்பது தங்கத்தின் எண்ணம்.

அன்று இரவு உணவிற்கு பின் கணேசன் தன் மகளிடம் விஷயம் சொல்வதற்காக அவளை அழைத்து அருகில் அமர வைத்தார். அழகரும் அங்கு தான் இருந் தான்.

கணேசன் மாப்பிள்ளையை பற்றி சொல்லி முடிக்கவும் அழகர் தாம் தூம் என்று குதித்தான்.

"ரெண்டாவதா எதுக்கு கட்டிக் குடுக்கணும்? எங்க அக்காக்கு என்ன குறைச்சல்? அவ அழகா இல்லையா? இல்லை அவள் எழுதப் படிக்க தெரியாதவளா? எங்க அக்கா மாதிரி யாருக்காவது சூப்பரா சமைக்க தெரியுமா?"

மூவருமே அவனது கேள்விக்கு பதில் சொல்லவில்லை. கயல்விழிக்கு தம்பியை நினைத்து பெருமையாக இருந்தது.

"நீ ஏன்கா சும்மா இருக்க? ஏதாவது பேசு."

"உங்க அக்காகிட்ட எல்லாம் இருக்கலாம் அழகர். ஆனா பணம் இல்லை. அந்த பணத்தினால தான் மூணு [illegible]ருஷமா அவளுக்கு கல்யாணம் கூடி வரலை. அதை [illegible]ன்னால மறுக்க முடியுமா? என்று கயல்விழி கேட்[illegible]வும், அழகர் அமைதியாகி விட்டான்.

அதற்கு மேல் அங்கே யாரும் பேசவில்லை. அமைதி[illegible] அவரவர் வேலையை பார்க்க சென்றனர்.

கயல்விழி யோசிக்கட்டும் என அவளது பெற்றோர் [illegible]த்தனர்.

[illegible]ற்கு மேல் இதுல யோசிக்க என்ன இருக்கு. இது [illegible]க்கு விதிச்சிருக்குன்னா அப்படியே நடக்கட்டும் [illegible]து கயல்விழியின் எண்ணம்.

[illegible]னான அழகரால் மட்டும் என்ன செய்து விட [illegible]?

[illegible] தன் புத்தகத்தை கையில் எடுத்து வைத்து [illegible] கார்ந்தான். ஆனால் அவனது கவனம் அதில் [illegible] என்றது.

யாருமே விக்ரம் பற்றிய பேச்சை வீட்டில் பேசவில்லை. வழக்கம் போல் அவரவர் வேலையை செய்து பொழுதை ஓட்டினர்.

இரு நாட்கள் கழிந்தன.

அதன் பின் கயல்விழியிடம் வந்த கணேசன், "அப்பா உனக்கு நல்லது தான்மா செய்வேன். நான் விசாரிச்ச வரைக்கும் எல்லோரும் நல்ல குடும்பம்னு சொல்லு றாங்க. வசதியான இடம். அப்பாவால உன்னை சாதாரண கிளார்க் வேலை செய்யுற மாப்பிள்ளைக்கே கட்டி குடுக்க முடியலை.

இவ்வளவு வசதியான இடத்துல கட்டிக் குடுக்க சத்தியமா இந்த ஜென்மத்துல என்னால முடியாதும்மா. பையன் போட்டோவை பார்த்தேன். நல்லா கம்பீரமா இருக்கான். முதல் கல்யாணம் மூலமா குழந்தையும் இல்லை. இருபத்தி எட்டு வயசு தான் ஆகுது."

"வயசை தப்பா சொல்லி இருக்கலாம். பழைய போட்டோவை கூட உங்ககிட்ட காட்டி இருக்கலாம்." என்று அழகர் சப்தமாக முணுமுணுத்தான்.

"உனக்கு இருக்கிற இந்த சந்தேகம் எனக்கு இல்லையா அழகர். அவ உனக்கு அக்கான்னா எனக்கு பொண்ணுடா. அப்படி எல்லாம் தப்பான ஒரு ஆளுக்கு கட்டி குடுத்திட மாட்டேன்."

"என்னால ஏத்துக்கவே முடியலைப்பா." என்று அழகர் வருத்தப்பட்டான்.

"நான் என்ன சொல்லுறேன்னா... பொண்ணு பார்க்க வர சொல்லுவோம். நேரிலே பார்த்தால் மாப்பிள்ளை

எப்படி என்னன்னு நமக்கு ஒரு ஐடியா கிடைக்கும்ல. அதுக்கு அப்புறமா நாம முடிவு எடுப்போம்.''

''அழகரால் அவர் பேச்சினை மறுத்துப் பேச முடிய வில்லை.''

''நீ என்னம்மா சொல்லுறே?'' என்று கணேசன் தன் மகளை பார்த்துக் கேட்கவும்,

''நீங்க சொல்லுறபடியே செய்யலாம்பா.'' என்று அவள் சம்மதம் தெரிவித்தாள்.

அழகர் மறுப்பு தெரிவித்த அளவிற்கு கூட கயல்விழி எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

மீனாட்சி அம்மன் கோவிலில் வைத்து அவள் எடுத்த தீர்மானம் ஒரு காரணம்.

மற்றொரு முக்கிய காரணம்... கடந்த மூன்று வருடங்களாய் அவளை கரையேற்ற முடியாமல் அவளது பெற்றோர் படும் துயரத்தை அருகில் இருந்து பார்த்தவள் வேற முறையில் அவளால் அவர்களை எதிர்த்து எதுவும் பேச முடியவில்லை.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. Beggars are not choosers.

பிச்சைக்காரர்களுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது என்பதே அதன் பொருள். தான் அந்த நிலையில் இருப்பதாகவே கயல்விழி கருதினாள்.

ஒரு குடும்பமே தன்னை வில்லனாய் பாவித்து அவளைப் பற்றி அலசி ஆராய்ந்து கொண்டிருப்பதை அறியாமல் விக்ரம் தன்னுடைய பொழுதை சந்தோஷமாக கழித்துக் கொண்டிருந்தான்.

# 5

கணேசன் தன் உறவினரிடம் தங்கள் சம்மதத்தை தெரிவித்து பெண் பார்க்க வர சொல்லி சொன்னார். அவர் உடனே அதை நடராஜனிடம் தெரிவித்தார்.

''நாங்களும் ஏற்கனவே ஜாதகம் பார்த்தோம். ரெண்டு ஜாதகமும் ரொம்ப நல்லா பொருந்தி இருக்குன்னு சொன்னாங்க. பொண்ணோட போட்டோ இருந்தால் பையன்கிட்ட காட்டி எனக்கு பேச வசதியா இருக்கும்.'' என்று நடராஜன் கூறினார்.

''நீங்க இப்படி கேட்பீங்கன்னு தான் அந்த கல்யாண போட்டோ ஆல்பத்துல அவள் நல்லா தெரியுற போட்டோ ஒண்ணை எடுத்து பத்திரப்படுத்தி வச்சிருக்கேன். உங்க வாட்ஸ் அப்க்கு அனுப்பி வைக்கிறேன்.'' என்று சொல்லி அந்த உறவினர் அழைப்பை துண்டித்தார்.

நடராஜன் தன் மனைவியிடம், ''சிவகாமி! பொண்ணு வீட்டுல சம்மதம் சொல்லிட்டாங்க. நம்மளை பொண்ணு பார்க்க வர சொல்லுறாங்க.'' என்றார்.

''ரொம்ப சந்தோஷம். ஆனா நீங்க ஏன் சோகமா இருக்கீங்க?''

''நானும் சந்தோஷமா தான் இருக்கேன். இதை விக்ரம்கிட்ட சொல்லி எப்படி சம்மதம் வாங்கிறதுன்னு

ஒரே குழப்பமா இருக்கு. அதான் என் முகத்திலே ஒரு வாட்டம் தெரியுது.''

''நான் வேணா பேசட்டுமா?''

''வேண்டாம் சிவகாமி. நீ பேசினேன்னா அவன் உடனே வேண்டாம்னு சொல்லிடுவான்.''

''தெரியுதுல்ல... நீங்க பேசினால் தான் அவன் ஒத்துக்குவான். அவன் உங்க ஒருத்தரை தான் மதிப்பான். இன்னைக்கு நைட் அவன் ஆபீஸ் முடிஞ்சு வீட்டுக்கு போகும் டயத்தை கணக்கு பண்ணி அப்போ பேசுங்க.''

''ம்ம்ம் பேசுறேன்.''

அன்று இரவு ஒன்பது மணிக்கு நடராஜன் தன் மகனை அழைத்தார். விக்ரம் அந்த அழைப்பை ஏற்று பேச ஆரம்பித்தான்.

''சொல்லுங்கப்பா. நல்லா இருக்கீங்களா?''

''நாங்க நல்லா இருக்கோம் விக்ரம். நீ ஃப்ரீயா இருக்கியா?''

''நான் இப்போ ஃப்ரீ தான்பா. ஏன் அப்படி கேட்கிறீங்க?''

''இல்லைப்பா. ஒருவேளை நீ டிரைவ் பண்ணிக்கிட்டு இருக்கலாம். இல்லன்னா ஆபீஸ் வேலையில பிஸியா இருக்கலாம். அதுக்காக கேட்டேன்.''

''வீட்டுக்கு வந்துட்டேன்பா. நீங்க சொல்லுங்க.''

''வந்து... ஒரு விஷயம்...'' என்று நடராஜன் சொல்லத் தயங்கினார்.

"பணம் எதுவும் வேணுமாப்பா? அதுக்கா தயங்குறீங்க? எவ்வளவு வேணும்னு சொல்லுங்க. நான் அனுப்பி வைக்கிறேன்."

"என் பிள்ளைகிட்ட பணம் கேட்க நான் ஏன்பா தயங்கப் போறேன்?"

'அப்போ வேற என்ன விஷயத்தை சொல்ல இப்படி இழுக்கிறார்? எதுவா இருந்தாலும் அவரே சொல்லட்டும்' என்று விக்ரம் தீர்மானித்தான்.

"வந்து... நீ என் பேச்சை தட்ட மாட்டேன்னு நினைச்சு உன்னைக் கேட்காமல் அப்பா ஒரு காரியம் பண்ணிட்டேன் விக்ரம்."

"ம்ம்ம்."

"உனக்கு சின்ன வயசு தானே. நீ எவ்வளவு நாளைக்கு தனியா இருக்க முடியும்?"

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று விக்ரமிற்கு புரிந்தாலும் அவன் திரும்பவும் "ம்ம்ம்" என்று மட்டுமே சொன்னான்.

"அதனால நம்ம தூரத்து சொந்தத்தில் ஒரு பொண்ணை உனக்கு பேசி முடிக்கலாம்னு ஜாதகம் குடுத்து விட்டேன். நானும் ஜாதகம் பார்த்தேன். ரொம்ப நல்லா பொருந்தி இருக்கு."

"ம்ம்ம்."

"பொண்ணுக்கு இருபத்தி மூணு வயசாகுது. டிகிரி முடிச்சிருக்காள். அவளுக்கு ஒரே ஒரு தம்பி."

"ம்ம்ம்."

''அப்பா மட்டும் வேலைக்கு போகிறார் போல. வசதி இல்லாத குடும்பம். பெரிய இடத்துல எல்லாம் சொல்லி விட்டோம். ரெண்டாம் கல்யாணம்னு முடியாதுன்னு சொல்லிட்டாங்க. அதான் இந்த இடத்தை பார்க்கலாம்னு நினைச்சோம்.''

''ஓகோ.''

''அந்த பொண்ணு போட்டோவை வாட்ஸ் அப்ல அனுப்பி வைக்கிறேன். நீ பார்த்துட்டு யோசிச்சு உன் முடிவை சொல்லு. நான் இப்போ போனை வைக்கிறேன்.'' என்று சொல்லி மகனின் பதிலுக்கு கூட காத்திருக்காமல் போனை வைத்தார்.

அவனிடம் இதை பேசி முடிப்பதற்குள் அவருக்கு வியர்த்து வழிந்தது.

''என்னங்க உங்க பையன்கிட்ட பேசி முடிச்சுட்டீங்களா? என்ன சொன்னான்?''

''நான் முதல்ல தயங்கித் தயங்கி இழுத்தேனா... பணம் வேணுமா? எவ்வளவுன்னு சொல்லுங்க அனுப்பி வைக்கிறேன்னு சொன்னான். அது தான் அவன் என்கிட்ட பேசின ஒரே விஷயம். அதுக்கு அப்புறம் வெறும் ம்ம்ம் மட்டும் தான் சொன்னான். எங்கே ஏதாச்சும் திட்டிடு வானோன்னு பயந்து போய் போனை வச்சுட்டேன்.''

''பெத்த பிள்ளைகிட்ட பேச இவ்வளவு பயப்படணுமா?''

''தோளுக்கு மேல வளர்ந்துட்டால் அப்படி தான் [illegible]காமி.''

''பொண்ணு போட்டோவை அனுப்பிட்டீங்களா?''

''காலையில் அனுப்பி வைக்கிறேன்.''

''ஏன் இப்போ நல்ல நேரம் இல்லையா?''

''நல்ல நேரத்துக்காக இல்லை. நான் பேசினதுல அவன் கோபமா இருந்து போட்டோவை பார்க்காமலே டெலீட் பண்ணிட்டான்னா... நைட் எல்லாம் நல்லா யோசிக்கட்டும். காலையிலே அனுப்பி வைக்கிறேன்.''

நடராஜன் தன் மனைவியிடம் சொன்னது போல் மறுநாள் கயல்விழியின் புகைப்படத்தை மகனுக்கு அனுப்பி வைத்தார்.

அவன் பார்த்துவிட்டானா என்று நொடிக்கொரு தரம் தன் அலைபேசியை திறந்து திறந்து பார்த்துக் கொண் டிருந்தார். அவன் பார்த்ததிற்கு அடையாளமாக புளூ டிக் வந்ததும் ஆசுவாசமானார்.

மகனுடைய பதிலுக்காய் காத்திருந்தார். அவன் அன்று முழுவதும் அமைதி காத்தான்.

அடுத்த நாள் மாலை, ''சரிப்பா. பொண்ணை போய் பார்க்கலாம்'' என்று அவன் வாட்ஸ் அப் மூலமாக செய்தி அனுப்பினான்.

நடராஜனால் நம்பவே முடியவில்லை. அவன் இவ் வளவு இலகுவாக சம்மதம் சொல்லுவான் என்று அவர் நினைத்தே பார்க்கவில்லை.

''சிவகாமிமிமிமி!'' என்று அவர் சந்தோஷ கூச்சலிட,

அதை கேட்டு என்னவோ ஏதோ என்று சிவகாமி பதறிப் போய் கணவர் இருக்கும் இடம் தேடி வந்தார்.

''என்னாச்சுங்க? எதுக்கு அப்படி சத்தம் போட்டீங்க?''

''பெரிய படிப்பு படிச்சிருந்தாலும் எந்த பதவியில் இருந்தாலும் எவ்வளவு சம்பாதிச்சாலும் என் பிள்ளை என் பிள்ளை தான்.''

''என்ன விஷயம்? பிள்ளையை தூக்கி வச்சு கொண்டாடுறீங்க?''

''பொண்ணு பார்க்க விக்ரம் ஒத்துக்கிட்டான் சிவகாமி.''

''என்னது ஒத்துக்கிட்டானா?! நம்பவே முடியலைங்க. இப்போ தான் சந்தோஷமா இருக்கு. மனசுக்கு நிம்மதியாவும் இருக்கு.''

''ஆமா சிவகாமி. ரெண்டு நாளா என் மனசெல்லாம் அவனை பத்தின கவலை தான். சட்னு ஒத்துக்குவான்னு நானும் நினைக்கலை.''

''நீங்க திரும்ப எதுவும் அவனுக்கு போன் பண்ணி பேசினீங்களா?''

''அன்னைக்கு பேசினது தான். அதுக்கு அப்புறமா பேசலை.''

''பரவாயில்லையே. உங்க மேல இன்னமும் மதிப்பு வச்சிருக்கான் போல.''

''நான் தான் சொன்னேன்ல. அவன் என் பேச்சை கேட்பான்னு.''

முதல் தடவையே இப்படி நம்ம பேச்சை கேட் [illegible]லாமில்ல.''

சிவகாமி! நடக்கணும்னு இருக்கிறது நடந்தே தீரும். [illegible] அவன் லவ் பண்ணின. அந்த பொண்ணை [illegible]வைக்காமல் அத்து விட்டுட்டு அவனுக்கு நாம

வேறொரு பொண்ணை பார்த்துக் கல்யாணம் முடிச்சு வச்சு அவன் சந்தோஷமாய் வாழாமல் போய் இருந்தால் என்ன செய்வே? அந்த பொண்ணு வாழ்க்கையும் இல்ல கெட்டு போய் இருக்கும். ரெண்டு பொண்ணுங்க வாழ்க்கையை கெடுத்த பாவம் நம்மளை சேர்ந்திருக்கும்.''

''இல்லைங்க அந்த பொண்ணு அல்பாயுசுல போயி டுச்சுல்ல அதை சொன்னேன்.''

''அது விதி. பிறப்பும் இறப்பும் நம்ம கையிலா இருக்கு?''

''இப்போ பாரு. அவன் ஆசைப்பட்ட பொண்ணை அவன் கட்டிக்கிட்டான். அந்த வாழ்க்கை நிலைக்கலை. இப்போ நாம பார்க்கிற பொண்ணை கட்டிக்க சம்மதிச் சுட்டான். அதை பத்தி மட்டும் யோசி.''

''நீங்க சொல்லுறதும் சரி தான். பெரியவன் மாதிரி இவனும் பொண்டாட்டி பிள்ளை குட்டின்னு வாழணும். எனக்கு அது போதும்.'' என்று கூறிய சிவகாமி தன் கண்களை துடைத்துக் கொண்டார்.

நடராஜன் அந்த உறவினர் மூலமாக கயல்விழியை பெண் பார்க்க வருவதற்கான நாளை குறித்தார்.

அவர்கள் சொன்ன தேதியை விக்ரமிற்கு தெரிவித்தார்.

கயல்விழியை விக்ரம் குடும்பத்தினர் பெண் பார்க்க வருவதற்கு முதல் நாள்...

தங்கமும் கணேசனும் வெளியே சென்றிருந்தார்கள். அழகரும் கயல்விழியும் வீட்டில் இருந்தனர்.

அழகர் தன் முன்னால் புத்தகத்தை திறந்து வைத்துக் கொண்டு சுவரை வெறித்துக் கொண்டிருந்தான்.

''என்னடா அழகா சின்ன புத்தகத்தில் படிக்காமல் பெரிய சுவரில் படிக்கலாம்னு நினைச்சியா?''

''என்னக்கா கேட்கிறே?''

''புத்தகத்தில் இருப்பதெல்லாம் சுவரில் தெரியுதான்னு கேட்கிறேன்.''

''ப்ச்... உனக்கு டென்ஷனா இல்லையா?''

''என்னை விடு. நீ எதுக்கு டென்ஷனா இருக்கே?''

''அந்த மாப்பிள்ளை எப்படி இருப்பாரோன்னு நினைக்கும்போது உனக்கு டென்ஷன் வரலையா?''

''உன் அளவுக்கு கண்டிப்பா இல்லைடா.''

''அவன் மட்டும் சொட்டை தலையா வந்து நிக்கட்டும்... கல்லை வச்சு அடிச்சு அவனை ஓட ஓட விரட்டுறேன்.''

''அழகர்! நமக்கு மாப்பிள்ளையை பிடிக்கலைன்னா அப்பாகிட்ட ஒப்பனா சொல்லுவோம். அப்பா நம்ம கருத்தை ஏத்துக்குவார். பிடிக்காத மாப்பிள்ளைக்கு கண்டிப்பா கட்டி வைக்க மாட்டார். நீ ஏன் இவ்வளவு கவலைப்படுறே? ஒழுங்கா பாடத்தை பார்த்து படி.''

''பாடம் மனசிலே பதியலைக்கா.''

''டேய்! அனுவல் எக்ஸாம் வரப் போகுது. இப்போ [illegible] இப்படி சொல்லுறே?''

''நாளைக்கு அந்த மாப்பிள்ளை வந்துட்டு போகட்டும். [illegible] கல்யாண விஷயம் ஒரு முடிவுக்கு வரட்டும். அதுக்கு அப்புறமா நான் படிச்சுக்கிறேன்.'' என்றவன் புத்தகத்தை மூடி வைத்தான்.

# 6

பெண் பார்க்கவென்று விக்ரமும் அவனை பெற்றவர்களும் திருச்சியில் இருந்து கிளம்பி மாலை நான்கரை மணிக்கு மதுரை வந்தனர். கயல்விழியின் வீட்டை தேடிக் கண்டுபிடித்து சென்றனர்.

வாசலில் நின்று கணேசன் அவர்களை வரவேற்றார். அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். வீட்டினுள் நுழைந் தவர்களை தங்கமும் அழகரும் வரவேற்றார்கள்.

நான்கு பிளாஸ்டிக் சேர்கள் போடபட்டு இருந்தன. இவர்கள் மூவரோடு சேர்ந்து கணேசனும் அதில் அமர்ந்து கொண்டார். தங்கம் சமையல் அறை வாயிலிலும் அழகர் படுக்கை அறை வாயிலிலும் நின்று கொண் டனர்.

நான்கு பேர் உட்கார்வதற்கு மட்டுமே இடம் இருந்த அந்த சிறிய அறையை கண்ட சிவகாமி, வீடு ரொம்ப சின்னதா இருக்கே. பொண்ணு வீட்டு வசதி நாம நினைச்சதை விட ரொம்ப குறைவோ? என்று எண்ண மிட்டார்.

விக்ரமை கண்ட அழகருக்கு திருப்தியாக இருந்தது. அவன் அதை உடனே தன் அக்காவிடம் தெரிவிக்க நினைத்து படுக்கை அறைக்குள் சென்றான்.

"அக்கா! மாப்பிள்ளை ஜம்முனு சினிமா ஹீரோ மாதிரி இருக்கார். நிஜமாவே சின்ன வயசு தான் போல. அவங்க பொய் எல்லாம் சொல்லலை." என்று கிசுகிசுத்தான்.

"உனக்கு பிடிச்சிருக்கா அழகா்?"

"உனக்கும் அவரை கண்டிப்பா பிடிக்கும்கா." என்று அவளுக்குமாய் சோ்த்து பதில் சொன்னவன் மீண்டும் அறை வாயிலில் போய் நின்று கொண்டான்.

விக்ரம் அந்த வீட்டை சுற்றி தன் பார்வையை சுழல விட்டான். அப்பொழுது அறை வாயிலில் நின்று கொண் டிருந்த அழகா் கண்ணில் படவும் அவனை பார்த்து முறுவலித்தான். பதிலுக்கு அழகரும் முறுவலித்தான்.

அழகா் மீண்டும் தன் அக்காவிடம் சென்று, "அக்கா! அவா் என்னை பார்த்து சிரிக்கிறாா். முசுடு இல்லை. நல்லா பேசிப் பழகுவாா்னு நினைக்கிறேன்." என்று கூறிவிட்டு சென்றான்.

டிபன் காபி வழங்கப்பட்டது. அதை சாப்பிட்டு முடித் தனா்.

விக்ரம் சாப்பிடுவதை கவனித்துக் கொண்டிருந்த அழகா் மீண்டும் தன் அக்காவிடம் சென்று, "பாா்க்க வசதியானவங்களா இருக்காங்க. ஆனாலும் நம குடுத்த டிபனை எல்லாம் முகம் சுளிக்காமல் சாப்பிடுறாங்க. நல்லவங்களா தெரியுறாங்க." என்றான்.

"நீ எப்போல இருந்துடா மனுஷங்களை இவ்வளவு கூர்ந்து கவனிக்க ஆரம்பிச்ச?"

"எங்க அக்காவை கட்டிக்கணும்னா அதுக்கு சில தகுதி வேண்டாமா? அவங்களுக்கு அதெல்லாம் இருக்கா

இல்லையான்னு நான் பார்க்க மாட்டேனா? உன்னை அப்படி எல்லாம் சாதாரண இடத்திலே கல்யாணம் பண்ணி குடுக்க நான் சம்மதிக்க மாட்டேன்கா.''

எப்பொழுதும் போல் அவனின் பாசத்தை கண்டு கயல்விழி புன்னகைத்தாள். அவன் மீண்டும் விக்ரம் குடும்பத்தினரை பார்வையிடச் சென்றுவிட்டான்.

''பொண்ணை கூட்டிட்டு வாங்க.'' என்று சிவகாமி சொன்னதும், தங்கம் தன் மகளை அழைத்து வந்தார்.

கணேசன் தான் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்து கொண்டு தன் மகளை அங்கே அமரச் செய்தார்.

விக்ரம் ஒரு முறை அவளை நிமிர்ந்து பார்த்தான். நடராஜனோ பெண்ணைப் பார்க்காமல் மகன் முகத்தில் தெரியும் மாற்றத்தை கணக்கிட விரும்பியவராய் அவனை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

கயல்விழி தயக்கமாய் விக்ரமை ஏறிட்டாள். சில நொடிகள் மட்டுமே அவனைப் பார்த்தாள். அழகரின் கைங்கரியத்தால் விக்ரமை பார்க்கும் முன்பே அவளுக்கு அவனைப் பிடித்து விட்டது.

சிவகாமி பெண்ணை ஊன்றி கவனித்தார்.

கயல்விழி சின்ன கரையிட்ட பட்டுப் புடவை ஒன்றை உடுத்தி இருந்தாள். காதில் ஒரு கம்மல், கழுத்தில் ஒரு சங்கிலி, கையில் கண்ணாடி வளையல்கள் என்று மிக சாதாரண அலங்காரத்தில் இருந்தாள். ஆனால் அந்த எளிய அலங்காரத்திலும் கண்ணை கவரும் வண்ணம் இருந்தாள்.

பொண்ணு வீட்டுல வசதி குறைவுன்னாலும் பொண்ணு மூக்கும் முழியுமா நல்லா தான் இருக்காள். விக்ரமுக்கு ரொம்ப பொருத்தமா இருப்பாள். பட்டும் நகையும் போட வச்சால் இன்னும் பிரமாதமா இருப்பாள் என்பது சிவகாமியின் எண்ணம்.

இந்த பெண்ணை விக்ரமிற்கு பிடிச்சு அவன் கல்யாணத் துக்கு சம்மதிச்சால் இந்த பெண்ணுடன் அவன் வாழும் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்பது நடராஜனின் பிரார்த்தனையாக இருந்தது.

விக்ரமிற்கு அவளிடம் ஒரு சில வார்த்தைகளாவது பேசிப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அதன் பின்பே முடிவு எடுக்க வேண்டும் என அவன் நினைத் தான்.

''நான் உங்க பொண்ணுகிட்ட கொஞ்சம் தனியா பேச முடியுமா?'' என்று அவன் நேரடியாக கணேசனிடம் கேட்டான்.

''தனியாவா?'' என்ன கேட்பாருன்னு தெரியலையே. நான் மாட்டினேன் போல. என்று கயல்விழி திருதிருத் தாள்.

அதை ஓரக் கண்ணால் பார்த்து முறுவலித்துக் கொண்ட விக்ரம் கணேசனின் பதிலுக்காய் அவர் முகம் பார்த்து அமர்ந்திருந்தான்.

இந்த வீட்டில் எங்கே வைத்து தனியாக பேசச் சொல்வது என்று அவர் வீட்டை சுற்றி முற்றி ஆராய்ச்சி செய்தார்.

''மொட்டை மாடியில் போய் பேசட்டுமா?'' என்று அவன் கேட்கவும் கணேசனும் ''சரி'' என்றார்.

"அழகர்! ரெண்டு சேரை மொட்டை மாடியில் கொண்டு போய் போட்டுட்டு வா!" என்று மகனை ஏவினார்.

அழகர் நாற்காலியை தூக்கிக் கொண்டு மாடிக்கு சென்றான். அவன் பின்னோடு விக்ரமும் சென்றான். அழகர் கீழே இறங்கும் போது கயல்விழி மேலே ஏறினாள்.

"டேய் அழகர்! என்கிட்ட என்னடா கேட்பார்?" என்று அவள் பாவம் போல் கேட்டாள்.

"அலெக்ஸாண்டரோட குதிரை பேர் என்ன?"

"குதிரை பேரா? அதெல்லாம் எனக்கு எப்படிடா தெரியும்?"

"ஐயோ அக்கா! டிவில அபியும் நானும் பட ஜோக் எத்தனை தடவை பார்த்து இருப்ப. அதை சொல்லி நான் உன்னை நக்கல் பண்ணுறேன். நீ என்னடான்னா...."

"பாருடா! பதட்டத்தில் பார்த்து ரசிச்ச ஜோக் கூட எனக்கு மறந்து போச்சு. ஊகும் எனக்கு தெளிவா தெரிஞ்சு போச்சு. நான் சொதப்பலா தான் பதில் சொல்ல போறேன்."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. நம்பிக்கையா போ."

"நான் படிப்பிலே கொஞ்சம் சுமார் தான். நீ தான் புத்திசாலி. நீ என் கூட துணைக்கு வரியா?"

"அக்கா! அவர் பொது அறிவு கேள்வி கேட்கிறதுக்கு இங்கே வேலைக்கு இன்டர்வியூவா நடக்க போகுது?"

"அப்போ என்ன கேட்பார்?"

''ம்ம்ம் நாட்டாமை படத்திலே குஷ்பூக்கு கை, கால் எல்லாம் நல்லா இருக்கா? பொண்ணுக்கு பேச்சு வருதான்னு எல்லாம் செக் பண்ணுவாங்க இல்ல. அது மாதிரி அவரும் நீ நல்லா பேசுவியான்னு செக் பண்ணி பார்ப்பாரா இருக்கும்.''

''ஒருவேளை பாட சொன்னால் நான் என்னடா செய்ய?''

''உனக்கு சூப்பரா சமைக்க மட்டும் தான் தெரியும். நீ செஞ்ச டிபனை அவர் மிச்சம் வைக்காமல் சாப்பிட்டார். அதோட சந்தோஷப்பட்டுக்கோ. தயவு செஞ்சு பாடிடாதே. அப்புறமா அவர் உன்னை வேண்டாம்னு சொல்லிட்டு ஓடிடப் போறார்.''

''நேத்து இவரை தானேடா கல்லை கொண்டு அடிக்க நீ பிளான் போட்ட!''

''ரெண்டாவது கல்யாணம்னு சொன்னதால... எவனாச்சும் சொட்டை மண்டையன் வந்து நின்னால் அப்படி செய்வேன்னு சொன்னேன். இவர் தான் ஹீரோ மாதிரி இருக்காரே. அப்புறம் எதுக்கு நான் அவரை விரட்டணும்?''

''நீ இப்படி சொல்லச் சொல்ல தான் எனக்கு பயமா இருக்கு.''

''எதுக்குக்கா பயப்படுறே?''

''உங்க எல்லோருக்கும் அவரை ரொம்ப பிடிச்சு போச்சு. நான் ஏதாச்சும் சொதப்பி அவருக்கு என்னைப் பிடிக்காமல் போயிடுமோன்னு தான்.''

''அப்படி எல்லாம் எதுவும் நடக்காது. நீ பயப்படாமல் போ.'' என்று சொல்லி அழகர் கீழே சென்று விட்டான்.

அழகர் போட்ட நாற்காலியில் அமராமல் மொட்டை மாடியை சுற்றி வந்து கொண்டிருந்த விக்ரமின் காதுகளில் பாதி படியில் நின்று பேசிக் கொண்டிருந்த இந்த அக்கா தம்பி உரையாடல் தெளிவாக விழுந்தது.

அவன் சிரித்துக் கொண்டே நகர்ந்து சென்று அந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான். தயங்கித் தயங்கி வந்த கயலிடம் உட்காருமாறு நாற்காலியை காட்டினான்.

அவள் அங்கே அமர்ந்து அவனை பயத்தோடு பார்த்தாள்.

''ரிலாக்ஸ்டா இருங்க. நான் உங்களை பயப்படுத்துற மாதிரி எதுவும் கேட்க மாட்டேன்.'' என்றதும் சற்று பயம் தெளிந்தாள்.

''எனக்கு இது ரெண்டாவது கல்யாணம்னு உங்க வீட்டுல சொன்னாங்களா?''

''ம்ம்ம் எங்க அப்பா சொன்னார்.''

''உங்களுக்கு அதுல எந்த ஆட்சேபணையும் இல்லையா?''

''என்னோட ஜாதகத்துல நான் ரெண்டாவது மனைவியா தான் கல்யாணம் பண்ணி போவேன்னு இருக்காம்.''

''இதெல்லாமா ஜோசியத்துல சொல்லுவாங்க? வேற என்னவெல்லாம் சொல்லுவாங்க?'' என்று அவன் நக்கலாகக் கேட்டான்.

அவனது நக்கலை உணராத கயல்விழியும், ''மாப்பிள்ளை எந்த திசையில் இருந்து வருவார், மாப்பிள்ளைக்கு கூட பிறந்தவங்க எத்தனை பேர், மாப்பிள்ளை

படிச்சவரா, சொந்த தொழில் செய்யுறவரா இப்படி நிறைய சொல்லுவாங்க.'' என்று அடுக்கினாள்.

அவன் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''உங்களுக்கு என்கிட்ட ஏதாச்சும் கேட்கணுமா?'' என்றான்.

அவள் இல்லை என்னும் விதமாய் தலை அசைக்கவும் அவன் எழுந்து மடமடவென்று செல்ல ஆரம்பித்தான்.

'நாம ஏதாச்சும் சொதப்பிட்டோமா? இப்போ எதுக்கு டக்குன்னு எழுந்து போயிட்டார்?' எனக் குழம்பிய கயல்விழி அங்கேயே அமர்ந்துவிட்டாள்.

இரண்டிரண்டு படிகளாக தாவி இறங்கி வந்தவனை கண்ட கணேசன் துணுக்குற்றார்.

'என்னடா இவர் போன வேகத்துல வந்துட்டார். பொண்ணை பிடிக்கலையா?' என்று கணேசன் விழித்தார்.

அதே எண்ணம் தான் அங்கே இருந்த அனைவருக்குமே என்று அவர்களது குழப்ப முகம் உணர்த்தியது.

யாரையும் கண்டுகொள்ளாமல் விக்ரம் கணேசனிடம், ''எனக்கு உங்க பொண்ணைப் பிடிச்சு இருக்கு. நகை சீர்னு எதுவும் எனக்குத் தேவை இல்லை. உங்க பொண்ணை மட்டும் அனுப்பி வச்சால் போதும். வரும் போது தெரு முனையிலே ஒரு கோவில் இருக்கிறதை பார்த்தேன். நாங்க அங்கே வெயிட் பண்ணுறோம். நீங்க உங்க வீட்டுல கலந்து பேசி உங்க முடிவை சொல்லுங்க.'' என்றான்.

தன் தந்தையை பார்த்து, "வாங்கப்பா போகலாம்." என்றான்.

அவன் சம்மதம் சொல்லியதால் அனைவரின் மனமும் சந்தோஷம் அடைந்தது.

விக்ரம் வெளியேறும் போது கயல்விழி பாதி படிகளில் நின்றிருந்தாள். விக்ரம் அவள் நிற்பதை உணர்ந்தும் அவள் புறம் திரும்பாமல் தன் செருப்பை அணிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

அவனை தொடர்ந்து அவனது பெற்றோரும் வெளி யேறினர். அவர்களும் கயல்விழியை கண்டுகொள் ளாமல் சென்றனர்.

அவர்கள் செல்வதை பார்த்து குழம்பிய முகத்தோடு கயல்விழி வீட்டினுள் நுழைந்தாள்.

"என்னப்பா கிளம்பி போயிட்டாங்க?"

"அவருக்கு உன்னை ரொம்ப பிடிச்சு இருக்காம். நகை சீர்னு எதுவும் வேண்டாமாம்."

"பிடிச்சு இருக்குன்னா எதுக்கு கிளம்பி போயிட் டாங்க?"

"அவங்க திருச்சிக்கு போகலை. நம்ம தெரு முனை கோவிலுக்கு தான் போய் இருக்காங்க. நம்மளை கலந்து பேசி பதில் சொல்ல சொல்லிட்டு போய் இருக்கார்."

கயல்விழி தன் குடும்பத்தினரின் முகங்களை கவனித் தாள். அனைவரின் முகத்திலும் சந்தோஷம் இருந்தது. கயல்விழியை பொறுத்தவரை அவளுடைய குடும்பத் தினரின் விருப்பமே அவளது விருப்பம்.

''உங்களுக்கு எல்லாம் பிடிச்சிருக்கா?''

''அதை நாங்க உன்கிட்ட கேட்கணும் கயல். உனக்கு அவரை பிடிச்சிருக்கா?''

''வெளித்தோற்றத்தை வச்சு பார்த்தால் எனக்கு அவரை பிடிச்சிருக்கு. நல்லா ஸ்மார்ட்டா இருக்கார். நிறைய படிச்சிருக்கார். மத்தபடி அவரை பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாதே.''

''அவருக்கு மட்டும் உன்னை ரொம்ப தெரியுமா? கல்யாணத்துக்கு அப்புறமா தெரிஞ்சுக்கோ.'' என்று தங்கம் கூறினார்.

வீட்டினர் அனைவரும் இந்த திருமணத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்கு வந்துவிட்டது கயல்விழிக்கு புரிந்து போயிற்று.

'ஏன் உனக்கு அவரை பிடிக்கலையா? உன்னை பிடிச்சு இருக்குன்னு அவர் சொல்லணும்னு உன்னோட உள் மனசு ஆசைப்படாமலா அவர் டக்குன்னு எழுந்து போனதும் வருத்தப்பட்டே?' என்று மனசாட்சி கேள்வி எழுப்பியது.

''என்ன கயல் உனக்கு சம்மதமா?'' என்று கணேசன் கேட்டார்.

"எனக்கு பிடிச்சிருக்குப்பா." என்று அவள் சொன்னதும் கணேசனும் தங்கமும் விக்ரமையும் அவனை பெற்றவர் களையும் சந்திக்க அந்த கோவிலுக்கு செல்ல முடிவு செய்தனர்.

# 7

விக்ரம் கோவிலில் சாமியை தரிசித்துவிட்டு பிர காரத்தில் ஒரு ஓரமாய் அமர்ந்து தன் கண்களை மூடிக் கொண்டான்.

தன்னிடம் தனியாக பேசப் பயந்து அவள் திருதிரு வென்று விழித்ததையும், தன் தம்பியுடன் பேசிய தையும், தன் நக்கல் கேள்விக்கு மிக தீவிரமாய் பதில் அளித்ததையும் நினைத்துப் பார்த்து அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அவள் ஆள் எப்படி என்று கணிப்பதற்காக தான் அவ ளிடம் தனியாக பேச அவன் விரும்பினான். ஆனால் அழகருடன் அவள் பேசிய பேச்சு அதற்கு அவசியம் இல்லாமல் செய்துவிட்டது.

அவர்கள் அளித்த சிற்றுண்டியில் அவளது சமையல் திறமை அவனுக்குப் புரிந்துவிட்டது. அந்த வகையில் அவளை திருமணம் செய்து கொள்ளப் போகும் ஆண் ஒரு அதிர்ஷ்டசாலி என்பது அவனது எண்ணம்.

தனக்கு வர போகும் மனைவி தன்னளவிற்கு படித் திருக்க வேண்டும் என்றோ தன்னளவு வசதியாய் இருக்க வேண்டுமென்றோ அவன் எதிர்பார்க்கவில்லை.

அவனுக்கு இருக்கும் ஒரே எதிர்பார்ப்பு என்னவென் றால் தனிமையில் தவிக்கும் தன்னை நன்கு பார்த்துக் கொள்ளும் ஒரு பெண் வேண்டும். அவ்வளவே!

கயல்விழியுடனான வாழ்க்கை சுவாரஸ்யமாய் கழியும் என்று அவனுக்குத் தோன்றியதால் தான் பட்டென்று தன் கருத்தை சொல்லி விட்டு வந்தான்.

கணேசனும் தங்கமும் மலர்ந்த முகத்துடன் கோவி லுக்குள் நுழைவதை கண்ட நடராஜனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

''எங்களுக்கு பரிபூர்ண சம்மதம். கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம்?'' என்று கணேசன் அவர்களிடம் கேட்டார்.

''நல்ல நாள் பார்க்கலாம். நீங்க இங்கே யார்கிட்ட பார்ப்பீங்க?'' என்று நடராஜன் விசாரிக்கவும்,

''இந்த கோவில் அர்ச்சகர் கூட நாள் பார்த்து தருவார்.'' என்று சொல்லி அவர்களை அவரிடம் அழைத்து சென்றார்.

இருவரின் ஜாதகத்தையும் வாங்கிப் பார்த்தவர், ''கல் யாணத்தை ரெண்டு மாசத்துக்குள்ள முடிச்சால் நல்லது. பையன் ஜாதகத்துல குரு பலன் அதோட முடியுது.'' என்றார்.

''ரெண்டு மாசத்துக்குள்ள கல்யாணம் வைக்கிறது கஷ்டமே. மண்டபம் கிடைக்கணும், பத்திரிகை அடிக் கணும், எல்லோரையும் கூப்பிடணும்.'' என்று நடராஜன் யோசனையுடன் இழுத்தார்.

''ரெண்டு மாசத்துக்குள்ள வைக்க முடியலைன்னால் ரெண்டு வருஷம் கழிச்சுதான் நீங்க கல்யாணத்தை

நடத்த வேண்டி இருக்கும். இந்த ரெண்டு மாசத்துக்குள்ள இந்த ரெண்டு ஜாதகத்துக்கும் பொருந்துற மாதிரியான நல்ல நாட்களை இதுல குறிச்சு தரேன். நீங்க பார்த்து முடிவு பண்ணிக்கோங்க.'' என்றவர் நல்ல நாளையும் நேரத்தையும் ஒரு தாளில் குறித்து கொடுத்து விட்டு சென்றார்.

அனைவரும் அமைதியாய் யோசனையில் ஆழ்ந்தனர்.

சிவகாமி தன் கணவரிடம் திரும்பி, ''மண்டபத்துல வைக்கலைன்னால் என்ன... சிம்பிளா கோவிலில் கல்யாணத்தை முடிப்போம். ரெண்டாவது கல்யாணம் தானே. எதுக்கு விமரிசையா செய்யணும்?'' என்றார்.

நடராஜன் அவஸ்தையாய் தன் மகன் முகம் பார்த்தார். அவன் எந்த ஒரு உணர்ச்சியும் காட்டாது அமர்ந்திருந்தான்.

''விக்ரம்! நீ என்னப்பா சொல்லுறே?''

''அம்மா சொல்லுற மாதிரி கோவிலில் வச்சு சிம்பிளா பண்ணிடலாம்பா.'' என்று தந்தையை பார்த்துக் கூறியவன்,

''இந்த தேதியில் எது உங்க பொண்ணுக்கு வசதின்னு அவங்களை கேட்டு அப்புறமா போனில் சொல்லுங்க. அந்த தேதியில் வச்சுக்கலாம்.'' என்று கணேசனை பார்த்துக் கூறினான்.

அவர் சரி எனும் விதமாய் தலை அசைத்து சம்மதித்தார்.

''கல்யாணம் திருச்சியில் தான் வைக்கணும்.'' என்று சிவகாமி கூறினார்.

கணேசனும் தங்கமும் அதற்கும் தங்கள் சம்மதத்தை தெரிவித்தனர்.

விக்ரம் கணேசனின் அலைபேசியை வாங்கி தன் னுடைய எண்ணிற்கு ஒரு அழைப்பு விடுத்தான்.

"இது என்னோட போன் நம்பர். சேவ் பண்ணிக்கோங்க. அப்பாவோட நம்பர் உங்ககிட்ட இருக்கு இல்லையா? எதுவும் டவுட்டுன்னா போன் பண்ணுங்க.'' என்றான்.

''அப்போ நாங்க கிளம்புறோம். மீதியை போனில் பேசிக்கலாம்.'' என்று நடராஜன் சொல்லவும் அவர்கள் கிளம்பினார்கள்.

வீட்டுக்கு வந்த கணேசன் கயல்விழியை கோவில் அர்ச்சகர் குறித்துக் கொடுத்த திருமண தேதியில் ஒன்றை தேர்ந்தெடுக்குமாறு கூறினார். ஒரு புதன்கிழமை முஹூர்த்தத்தை அவள் தேர்ந்தெடுத்தாள். அதே தேதி யில் திருமணத்தை நடத்தி விடலாம் என்று நடராஜன் கூறினார்.

அழகரின் முழு ஆண்டுத் தேர்வு விடுமுறையில் கல்யாணத் தேதி குறிக்கப்பட்டதால் அவனுக்கு மிகுந்த சந்தோஷம்.

மறுநாள் அழகர் தன் தந்தையிடம், ''ரிசப்ஷன் எப்போ எங்கேன்னு கேட்டீங்களாப்பா?'' என்று கேட்ட பொழுது தான் கணேசனுக்கு அந்த நினைவே வந்தது.

அவர் நடராஜனிடம் கேட்ட பொழுது அவர் விக்ரமை கேட்டு சொல்வதாய் சொன்னார்.

அவர் தன் மகனிடம் அந்த தகவலை சொன்ன பொழுது, ''நான் யோசிச்சு பார்த்து அவர்கிட்ட பதில்

சொல்லிக்கிறேன்பா.'' என்று அவன் ஒரே வரியில் முடித்து விட்டான்.

அன்று இரவு அவன் கணேசனை அழைத்துப் பேசினான்.

''ரிசப்ஷன் பத்தி கேட்டீங்கன்னு அப்பா சொன்னார். ரிசப்ஷன்னு தனியா எதுவும் வைக்க வேண்டாம். உங்களோட நெருங்கின சொந்தக்காரங்களை திருச்சிக்கு அழைச்சுட்டு வாங்க. மீதி பேரை கல்யாணத்தன்னைக்கு ஈவினிங் உங்க வீட்டுல வந்து பார்த்துக்க சொல்லுங்க. இது உங்களுக்கு ஓகேயா?''

''சரிங்க மாப்பிள்ளை. நீங்க சொன்ன மாதிரியே அன்னைக்கு சாயந்திரம் பொண்ணு மாப்பிள்ளையை பார்க்க நினைக்கிறவங்களை வீட்டுக்கே வர சொல்லிடுறேன். எங்க அக்கா வீடு இங்கே பக்கத்துல ரெண்டு தெரு தள்ளி இருக்கு. அங்கே வச்சு சாப்பாடு போட்டுக்கலாம்.'' என்றார்.

''அப்புறம் உங்க பொண்ணு கூட யாரெல்லாம் சென்னைக்கு வருவீங்கன்னு சொன்னால் நான் இப்பவே டிக்கெட் போட்டுடுவேன்.''

''நான், தங்கம், அழகர் மூணு பேரும் வருவோம் மாப்பிள்ளை.''

''சரி உங்க எல்லோருக்கும் டிக்கெட் போட்டுடுறேன். வேற எதுவும் சந்தேகம்னா எனக்கு போன் பண்ணுங்க.'' என்று சொல்லி அழைப்பை துண்டித்தான்.

விக்ரம் கூறியதை கணேசன் தன் வீட்டினருக்கு தெரியப்படுத்தினார்.

அழகருக்கு தான் கொஞ்சம் வருத்தம். அவன் முகம் வாடலாயிற்று. கணேசனும் தங்கமும் வெளியே சென்றதும் கயல்விழி தன் தம்பியிடம் பேசினாள்.

"ஏன்டா முகத்தை தூக்கி வச்சுக்கிட்டு இருக்க?"

"எல்லாமே பேருக்கு நடக்கிற மாதிரி இருக்குக்கா. கல்யாணமும் மண்டபத்துல வச்சு பண்ணாமல் கோவில்ல வச்சு பண்ணுறாங்க. ரிசப்ஷனாச்சும் வைப்பாங்கன்னு பார்த்தேன். அதுவும் வேண்டாம்னு சொல்லிட்டார். அவருக்கு வேணா இது ரெண்டாவது கல்யாணமா இருக்கலாம். ஆனா எங்க அக்காக்கு இது தானே முதல் கல்யாணம்."

"நான் அப்படி நினைக்கலைடா. கல்யாணம், ரிசப்ஷன் இந்த ரெண்டையும் ரொம்ப கிராண்டா பண்ணினால்... நம்ம அப்பாவுக்கு தானேடா செலவு. சிம்பிளா பண்ணினால் அப்பா கடன் வாங்க தேவை இருக்காது இல்லையா."

"நாம தான் வசதி இல்லாதவங்க. அவங்க வசதியானவங்க தானே! அவங்க நினைச்சால் ரிசப்ஷன் எல்லாம் வைக்கலாம். ரொம்ப விமரிசையா செய்யாமல் சிம்பிளா செய்யலாம்ல. ஆனா இவங்க எதுவுமே வேண்டாம்னு சொல்லுறதை கேட்கிறப்போ சங்கடமா இருக்கு."

"ப்ச் நான் உனக்கு அண்ணனா பிறந்திருக்கலாம். அப்படி பிறந்திருந்தால் உனக்கு கல்யாணம் பண்ணும் போது நான் சம்பாதிக்க ஆரம்பிச்சு இருப்பேன். உன் கல்யாணத்தை நான் இன்னும் நல்லபடியா நடத்தி இருப்பேன்."

தம்பி தன் மீது வைத்த பாசத்தை கண்டவளின் மனம் நெகிழ்ந்தது. அவனது முதுகை தட்டி கொடுத்து அவனை ஆறுதல் படுத்தினாள்.

இங்கே அக்காவும் தம்பியும் நடக்கப் போகும் திரு மணத்தில் தங்கள் கனவு கலைந்து போனதாக வருத்தப் பட்டு கொண்டிருந்தார்கள்.

ஆனால் விக்ரமோ இது போன்ற கவலை ஏதுமின்றி சுற்றிக் கொண்டிருந்தான்.

இடைப்பட்ட நாட்களில் விக்ரம் தன்னிடம் பேசு வானோ என்று கயல் ஆர்வமாக காத்திருந்தாள். ஆனால் அவன் பேசவில்லை.

அவளுக்கென்று தனியாக அலைபேசி எண் இல்லை. அவர்கள் வீட்டில் கணேசனிடம் மட்டுமே அலைபேசி உள்ளது.

விக்ரம் அதனால் கூட தன்னிடம் பேசாமல் இருக்க லாம் என்று சில சமயம் அவளுக்குத் தோன்றும். இரண் டாவது திருமணம் என்பதால் தன்னிடம் பேசாமல் அசட்டை செய்கிறானோ என்று அவ்வப்போது வருந்தி னாள்.

ஒருநாள் விக்ரமிடம் இருந்து கொரியர் ஒன்று வந்தது. இரண்டு பட்டு ரவிக்கை துணிகளும் கூரைப் புடவைக் கான ரவிக்கை துணியும் அனுப்பி இருந்தான்.

அது பற்றிய விபரத்தை கணேசன் அவனிடம் போனில் கேட்ட பொழுது, ''கூரை புடவை பிளவுஸும் பச்சை கலர் பட்டு பிளவுஸும் கயலுக்கு. இன்னொண்ணு கயல் அம்மாக்கு. எல்லாத்தையும் மறக்காமல் டெய்லர்கிட்ட குடுத்து தச்சுடுங்க.'' என்றான்.

''மாப்பிள்ளை! கயல் பிளவுஸ் நல்லாவே தைப்பாள். இங்கே அக்கம் பக்கத்துல உள்ளவங்களுக்கு கூட தச்சு குடுப்பாள்.''

''ஓ! அப்போ அவளையே தச்சு வச்சுட சொல்லுங்க.'' என்று சொல்லி அவன் அழைப்பை துண்டித்தான்.

கணேசன் இதை மகளிடம் தெரிவித்த பொழுது அவள் தன் தலையை ஆட்டி கேட்டுக் கொண்டாள்.

'அம்மாக்கெல்லாம் புடவை எடுத்திருக்கார். அழகருக்கும் அப்பாவுக்கும் எடுக்கலையா? இதை போய் அவர் கிட்ட கேட்க முடியாதே! எப்படி இருந்தாலும் அப்பா எங்க நாலு பேருக்கும் புதுசு எடுக்க தான் செய்வார்.' என்று தனக்குள் கூறிக் கொண்டாள்.

மறுவீட்டு விருந்திற்கு எப்பொழுது வர விக்ரமிற்கு வசதிப்படும் என்று கேட்டு கணேசன் போன் செய்தார்.

''கல்யாணத்தன்னைக்கு நைட் சாப்பாடு போடுவீங்க இல்ல... அதையே மறுவீட்டு விருந்தா வச்சுக்கோங்க.''

''அது கல்யாண சாப்பாடு மாப்பிள்ளை.''

''கல்யாணத்துக்கு மறுநாள் காலையிலே நாம வைகை எக்ஸ்பிரஸ்'ல கிளம்ப டிக்கெட் போட்டு இருக்கேன்.''

எங்க வீட்டுல தங்க வசதிப்படாதுன்னு நினைக்கிறார் போல என எண்ணிய கணேசன், ''அடுத்த நாளே கிளம்பிடலாம் மாப்பிள்ளை. ஆனால் காலையில் கிளம்புறதுக்கு பதிலா நைட் கிளம்பலாம். அன்னைக்கே மறு வீட்டு விருந்தையும் வச்சுக்கலாம்.'' என்றார்.

''இல்லை... நான் தூங்கி வழிஞ்ச முகத்தோட என் வீட்டுக்குள்ள போக விரும்பலை. அதுக்கு தான் பகல்

டிரைனில் டிக்கெட் போட்டிருக்கேன். அப்படியே இருக்கட்டும்.'' என்று அவன் சொல்லி விட்டான்.

விருந்து என்ற பெயரில் அவருக்கு எதற்கு செலவு வைப்பானேன் என்று விக்ரம் நினைத்தான்.

''விருந்து கூட வைக்க வக்கில்லையான்னு கேட்பாங் களே... நான் எப்படி சமாளிக்க போறேன்னு தெரிய லையே! ஏற்கனவே ரெண்டாங் கல்யாணமான்னு ஆள் ஆளுக்கு கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடி யலை. இப்போ இது வேற புது சிக்கல்'' என்று கணேசன் கவலைப்பட்டார்.

# 8

திருமணத்திற்கு முதல் நாளே பெண்ணை அழைத்து செல்வதற்காக விக்ரமின் உறவினர்கள் மதுரைக்கு வந்தனர். கயல்விழியையும் பெண் வீட்டு சார்பாக இரு உறவினர்களையும் அழைத்துக் கொண்டு திருச்சிக்கு கிளம்பினர்.

அழகரும் அக்காவின் துணைக்கு என்று அவர்களுடன் அனுப்பப்பட்டான். மீதி பேர் மறுநாள் அதிகாலையில் கிளம்பி வருவதென்று முடிவு செய்திருந்தனர்.

விக்ரமின் உறவினர்களின் வீட்டில் கயல்விழி தங்க வைக்கப்பட்டாள். இரவு உணவு சரியான நேரத்திற்கு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பெண்ணை பார்க்கவென்று யாரும் அவள் இருக்கும் திசை பக்கம் கூட எட்டிப் பார்க்கவில்லை. கயல்விழிக்கு ஒரு பய பந்து அடிவயிற்றில் உருண்டது.

'எல்லா கல்யாணத்திலும் கல்யாண பொண்ணை சுத்தி ஒரு கூட்டமே இருக்கும். இங்கே என்னடான்னா ஒரு ஈ காக்காவை காணோம். ரெண்டாவது கல்யாணம் என்பதாலா? இல்லை வசதி இல்லாத வீட்டு பொண்ணுன்னு உதாசீனப்படுத்துறாங்களா? ஒண்ணும் புரியலையே.'

'நினைக்கிறதை வாய் விட்டு புலம்ப கூட முடியாது. உடனே இந்த அழகர் அழுக ஆரம்பிச்சுடுவான். தாயே மீனாட்சி! உன்னை தான் நம்பி இருக்கேன். என்னை பத்திரமா பார்த்துக்கோ' என்று வேண்டிக் கொண்டாள்.

பொதுவாக திருமணத்திற்கு முதல் நாள் மணப்பெண் கல்யாணக் கனவுகளால் தூக்கத்தை தொலைப்பாள். ஆனால் இங்கே கயல்விழி சொல்லத் தெரியாத ஒரு பயத்தினால் தூக்கம் வராமல் தவித்தாள்.

மறுநாள் காலையில் எழுந்து அவள் குளித்து முடித்து தலையை காய வைத்தாள். அழகு நிலையத்தை சேர்ந்த இருவர் வந்தனர்.

''நாங்க யாரையும் வர சொல்லலையே.'' என்று கயல்விழி விழித்தாள்.

''மாப்பிள்ளை வீட்டுல இருந்து அனுப்பினாங்க.'' என்றதும் கயல்விழி அவர்களுக்கு உடன்பட்டாள்.

கயல்விழிக்கு எளிமையான அலங்காரம் செய்யப் பட்டது.

கூரை புடவை நூல் புடவைங்கிறதால ரொம்ப ஹெவியா நகை போட வேண்டாம். என்று சொல்லி அவர்கள் அவளுக்கு அளவான போலி நகைகளை பூட்டினர்.

அவர்கள் வேலையை முடித்துக் கொண்டு சென்றதும் அழகர் தன் அக்காவின் அருகே வந்து, ''சூப்பரா இருக் கேக்கா. அம்மாவும் அப்பாவும் உன்னை பார்த்தாங் கன்னா ரொம்ப சந்தோஷப்படுவாங்க.'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மதுரையில் இருந்து ஒரு வேன் நிறைய ஆட்கள் அங்கே வந்து சேர்ந்தனர். தங்கமும் கணேசனும் மகளை மணப்பெண் கோலத்தில் கண்டு ஆனந்தப்பட்டனர்.

குறித்த நேரத்தில் விக்ரம் மற்றும் கயல்விழியின் திருமணம் கோவிலில் வைத்து நடைபெற்றது.

சென்னையில் இருந்து கைலாஷ் மட்டும் வந்திருந் தான். அவனது குடும்பத்தினர் யாரும் வரவில்லை. அவன் தான் விக்ரமிற்கு மாப்பிள்ளை தோழனாய் இருந்தான்.

விக்ரமின் அண்ணன் செல்வமும் அவன் மனைவி சந்திரலேகாவும் விருந்தாளிகள் போல் ஒரு ஓரத்தில் நின்றிருந்தனர். அளவான கூட்டம் என்பதால் பெரிதாய் எந்த ஒரு பரபரப்பும் அங்கே தென்படவில்லை.

சாமி தரிசனம் முடிந்த பின் மணமக்கள் விக்ரம் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

வாசலில் பந்தல் போட்டு சேர்கள் போடப்பட்டு இருந்தன. கோவிலில் இருந்து திரும்பி வந்த பெண்

வீட்டினர் அங்கே உட்கார்ந்தனர். மாடியில் பந்தல் போட்டு சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

உறவுக்கார பெண் ஒருத்தி ஆலம் சுற்றி முடிக்கவும் மணமக்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். மணமக்கள் இருவரும் சோபாவில் அமர்ந்தனர்.

வீட்டிற்கு வந்த சிறிது நேரத்தில் கைலாஷ் சென் னைக்கு கிளம்பினான். அவனை வாசல் வரை சென்று விக்ரம் அனுப்பி வைத்தான்.

''சென்னைக்கு போனதும் எனக்கு மெசேஜ் பண் ணுடா.''

''கண்டிப்பா விக்ரம். விஷ் யூ ஏ ஹாப்பி மேரீட் லைஃப்.'' என்று மீண்டும் ஒரு முறை வாழ்த்திவிட்டு அவன் சென்றான்.

விக்ரம் வீட்டிற்குள் நுழைவதற்காக திரும்பி நடந் தான். கார் பார்க்கிங் இடத்தில் நின்று கொண்டு அவனது அண்ணி சந்திரலேகா அவளின் அம்மாவோடு பேசிக் கொண்டிருந்தாள்.

''நான் என் ரூமை பூட்டி வச்சுட்டேன்மா. புதுசா ஒரு பொண்ணு வந்திருக்கு. அவ ஆள் எப்படியோ? வசதி இல்லாத வீட்டு பொண்ணு வேற. ரூமிலே நகை பணம்னு நிறைய இருக்கு. எதுக்கு வம்பு?'' என்று அவள் விக்ரமை பார்த்துக் கொண்டே சப்தமாக கூறினாள்.

விக்ரம் தங்களைச் சுற்றி பார்த்தான். இருபதடி தூரத் தில் தான் உறவினர் கூட்டம் இருந்தது. தன் அருகே யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண் டான்.

''நீங்க இந்த வீட்டுக்கு வந்தப்போ எங்க அம்மா அவங்க ரூமை இப்படி பூட்டி வைக்கலையே! நாங்க தப்பு பண்ணிட்டோமா?'' என்று கேட்டான்.

''நானும் அவளும் ஒண்ணா?''

''ஆமா நீங்க பெரிய அம்பானி ஃபேமில இருந்து வந்தீங்க.'' என்று நக்கலாக சொன்னவன், என் பொண்டாட்டியை பத்தி நீங்க பேசுறது இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும். என்று கடுமையான குரலில் எச்சரித்தான்.

அப்பொழுது அந்த வழியாக சிவகாமி வரவும் சந்திரலேகா அவரிடம், ''அத்தை! இங்கே வாங்க. உங்க பையனுக்கு பெரியவங்க சின்னவங்கன்னு ஒரு மட்டு மரியாதை இல்லை போல. எங்க அம்மாவை வாய்க்கு வந்தபடி பேசுறார்.'' என்று வாய் கூசாமல் பொய்யுரைத்தாள்.

நடந்தது என்ன என்று மகனிடம் விசாரிக்காத சிவகாமி, ''உன்னை விட வயசிலே பெரியவங்களை பார்த்து அப்படியா விக்ரம் பேசுவ? நடந்துகிட்டு இருக்கிறது உன்னோட கல்யாணம். அதுல எதுக்கு உனக்கு இந்த வாக்குவாதம்?'' என்று சொல்லிவிட்டு சென்றார்.

சந்திரலேகாவும் அவளது தாயும் கூட அங்கிருந்து சென்றனர். விக்ரம் மட்டுமே கடுப்பாக நின்றிருந்தான்.

சற்று தூரத்தில் உறவினர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த நடராஜன் மகனின் முகத்தை தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

எதுவோ பிரச்சனை என்று அவருக்குப் புரிந்தது. அந்த உறவினரிடம் இருந்து கத்தரித்து கொண்டு

வருவதற்குள் சிவகாமி மகனை திட்டிவிட்டு சென்று விட்டார்.

நடராஜன் தன் மகனிடம் வந்து, ''என்னாச்சு விக்ரம்? என்ன பிரச்சனை?'' என்று விசாரித்தார்.

தந்தையிடம் ஒன்றும் கூற விரும்பாத விக்ரம், ''ஒண்ணுமில்லைப்பா.'' என்று மட்டும் சொன்னான்.

''சந்திரலேகா ஏதாச்சும் சொன்னாளா?''

அவன் பதில் சொல்லாமல் அமைதியாய் நின்றிருந் தான். அவன் பதில் சொல்லாததில் இருந்தே பிரச்சனை அவளிடம் இருந்து தான் தொடங்கி இருக்கிறது என்பது அவருக்குப் புரிந்து போனது.

"நான் சாப்பிட்டு முடிச்சதும் மதுரைக்கு கிளம்புறேன்பா."

''உன் கூட செல்வம் குடும்பத்தை அனுப்பி வைக்க லாம்னு நினைச்சேன். இப்போ அது முடியாதுன்னு புரியுது. அம்மாவும் நானும் கிளம்ப முடியாது. அத்தை குடும்பத்தை உன்கூட அனுப்பி வைக்கவா?''

''இல்லை. வேண்டாம். நான் திரும்பி வர மாட்டேன். அதனால என் கூட யாரும் வர வேண்டாம்.''

அன்று இரவு திருச்சிக்கு அவன் திரும்பப் போவ தில்லை என்று சொல்வதாக அவர் எண்ணிக் கொண்டார்.

''செல்வம் மறுவீட்டுக்கு போன போது அவன் கூட அஞ்சாறு பேர் போனாங்க விக்ரம். யாரும் துணைக்கு வாராமல் நீ மட்டும் போனால் அது வித்தியாசமா படும்.''

''அவன் கல்யாணம் மாதிரியா என் கல்யாணம் நடக்குது. இல்லைல. இதுவும் வித்தியாசமாவே இருக்

கட்டும்.'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்று விட்டான்.

உறவினர்கள் யாரையாவது தன்னுடன் அழைத்து சென்று அவர்கள் கயல் வீட்டின் செல்வநிலைமை பற்றி கேலி பேசி அவள் குடும்பத்தினரை வருந்த செய்து விடக் கூடாது என்பது விக்ரமின் எண்ணம்.

மகனது பேச்சிற்கு மறுப்பு சொல்ல முடியாமல் நடராஜனும் அவன் சொல்லுக்கு கட்டுப்பட்டார்.

அந்த அழகு நிலைய பெண்கள் வந்து கயல்விழியின் தலை அலங்காரத்தை கலைத்து விட்டு அவர்களுடைய போலி நகைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு சென் றார்கள்.

மிக சொற்பமாய் நகை அணிந்து நின்றிருந்த கயல் விழியை சந்திரலேகா கேலியாய் பார்த்தாள். அதை கயல்விழி கவனிக்கவில்லை என்றாலும் விக்ரம் கவ னித்தான்.

மதிய உணவிற்கு பின் மணமக்கள் மதுரைக்கு கிளம் பினர். விக்ரமும் கயல்விழியும் ஒரு காரில் பயணித் தனர். டிரைவருக்கு அருகே அழகர் அமர்ந்து கொண் டான்.

மீதி உள்ள அனைவரும் காலையில் அவர்கள் வந்த வேனில் ஏறிக் கொண்டனர்.

விக்ரம் சிறிது நேரம் அழகரிடம் பேசினான். அதற்கு மேல் அவன் தன் அலைபேசியில் மூழ்கிப் போனான். கயல்விழி ஒரு ஓரமாய் சாய்ந்து தூங்கினாள்.

நேற்று முழுவதும் திருமணம் நல்லபடியாக நடக்குமா என்ற பதட்டத்தில் இருந்தாள். இன்று அந்த பதட்டம் விலகிவிட்டது.

மேலும் தங்கள் வீட்டிற்கு செல்கிறோம் என்றதும் மனதில் நிம்மதி தோன்றவும் அவளையும் அறியாமல் கண்ணயர்ந்து விட்டாள்.

அவர்கள் மதுரை வந்து சேர்ந்தனர். அவள் வீட்டு வாசலிலும் பந்தல் போடப்பட்டு இருந்தது. முறையாய் அவர்களை வீட்டிற்குள் அழைத்து சென்றனர்.

கிடைத்த முதல் தனிமையில், "அன்னைக்கு பிளவுஸ் தச்சு வைக்க சொல்லி அனுப்பினேன்ல. அது எங்கே?" என்று விக்ரம் கேட்டதும், கயல்விழி அவனிடம் அதை எடுத்து வந்து கொடுத்தாள்.

அவன் அதை தன் பையில் வைத்துக் கொண்டதை பார்த்து 'இப்போ கட்ட புது சேலை தருவாருனு பார்த்தால் உள்ள வச்சுக்கிட்டார். அப்புறம் எதுக்கு என் அளவுக்கு பிளவுஸ் தைக்க சொன்னார்' எனக் குழம்பினாள்.

கூரை புடவையை மாற்ற சொல்லும் பொழுது பட்டு புடவை கட்ட தருவார்கள். அதுக்கான ரவிக்கை இது என்று அவள் நினைத்திருந்தாள்.

விக்ரம் அந்த அளவிற்கு எல்லாம் யோசிக்கவில்லை. அவன் ஒரு புடவை மட்டுமே எடுத்திருந்தான். அதுவும் ஞாயிறன்று சென்னையில் நண்பர்களுக்காக அவன் ஏற்பாடு செய்திருக்கும் விருந்து அன்று அணிவதற்காக.

அவனிடம் ஒன்றும் கேட்காமல் கயல்விழி தன்னிடம் உள்ள வேறு புடவைக்கு மாறினாள்.

மணமக்களை பார்க்கவென்று அக்கம்பக்கத்தினர் வந்து சென்றனர். இரவு உணவிற்கு பின் அவர்கள் இருவரை மட்டும் விட்டுவிட்டு அவளின் குடும்பத்தினர் அத்தை வீட்டிற்கு செல்வதாகச் சொல்லி சென்றனர்.

''கயல்! எனக்கு ரொம்ப வேர்க்குது. நான் எல்லா ஜன்னலையும் திறந்து வச்சுட்டு முன்னறையில் தூங்குறேன். நீ உன்னோட வழக்கமான இடத்துல படுத்துக்கிறியா?''

'இப்படி கேட்பவனிடம் இல்லை நானும் உங்க பக்கத்திலே வந்து படுக்கிறேன்னா சொல்ல முடியும்?' என நினைத்த கயல்விழியும் சம்மதமாய் தலையாட்டினாள்.

அவளுக்கு அந்த இரவை பற்றி எந்த கனவும் இல்லை.

இதுநாள் வரை தன் பெற்றோர்களுக்கு எந்தவித மனக்கசப்பையும் தராமல் தன் திருமணம் நல்லபடியாக நடந்தேற வேண்டும் என்ற ஒன்று மட்டுமே அவளது எண்ணமெல்லாம் வியாபித்து இருந்தது.

ஒருவேளை அவளிடம் இந்த இடைப்பட்ட நாட்களில் விக்ரம் போனில் பேசி ஒரு வித நெருக்கத்தை ஏற்படுத்தி இருந்தால் அவளும் இந்த இரவினை பற்றி இன்பமாய் கனா கண்டிருக்க கூடும்.

ஆனால் விக்ரம் ஒதுங்கிப் போனதாலோ என்னவோ அவள் இதை பற்றி சிந்தித்து பார்க்கவில்லை. அதனால் அவனது முடிவு பெரிதாய் எந்த ஏமாற்றத்தையும் தரவில்லை.

# 9

மறுநாள் வியாழக்கிழமை மதியம் மூன்று மணிக்கு கயல்விழி தன் கணவனுடனும் பெற்றோருடனும் சென்னை வந்து இறங்கினாள். விக்ரம் டாக்சி ஒன்றை அமர்த்திக் கொண்டு அனைவரையும் தன் வீட்டிற்கு அழைத்து வந்தான்.

அந்தக் குடியிருப்பு வளாகத்தின் பிரம்மாண்டத்தை கண்டு அவர்கள் நால்வரும் வாய் பிளந்தனர்.

தங்கம் தன் கணவரிடம், ''என்னங்க ரெண்டு பேரை யும் ஒண்ணா நிக்க வச்சு ஆரத்தி எடுக்கணும். நாம முதல்ல வீட்டுக்குள்ள போய் அதை கரைப்போம்.'' என்று கிசுகிசுத்தாா்.

''நீ சொல்லுறது சரி. அதுக்கான பொருள் எல்லாம் அவர் வீட்டிலே இருக்கணுமே!''

''நான் மஞ்சள், சுண்ணாம்பு. வெத்தலை எல்லாத் தையும் கையோடு கொண்டு வந்திருக்கேன். தட்டு மட்டும் தான் எனக்கு வேணும். அது அவர் வீட்டிலே இருக்காதா என்ன?''

''இரு. அவர்கிட்ட சொல்லுறேன்.'' என்று சொன்ன கணேசன் திரும்பி பார்க்க,

விக்ரம் யாருடனோ அலைபேசியில் பேசிக் கொண் டிருந்தான்.

அவன் சைகையில் தன்னை பின் தொடருமாறு கூறிக் கொண்டே சென்றான். இவர்களும் அவன் பின்னே நடந்தனர். மின்தூக்கியில் ஏறி முதல் மாடிக்கு சென்றனர்.

''ஆரத்தி பத்தி சொல்லுங்க!'' என்று தங்கம் தன் கணவனை இடிக்க,

''அவர் போனை வச்சால் தானே தங்கம் என்னால சொல்ல முடியும்.'' என்று அவர் பரிதாபமாய் விழித்தார்.

அதற்குள் விக்ரம் ஒரு வீட்டின் முன் சென்று நின்றான். அந்த வீடு திறந்தே இருந்தது.

என்ன இது வீடு திறந்து இருக்கு என அவர்கள் நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு பெண் ஆரத்தி தட்டோடு இவர்கள் முன் தோன்றினாள்.

''விக்ரமண்ணா! கயலோட சேர்ந்து நில்லுங்க.'' என்றவள் ஆலம் சுற்றி இருவரின் நெற்றியிலும் பொட்டு வைத்தாள்.

''வலது காலை எடுத்து வச்சு உள்ளே வாம்மா!'' என்று ஒரு பெண்மணி வீட்டின் வாயிலில் நின்று வரவேற்றார்.

அவர்கள் அனைவரும் தங்கள் பெட்டிகளோடு உள்ளே நுழைந்தனர்.

''சாரிடா. கொஞ்சம் லேட் ஆகிடுச்சு.'' என்று கூறிக் கொண்டே கைலாஷ் வீட்டினுள் நுழைந்தான்.

''ரொம்ப ஒண்ணும் லேட் இல்லைடா. ஜஸ்ட் இப்போ தான் உள்ளே நுழைஞ்சோம்.'' என்று கைலாஷுக்கு பதில் சொன்ன விக்ரம்,

தன் மனைவியின் குடும்பத்தினரை பார்த்து, "இவன் என் பிரண்டு கைலாஷ். அன்னைக்கு கல்யாணத்துல பார்த்திருப்பீங்க. இவங்க அவனோட அம்மா. ஆரத்தி எடுத்தது அவனோட மனைவி." என்று அறிமுகம் செய்து வைத்தான்.

அனைவரும் ஒருவரை ஒருவர் நலன் விசாரித்துக் கொண்டனர்.

கயலின் குடும்பத்தாருக்கு வீட்டை சுற்றி பார்க்க ஆசை இருந்தும் கைலாஷ் குடும்பத்தினர் முன் அதை செயல்படுத்த முடியாமல் அமைதி காத்தனர்.

தங்கள் பைகளை அவர்கள் வரவேற்பறையில் ஒரு ஓரமாய் வைத்துவிட்டு சோபாவில் வந்து அமர்ந்தனர். கைலாஷும் விக்ரமும் எதையோ தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தனர்.

கைலாஷின் மனைவி கயலிடம் பேச ஆரம்பித்தாள். கைலாஷின் தாய் தங்கத்திடம் பேச ஆரம்பித்தார்.

ஐந்து நிமிடங்களுக்கு பின், "கயல்விழி! இங்கே வாம்மா!" என்று கைலாஷின் தாய் அவளை சமைய லறைக்கு அழைத்து சென்றார்.

அவர் பின்னோடு தங்கமும் கைலாஷின் மனைவியும் சென்றனர். அழகரும் கணேசனும் தனித்து விடப்பட் டனர்.

"கல்யாணம் முடிவானதும் சமையல் செய்ய என் னென்ன தேவையோ எல்லாத்தையும் வாங்கி வைங்கம் மான்னு விக்ரம் சொன்னான். நான் தான் இங்கே இருக்கிற எல்லாத்தையும் வாங்கி வச்சேன். எது எதுல என்

னென்ன இருக்குன்னு சொல்லுறேன் பார்த்துக்கோ!'' என்றவர் அவளுக்கு ஒவ்வொன்றாய் விளக்க ஆரம் பித்தார்.

'மிக்ஸி, கிரைண்டர், பிரிஜ்ன்னு எல்லாமே இருக்கு. மாப்பிள்ளை மளிகை ஜாமான் கூட வாங்கி வச்சுட்டார். நாங்க ஒண்ணும் வாங்க தேவை இருக்காது போல.' என்று தங்கம் எண்ணிக் கொண்டார்.

வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. ஒரு பையன் வந்து ஒரு பெரிய பார்சலை கொடுத்து விட்டு சென்றான்.

கைலாஷ் அதை உணவு மேஜையில் வைத்தவாறே, ''அம்மா! டிபன் வந்துடுச்சு.'' என்று சமையல் அறை நோக்கி குரல் கொடுத்தான்.

''இதோ வந்துட்டோம்பா.'' என்று குரல் கொடுத்தவர் சமையல் அறையில் இருந்து வெளியே வந்தார்.

அப்பொழுது எதிர்வீட்டு பெரியவர்கள் இருவரும் கயல்விழியை பார்க்கவென வந்தனர். விக்ரம் அவர்களை உற்சாகமாய் வரவேற்றான்.

கைலாஷின் தாய் அனைவருக்கும் சிற்றுண்டி பரி மாறினார்.

சிற்றுண்டியை சாப்பிட்டு முடித்ததும் எதிர்வீட்டு பெரியவர்களும் கைலாஷின் குடும்பமும் அவர்களிடம் இருந்து விடைபெற்று சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பே விக்ரம் அவர்களுக்கு வீட்டை சுற்றி காட்டினான். ஒரு அறையை காண்பித்து அதில் அவர்களை தங்கிக் கொள்ளுமாறு சொன்னான். அவர்கள் தங்கள் பெட்டிகளை அங்கே கொண்டு போய் வைத்தனர்.

வீடு முழுவதையும் சுற்றிக் காண்பித்தவன், ''நீங்க உட்கார்ந்து பேசிக்கிட்டு இருங்க. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் போய் அதை பார்க்கிறேன்.'' என்று கூறி தனது அறைக்கு சென்று மறைந்தான்.

''அக்கா! பார்த்தியா.. நம்ம வீட்டுல எந்த பர்னிச்சரும் இருக்காது. இங்கே இல்லாத பொருளே இல்ல.''

''விருந்தாளிகள் ரூமிலே கூட கட்டில் மெத்தை எல்லாம் இருக்குடா அழகா.''

''இந்த டிவியை பார்த்தியா... எவ்வளவு பெருசா இருக்கு.''

''ஆமாடா. சினிமா ஸ்கிரீனில் பார்க்கிற மாதிரி இருக்குமோ.''

அக்காவும் தம்பியும் இப்படி அதிசயமாய் பார்த்தார்கள் என்றால் கணேசனோ வேறு மாதிரி கணக்கிட்டு கொண்டிருந்தார்.

''ஏன் தங்கம் இவங்க ரெண்டு பேருக்கு இந்த வீடு ரொம்ப பெருசு இல்ல? வீட்டு வாடகை அதிகமா இருக்காது. வீண் செலவு தானே. சேர்த்து வச்சால் பின்னாடி உபயோகப்படுமே!''

''நமக்கு ஆடம்பரமா தெரியுது. அவருக்கு அவசியமா தெரியுதோ என்னவோ.''

''பெரியவங்க நாம தான் தங்கம் எடுத்து சொல்லணும்.''

''இந்த மாதிரி அறிவுரை எல்லாம் நம்ம மகளுக்கு சொல்லலாம். மாப்பிள்ளைக்கு சொல்ல முடியுமா?''

'அதுக்காக சொல்லாமல் இருக்க முடியுமா?' என்று அவரின் மனம் அதிலேயே உழன்றது.

சிக்கனமாய் வாழ்ந்து பழகிய மனிதருக்கு தன் மாப்பிள்ளை ஆடம்பரமாய் வாழ்வதற்காக வெட்டி செலவு செய்கிறாரோ என்று கூடத் தோன்றியது.

விக்ரம் ஒரு பொறியியல் பட்டதாரி. நன்றாக சம்பாதிப்பான் என்ற அளவில் மட்டுமே அவர் அறிந்து வைத்திருந்தார்.

மற்றபடி அவரால் விக்ரமின் வேலை பற்றியோ அவன் குண நலன்கள் பற்றியோ பெரிதாக விசாரிக்க முடியவில்லை.

பல வருடங்களாய் டில்லியிலும் சில மாதங்களாய் சென்னையிலும் தங்கி வேலை செய்யும் விக்ரமை விசாரிக்கும் அளவிற்கு அவருக்கு உறவினர்களோ நண்பர்களோ அந்த இரு ஊர்களிலும் இல்லை.

தன் உறவினர் சொன்னதன் பேரில் தான் தன் பெண்ணை விக்ரமிற்கு திருமணம் செய்து கொடுக்க சம்மதித்து அவர்களை பெண் பார்க்க வர சொன்னார்.

நேரில் பார்த்த பின்பு அவருக்கு விக்ரமையும் அவன் குடும்பத்தையும் பிடித்து இருந்தது. அதனால் தன் மகளை திருமணம் செய்து கொடுத்தார்.

ஆனால் இந்த நொடி வரை அவனின் சம்பளம் பற்றியோ அவனது செல்வ நிலையை பற்றியோ அவருக்கு எதுவும் தெரியாது.

அவர்கள் நால்வரும் பேசிக் கொண்டிருந்தனர். இரவு உணவிற்கு என்ன செய்யலாம் என்று கயல்விழியும் தங்கமும் யோசிக்கலானார்கள்.

''தோசை மாவு இல்லை. காலையில தான் ஆட்டணும். நைட்டுக்கு சப்பாத்தி பண்ணிடலாமா? காலையிலே பொங்கல் வச்சுக்கலாம்.'' என்று கயல் கூறினாள்.

''மாப்பிள்ளைக்கு இந்த ரெண்டும் பிடிக்குமான்னு தெரியலை. அவர்கிட்ட போய் கேட்டுட்டு வா கயல்.'' என்று தங்கம் அவளை அனுப்பி வைத்தார்.

கயல்விழி விக்ரம் இருந்த அறைக்குள் நுழைந்தாள். அவன் தன் மடிகணினியில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். அவள் அவனருகே சென்று நிற்கவும் அவன் நிமிர்ந்து பார்த்தான்.

''இன்னைக்கு நைட் சப்பாத்தி பண்ணட்டுமா? உங்களுக்கு சப்பாத்தி பிடிக்குமா?''

''வீட்டுல சமைக்க போறீங்களா? டயர்டா இல்லையா? வெளியில் பார்த்துக்கலாம். நாளையில் இருந்து வீட்டுல சமைங்க.''

''டயர்டா இல்லை. எனக்கு சமைக்கிறதுன்னா ரொம்ப பிடிக்கும்.''

''அது சரி கயல். ஆனா காய் எதுவும் வீட்டுல இல்லையே.''

''அது வந்து... நேத்து நைட் எல்லோருக்கும் விருந்து வச்சோமில. அதுக்கு வாங்கின காய் கொஞ்சம் மிச்சமானது. அதை நாங்க இங்கே கொண்டு வந்தோம்.'' என்றதும் விக்ரம் புருவம் உயர்த்தினான்.

''வேஸ்ட் ஆக கூடாது இல்லையா.''

''அதை அங்கேயே யாருக்காவது குடுத்துட்டு வந்திருக்கலாமில்ல. அதை மூட்டை கட்டிக் கொண்டு வந்தீங்களா?''

''நாங்க ஒண்ணும் அவ்வளவு கொண்டு வரலை. ஒரு ரெண்டு மூணு வேளை சமைக்க தேவையான காய் கறியை தூக்கிட்டு வந்தோம். வந்த உடனே கடையை தேடிப் போக வேண்டாமேன்னு தான்.'' என்று அவள் ரோஷத்துடன் கூறினாள்.

தான் கிண்டலாய் ஏதாவது பதில் சொன்னால் அது அவர்களது ஏழ்மை நிலையை சுட்டிக் காட்டுவதாக படக் கூடும் என நினைத்தவன் ''சரி சப்பாத்தியே பண்ணு.'' என்று மட்டும் சொன்னான்.

''உங்களுக்கு பொங்கல் பிடிக்குமா?''

''சப்பாத்தியும் பொங்கலுமா? அது என்ன காம்பி னேஷன்? எதுக்கு ரெண்டு ஐட்டம்?''

''பொங்கல் காலையிலே பண்ணலாம்னு நினைச் சேன். அதுக்கு தான் கேட்கிறேன்.''

உணவு விஷயத்தில் தன்னுடைய விருப்பு வெறுப்பு களை அவள் தெரிந்து கொள்வது அவசியம் என்றுணர்ந்த விக்ரம் அவளிடம் அதை தெரிவிக்க ஆரம்பித்தான்.

''எனக்கு ரசம் சுத்தமா பிடிக்காது. காயிலே சேப்பங் கிழங்கு சாப்பிட்டால் அலர்ஜியாகும். மீதி என்னவா இருந்தாலும் நான் சாப்பிடுவேன். அசைவத்துல இறாலும் நண்டும் சாப்பிட மாட்டேன்.''

அவள் அதை தன் மனதில் குறித்துக் கொண்டு தன் தலையை ஆட்டிக் கொண்டு சென்றாள்.

இரவு உணவை சாப்பிட்டுவிட்டு நல்லா இருக்கு கயல் என்று ஒரு வார்த்தை சொல்வான் என்று அவள் ரொம்பவே எதிர்பார்த்தாள்.

அவன் அது மாதிரி ஒன்றும் சொல்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய அந்த விமர்சனத்திற்காக அவன் முகம் பார்த்து நின்றாள்.

'எதுக்கு என் முகத்தை உத்து உத்து பார்க்கிறாள்?' என்று குழம்பியவன் என்ன என்று கேட்கும் விதமாய் தன் புருவத்தை உயர்த்திக் காண்பித்தான். அவள் ஒன்றும் இல்லை என்று தலையாட்டி மறுத்ததும் அவன் சாப்பிடுவதை தொடர்ந்தான்.

அவனுடன் அமர்ந்து அழகரும் கணேசனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அழகர், ''அக்கா! சப்பாத்தியும் குருமாவும் சூப்பர்!'' என்று பாராட்டினான்.

அவள் உடனே தன் கணவனை பார்த்தாள். அவள் தன்னை சாதாரணமாய் பார்ப்பதாக அவன் எண்ணிக் கொண்டான்.

அழகரை அடுத்து கணேசனும், ''என்னைக்கும் விட இன்னைக்கு சப்பாத்தி ரொம்ப சாஃப்ட்டா இருக்கும்மா.'' என்று பாராட்டினார்.

அவள் திரும்பவும் விக்ரமை ஏறிட்டுப் பார்த்தாள். இம்முறை அவள் பார்வைக்கான அர்த்தத்தை அவன் சரியாக புரிந்து கொண்டான்.

அவன் சாப்பிட்டு முடித்து தன் அறை நோக்கி செல்ல கயல்விழி அவனை பின் தொடர்ந்து வந்தாள்.

''உங்களுக்கு நைட் குடிக்க பால் வேணுமா?''

''வீட்டுல பால் இருக்கா என்ன?''

"உங்க பிரண்டோட அம்மா கொண்டு வந்தாங்க இல்ல. அதுல ஈவினிங் டீ போட்டது போக மிச்சம் இருக்கு."

"இல்லை வேண்டாம். எனக்கு நைட் பால் குடிக்கும் பழக்கம் கிடையாது."

"சரி" என்று சொல்லி வெளியே செல்லப் போனவளை, "கயல்! ஒரு நிமிஷம் இங்கே வா!" என்று அழைத்தான்.

"சொல்லுங்க."

"சாப்பாடு நல்லா இருக்கான்னு தெரிஞ்சுக்கணும்னா வாயை திறந்து என்கிட்ட கேளு. இப்படி என் முகத்தை முகத்தை பார்க்காதே. உன் மனசிலே என்ன நினைக்கிறேன்னு எல்லாம் என்னால கண்டுபிடிக்க முடியாது. எதுவா இருந்தாலும் நேரடியா கேட்கணும். எனக்கு அது தான் பிடிக்கும்." என்றவன் பேச்சு முடிந்தது என்பது போல் அங்கே இருந்த மேஜையை நோக்கிச் சென்றான்.

"இப்பவாவது சொல்லலாமில்ல." என்று அவள் சின்னதாகிப் போன குரலில் கேட்டாள்.

"என்ன சொல்லணும்?"

"சாப்பாடு எப்படி இருந்துச்சுன்னு தான்."

"என் அளவுக்கு உனக்கு சப்பாத்தி போட தெரியலை. ஆனா குருமா என்னை விட நல்லாவே வச்சிருந்தே!"

"நீங்க சூப்பரா சப்பாத்தி போடுவீங்களா? இதை நான் நம்பணுமா?"

"மேடம்! நான் பல வருஷம் டில்லில இருந்துட்டு வந்திருக்கேன்."

"டில்லில இருந்தால் சப்பாத்தி போட தெரியும்னு அர்த்தமா?"

''எனக்கு ஓரளவுக்கு நல்லாவே சமைக்க தெரியும். எனக்கான சாப்பாட்டை நான் சமைச்சு தான் சாப்பிடு வேன்.''

''உங்களுக்கு அடுப்பை ஆன் பண்ண தெரியுமா?''

''ஏன் அப்படி கேட்கிற?''

''உங்க வீட்டுல கிட்சனில் எந்த பொருளும் உப யோகிச்ச மாதிரியே தெரியலை.''

''இது நம்ம வீடு. கரெக்ட்டா சொல்லப் பழகு.''

'நம்ம வீடு. நம்ம ரூம்.' என்று தனக்குள் அவள் மனனம் செய்வதை கண்டவன் சிரித்துக் கொண்டே தான் எடுக்க வந்ததை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

அவன் வரவேற்பறைக்கு சென்று சோபாவில் அமர்ந் தான். மற்றொரு சோபாவில் அழகரும் கணேசனும் அமர்ந்திருந்தார்கள்.

கணேசன் தயங்கியவாறு, ''ஏன் மாப்பிள்ளை சென்னையிலே வீட்டு வாடகை எல்லாம் அதிகம்னு கேள்விப்பட்டேன். உண்மையா?'' என்றார்.

''சென்னை மட்டுமில்லை... எல்லா மெட்ரோ சிட்டி லயும் அதிகம் தான் மாமா.''

''இந்த வீட்டுக்கு எவ்வளவு வாடகை குடுக்குறீங்க?''

''நான் எனக்கே வாடகை எதுவும் குடுத்துக்க மாட் டேன் மாமா.'' என்றவன் கையில் இருந்த புத்தகத்தில் ஆழ்ந்தான்.

அவன் சொன்னதை சில நொடிகள் கழித்தே கணேசன் புரிந்து கொண்டார்.

இவ்வளவு பெரிய வீடு தன் மாப்பிள்ளைக்கும்... அவர் மூலமாக தன் மகளுக்கும் சொந்தமா? என்று ஆச்சரியப்பட்டார்.

அவனது பதிலை கேட்டு அவர் மட்டுமின்றி மீதி இருந்த மூவரும் அதே மாதிரி தான் அதிசயித்தனர். அவர்கள் நால்வர் மனதிலும் சந்தோஷமும் பயமும் சரி விகிதத்தில் கலந்து இருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

சாதாரண வேலை செய்யும் மாப்பிள்ளையை தான் கணேசன் தன் மகளுக்காக பார்த்துக் கொண்டிருந்தார்.

விக்ரமை பற்றி தெரிந்தவுடன் அவர் நினைத்தது கிளார்க் வேலை செய்யுறவனை விட இஞ்சினியருக்கு அதிக சம்பளம் இருக்கும் என்பது மட்டுமே.

ஆனால் இந்த அளவிற்கு வசதியை அவர் எதிர்பார்க்க வில்லை என்றதால் அவருக்கு மனதில் ஒரு பய உணர்ச்சி எழுந்தது.

'இவ்வளவு வசதியானவர் எப்படி என் பெண்ணை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கட்டிக்கிட்டார்? எங்களுக்கு சொல்லப்படாத வேற எதுவும் சிக்கல் இருக்குமோ?' என்று நினைத்து குழம்பினார்.

தான் மனதில் நினைப்பதை அவர் தன் மனைவியிடம் கூட பகிர விரும்பவில்லை. ஆனால் தங்கத்தின் மனதிலும் அந்த எண்ணம் தான் ஓடிக் கொண்டிருந்தது. இருவருமே தங்கள் எண்ணத்தை அடுத்தவரிடம் இருந்து மறைத்தனர்.

# 10

அன்று இரவு தூங்குவதற்காக கயல்விழி தங்கள் அறைக்குள் நுழைந்தாள். விக்ரம் படுக்கையில் சாய்ந்து அமர்ந்து எதையோ வாசித்துக் கொண்டிருந்தான்.

''கயல்! நைட்டிலே ஏசி ரொம்ப குளிருச்சுன்னா ஆஃப் பண்ணிடு. எப்படி ஆஃப் பண்ணனும்னு சொல்லி தரேன். வா.'' என்று அழைத்து சென்று அவளுக்கு விளக்கினான்.

''நீ படுத்துக்கோ கயல். லைட் எரியுறது உனக்கு இடைஞ்சலா இருக்குமா? எனக்கு இன்னும் கொஞ்சம் படிக்க வேண்டி இருக்கு.''

''அப்படி எல்லாம் இல்லை. அழகர் நைட்டிலே லைட் போட்டு படிப்பான். எனக்கு பழக்கம் தான். நீங்க படிங்க.''

படுக்கையில் வந்து படுத்தவள் அங்கிருந்த ரஜாயை மேலே போர்த்திக் கொண்டாள்.

''இதை போர்த்தின உடனே சுத்தமா குளிரே தெரிய லைங்க.'' என்று அவள் ஆச்சரியப்பட்டாள்.

''என்னை போர்த்திக்கிட்டாலும் குளிர் தெரியாது கயல்.''

''நீங்க என்ன ரஜாயா?''

“கஷ்டம்டா சாமி.” என்று அவன் அலுத்துக் கொள்ளும் போது தான் அவன் சொல்ல வந்ததன் அர்த்தம் அவளுக்கு புரிந்தது.

மடச்சி மாதிரி கேள்வி கேட்கிறேனே! என்று அவள் தன்னையே நொந்து கொண்டாள்.

அவள் தன் முகத்தை சுளித்து நாக்கை கடித்துக் கொள்வதை கண்டு, “லேட்டானாலும் புரிஞ்சிடுச்சு போல!” என்று கிண்டல் செய்தவன் மீண்டும் தன் வேலையில் கவனமானான்.

அவள் தனக்கு இருந்த அசதியில் படுத்த உடனே தூங்கிப் போனாள். அவன் அரை மணி நேரம் கழித்து அந்த புத்தகத்தை மூடி வைத்தான்.

விளக்கை அணைத்துவிட்டு வந்து படுக்கையில் படுத்தான். அந்த பெரிய ரஜாய்க்குள் நுழைந்து தூங்கிப் போனான்.

நடுஇரவில் குளிர் தாக்கியதால் கயல் அவன் அருகே ஒண்டிக் கொண்டாள். அவனுக்கு சட்டென்று விழிப்பு வந்துவிட்டது.

அவளுக்காக ஏசியின் குளிர்ச்சியை ரிமோட் மூலம் குறைத்தான். அவளது இடுப்பில் கை போட்டு தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டான். அவளது உச்சியில் முத்தமிட்டவன் தன் தூக்கத்தை தொடர ஆரம்பித்தான்.

காலையில் கண் விழித்த கயல் தன் கணவனின் அணைப்பில் படுத்திருப்பதை கண்டு வெட்கம் அடைந்தாள். அவள் மெல்ல அசைய ஆழ்ந்த தூக்கத்தில்

இருந்தவன் விழிக்காது அவளை தன்னோடு இழுத்துக் கொண்டான்.

அவளது உடலெல்லாம் ஒரு சிலிர்ப்பு ஓடியது. அந்த புதுவித அனுபவத்தை அவள் கண் மூடி ரசித்தாள். ஐந்து நிமிடங்களுக்கு பிறகு மெல்ல அவனிடம் இருந்து விலகி சென்றாள்.

அவள் குளித்து முடித்து சமையலறையில் ஐக்கிய மாகி விட்டாள். அவளும் தங்கமும் சேர்ந்து காலை உணவை தயாரித்தனர். ஒரு பக்கம் கிரைண்டர் மூலமாக மாவை ஆட்டினர்.

தன் அறையில் இருந்து வெளியே வந்த விக்ரம், 'காலையிலையே வேலை சுறுசுறுப்பா நடக்குது போல' என்று எண்ணிக் கொண்டான்.

''கயல்! பால் போட சொல்லி இருந்தேன். பால் வந்துச்சா?''

''கேட்டில் தொங்குற பையில் பால் பாக்கெட் இருந்துச்சுங்க.''

''எனக்கு ஒரு காபி கிடைக்குமா?''

''இதோ கொண்டு வரேன்.'' என்று அவள் சொன்னதும் அவன் தன் அறைக்கு சென்று விட்டான்.

அவள் காபியோடு வந்தபோது, ''கயல்! இது உனக் கான போன்.'' என்று ஒரு பெட்டியை நீட்டினான்.

''எங்க அப்பா எனக்கு ஒரு புது போன் வாங்கி தந்தாரே.''

''உங்க அம்மாகிட்ட போன் இல்லை தானே. உங்க அப்பா தந்த போனை அவங்களுக்கு குடுத்துடு. அப்போ

தானே நீ நினைச்ச நேரம் உங்க அம்மாகிட்ட பேச முடியும்.'' என்றதும் நன்றி சொல்லி வாங்கிக் கொண் டாள்.

ஆனால் அந்த போனை திறந்து கூட பார்க்காமல் அங்கேயே ஒரு ஓரமாக வைத்துவிட்டு தன் வேலையை தொடரச் சென்று விட்டாள்.

அவன் சாப்பிட வரும் பொழுது அழகர் மட்டுமே வரவேற்பறையில் அமர்ந்திருந்தான்.

''என்ன அழகர் சாப்பிட்டியா?''

''இல்லை மாமா. உங்களுக்காக தான் வெயிட் பண்ணினேன்.''

''எனக்காக ஏன் வெயிட் பண்ணுறே? சரி வா சாப் பிடலாம்.'' என்றவன் உணவு மேஜை முன்பு அமர்ந் தான்.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது விக்ர மின் அலைபேசி அலறியது. அவன் அந்த அழைப்பை ஏற்று பேச ஆரம்பித்தான்.

அருகில் இருந்த அக்காவிற்கும் தம்பிக்கும் எதுவும் புரியவில்லை. ஏனெனில் அவனது மொத்த உரை யாடலும் ஹிந்தியில் இருந்தது.

''டெல்லியில இருந்தாராம்.'' என்று கயல் மெல்லிய குரலில் தன் தம்பியிடம் நக்கல் செய்தாள்.

''சும்மா இருக்கா. அவருக்கு கேட்டுட போகுது'' என்று அவன் சைகை செய்தான்.

பேசி முடித்து அலைபேசியை கீழே வைத்த விக்ரம், ''இப்போ என்கிட்ட பேசியவர் நான் முன்னாடி வேலை

செஞ்ச ஆபீஸில் செக்யூரிட்டி வேலை பார்க்கிறவர். என் கல்யாணத்தை பத்தி அவர்கிட்ட சொல்லி இருந்தேன். கல்யாணம் நடக்கிற அன்னைக்கு பேசினால் நான் பிஸியா இருப்பேன்னு நினைச்சு ரெண்டு நாள் கழிச்சு வாழ்த்து சொல்லுறார்.'' என்று இருவருக்கும் பொது வாய் விளக்கம் அளித்தான்.

''அழகர்! அந்த செக்யூரிட்டிக்கு தமிழ் தெரியாது. டிகிரி படிச்சவங்க எல்லாம் அலெக்ஸ்சாண்டரோட குதிரை பேர் தெரியாமல் இருக்கிறப்போ டிகிரி படிக்காதவர் இங்கிலீஷ் தெரியாமல் இருக்கிறதிலே தப்பு ஒண்ணும் இல்லையே. அப்போ நான் அவர்கிட்ட ஹிந்தியில் தானே பேசி ஆகணும்.'' என்று கேட்டுவிட்டு எழுந்து சென்றான்.

அக்கா தம்பி இருவரும் திருதிருவென விழித்தனர். விக்ரம் கேட்ட விதம் அழகருக்கு சிரிப்பை வரவழைத்தது. ஆனாலும் அவன் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''ஆஹா! நாம அன்னைக்கு பேசினதை கேட்டுட் டாரா?'' என்று கயல்விழி விழித்தாள்.

'அக்கா எல்லாத்தையும் மாமாகிட்ட ஒப்பிச்சுட்டாளோ?' என்று நினைத்து அழகர் அவளை திரும்பி பார்த்தான்.

அவளது அதிர்ச்சியை பார்த்ததுமே அவனுக்கு புரிந்துவிட்டது.

''என்னக்கா அன்னைக்கு நாம பேசின எல்லாத் தையும் மாமா கேட்டுட்டாரா?''

''அப்படி தான் போலடா. நேரம் பார்த்து அடிக்கிறார் பாரு.''

"அன்னைக்கு பேசினது மட்டும் இல்ல... இன்னைக்கு நீ சொன்ன டெல்லில இருந்தாராம் என்ற வசனத்தையும் மாமா கேட்டுட்டார். இனிமேல் பார்த்து பேசுக்கா."

'உஷாரா இருக்கணும் கயல்.' என்று தனக்கு தானே அறிவுறுத்திக் கொண்டவள் சாப்பிட்டு முடித்து தங்கள் அறைக்கு சென்றாள்.

"நான் வெளியே கிளம்புறேன் கயல்."

"இன்னைக்கே வேலைக்கு போறீங்களா? ஏன்?"

"வீட்டுல இருந்து என்ன செய்ய? நான் இருந்தால் உங்க அம்மா அப்பா சங்கடமா ஃபீல் பண்ணுவாங்க. அது மட்டுமில்லை. ஞாயிற்றுக்கிழமை மதியம் நம்ம கல்யாணத்துக்காக என்னோட பிரண்ட்ஸுக்கு ஒரு ட்ரீட் வைக்கப் போறோம். அது சம்பந்தமா கொஞ்சம் வேலை இருக்கு. சோ நான் கிளம்புறேன்."

"சரி போயிட்டு வாங்க."

"இது வீட்டோட இன்னொரு சாவி. நீ வச்சுக்கோ. இதுல பணம் வச்சிருக்கேன். வீட்டுக்கோ இல்லை உனக்கோ எதுவும் தேவைன்னா வாங்கிக்கோ. எதுவா இருந்தாலும் இந்த பணத்தை எடுத்து செலவு பண்ணு. உங்க அப்பாவை செலவு பண்ண விடாதே."

'அதுக்கு எங்க அப்பா ஒத்துக்கணுமே!' என்று எண்ணியவள் தன் தலையை இல்லை என்பது போலவும் சரி என்பது போலவும் கலந்து கட்டி ஆட்டினாள்.

"ஏதாச்சும் ஒரு பக்கமா தலையை ஆட்டு. இப்படி ஆட்டினால் என்ன அர்த்தம்? நான் சொல்லுறதை கேட்ட மாட்டேன்னு அர்த்தமா?"

''அப்படி இல்லை. அப்பா என்ன சொல்லுவார்னு தெரியலை.''

''நான் கண்டிப்பா சொல்லி இருக்கேன்னு சொல்லு. என் பேச்சை மீறினால் எனக்கு கோபம் வரும்னு சொல்லு.'' என்று கோபமே இல்லாத ஒரு குரலில் அவன் கூற, அவளுக்கு சந்தோஷமாய் இருந்தது.

ஊரில் உள்ள ஆண்கள் எல்லாம் வரதட்சணை, சீர் என்று பெண் வீட்டினரின் பணத்தை கறந்து கொண்டிருக்க... தங்கள் குடும்பத்தாரிடம் இருந்து ஒரு பைசா கூட வாங்காமல் எளிய முறையில் தன் தந்தைக்கு செலவே வைக்காமல் அவன் தன்னை திருமணம் செய்து கொண்டது அவளுக்கு சந்தோஷம் என்றால்... சின்ன அளவில் கூட அவரை செலவு செய்ய விடாமல் பார்த்துக் கொள் என்று அவன் சொல்வது பரம சந்தோஷத்தை கொடுத்தது.

விக்ரம் நினைத்திருந்தால் கணேசனிடமே இதை நேரடியாக சொல்லி இருக்கலாம். சற்றே இளக்காரமாக கூட சொல்லிக் காட்டி இருக்கலாம்.

ஆனால் அவன் அவ்வாறு செய்ய நினைக்கவில்லை.

மாமனாருக்கு செலவு வைக்கக் கூடாது. அதையும் அவரை புண்படுத்தாத வகையில் செய்ய நினைப்பது அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தை தந்தது.

''சரிங்க மாமா.''

''மாமாவா?'' என்று அவன் ஆச்சரியமாய் கேட்டான்.

''உங்களை வேற எப்படி கூப்பிடுறதாம்?''

''என்னோட பேரை சொல்லி தான்.''

''எதுக்கு? எங்க அம்மா சூட்டுக் கோலால எனக்கு சூடு வைக்கவா?''

''உங்க அம்மா உன்னை அவ்வளவு தூரத்துக்கு அடிப்பாங்களா?'' என்று அவன் அதிர்ச்சியாய் கேட்கவும்,

''சும்மா ஒரு ப்ளோவில் சொல்லுறது தான். என் மேல கை வச்சுடுவாங்க. அப்படி கை வச்சா அவங்களை நான் சும்மா விட்டுடுவேனா?'' என்று அவள் கெத்து காட்டி பேசவும், அவன் அமைதியாய் அவளை பார்த்திருந்தான்.

''என்ன விஷயம்? என்னை நம்பாத மாதிரியே பார்க்கிறீங்க. நானெல்லாம் டெரர் பார்ட்டி.''

''எனக்கு உங்க அம்மாவை பத்தி தான் தெரியாது. உன்னை நல்லாவே தெரியும்.''

''என்ன பத்தி என்ன தெரியும்?''

''நீ ஒரு வெத்து வேட்டுன்னு தெரியும்.''

''என்னது வெத்து வேட்டா?''

''அதான் டம்மி பீஸ்.''

''வெத்து வேட்டுன்னா அர்த்தம் தெரியாதுன்னு நான் சொன்னேனா? எதை வச்சு என்னை பார்த்து அப்படி ஒரு முடிவுக்கு வந்தீங்க?''

''அதான் உன்னை பார்த்தாலே தெரியுதே.''

'அவ்வளவு அப்பட்டமாவா தெரியுது?' என எண்ணியவள் அங்கிருந்த கண்ணாடியில் தன் முகத்தை திருப்பிப் பார்க்கவும் விக்ரம் புன்னகைத்தான்.

''என்னை கலாய்க்கிறீங்களா மாமா?''

''திரும்பவும் மாமான்னு சொல்லுறே.''

''என்னை விட நீங்க அஞ்சு வயசு பெரியவங்க. அப்புறம் உங்களை எப்படி தான் கூப்பிடறது?''

''என் பேரை சொல்லி கூப்பிடணும்னா நான் என் வயசு பொண்ணை தான் கல்யாணம் பண்ணி இருக்கணும்னு சொல்லுறியா? வேணா அடுத்த தடவை கல்யாணம் பண்ணும்போது இதை மனசுல வச்சு என்னோட வயசிலே இருக்கிற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறேன்.''

அவன் இன்னொரு திருமணத்தை பற்றி பேசவும், அவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

''அம்மாடியோவ்! பார்வையிலே என்னை பஸ்பம் ஆக்கிடுவ போல. பார்த்தும்மா. நீ பாட்டுக்கு என்னை பஸ்பம் ஆக்கிடாதே! எங்கேயோ இருக்கிற அந்த பொண்ணு பாவம். கல்யாணம் ஆகாமல் கன்னியாவே இருந்துடப் போகுது.''

''ஓ! உங்களுக்கு மூணு கல்யாணம் கேட்குதா? அதுவும் மூணாவது கல்யாணத்துக்கு கூட கன்னிப் பொண்ணு தான் கேட்குதோ? ஏன் விதவை பொண்ணுக்கெல்லாம் வாழ்க்கை குடுக்க மாட்டீங்களா?'' என்று அவள் கேட்கவும், விக்ரம் அதிர்ந்தான்.

அதுவரை அவளை விளையாட்டாய் சீண்டிக் கொண்டிருந்தவன் அவளது வார்த்தைகளில் அதிர்ச்சியுற்றான்.

அவளும் அவனை விளையாட்டாய் கிண்டல் செய்யும் நோக்கில் தான் பேசினாள்.

ஆனால் அவனது அதிர்ந்த முகம் தான் சொன்ன வார்த்தைகள் சற்று அதிகப்படியானதோ என்று அவளை எண்ண வைத்தது.

''சாரி மாமா. நான் ஏதோ ஜோக்கா சொல்லுறேன்னு நினைச்சு சொல்லிட்டேன்.''

அவன் ஒன்றும் சொல்லாமல், ''மதியம் சாப்பிட வர மாட்டேன்.'' என்று மட்டும் சொல்லிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

## 11

விக்ரமின் பின்னோடு சென்று வாயில் படியில் நின்று பாவமாய் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் படிகளில் இறங்கி போய்க் கொண்டே இருந்தான்.

ஐயோ! கோபமா போறாரே. என் வாயை வச்சுக்கிட்டு நான் சும்மா இருந்திருக்கலாம். இவரை பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியாதப்போ இந்த கிண்டல், கேலி எல்லாம் எனக்கு தேவை தானா? என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

''என்ன கயல் அங்கே நிக்கிறே?'' என்று தங்கம் கேட்டதும் தன் முக பாவனையை மாற்றிக் கொண்டு வீட்டிற்குள் வந்தாள்.

''அவர் வெளியே போனார்மா. அதான்...''

தங்கள் அறைக்கு சென்று தன் தந்தை வாங்கி தந்த அலைபேசியையும் விக்ரம் பரிசளித்த அலைபேசியை யும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

''அம்மா! இந்த போனை உங்ககிட்ட குடுத்திட சொன்னார். எனக்கு புது போன் வாங்கி தந்திருக்கார்.''

''புது போனா? எங்கே காட்டு!'' என்று அழகர் ஆர்வ மாய் வாங்கி பிரித்து பார்க்க ஆரம்பித்தான்.

''ஸ்மார்ட் போன் கா. சூப்பர்.''

''இதெல்லாம் எனக்கு தேவையாடா? இதை எனக்கு யூஸ் பண்ண கூட தெரியாதே.''

''நீ என்ன படிக்காத முட்டாளாக்கா. எல்லாத்தையும் கத்துக்கோ.'' என்று அதட்டிய அழகர் அதை ஆராய ஆரம்பித்தான்.

''அப்பா நம்பரையும் தன்னோட நம்பரையும் ஏற் கனவே மாமா பதிஞ்சு வச்சிருக்கார். இப்போ அம்மா நம்பரையும் பதிஞ்சிடலாம்.'' என்று சொல்லி அழகர் அந்த வேலையை செய்தான்.

அதை எப்படி இயக்குவது என்று அக்காவும் தம்பியும் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

தம்பியுடன் பேசிக் கொண்டிருந்தாலும் கயல்விழி யின் எண்ணத்தில் விருட்டென்று கிளம்பி சென்ற விக்ரமே உலா வந்து கொண்டிருந்தான்.

''நான் கீழே போய் பக்கத்துல என்னென்ன கடைகள் இருக்குன்னு பார்த்துட்டு வரேன்.'' என்று சொல்லி கணேசன் வெளியே சென்றுவிட்டார்.

அக்காவும் தம்பியும் அவரது அலைபேசியில் இருந்த உறவினர்கள் சிலரின் எண்களை புதிய இரு அலைபேசி களிலும் பதிவு செய்து கொண்டிருந்ததால் அவர் அதை எடுத்துக் கொள்ளாமல் சென்று விட்டார்.

அப்பொழுது கணேசனின் எண்ணிற்கு அழைப்பு வந்தது. யாரென்று பார்த்த அழகர் தன் அக்காவின் கையில் கொடுத்தான்.

''அக்கா திருச்சியில் இருந்து உன்னோட மாமனார் கூப்பிடுறார். பேசு!''

''நான் என்னடா பேச?''

''நீ தான்கா பேசணும். பின்ன அவர்கிட்ட நானா பேச முடியும்? பேசுக்கா!'' என்றவன் அந்த அழைப்பை ஏற்று அவளது காதில் வைத்தான்.

''ஹ..லோ'' என்று அவள் தயங்கி இழுத்தாள்.

''நான் சிவகாமி பேசுறேன். யார் பேசுறீங்க?''

''அத்தை! நான் கயல்விழி பேசுறேன். அப்பா வெளியே போய் இருக்காங்க.''

''நான் உன்கிட்ட பேச தான் போன் பண்ணினேன். மறுவீட்டு விருந்து முடிச்சு எப்போ திருச்சிக்கு வரு வீங்க?''

''திருச்சிக்கா? இவங்க என்ன கேட்கிறாங்க?'' என்று கயல்விழி திருதிருத்தாள்.

''ஹலோ கயல்விழி! லைனில் இருக்கியா?''

''அத்தை இவர் என்னை நேத்தே வைகை எக்ஸ்பிர ஸில் சென்னைக்கு கூட்டிட்டு வந்துட்டார்.'' என்று எச்சில் விழுங்கி கொண்டே பதில் அளித்தாள்.

''என்னது இங்கே வராமல் சென்னைக்கு போயிட் டீங்களா?'' என்று அதிர்ந்த சிவகாமி,

அந்தப் பக்கம் தன் கணவரிடம், ''உங்க பையன் செஞ்ச வேலையை கேட்டீங்களா? சென்னைக்கு

போயிட்டானாம். இந்த பையன் என்னைக்கு மனுஷங் களோட ஒட்டி உறவாடுவானோ தெரியலை. சரியான முசுடு.'' என்று திட்டினார்.

கயல்விழி அலைபேசியை கையில் வைத்துக் கொண்டு திருதிருத்துக் கொண்டிருக்க சிவகாமி அந்த அழைப்பை துண்டித்தார்.

''அப்பாடா! அவங்க பையன் சொல்லாமல் கொள் ளாமல் சென்னைக்கு வந்ததுக்கு என்னை திட்டலை'' என்று கயல்விழி முதலில் நிம்மதியாய் உணர்ந் தாள்.

ஆனால் அடுத்த நொடியே, இப்படியும் ஒரு பிள்ளை இருக்குமா? இவர் என்ன மாதிரி மனுஷர்? இவர் கூட எப்படி நான் காலம் தள்ளப் போறேன்? என்ற பயம் அவளை தொற்றியது.

''என்ன கயல் உங்க மாமியார் என்ன சொன்னாங்க?''

அவள் விஷயத்தை வெளியே சொல்வதா வேண் டாமா என்று சில நொடிகள் தயங்கி பின் மெல்ல விவரம் உரைத்தாள். தங்கமும் யோசனையில் ஆழ்ந்தார்.

''மாப்பிள்ளை உன்கிட்ட எப்படி கயல் பேசுறார்?'' என்று தங்கம் கவலையாய் விசாரித்தார்.

''அம்மா! நீங்க அக்காவை பயமுறுத்தாதீங்க. இன் னைக்கு காலையில் கூட மாமா என்னையும் அக்கா வையும் கலாய்ச்சுட்டு போனார்.''

''இப்படி அம்மா அப்பாக்கு கூட தெரியாமல் சென் னைக்கு கூட்டி வந்திருக்காரேடா. இதுக்கு நாம என்ன நினைச்சுக்கிறது?''

''அது அம்மாவுக்கும் பையனுக்கும் ஏதாச்சும் சண்டையா இருக்கும். அதுல நாம எப்படிம்மா தலையிடுறது?''

இவன் சின்ன பையன். புரியாமல் பேசுறான் என நினைத்த தங்கம் அதற்கு மேல் அதை பற்றி பேசவில்லை.

கயல்விழி ஞாயிறன்று நடைபெறப் போகும் மதிய விருந்தை பற்றி சொன்னாள்.

''அன்னைக்கு நைட் தானே ஊருக்கு போக மாமா டிக்கெட் போட்டிருக்கார். அப்போ எங்களையும் அங்கே கூட்டிட்டு போவாராக்கா?''

''அதை பத்தி அவர் ஒண்ணும் சொல்லலைடா.''

வெளியே சென்ற கணேசன் திரும்பி வரும் பொழுது இரு பைகள் நிறைய காய்கறிகளை வாங்கி கொண்டு திரும்பினார்.

அன்று மாலை நான்கரை மணிக்கு விக்ரம் வீடு திரும்பினான். வரவேற்பறை சோபாவில் அமர்ந்தான். அவனுக்கு கயல்விழி தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கிப் பருகியவன் தொலைக்காட்சியை இயக்கி பார்க்க ஆரம்பித்தான்.

''அத்தை! ஏதாச்சும் காய் வாங்கணுமா? என்ன வேணும்னு சொல்லுங்க. வாங்கிட்டு வரேன்.''

''நான் காலையிலே ஒரு வாக்கிங் போனேன் மாப்பிள்ளை. அப்போ நானே வாங்கிட்டு வந்துட்டேன்.'' என்று கணேசன் கூறவும்,

''சரி மாமா. எல்லோரும் கிளம்புங்க. பக்கத்துல இருக்கிற அஷ்டலக்ஷ்மி கோவிலுக்கும் பீச்சுக்கும் போயிட்டு வருவோம்.'' என்றான்.

''பீச்சுக்கா? சூப்பர் மாமா.'' என்று அழகர் உற்சாக மானான்.

''எஸ். போய் ரெடியாகிட்டு வா.'' என்று சொன்ன விக்ரம் தன் அறை நோக்கி சென்றான்.

'வெளியே கூட்டிட்டு போகிற அளவுக்கு வந்துட்டா ருன்னா கோபம் குறைஞ்சுடுச்சு போல' என நினைத்துக் கொண்டே கயல்விழி தங்கள் அறைக்குள் நுழைந்தாள்.

''காலையில உங்க அம்மா என் கூட போனில் பேசினாங்க.''

''என்னவாம்?''

மறுவீட்டு விருந்து முடிச்சுட்டு எப்போ திருச்சிக்கு வரீங்கன்னு கேட்டாங்க. நாம சென்னைக்கு வந்ததை நீங்க சொல்லலையா?''

''ஆமாம் நான் சொல்லலை. அதான் இப்போ நீ சொல்லிட்டியே.''

''இவ்வளவு பெரிய விஷயத்தை இப்படியா சொல் லாமல் இருப்பீங்க. ஒரு தடவை அவங்களுக்கு போன் பண்ணி பேசிடுங்க.''

''இங்கே பாரு... நான் யார்கிட்ட பேசணும், என்ன பேசணும், எப்போ பேசணும் இது எல்லாத்தையும் நான் முடிவு பண்ணிக்கிறேன். நீ என் விஷயத்திலே மூக்கை நுழைக்காதே!'' என்றவன் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

'அவங்க அம்மா சொல்லுற மாதிரி சரியான முசுடு தான் போல! அவங்க மேல கோபம்னா என்கிட்ட எதுக்கு கத்துறார்?'

முகம் கழுவிக் கொண்டு வெளியே வந்தவன் அவளை கண்டு கொள்ளாமல் தன் அலமாரியை திறந்து ஒரு பேண்ட்டையும் சட்டையையும் எடுத்துக் கொண்டு மீண்டும் குளியலறைக்குள் செல்ல ஆரம்பித்தான்.

''நான் வேணா வெளியே போறேன். நீங்க இங்கேயே டிரஸ் மாத்திக்கோங்க.'' என்றவள் அறையை விட்டு வெளியேற ஆரம்பித்தாள்.

உடை மாற்றி வெளியே வந்தவன் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து தொலைக்காட்சியை இயக்கி பார்க்க ஆரம்பித்தான்.

அவர்கள் அனைவரும் தயாராகி வந்ததும், ''கிளம்ப லாமா?'' என்ற கேள்வியோடு எழுந்தான்.

அவர்கள் கீழே இறங்கி நடக்க ஆரம்பித்தனர். ஒரு குறிப்பிட்ட இடம் வரவும் அவர்களை நிறுத்தினான்.

''நீங்க இங்கேயே நில்லுங்க.'' என்று சொல்லிவிட்டு சென்றான்.

''மாமா எங்கேக்கா போறார்?''

''உனக்கு தெரியாத விஷயம் எனக்கு மட்டும் எப்படிடா தெரியும்?''

தங்கமும் கணேசனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

விக்ரம் தன் காரை ஓட்டிக் கொண்டு வந்தான். காரை அவர்கள் அருகே நிறுத்தி ஏறிக் கொள்ளும்படி சொன்னான்.

'இவர்கிட்ட கார் கூட இருக்கா?' என்று அனைவரும் நினைத்துக் கொண்டனர்.

கயல்விழி முன்னாலும் மற்றவர்கள் பின்னாலும் ஏறி அமர்ந்தார்கள். அவன் லாகவமாய் கார் ஓட்டுவதை அவள் ரசித்துக் கொண்டே வந்தாள். அவனோ அவள் புறம் திரும்பாமல் சாலையில் கண்பதித்து ஓட்டினான்.

"என்ன அழகர் சைலன்ட்டா வரே?" என்று அவன் தொடங்கியதும்,

அந்த காரை பற்றியும் பொதுவாய் கார்களை பற்றியும் அழகர் கேள்விகளை கேட்க ஆரம்பித்தான். விக்ரமும் அவனுக்கு பதில் சொல்லிக் கொண்டே வந்தான்.

கோவிலில் சாமி தரிசனம் முடித்து படிகளில் ஏறி மேலே சென்று அங்கே நின்று கொண்டு கடற்கரையை ரசிக்க ஆரம்பித்தார்கள்.

கயல்விழி விக்ரம் அருகே சென்று, "இந்த கோவிலுக்கு நீங்க அடிக்கடி வருவீங்களா?" என்று கேட்டாள்.

அவளது கேள்வி காதில் விழாத தினுசில் அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு பீச்சுன்னா பிடிக்குமா?" என்று கேட்டவள் கடற்கரையை பார்த்துக் கொண்டே, "இதுக்கு முன்னே நான் பீச்சை பார்த்தே இல்லை." என்று சொல்லிக் கொண்டே திரும்பினாள்.

அவளது பக்கவாட்டில் நின்று கொண்டிருந்த விக்ரம் விலகி சென்றிருந்தான். அவள் ஏமாற்றமாக உணர்ந்தாள். அதன் பின்னே அவர்கள் கடற்கரைக்கு சென்றார்கள்.

கோவிலிலும் சரி கடற்கரையிலும் சரி அவன் அழகரிடம் பேசினானே தவிர கயல்விழியின் புறம் திரும்பவில்லை.

அவன் தன்னை தவிர்ப்பது கயல்விழிக்கு நன்கு புரிந்தது. அவனது கோபம் கூட அவளை அவ்வளவாக பாதிக்கவில்லை. ஆனால் அவனது இந்த உதாசீனத்தை தான் அவளால் தாங்க முடியவில்லை.

அவளுக்கு கண்கள் கலங்க ஆரம்பித்தன. ஆனால் தன்னுடைய அழுகையை தன் பெற்றோர் பார்த்து விடக் கூடாது என்று நினைத்து தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

காரில் வீடு திரும்பும் பொழுது கணேசனும் தன் மருமகனிடம் பேச்சு கொடுத்தார். இவ்வளவு ஏன் தங்கம் கூட இரு கேள்விகளை கேட்டு பதில் பெற்றார்.

'இவருக்கு என்னை பார்த்தால் மட்டும் எப்படி இருக் காம்? என்னை விட்டுட்டு எல்லோர்கிட்டயும் பேசுவா ராமா? பேசுங்க. உங்களை யார் வேண்டாம்னு சொன்னது' என்று மனதோடு திட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீர் அவளது கட்டுப்பாட்டையும் மீறி அவளது கன்னத்தில் வழிந் தோடியது. அவள் தன் கண்களை துடைத்துக் கொண்டே வருவது விக்ரமின் கண்களில் இருந்து தப்பவில்லை.

'ஓ மை காட்! இவள் எதுக்கு இப்போ அழறாள்? இவங்க அம்மா அப்பா பார்த்தால் வம்பாகிடுமே. நான் இவளை ஒண்ணுமே சொல்லலையே. பேசாமல் ஒதுங்கி தானே போனேன். ஒருவேளை அதுக்கு தான் அழ றாளோ?'

அவர்களது குடியிருப்பு வளாகத்திற்குள் கார் நுழைந்தது. அவன் அவர்களை ஏற்றிய இடத்தில் இறக்கிவிட்டு காரை கொண்டு போய் அதன் இடத்தில் விட்டு

வருவதற்குள் அவள் அழுதது அவளது பெற்றோருக்கு தெரிந்துவிடும் என நினைத்தான்.

அதனால் அவர்களை காரில் இருந்து இறங்கச் சொல் லாமல் நேராக கார் நிறுத்தும் இடத்திற்கே சென் றான். அனைவரும் ஒன்றாக இறங்கி வீடு நோக்கி நடந்தனர்.

## 12

வீட்டின் கதவை திறந்ததும் கயல்விழி தங்கள் அறைக்குள் சென்றாள். மனதில் எழுந்த நிம்மதி உணர் வோடு அவனும் தங்கள் அறைக்குள் சென்று கதவை தாளிட்டான்.

''இப்போ எதுக்கு கயல் எல்லோர் முன்னாடியும் அழறே?''

''அப்ப நான் அழுதால் பரவாயில்லை. அதை எல் லோர் முன்னாடியும் செய்யக் கூடாது. அப்படி தானே?''

''ப்ச்... நான் அப்படி சொல்லலை. எதுக்கு அழறே?''

''நான் என்ன பண்ணினேன்னு என்கிட்ட பேசாமல் முகத்தை திருப்பிக்கிட்டு போறீங்க? நான் அப்படி என்ன தப்பு செஞ்சேன்? காலையிலயும் அப்படி தான் விருட்டுன்னு கிளம்பி வெளியே போயிட்டீங்க. நான் சாரி கேட்டேன்ல. விளையாட்டுக்கு தானே சொன்னேன்.''

"காலையிலே இன்னொரு கல்யாணம் பத்தி நான் பேசினது ஜோக்குன்னா நீ பேசியதும் ஜோக்கு தான். நான் இல்லைன்னு சொல்லலை. ஆனாலும் மனசிலே ஒரு ஓரத்தில் வலிச்சது. ஏதாச்சும் எக்கு தப்பா சொல் லிடக் கூடாதுன்னு தான் கிளம்பி போயிட்டேன்."

"இப்போ ஈவினிங் எதுக்கு என்னை திட்டினீங்க? உங்க அம்மா மேல கோபம்னா அதை என் மேலே காட்டுவீங்களா?" என்றதும் முறுவலித்தான்.

அவளது இடுப்பில் கை போட்டு தன்னருகே இழுத்துக் கொண்டவன், "எனக்குன்னு சிக்கின அடிமை நீ தானே! அப்போ என் கோபத்தை உன்கிட்ட தானே காட்ட முடியும்." என்றான்.

"காலையிலே சாப்பாட்டு விஷயத்திலே உங்களுக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதுன்னு சொன்னீங்கல்ல. அது மாதிரி இப்படி செஞ்சால் பிடிக்கும் அப்படி செஞ்சால் பிடிக்காதுன்னு நீங்க சொல்லிக் குடுங்க. நான் கத்துக் கிறேன். நான் ஒண்ணும் மக்கு இல்ல. டக்குனு புரிஞ் சுப்பேன்."

"நீ என் மக்கு தான்டி!" என்று அவன் தன் மனதோடு அவளை கொஞ்சிக் கொ..ண்டான்.

அவன் தன்னைக் கொஞ்சிக் கொண்டிருப்பதை உணராது அவள் தன் பொருமலை தொடர்ந்தாள்.

"எனக்கு சொல்லிக் குடுக்கிறதை விட்டுட்டு இப்படி முகத்தை திருப்பாதீங்க. எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. இதுவரைக்கும் யாரும் என்கிட்ட முகம் திருப் பினதே இல்லை தெரியுமா" என்று சொல்லும் போதே

அவளது கண்களில் புதிதாய் கண்ணீர் உற்பத்தி ஆகி அவளது கன்னங்களில் வழிந்தோடியது.

தனது கைக்குட்டையை எடுத்து அவளது கண்ணீரை துடைத்தவன், "சாரி கயல். ஐயாம் வெரி சாரி. நீ என்னை கண்ட்ரோல் பண்ண நினைக்காதே. அதுவும் வெளியில் இருந்து வீட்டுக்குள் வந்ததும் சண்டை போடுற மாதிரியான விஷயத்தை பேசாதே. சரியா?" என்று கேட்டான்.

அவள் தன் தலையாட்டி சம்மதம் சொன்ன அழகில் கவரப்பட்டவன் குனிந்து தன் கைகளால் அவளது கன்னங்களை தாங்கிப் பிடித்து இரு கண்களிலும் முத்தமிட்டான்.

கணவனின் முத்தத்தில் லயித்தவளின் உதடுகளில் புன்முறுவல் பிறந்தது.

தன் மீது என்ன கோபம் என்று அவள் உடனே வந்து சொன்னதும், தன்னுடைய விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவள் உடனே சமாதானம் ஆனதையும் கண்டவனின் மனம் சந்தோஷத்தையும் நிம்மதியையும் சேர்த்தே உணர்ந்தது.

அந்த நிம்மதியும் சந்தோஷமும் அவனது முகத்தில் முறுவலாய் பிரதிபலித்தது.

சில நொடிகள் கண் மூடி லயித்திருந்தவள் அவன் அதற்கு மேல் முன்னேறவில்லை என்றதும் தன் கண் களை திறந்து பார்த்தாள்.

தன் இரு பெரு விரல்களை கொண்டு அவளது கன்னத்தை தடவியவன் என்ன என்று கேட்பது போல்

கேலியாய் கேள்வியாய் தன் புருவம் உயர்த்திக் காட்டினான். ஒன்றுமில்லை எனும் விதமாய் அவள் தன் தலையை ஆட்டினாள்.

''என்கிட்ட இருந்து ஏதாச்சும் எதிர்பார்த்தியா கயல்?''

''நான் ஒண்ணும் எதிர்பார்க்கலையே.'' என்று பட படப்போடு அவள் சொன்ன விதத்திலேயே அது பொய் என்பது அவனுக்கு வெட்ட வெளிச்சமாகியது.

''நான் என்ன சொன்னாலும் கேட்ப இல்ல?'' என்று கேட்டவன் அவளது கன்னங்களை தாங்கிப் பிடித்திருந்த தன் கைகளை விலக்கினான்.

''ம்ம்ம் கேட்பேன். என்ன செய்யணும் சொல்லுங்க.''

''உன்னோட ரெண்டு கையையும் வச்சு என்னை இறுக்கி பிடிச்சுக்கோ.''

''ஹான்!'' என்று வாயை பிளந்தவளை கண்டு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''ம்ம்ம் செய்.'' என்றான்.

அவள் அவன் மேல் தன் கை படாதவாறு அவனை சுற்றி தன் கைகளால் வளையம் ஒன்றை அமைக்க முயன்றாள்.

''இதுக்கு பேரா இறுக்கி பிடிக்கிறது?'' என்று கேட்க நினைத்தவன் நொடியில் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

''உன் கண்ணு ரெண்டையும் இறுக்கி மூடு. இதை யாச்சும் ஒழுங்கா செய்!'' என்றான்.

அவளும் தன் கண்களை இறுக்கமாக மூடினாள். அவள் கைகளில் உரசாத வண்ணம் குனிந்து அவள் அமைத்திருந்த அந்த வளையத்தில் இருந்து வெளியே

வந்தவன் பூனை நடை நடந்து குளியலறைக்குள் சென்றான்.

நொடிகள் பல கடந்தும் அவன் எதுவும் சொல்லவோ செய்யவோ இல்லை என்றதும் என்னவென்று அவள் தன் கண்களை திறந்து பார்த்தாள்.

அவன் அங்கே இல்லை என்றதும் திருதிருவென விழித்தாள். சொல்லாமல் கொள்ளாமல் போனதை எண்ணி கடுப்பானாள்.

'எங்கே போயிட்டார்? வெளியே போயிட்டாரா?' என்று அவள் எண்ணமிடும் பொழுதே குளியலறையில் இருந்து தண்ணீர் திறந்து விடும் ஓசை கேட்டது.

வெளியே வரட்டும் என்று தன் கைகள் இரண்டையும் இடுப்பில் ஊன்றிக் கொண்டு காத்திருந்தாள்.

அவன் எதுவுமே நடக்காத மாதிரி வெளியே வந்து, ''என்ன கயல் இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க? நைட் சமையலை கவனிக்க போகலையா?'' என்று கேட்டான்.

''மாமா! எதுக்கு இப்படி என்னை பேக்கு மாதிரி நடு வீட்டில் நிக்க வச்சுட்டு போயிட்டீங்க?'' என்று சிணுங்கினாள்.

''நான் சொன்னதை நீ சரியா செஞ்சியா?''

''நீங்க சொன்னதெல்லாம் நான் கேட்டேன் தானே?''

அவன் அவளருகே நெருங்கி அவளை தன்னோடு இறுக்கி அணைத்து அவளது காதுகளில், ''இறுக்கி அணைச்சுக்கோன்னு சொன்னால் இப்படி கட்டிப் பிடிக்கணும்.'' என்றான்.

அவளது உடல் முழுவதும் மின்சாரம் தாக்கிய உணர்வில் அவள் தன்னையே மெய் மறந்து நின்றிருந்தாள்.

அவன் முறுவலோடு அவளது அதரங்களை சிறை செய்து அவளை உலகை மறக்க செய்தான். மெலிதாய் ஆரம்பித்த அந்த தீண்டல் மிக வன்மையாய் மாறி இருவரும் ஒருவரில் ஒருவர் மூழ்கத் துடித்தனர்.

மூச்சுக்காக அவளது அதரங்களை விடுவித்தவன் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு அவளது காதில், ''எல்லோரும் ஊருக்கு கிளம்பி போன பின்னால ஞாயிற்றுக்கிழமை நம்ம வாழ்க்கையை தொடங்கலாம்னு நினைச்சேன். ஆனா அது வரைக்கும் தாக்கு பிடிக்க மாட்டோமோ?'' என்று கிசுகிசுத்தான்.

அவனது கேள்வியில் அவளுக்கு வெட்கம் அதிகரித்தது. அவனோடு மேலும் ஒண்டிக் கொண்டாள். அவனுக்கு அவளை விலக்க மனமில்லை.

ஆனால் வெளியே இருப்பவர்களை கருத்தில் கொண்டு இருவரும் அறையை விட்டு வெளியே வந்தனர்.

கனவில் மிதப்பவளை போல் நடந்து கொண்ட மகளிடம் எந்தக் கேள்வியும் கேட்காமல் தங்கம் தன் பெண்ணையும் மாப்பிள்ளையையும் சாப்பிட வைத்த பின் அவர்களை படுக்க அனுப்பி வைத்தார்.

அன்றைய இரவு அவர்களுக்கு முதல் இரவாகிப் போனது. அழகிய தாம்பத்யம் அங்கே ஆரம்பமானது.

மறுநாள் சனியன்று காலை உணவிற்கு பின் விக்ரம் அழகரை மட்டும் அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

அவர்கள் திரும்பி வந்த பொழுது அழகர் மௌனமாய் இருந்தான். என்ன ஆச்சுன்னு தெரியலையே என்று கயல் குழம்பினாள். விக்ரம் தன் அறைக்கு சென்று இரு கவர்களை எடுத்துக் கொண்டு வந்தான்.

அவர்கள் அனைவரிடமும் மறுநாள் நடக்கப் போகும் விருந்து பற்றி கூறினான். கயலை தவிர மீதி உள்ள அனைவருக்கும் புது ஆடைகளை பரிசளித்தான்.

அழகரை விட கயல் அவனது ஆடையை ஆர்வமாய் கவரில் இருந்து உருவி வெளியே எடுத்துப் பார்த்தாள்.

"இதை வாங்க தான் அவனை கூட்டிட்டு போனீங்களா? ஷெர்வானியா? சூப்பரா இருக்கு மாமா." என்று விக்ரமிடம் சொன்னவள்,

தன் தம்பியிடம் திரும்பி, "அழகர்! இந்த டிரஸ் உனக்கு ரொம்ப நல்லா இருக்கும்டா. என் கல்யாண ரிசப்ஷனுக்கு உனக்கு இதை தான் வாங்கணும்னு நான் எப்பவும் நினைப்பேன். விலை அதிகம்னு பேசாமல் இருந்துட்டேன். ஆனா பாரு... என் ஆசையை உங்க மாமா நிறைவேத்திட்டார்." என்று ஆனந்தம் அடைந்தாள்.

தங்கத்தின் பட்டுப் புடவையை தாய் மீது வைத்து அழகு பார்த்தாள்.

"இதோட பிளவுஸ் தானே அன்னைக்கு அனுப்பி வச்சீங்க? அப்பாக்கு பட்டு வேஷ்டி சட்டையா? சூப்பர்." என்று கயல்விழி மட்டுமே சந்தோஷமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

அனைவரும் நெகிழ்வாய் உணர்ந்ததால் பேச்சு வராமல் தடுமாறினார்.

''ரொம்ப நன்றி மாப்பிள்ளை.'' என்று கணேசன் கண் கலங்கி தழுதழுப்பாய் ஆரம்பிக்கவும்,

''அச்சோ மாமா! ப்ளீஸ் இதுக்கு ஏன் இவ்வளவு எமோஷன் ஆகுறீங்க. அழகர் உங்களுக்கு வாங்கி குடுத்தால் நன்றி சொல்லுவீங்களா என்ன? அப்புறம் கயலுக்கு மட்டும் எதுக்கு தாங்க்ஸ் சொல்ல நினைக்கிறீங்க?'' என்று சொல்லி அவர்கள் அனைவரையும் சமாதானம் செய்தான்.

அழகரிடம் வந்தவன், ''சின்ன பையனா லைஃபை என்ஜாய் பண்ணுடா. பெரிய மனுஷனா யோசிச்சு உன்னை நீயே குழப்பிக்காதே. என்னை உன்னோட மாமாவா மனசார ஏத்துக்கிட்டால் நான் தரும் பரிசையும் மனசார ஏத்துக்கணும். நீ சம்பாதிக்க ஆரம்பிச்ச பின்னால எங்களுக்கு திருப்பி செய்.'' என்றதும் அழகர் முகம் தெளிந்தான்.

''மாமா! என்னோட புடவையை எங்கே காணோம்?''

''அதை எதுக்கு கேட்கிறே?''

''நான் பார்க்க வேண்டாமா?''

''அதை எதுக்கு கயல் நீ பார்க்கணும்?''

''புடவை எனக்கு தானே. அதை நான் தானே கட்டப் போறேன்.''

''அப்படின்னா அதை கட்டும் போது பார்த்துக்கோ.'' என்றதும் அவனை முறைத்தாள்.

''என்னை முறைக்கிறதை விட்டுட்டு சாப்பாடு எடுத்து வை. பசிக்குது. எல்லோரும் சாப்பிட்டுட்டு போய் ஒரு சின்ன தூக்கம் போடலாம்.''

தங்கமும் கயல்விழியும் சேர்ந்து உணவினை எடுத்து வைக்க ஆரம்பித்தனர். அனைவரும் சாப்பிட்டு முடித்து அவரவர் அறைக்கு சென்றனர்.

கயல்விழி தன் கணவனிடம், ''ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் மாமா.'' என்றாள்.

''இப்போ உன்னோட டர்னா? உங்க அப்பாகிட்ட சொன்னது உன் காதிலே விழலையா?'' என்று கேட்டவன் படுக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

''அழகர் வாங்கி குடுத்தாலும் கயல் வாங்கி குடுத்தாலும் ஒண்ணு தான்னு நீங்க எங்க அப்பாகிட்ட சொன்னது சரி தான். ஆனா இந்த டிரஸ் எல்லாம் நான் வாங்கலையே. நீங்க தானே வாங்கினீங்க.'' என்றவள் அவன் அருகே சென்று அமர்ந்தாள்.

''அப்போ நீயும் நானும் வேற வேறன்னு சொல்லுறியா?'' என்றதும் திருதிருத்தாள்.

''இதுக்கு நான் என்ன மாமா சொல்ல முடியும்?''

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். பேசாமல் கொஞ்ச நேரம் படுத்து தூங்கு.''

''என் புடவையை மட்டும் காட்ட மாட்டேங்கிறீங்க. அப்படி என்ன சஸ்பென்ஸ்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. அது வீட்டுல இல்லை. அயர்ன் பண்ண குடுத்து இருக்கேன்.''

''புது புடவையை அயர்ன் பண்ண குடுத்தீங்களா?''

''இப்பெல்லாம் புடவை கடையிலே புடவையை கட்டி பார்த்து தானே வாங்கிறாங்க.''

''மடிப்பு மட்டும் வச்சு நம்ம மேலே போட்டு காண் பிப்பாங்களே! அதையா சொல்லுறீங்க?''

''ஆமா. அதை தான் சொல்லுறேன். புடவை வாங்க உன்னால வர முடியலை. அதான் அங்கே இருந்த ஒரு சேர்ல்ஸ் கேர்ள்க்கு கட்டி பார்த்து வாங்கலாம்னு நினைச் சேன். அந்த பொண்ணுக்கு கட்டி விட்டு பார்த்ததில் புடவை கசங்கிடுச்சு. அதான் அயர்ன் பண்ண குடுத் திருக்கேன்.''

என் புடவையை இன்னொரு பொண்ணு வச்சு பார்த்தாளா என நினைத்து அவள் வருந்தினாள்.

'ஹேய் லூசு கயல்! புடவை மட்டுமா பழசு. உன் மாமனே பழசு தானே. அவனையே ஏத்துக்கிட்ட நீ இதுக்கு ஏன் வருத்தப்படுறே?' என்று தன்னை தானே ஆறுதல் படுத்திக் கொள்ள முனைந்தாள்.

அவளது சுருங்கிப் போன முகத்தை பார்த்து புன்னகைத் தவன் அவளது பின்னந்தலையில் தட்டி, ''ஹேய் மக்கு! நான் சும்மா சொல்லுறேன். அதை அப்படியே நம்புறே. நீ கட்ட வேண்டிய புடவையை வேற யார் மேலயாவது வச்சு பார்ப்பேனா?'' என்று கேட்டதும் அவளது முகம் மலர்ந்தது.

சற்று முன் தோன்றிய கலக்கம் மறைந்தது. தான் அவனுக்கு இரண்டாவது மனைவி என்கிற வருத்தமும் காணாமல் போனது.

இவர் எனக்கு தான். எனக்கு மட்டும் தான் என்ற உரிமை உணர்வு தோன்றியது. அவனருகே நெருங்கி அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

அவளது உச்சியில் முத்தமிட்டவன், "விளையாட்டுக்கு சொல்லுறதை எல்லாம் சீரியஸா எடுத்துக்க கூடாது. உன் பிளவுஸில் ஏதோ வேலை செய்யணும்னு கைலாஷ் வைஃப் சொன்னதால புடவையும் பிளவுஸும் டெய்லர் கடையில் இருக்கு. நாளைக்கு வந்துடும்." என்றான்.

"போய் கொஞ்ச நேரம் தூங்கு." என்றதும் படுத்துக் கொண்டாள்.

## 13

மாலை நான்கு மணி அளவில் படுக்கை அறையில் இருந்து சப்தம் எழுப்பாமல் வெளியேறியவன் சமையல் அறைக்கு சென்றான்.

தனக்கு தேவையான பொருட்கள் இருக்கிறதா என்று சரி பார்த்தவன் வேலையை தொடங்கினான்.

நான்கரை மணி அளவில், "என்ன மாப்பிள்ளை வேணும்?" என்று கேட்டுக் கொண்டே தங்கம் அங்கே வந்தார்.

"அத்தை! ப்ளீஸ். என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க. எல்லோருக்கும் டீ போட்டு பிளாஸ்கில் ஊத்தி வச்சிருக்கேன். கொஞ்ச நேரத்துக்கு கிட்சன் பக்கம் வராதீங்க." என்று அவன் வெளியே கை காட்டவும்,

வேறு வழியின்றி தங்கம் அந்த பிளாஸ்கை எடுத்துக் கொண்டு வெளியேறினார். அதை சாப்பாட்டு

மேஜையில் வைத்தவர் தன் மகளது அறைக்கு சென்று அவளை எழுப்பி கூட்டி வந்தார்.

''கிட்சன்ல என்ன மாமா பண்ணுறீங்க?''

அவளது குரல் கேட்டு திரும்பியவன் அவள் சமையல் அறைக்குள் நுழைய போவதை பார்த்து, ''ஸ்டே வேர் யூ ஆர்.'' என்றான்.

''மாப்பிள்ளை என்ன கயல் சொல்லுறார்?'' என்று தங்கம் மகளது காதில் மெதுவாய் கேட்டார்.

''அங்கேயே நில்லுன்னு சொல்லுறார்.''

விக்ரம் கயலிடம், ''நான் நேத்து சப்பாத்தி விஷயமா சொன்னதை நீ நம்பலை இல்லை. அதான் புரூவ் பண்ண போறேன்.'' என்றதும்,

''அதையும் பார்த்துடலாம். சவாலுக்கு நானும் ரெடி.'' என்றாள்.

'இவங்க ரெண்டு பேரும் சமையல் அறை வாசலில் நின்னு எதை வேடிக்கை பார்க்கிறாங்க?' என்று கேட்டுக் கொண்டே கணேசனும் அழகரும் அங்கே வந்தனர்.

''என்ன மாப்பிள்ளை பண்ணுறீங்க? வெளியே வாங்க!'' என்று கணேசன் பதட்டத்தோடு கூவினார்.

''உங்க பொண்ணு என்னை அசிங்கப்படுத்திட்டாள் மாமா!'' என்று விக்ரம் சொன்னதும்,

கணேசன் பதறிப் போய் தன் மகளை திரும்பிப் பார்த்தார். அவள் புன்னகையோடு நிற்பதை பார்த்த பின்பே அவர் நிம்மதியானார்.

''நேத்து நீங்களும் அழகரும் அவள் செஞ்ச சப்பாத்தியை சூப்பர்னு பாராட்டினீங்க இல்லையா... அப்போ

என்கிட்ட வந்து சப்பாத்தி எப்படி இருந்துச்சுன்னு கேட்டாள். உன்னை விட நான் சூப்பரா சப்பாத்தி பண்ணுவேன்னு சொன்னேன். உங்களுக்கு அடுப்பை ஆன் பண்ணவாவது தெரியுமான்னு கேட்டு என்னை அவமானப் படுத்திட்டாள். இந்த விக்ரமுக்கு வந்த சோதனையை பார்த்தீங்களா? இப்போ என்னை நிரூபிச்சு ஆக வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கேன்.'' என்று அவன் சொல்லவும் அவர்கள் நால்வருமே முறுவலித்தனர்.

''கொஞ்ச நேரம் யாரும் என்னை தொந்தரவு பண்ணாதீங்க. எல்லோரும் அப்படி போய் சோபாவில் உட்காருங்க.'' என்றவன் தன் காரியத்தில் கவனமானான்.

அவன் பேச்சை மீற முடியாமல் அவர்கள் அனைவரும் சோபாவில் சென்று அமர்ந்தனர். அவன் சப்பாத்தி சுட்டு எடுத்துக் கொண்டு சாப்பாட்டு மேஜைக்கு வந்தான்.

''அழகர்! நீ தான் நாட்டாமை. உங்க அக்கான்னு தீர்ப்பை அவளுக்கு சாதகமா சொல்லக் கூடாது. சரியா சொல்லு. இந்தா சாப்பிடு.'' என்று ஒரு தட்டில் வைத்து அவனிடம் நீட்டினான்.

''ஸ்டப்டு சப்பாத்தியா?''

''ஆமா ஆலு சப்பாத்தி தான். உருளைக் கிழங்கு மசாலா உள்ளே வச்சு இருக்கேன்.''

''ஆனால் நான் சாதா சப்பாத்தி தானே போட்டேன்.''

''நீ இப்படி சொல்லுவேன்னு எனக்கு தெரியும். சாதா சப்பாத்தியும் இருக்கு.''

அவர்கள் இருவரும் வழக்கடித்துக் கொண்டிருக்க அழகர் சப்பாத்தியை ருசி பார்த்தான்.

"சூப்பர் மாமா. உருளைக்கிழங்கு உள்ளே இருப்பதால் குருமாவே தேவைப்படலை."

"டேய் அழகர்! அதை விடு. சாதா சப்பாத்தியை சாப் பிட்டு பாரு!" என்று கயல் சொன்னதும் அதை பிய்த்து வாயில் வைத்தான்.

"சாரிக்கா. நீ மாமாகிட்ட சப்பாத்தி போட கத்துக்கோ!"

அழகர் அப்படி சொன்னதும் கயல் அவசர அவசர மாய் அந்த சப்பாத்திகளை வாயில் வைத்து ருசி பார்த் தாள். அவளது முகமே விக்ரமின் வெற்றியை பறை சாற்றியது.

"யாஹூ!" என்று கத்திய விக்ரம், "இந்த மாமா மேல கொஞ்சமாச்சும் நம்பிக்கை வைக்க பழகு கயல்." என்றான்.

"அத்தை! மாமா! நீங்களும் சாப்பிட்டு பாருங்க!" என்று சொல்லிவிட்டு தங்கள் அறை நோக்கி சென்றான்.

தன் தட்டை தூக்கிக் கொண்டு கயல் அவன் பின் னோடு சென்றாள். அழகர் தொலைக்காட்சியை பார்க்க சென்றான். தங்கமும் கணேசனும் பேச ஆரம்பித்தார்கள்.

"தங்கம்! நாம சென்னைக்கு வந்த பின்னால மாப் பிள்ளை இவ்வளவு வசதியானவர்னு தெரிஞ்சதும் எனக்கு பயமா போச்சு. அவங்க வீட்டுல சொல்லாமல் கூட கயலை இங்கே கூட்டிட்டு வந்துட்டாருன்னு நேத்து நீ சொன்னப்போ எனக்கு அந்த பயம் இன்னும் அதிக மாச்சு. கயல் எப்படி வாழ்வாளோ என்னவோன்னு ஒரே

கவலை. இப்போ தான் மனசில் உள்ள பாரம் விலகி இருக்கு.''

''நீங்க வேற நானும் ரெண்டு நாளா தூங்கலை. இப்போ தான் கொஞ்சம் நிம்மதியா இருக்கு. அழகர் சொன்ன மாதிரி அது அம்மாவுக்கும் பையனுக்கும் இடையில். அதுல நாம தலையிடக் கூடாது.''

''அறைக்குள் போன கயல்விழி, நான் சமையல் எக்ஸ் பர்ட்னு இத்தனை நாளா நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா நீங்க இப்படி என்னை சப்பாத்தியில் சாய்ச்சு புட்டீங்களே... எப்படி மாமா?'' என்று வினவினாள்.

''எனக்கு அது மட்டும் தான் கயல் நல்லா பண்ண தெரியும். சப்பாத்தினாலே நார்த் இந்தியா தானே! அந்த ஊரில் கத்துக்கிட்டேன்.''

அவனுடைய முதல் மனைவி சப்பாத்தி போட கத்து கொடுத்திருக்கலாம் என நினைத்த கயல்விழியும் அதற்கு மேல் கேள்வி எழுப்பவில்லை. அவள் அந்த தட்டை தூக்கி கொண்டு சமையலறைக்கு சென்றாள்.

சமையலறையில் வாய் பிளந்து நின்று கொண்டிருந்த கயல்விழியை கண்டு திகைத்த தங்கம், ''எதுக்கு இப்படி நிக்கிறே?'' என்று கேட்டார்.

''அவர் இவ்வளவு நேரம் வேலை செஞ்சாரே... கிட்சனை க்ளீன் பண்ணுவோம்னு வந்தேன். எடுத்ததை எடுத்த இடத்திலே வச்சுட்டார். சுத்தமா துடைச்சுட்டார். அவர் வேலை செஞ்ச அடையாளம் கூட இல்லை. சே! இதை பார்த்து தான் அவர் எதையும் உபயோகப் படுத்தலைன்னு நான் தப்பு கணக்கு போட்டுட்டேன்.''

''மாப்பிள்ளைக்கு வீடு ரொம்ப சுத்தமா இருந்தால் தான் பிடிக்கும் போல. நீயும் சுத்தமா வச்சுக்கோ கயல்.'' என்று தங்கம் ஒரு அம்மாவாய் அறிவுரை கூற ஆரம் பித்தார்.

''சரிம்மா. நான் பார்த்துக்கிறேன். அதை விட எனக்கு வேற என்ன வேலை?'' என்றதும் தான் விட்டார்.

மறுநாள் ஒன்பது மணிக்கே கைலாஷின் மனைவி வந்து கயல்விழியை அழகு நிலையத்திற்கு கூட்டி சென்றாள். கயல்விழிக்கென்று எடுத்த புடவையை கைலாஷின் மனைவி கொடுத்ததும் அவர்களே அதை அவளுக்கு கட்டிவிட்டார்கள்.

''லைட்டா மேக் அப் பண்ணுங்க. எங்க அண்ணா திரும்பத் திரும்ப சொல்லி இருக்காங்க.'' என்று கைலாஷ் மனைவி கூறவும்,

''நாங்க ஏற்கனவே உங்ககிட்ட காட்டினது தான் மேடம். லைட்டா தான் இருக்கும். கவலைப்படாதீங்க.'' என்று சொல்லி அவர்கள் தங்கள் வேலையை ஆரம் பித்தார்கள்.

கைலாஷின் மனைவியும் அளவான மேக் அப் பண்ணிக் கொள்ள ஆரம்பித்தாள்.

பச்சையும் தங்க கலரும் கலந்து நெய்த அந்த பட்டுப் புடவையில் மரகதப் பாவையென கயல்விழி ஜொலித் தாள். அவர்கள் அங்கே இருந்து கிளம்பினார்கள்.

''என் பிளவுஸில் இவ்வளவு வேலை பார்த்து வச்சிருப் பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை. ரெண்டு நாளில் எப்படி முடிச்சு குடுத்தாங்க?'' என்று கயல்விழி கேட்டாள்.

''முதல்லயே சொல்லி வச்சிருந்தோம். காசு எக்ஸ்ட்ராவா வாங்கிக்கிட்டாங்க.''

அவர்கள் இருவரும் வீட்டிற்கு வந்தனர். வரவேற்பறையில் அமர்ந்து கைலாஷும் விக்ரமும் பேசிக் கொண்டிருந்தனர்.

''மேடம்ஜி! என் வைஃபை கூட்டிட்டு போனியே? அவள் எங்கே?'' என்று விக்ரம் கைலாஷின் மனைவியிடம் நக்கலாகக் கேட்டான்.

''அடையாளம் தெரியாத அளவுக்கு மேக் அப் அதிகமா இருக்கா மாமா?'' என்று கயல் பாவம் போல் கேட்கவும், அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

''அம்மாடி கயல்விழி! நீ இவ்வளவு அப்பாவியா இருக்கக் கூடாது. சும்மாவே உன் மாமன் ஓவரா கிண்டல் பண்ணுவான். நீயே அவனுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி குடுப்ப போல.'' என்று கைலாஷ் கிண்டல் அடித்தான்.

கயல்விழியின் குடும்பத்தினர் அவளை சூழ்ந்து கொண்டு அவளது அலங்காரத்தை புகழ ஆரம்பித்தார்கள்.

கைலாஷிடம் இருந்து தன்னுடைய நகைகளை வாங்கிய அவன் மனைவி சோபாவில் அமர்ந்து அவற்றை அணிய ஆரம்பித்தாள். அதை பார்த்த தங்கம் தன் மகளை திரும்பி பார்த்தார்.

அவள் கழுத்தில் மெல்லிய நகை மட்டுமே அணிந்திருப்பதை பார்த்தவர், இப்படி ஒரு விசேஷம் இருக்குன்னு தெரிஞ்சிருந்தால் போலி நகையாவது வாங்கி

வச்சிருக்கலாம். இப்போ மொட்டை கழுத்தா நிக்க வேண்டி இருக்கே என நினைத்து வருந்தினார்.

கைலாஷிடம் பேசிக் கொண்டிருந்த விக்ரம் எழுந்து தன் அறை நோக்கி சென்று கொண்டே, ''கயல்! இங்கே வா!'' என்று அழைத்தான்.

கயல்விழி தன் குடும்பத்தினரிடம், ''ஒரு நிமிஷம். இதோ வந்துடுறேன்.'' என்று சொல்லி தங்கள் அறை நோக்கிச் சென்றாள்.

''எதுக்கு மாமா கூப்பிட்டீங்க?''

அவன் அலமாரியை திறந்து கொண்டே, ''நேத்தெல்லாம் உன் புடவையை பார்க்கணும்னு ரொம்ப ஆசைப் பட்டியே! அது எப்படி இருக்கு?'' என்று கேட்டான்.

''ரொம்ப சூப்பரா இருக்கு மாமா. ஐ லவ் இட். நான் அழகா இருக்கேனா?''

''நீ என் கண்ணுக்கு அழகா தெரிய போய் தான் நான் உன்னை கல்யாணம் பண்ணி இருக்கேன்.'' என்றவன் அலமாரியில் இருந்து எடுத்த நகை டப்பாவையும் வளையல் டப்பாவையும் அவளிடம் நீட்டினான்.

''நகையா மாமா? தங்கமா?''

''ஆமா. உனக்காக வாங்கினோம். நல்லா இருந்தாலும் நல்லா இல்லைன்னாலும் வெளியே இருக்காள் பாரு. அவளை திட்டு. அவள் தான் செலக்ட் பண்ணினாள். காசு குடுத்தது மட்டும் தான் நான்.''

''நீங்க ஏன் அவங்களை வா போன்னு ஒருமையில் சொல்லுறீங்க?''

"அவள் கைலாஷுக்கு சொந்தம். அவளை எனக்கு ரொம்ப வருஷமா தெரியும். மரியாதை குடுத்து பேசி னால் அடிச்சிடுவாள்."

நகை டப்பாவை திறந்து பார்த்தவள், இவ்வளவு பெரிய நகையா? இது எத்தனை பவுன்? எவ்வளவு லட்சம் இருக்கும்? என்று ஒரு வித பயத்தோடு விழித் தாள்.

"கயல்! இந்த விக்ரமுக்குன்னு ஒரு ஸ்டேட்டஸ் இருக்கு. இனிமேல் நீ அது மாதிரி கொஞ்சம் மாறி தான் ஆகணும்."

"எனக்கு அவ்வளவு தகுதி இருக்கா மாமா?"

"நீ தகுதியா எதை பார்க்கிறே? பணத்தையா? உன்னை பார்த்ததும் இந்தப் பொண்ணு காலம் முழுசும் என்னை நல்லா பார்த்துக்குவாள்னு எனக்கு தோணுச்சு. நான் அதை தான் உன்னோட தகுதியா நினைக்கிறேன். மனசை போட்டு குழப்பிக்காதே. இது நம்மளோட பங்க்ஷன். சந்தோஷமா இரு." என்றதும் தலையாட்டி னாள்.

"நான் போய் அவளை அனுப்புறேன். இதை போட அவள் ஹெல்ப் பண்ணுவாள்." என்று சொல்லி வெளியேறினான்.

அவன் வெளியே சென்றதும் கைலாஷின் மனைவி உள்ளே வந்தாள்..அவள் நகையை அணிந்து வந்த போது புகைப்படக்காரர் வந்தார்.

தங்க நகைகளை பூட்டி ஒரு இளவரசி போல் வந்து நின்ற தன் மகளை கண்ட அவளது பெற்றோர்

அகமகிழ்ந்து போனார்கள். சந்தோஷத்தில் அவர்களது கண்கள் கலங்கின.

மணல் வண்ணத்தில் கோட் சூட் அணிந்து வந்த மருமகனை கண்டவர்கள் அவர்கள் இருவரின் ஜோடி பொருத்தத்தை பார்த்து மெய் சிலிர்த்து நின்றனர்.

அவர்கள் இருவரையும் சேர்த்து புகைப்படக்காரர் பல போஸ்களில் புகைப்படங்களை எடுத்து தள்ளினார். அதன் பின் கைலாஷ் மற்றும் அவன் மனைவியுடன் சேர்ந்தும் கயலின் குடும்பத்தினரோடும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார்கள்.

அந்தப் புகைப்படக்காரர், ''சரி சார் நான் பார்ட்டி ஹாலுக்கு கிளம்புறேன்.'' என்று கூறி விடைபெற்றார்.

''டைம் ஆகுது. கிளம்பலாமா?'' என்று கேட்டு வீட்டை பூட்டிக் கொண்டு வெளியேறினர்.

விக்ரமின் காரில் கயல் குடும்பத்தினரும் கைலாஷின் காரில் அவன் மனைவியும் ஏறிக் கொண்டனர். அந்த விழா நடக்கும் இடத்திற்கு இரு கார்களும் செல்லத் தொடங்கின.

காரில் செல்லும் பொழுது அழகர், ''மாமா! ஐயாம் சாரி.'' என்றான்.

''எதுக்கு அழகர் சாரி கேட்கிறே?''

''நீங்க அன்னைக்கு ரிசப்ஷன் வேண்டாம்னு சொன்னதும் எனக்கு ரொம்ப சங்கடமா இருந்துச்சு. உங்களை மனசிலே ரொம்ப திட்டினேன். அதுக்கு சாரி. எங்க அக்காவை நான் எப்படி பார்க்க நினைச்சேனோ அதை விட நூறு மடங்கு இன்னைக்கு அவளை அழகாக்கி காட்டிட்டீங்க. அதுக்கு ஒரு தாங்க்ஸ்.''

''மேக் அப் பண்ணி பட்டும் நகையும் போட்டால் தான் உங்க அக்கா அழகா இருக்காள்னு சொல்ல வரியா அழகர். இது நூறு மடங்குன்னா... சாதாரணமா உங்க அக்கா எப்படி இருப்பாள்? நான் தப்பு பண்ணிட்டேனா அழகர்? அன்னைக்கு மொட்டை மாடியில் வச்சு பாடச் சொல்லி கேட்டு தப்பிச்சு ஓடிப் போய் இருக்கணுமா?''

இதைக் கேட்டதும் அழகர் சிரிக்க ஆரம்பித்தான். கயல்விழி முறைத்தாள்.

கணேசனுக்கும் தங்கத்திற்கும் அவர்கள் பேசுவது புரியவில்லை. சிறியவர்களுக்குள் ஏதோ ஜோக் என்று எடுத்துக் கொண்டு அவர்கள் அமைதியாய் இருந்தனர்.

''நாங்க அன்னைக்கு பேசினதை எல்லாம் ஒட்டுக் கேட்டுட்டு எங்களை நக்கலா பண்ணுறீங்க?'' என்று கயல்விழி முறுக்கிக் கொண்டாள்.

''அப்படி ஒட்டுக் கேட்டதினால் தான் மொட்டை மாடியில் வச்சு உன்னை எந்தக் கேள்வியும் கேட்காமல் கல்யாணத்துக்கு சம்மதிச்சேன். இப்போ சொல்லு நான் ஒட்டுக் கேட்டது சரியா? தப்பா?'' என்றதும்,

அவனது கேள்விக்கு தப்பு என்று பதில் சொல்லி மாட்டிக் கொள்ள விரும்பாமல், ''நீங்க எது செஞ்சாலும் சரி தான் மாமா.'' என்றாள்.

''அது! அப்படியே நினைக்க பழகு.'' என்று அவன் கெத்து காட்டினான்.

அவர்கள் அந்த பார்ட்டி ஹாலை வந்து அடைந்தனர். அக்கம் பக்கத்தினரையும் விக்ரம் விருந்திற்கு அழைத் திருந்தான். கைலாஷின் பெற்றோரும் வந்திருந்தனர்.

கயலின் பெற்றோர் ஒரு ஓரமாய் அமர்ந்து கொண்டனர். அழகர் மட்டும் அவ்வப்போது மேடை ஏறி புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தான்.

நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினருக்கான கல்யாண விருந்து என்ற பெயரில் ஒரு மினி ரிசப்ஷனையே விக்ரம் நடத்தி முடித்தான்.

அன்று இரவு மிகுந்த மனநிறைவோடு கயலின் குடும்பத்தார் மதுரைக்கு கிளம்பி சென்றனர்.

# 14

விக்ரம் மேலும் மூன்று நாட்கள் அலுவலகம் செல்லாமல் வீட்டில் தான் இருந்தான். புது தம்பதிகளுக்கே உரித்தான வகையில் அவர்கள் அந்த நாட்களை கழித்தனர்.

ஒரு நாள் கயல்விழி தன் கணவனிடம், ''மாமா! நான் ஒரு விஷயம் கேட்பேன். சொல்வீங்களா?'' என்று பீடிகை போட்டாள்.

''பில்டப் எல்லாம் பலமா இருக்கு. என்ன கேட்கணுமோ கேளு.''

''உங்க முதல் மனைவியை நீங்க லவ் பண்ணி கல்யாணம் பண்ணினதா நான் கேள்விப்பட்டேன். நீங்க அவங்களை எங்கே பார்த்தீங்க?''

''உனக்கு பொழுது போகலையா? என்னோட லவ் ஸ்டோரி பத்தி கேட்கிறே?''

''எல்லாம் ஒரு பொது அறிவை வளர்த்துக்கலாம்னு தான். சொல்லுங்க. முதன் முதலா எங்கே வச்சு அவங் களை பார்த்தீங்க?''

அவன் தன் கண்களை மூடி, ''நான் முதன் முதலா அவளை கோவிலில் வச்சு பார்த்தேன். சில பேரை நமக்கு பார்க்கப் பார்க்க தான் பிடிக்கும். சிலரை பார்த் ததும் பிடிக்கும். அவள் ரெண்டாவது ரகம். பார்த்த அந்த நொடியே என் மனசிலே பச்சக்குன்னு பதிஞ்சுட்டாள்.'' என்று ஒரு பரவசத்தோடு விவரித்தான்.

சில நொடிகள் அங்கே அமைதி நிலவியது. அந்த அமைதியை கயலின் அடுத்த கேள்வி கலைத்தது.

''அவங்க பேர் என்ன?''

''அவளோட பேர் ஏஞ்சலிகா. லத்தீன் மொழியிலே ஏஞ்சல் என்று அர்த்தம்.''

''அவங்க ஹிந்திகாரங்க தானே. அப்புறமா எதுக்கு லத்தீன் மொழியிலே பேர் வச்சாங்க?''

''மார்டனா இருக்கட்டும்னு அப்படி வச்சிருக்காங்க. பொதுவா நார்த்திலே எப்படி தெரியுமா பேர் வைப்பாங்க. ஸ்வீட்டி, பிங்கி, ரிம்ஜிம்... இவ்வளவு ஏன் ஒரு பொண்ணோட பேர் விதி.''

''என்னது விதியா?''

''முதன் முதலா கேட்டப்போ நானும் இப்படி தான் ஆச்சரியப்பட்டேன்.''

''ஏஞ்சலிக்கா!'' என்று அவள் சொல்லிப் பார்த்தாள்.

''நான் அவளை ஏஞ்சல்னு தான் கூப்பிடுவேன். நிஜமாவே என் வாழ்க்கையிலே வந்த தேவதை அவள். ரொம்ப பொருத்தமா பேர் வச்சிருக்காங்க இல்ல? ஆமா உனக்கு எதுக்கு உங்க அப்பா கயல்விழின்னு பேர் வச்சார்?''

''ஏன்? என் பேருக்கு என்ன குறை? கயல்விழிங்கிறது சுத்தமான தமிழ் பேர்.''

''உன் பேருக்கு அர்த்தம் தெரியுமா? உன்னோட கண் மீன் மாதிரியா இருக்கு? அதான் கேட்டேன்.''

அவள் முணுமுணுத்தவாறே அந்த இடம் விட்டு நகர்ந்து சென்றாள். அவன் அவளை பார்த்து சப்தமில் லாமல் சிரித்துக் கொண்டான்.

அவன் அலுவலகம் செல்ல ஆரம்பித்தான். கயல் விழிக்கு பொழுது நகர்வேனா என்றது. இரு தினங்களி லேயே அவள் சோர்ந்து விட்டாள்.

அடுத்த நாள் சனி என்பதால் விக்ரம் வீட்டில் இருந் தான். அன்று விக்ரம் அவளை கடைக்கு அழைத்து சென்று ஏகப்பட்ட புடைவைகளையும் சுரிதார்களையும் வாங்கி கொடுத்தான்.

''எதுக்கு மாமா இவ்வளவு?''

''உனக்கு வீட்டுல போர் அடிக்குதுல. உனக்கு தையல் மிஷின் வாங்கி தரேன். இதை எல்லாம் ஒவ்வொண்ணா தச்சு பொழுதை ஓட்டு.''

அவள் கடையில் வைத்து வேறு எதுவும் கேட்க வில்லை. அவர்கள் வீடு திரும்பியதும் தன் மனதில் தோன்றிய சந்தேகத்தை கேட்டாள்.

"என்னோட டிரஸ் எல்லாம் உங்க ஸ்டேட்டஸுக்கு பொருத்தமானதா இல்லையா? அதனால தான் நிறைய டிரஸ் வாங்கி தந்திருக்கீங்களா?"

அவன் அவளருகே அமர்ந்து அவளது தோளில் ஒரு கை போட்டு அவளது இன்னொரு கையை தன் கைக்குள் வைத்து அழுத்திக் கொடுத்தவாறு பேச ஆரம்பித்தான்.

"ஸ்டேட்டஸ்... நான் அன்னைக்கு சொன்ன வார்த்தை உன்னை காயப்படுத்துச்சா கயல்?"

"அன்னைக்கு காயப்படுத்தலை மாமா. அன்னைக்கு நீங்க நகை வாங்கி குடுத்தீங்க. அது என்கிட்ட சுத்தமா கிடையாது. அதனால உங்க மனைவியா அதை போட்டுக்கிட்டு உங்க கூட வரதுக்கு என் மனசு ஒத்துக்கிச்சு. ஆனால் இன்னைக்கு நீங்க வாங்கி தந்தது டிரஸ். அது என்கிட்ட நிறையவே இருக்கே. அதனால மனசிலே ஒரு தாழ்வு உணர்ச்சி ஏற்படுது.

ஆண்களுக்கான டிரஸிலே பெருசா எந்த வித்தியாசமும் தெரிஞ்சிடாது கயல். ஆனா பொண்ணுங்க டிரஸிலே நிறைய உண்டு. ஜரிகையும் எம்பிராய்ட்டரி வேலைப்பாடும் நீங்க உடுத்துற டிரஸோட மதிப்பை கூட்டியோ குறைச்சோ காட்டும்.

நீ ரொம்ப சாதாரணமா துணி உடுத்தினால் அது எனக்கு கேவலம் கிடையாது கயல். ஆனா விக்ரம் இவ்வளவு சம்பாதிக்கிறான் அவன் மனைவிக்கு நல்லதா டிரஸ் கூட வாங்கி தர மாட்டான் போலன்னு பேச்சு கிளம்பும்.

என் கூட சேர்ந்து என் பிரண்ட்ஸோட வீடு, பிறந்த நாள் விழா அப்படி இப்படின்னு நிறைய இடத்துக்கு நீ

வர வேண்டி இருக்கும். அங்கே உன்னோட டிரஸ்ஸை யாரும் குறையா மதிப்பிட கூடாதுன்னு பார்க்கிறேன். நம்மகிட்ட பணம் இல்லைன்னா அது வேற விஷயம். பணம் இருக்கும் போது காஸ்ட்லியா டிரஸ் வாங்கிற திலே தப்பில்லையே?''

''என்னமோ எங்க வீட்டு மனுஷங்ககிட்ட இருந்தெல் லாம் நான் அந்நியப்பட்டு போன மாதிரி இருக்கு.''

''அழகர் நல்லபடியா இஞ்சினியரிங் படிப்பை முடிச்சு நல்ல வேலையில் சேர்ந்து வீடு, கார்னு வாழ்ந்தால் உனக்கு என்ன தோணும்?''

''இந்த உலகத்திலேயே அதிக சந்தோஷமான ஆள் நானா தான் இருப்பேன்.''

''அப்போ அதே வசதியோடு நீ இருந்தால் உன் தம்பி மட்டும் உன்னை பார்த்து வருத்தப்படுவானா கயல்? இல்லை உங்க அம்மா அப்பா நாம வசதி இல்லாதவங் களா பிறந்து வளர்ந்தோம். நம்ம பிள்ளைகளும் அப் படியே தான் இருக்கணும்னு நினைப்பாங்களா?''

''அது...'' என்றவள் யோசிக்க ஆரம்பித்தாள்.

''உன்னோட இருபத்தி மூணாவது வயசிலே தானே உனக்கு இந்த வசதி வந்து சேர்ந்து இருக்கு. அவனும் தன்னோட இருபத்தி மூணாவது வயசில் படிச்சு முடிச்சு நல்ல வேலையில் சேர்ந்து நல்லபடியா செட்டில் ஆவான் கயல்.''

''ம்ம்ம்..''

''உனக்கு எடுத்த மாதிரி அவனுக்கும் நிறைய துணி மணி வாங்கி தர நான் தயார். ஆனா நம்ம கல்யாணத்

துக்காக நான் ஒரு டிரஸ் வாங்கி தந்ததுக்கே அவங்க எல்லோரும் எப்படி சங்கடப் பட்டாங்கன்னு பார்த்தே இல்ல.''

''டிரஸ் வாங்கி குடுத்தால் அவங்க வாங்கிக்க மாட்டாங்க தான்.''

''அழகருக்கு அண்ணா யூனிவர்சிட்டியில் படிக்கணும்னு ஆசை இருக்கு. அந்த காலேஜ் நம்ம வீட்டுக்கு பக்கத்திலே தான் இருக்கு. அவனை அங்கே சேர வச்சு நாம அவனை பார்த்துக்கலாம் கயல்.''

அவன் மேல் சாய்ந்து கொண்டு, ''நான் சின்ன பிள்ளை மாதிரி யோசிச்சு உங்களை கஷ்டப்படுத்துறேனா மாமா?'' என்று கேட்டாள்.

''அப்படி எல்லாம் இல்லை. மனசிலே வச்சுக்கிட்டு வெளியே சொல்லாமல் இருந்தால் தான் எனக்கு கஷ்டம். எதுவா இருந்தாலும் இப்படி நேரடியா கேட்டுடணும்.''

''சரி'' என்று சம்மதமாய் தலையாட்டிக் கொண்டாள்.

அவன் மோட்டார் வைத்த அடக்கமான தையல் இயந்திரத்தை வாங்கி தந்தான்.

அதனால் அடுத்த வாரம் முழுவதும் அவள் துணிகளை தைப்பதில் பொழுதை ஓட்டினாள். அவ்வப்போது எதிர் வீட்டு பெரியவர்களிடமும் சென்று பேசிக் கொண்டிருப்பாள்.

கைலாஷின் குடும்பத்தோடு அவள் நெருங்கிப் பழகினாள். கைலாஷின் மனைவி விக்ரமை அண்ணா என்று அழைப்பது போல் கயல்விழியும் கைலாஷை அண்ணா என்று அழைக்க ஆரம்பித்தாள்.

வாரம் ஒரு முறையேனும் அவர்கள் சந்தித்துக் கொண்டனர். அவர்களின் நட்பு பலப்பட்டது.

அடுத்த வார இறுதியில் விக்ரம் தன் மனைவிக்கு மடிகணினியை இயக்குவது பற்றி கற்று தர முன் வந்தான்.

''இதெல்லாம் கத்து வச்சுக்கிட்டு நான் என்ன மாமா செய்ய போறேன்?''

''இந்தக் காலத்திலே கம்ப்யூட்டர் பத்தி தெரிஞ்சு வச்சுக்கலைன்னா அது சாமி குத்தமாகிடும் கயல். ராத்திரி உன் கனவிலே வந்து சாமி கண்ணை குத்தும்.''

''ப்ச் போங்க மாமா.''

''தெரிஞ்சு வச்சுக்கோ கயல். அப்புறம் நாளைக்கு உன் பிள்ளைங்க கூட உன்னை கிண்டல் பண்ணுவாங்க.''

''அதை அப்போ பார்த்துக்கலாம்.''

''நான் எதுக்கு தெரியுமா உன்னை கத்துக்க சொல்லுறேன். நீ நல்லா சமைக்கிற இல்லையா... உனக்கு ஒரு புட் பிளாக் ஆரம்பிச்சு தரேன். அதுல நீ உன்னோட ரெசிபி எல்லாம் போட்டோவோட போடு. நிறைய பேர் பார்க்க ஆரம்பிச்சால் உனக்கு காசு வரும். உன் தம்பிக்கு நீயே பாக்கெட் மணி குடுக்கலாம்.''

''நான் கத்துக்கிறேன் மாமா.'' என்று அவள் உடனடியாக சம்மதம் தெரிவித்தாள்.

ஒரு புன்னகையுடன் அவளுக்கு அதை கற்று கொடுக்க ஆரம்பித்தான். அவளுக்கென்று ஒரு சமையல் பிளாக் ஆரம்பித்து கொடுத்தான்.

''இனிமேல் நீ தினம் சமைச்சால் மட்டும் போதாது. அதை முதல்ல போட்டோ எடுக்கணும்.''

'அப்போ நான் இனிமேல் ஒரு போட்டோகிராபருமா? கயல்! நீ எங்கேயோ போக போகிற போல!' என்று தன்னை தானே பாராட்டிக் கொண்டாள்.

அவன் இணையத்தின் உபயோகத்தை கற்று தந்த பின் அவளுக்கு பொழுது நன்றாகவே கழிய ஆரம் பித்தது.

அப்படி அவள் இணையத்தின் வழியாக வீட்டிலேயே தலைக்கு மசாஜ் செய்வது எப்படி என்று கற்று வைத்துக் கொண்டாள்.

வார இறுதியில், ''மாமா! வாங்க நான் உங்களுக்கு ஹெட் மசாஜ் பண்ணுறேன். அது பண்ணிக்கிட்டால் உங்களோட ஸ்ட்ரெஸ் குறையுமாம்.'' என்றாள்.

''உனக்கு கோபம்னா என்கிட்ட சொல்லிட்டு என்னை மண்டையில் நாலு தட்டு தட்டிக்கோ கயல். அதுக்கு எதுக்கு மசாஜ்ன்னு பேர் வைக்கிறே?''

''எனக்கு தட்டணும்னு தோணுச்சுன்னா சொல்லாமல் கூட தட்டுவேன்.''

''ரொம்ப தேறிட்ட கயல்.''

''எப்பவும் அப்படியே இருப்பாங்களா? ஐயோ பாவம்னு உங்களுக்காக ஒண்ணை கத்துக்கிட்டு வந்தால்... ரொம்ப தான் பிகு பண்ணுறீங்க.''

''நீ இப்போ ஒரு வார்த்தை சொன்ன பார்த்தியா... கத்துக்கிட்டு. அதை நினைச்சால் தான் பயமா இருக்கு. எப்பவுமே உன்னோட சோதனை எலி நான் தானா? நீ சமையலில் கில்லாடி. அதனால நீ புதுசா என்ன சமைச்

சாலும் நான் சோதனை எலியா இருக்க ஒத்துக்கிட்டேன். அதுக்காக எல்லாத்துக்கும் ஒத்துக்க முடியுமா?''

''உங்ககிட்ட யார் பெர்மிஷன் கேட்டது? உட்காருங்க!'' என்று அவனை இழுத்து வைத்து அவள் தன் வேலையை தொடங்கினாள்.

அன்று மாலை, ''சூப்பர் கயல். நிஜமாவே ரொம்ப ரிலாக்ஸ்டா இருக்கு. தாங்க்ஸ் கயல்.'' என்று அவன் மனமார நன்றி உரைத்தான்.

அவளது முகம் பிரகாசமாகியது. அவனது அந்த மலர்ச்சிக்கும் பாராட்டிற்கும் அவள் எதையும் செய்ய தயாராய் இருந்தாள்.

# 15

சின்ன சின்ன சண்டைகளும் பிடிவாதங்களும் சமாதானங்களுமாய் அவர்களது நாட்கள் நகர்ந்தன.

விக்ரம் தன் தாயிடம் பேசுகிறானோ இல்லையோ கயல்விழி சிவகாமியிடம் அவ்வப்போது ஓரிரு வார்த்தைகள் போனில் பேசுவாள்.

ஒரு நாள் கயல்விழி தன் கணவனிடம் வந்து, ''உங்களுக்கு இந்த வாரம் வெள்ளிக்கிழமை லீவ் தானே?'' என்று கேட்டாள்.

''ஆமா அதுக்கு என்ன இப்போ?''

''அப்படின்னா தொடர்ந்து மூணு நாள் லீவ் தானே?''

'இப்ப எதுக்கு அடிபோடுறாள்?' என்று விக்ரம் அவளை ஒரு ஆராய்ச்சி பார்வை பார்த்தான்.

''இல்ல... நாம ஏன் ஊருக்கு போகக் கூடாது?''

''எந்த ஊருக்கு?''

''திருச்சிக்கு. அத்தையையும் மாமாவையும் பார்த்துட்டு வருவோம்.''

''மாமியார் மேல பாசம் பொங்கி வழியுது. என்ன காரணம்? எங்க அம்மா எதுவும் போன் பண்ணி வர சொன்னாங்களா?''

''அப்படி இல்லை. லீவ் கிடைக்கும்போது தானே ஊருக்கு போக முடியும். பல்லவி குட்டியும் வரப் போறாள்.''

''எங்க அம்மா உனக்கு போன் பண்ணாமல் பல்லவி ஊருக்கு வரும் விஷயம் உனக்கு எப்படி தெரிஞ்சது.''

''அது...'' என்றவள் அடுத்து என்ன பொய் சொல்ல என்று தெரியாமல் விழித்தாள்.

''ஹேய் மக்கு! ரொம்ப யோசிச்சு இருக்கிற கொஞ் சூண்டு மூளையை கசக்காதே. நாம எங்கேயும் போகப் போறதில்லை. இங்கே தான் இருக்கப் போறோம்.''

''இங்கேயே மூணு நாள் இருந்தால் போர் அடிக்கும். ப்ளீஸ் மாமா போகலாம்.''

''எனக்கு அங்கே எல்லாம் சரிப்பட்டு வராது. என் கூட இருக்கிறது உனக்கு போர் அடிச்சால் நீ மட்டும் போயிட்டு வா.''

''நீங்க வராமல் நான் மட்டும் எப்படி போக முடியும்?''

''மாமியாரும் மருமகளும் ஓவரா கொஞ்சிக்கிறீங்க தானே. அப்புறம் நான் எதுக்கு நடுவிலே? நான் வைகை எக்ஸ்பிரஸில் உன்னை ஏத்தி விடுறேன். ஈவினிங் திருச்சில போய் இறங்கிடுவே. மூணு நாள் நல்லா என்ஜாய் பண்ணிட்டு வா.'' என்றதும் முறைத்தாள்.

''என்ன ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிற? டிக்கெட் போடவா?''

''இவர் வீட்டுக்கு போறதுக்கு கூட இவர்கிட்ட கெஞ்ச வேண்டி இருக்கு. அன்பு பாசம்னா என்னன்னு தெரிஞ்ச மனுஷன்னா பேசி புரிய வைக்கலாம். அதெல்லாம் தெரி யாத மனுஷனுக்கு எதை சொல்லி புரிய வைக்கிறது?'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''என்ன அங்கே முணுமுணுக்கிறே?''

''உங்களை ஒண்ணும் சொல்லலை. நான் வாங்கி வந்த வரம். எல்லா நாளும் இப்படி நாலு சுவரையே பார்த்துக்கிட்டு இருக்கணும்னு என் தலையிலே எழுதி இருக்கு.'' என்று சப்தமாய் நொடித்துக் கொண்டவள் தங்கள் அறைக்குள் சென்று மறைந்தாள்.

'ஆஹா! அடுத்த பிரச்சனையை ஆரம்பிச்சுட்டாளே! இவள் நான் சரின்னு சொல்லுற வரைக்கும் அடங்க மாட்டாளே!' என மனதோடு புலம்பி கொண்டவன் வெளியே ஒன்றும் காட்டிக் கொள்ளாது தன் வேலையை தொடர்ந்தான்.

இரவு உணவை மேஜையில் எடுத்து வைத்து விட்டு அவள் திரும்பவும் தங்கள் அறைக்குள் சென்று அடைந்து கொள்ள அவன் கடுப்பானான்.

அவள் தன் கோபத்தை காட்ட நினைக்கும் பொழுதெல்லாம் அவன் அருகில் இருந்து உணவு பரிமாற மாட்டாள். சாப்பிடவும் மாட்டாள்.

விக்ரம் சென்று அவளை சமாதானப்படுத்திய பின்பே அவனுக்கு உணவு பரிமாறி தானும் சாப்பிடுவாள்.

'இது என்ன எப்போ பார்த்தாலும் இதே டெக்னிக்கை ஃபாலோ பண்ணுறாள். ஒவ்வொரு தடவையும் இவளுக்கு பணிஞ்சு போகக் கூடாது' என்று முடிவு கட்டியவனாய் தானே தட்டில் வைத்துக் கொண்டு உண்ண ஆரம்பித்தான்.

பரிமாறுவதற்கு தன்னை அழைப்பான் என்று அவள் எதிர்பார்த்து காத்திருந்தாள். ஆனால் அவனோ அவளை சிறிதும் கண்டு கொள்ளவில்லை.

'இந்த மனுஷனை நான் என்னைக்கு சரியா புரிஞ்சுக்குவேன்? நான் என்ன நினைக்கிறேனோ அதுக்கு எதிர்மறையாவே எல்லாம் செய்யுறாரே!' என்று நொந்து கொண்டாள்.

சாப்பிட்டு முடித்தவன் தன் மடிகணினியில் மூழ்கி விட்டான். அவள் படுக்கை அறைக்குள்ளேயே அமர்ந்திருந்தாள்.

ஒரு மணி நேரம் கடந்த பொழுது தூங்குவதற்கென்று அறைக்குள் நுழைந்த விக்ரம் கட்டிலில் ஒரு ஓரமாய் படுத்துக் கொண்டான். அவளும் அவன் அருகே சென்று படுத்துக் கொண்டாள்.

'ஏன் சாப்பிடாமல் வந்து படுத்துட்டே?' என்று தன்னிடம் கேட்பான் என்று எதிர்பார்த்து ஐந்து நிமிடங்கள் காத்திருந்தாள்.

அவன் அப்படி எதுவும் கேட்கவில்லை என்றதும் கடுப்பானாள்.

''பக்கத்துல ஒருத்தி சாப்பிடாமல் படுத்திருக்காளே. என்ன ஏதுன்னு கேட்போம்னு தோணுதா?'' என்று அவள் சப்தமாகவே முணுமுணுத்தாள்.

''நான் ஏன் கேட்கணும்? உங்க மாமியாருக்கு சப்போர்ட் பண்ணி தானே உண்ணாவிரதம் இருக்க. வேணும்னா அவங்களை வந்து உன்னோட உண்ணாவிரதத்தை முடிச்சு வைக்க சொல்லு.''

''எங்க மாமியார் பெத்த மகன் அந்த வேலையை செய்ய மாட்டாரோ?''

''உங்க மாமியார் ரெண்டு மகனை பெத்தாங்க. எங்க அண்ணன் அவன் மனைவிக்கு எந்த அளவுக்கு விட்டு குடுப்பான்னு எனக்கு தெரியாது. ஆனால் இந்த விக்ரம் இப்படி தான்.'' என்றவன் தன் கண்களை மூடிக் கொண்டான்.

'நீங்களா நானான்னு பார்த்துடலாம். நான் இப்படியே பட்டினியாய் இருக்கேன். நாளைக்கு காலையிலும் சாப்பிட மாட்டேன். அப்போ நீங்க இறங்கி வந்து தானே ஆகணும்' என நினைத்தவளாய் தூங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் காலையில் எழுந்து அவனுக்கு மட்டுமாய் மதிய உணவை சமைத்து டப்பாவில் அடைத்து வைத்தாள்.

பின் காலை உணவிற்காக சட்டினி தயாரித்து அவனுக்கு தோசைகளை சுட்டு வைத்தாள்.

அவன் சாப்பிடுவதற்காக மேஜையில் அமர்ந்து கொண்டே தன் கைப்பேசியை ஆராய்ந்து கொண்டிருந்

தான். கயல்விழி தான் சுட்ட தோசைகளை அவன் முன் கொண்டு வந்து வைத்தாள்.

''ப்ச்'' என்று சலித்துக் கொண்டவன் மேஜையில் இருந்து எழுந்து தங்கள் அறை நோக்கி செல்ல ஆரம் பித்தான்.

''எங்கே போறீங்க? சாப்பிட்டுட்டு போங்க.''

''எனக்கு ஒரு வேலை வந்துடுச்சு. நான் அதை முடிக்க அரை மணி நேரம் ஆகும்.''

''நான் தோசை சுட்டு வச்சிட்டேனே.''

''உன்னை யாரு நான் டேபிளில் உட்காரும் முன்னாடி தோசை சுட்டு வைக்க சொன்னா? என்னால ஆறிப் போன தோசையை எல்லாம் சாப்பிட முடியாது. இந்த தோசையை நீயே சாப்பிடு. நான் வேலையை முடிச் சுட்டு வந்ததும் சூடா வேற தோசை சுட்டு குடு.'' என்று சொல்லிவிட்டு படுக்கை அறைக்குள் சென்று மறைந் தான்.

''யாரு தோசை சுட சொன்னான்னா கேட்கிறீங்க? நீங்க அன்னைக்கு என்ன சொன்னீங்கன்னு ஞாபகம் இருக்கா? தோசையை சுட்டுட்டு சாப்பிட கூப்பிட மாட்டியா? நான் ஒவ்வொரு தோசைக்காகவும் அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணணுமான்னு சொன்னீங்க தானே. இன் னைக்கு இப்படி மாத்தி பேசுறீங்க.'' என்று அவள் திட்டியதற்கு அவன் எந்த பதிலும் சொல்லவில்லை.

அதற்கு மாறாக, ''என்ன அங்கே சத்தம்? உன்னை தோசை தானே சாப்பிட சொன்னேன்.'' என்று அவன் உள்ளிருந்து குரல் கொடுக்கவும் கடுப்பானாள்.

''எல்லாம் என் நேரம். விட்டால் நான் இவர் பேச்சை கேட்டு தான் மூச்சே விடணும்னு சொல்லுவார் போல.'' என்று திட்டிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தாள்.

சாப்பிடாமல் விரதம் இருக்கணும் என்று அவள் முன் தினம் எடுத்த தீர்மானம் அவள் நினைவிற்கு வரவில்லை.

அவள் மனம் முழுவதும் மாறி மாறி பேசும் கணவனை திட்டுவதிலேயே குறியாக இருந்தது.

அவள் சாப்பிட்டு முடித்து கை கழுவும் பொழுது அவன் படுக்கை அறையில் இருந்து வெளியே வந்தான்.

''எனக்கு ஆபீஸுக்கு டைம் ஆச்சு. நான் கிளம்புறேன்.''

''இருங்க. தோசை சுடுறேன்.'' என்று அவள் வேக வேகமாக அடுப்பை பற்ற வைக்க முயன்றாள்.

''சாப்பிட எல்லாம் எனக்கு டைம் இல்லை. வா வந்து கதவை பூட்டிக்கோ.''

''என்ன விளையாடுறீங்களா?' கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்ன சொன்னீங்க? சாப்பிட அரை மணி நேரம் ஆகும்னு சொன்னீங்க தானே. இப்ப என்ன டான்னா சாப்பிடாமல் கிளம்புறீங்க. எதுக்கு இப்படி மாத்தி மாத்தி பேசுறீங்க.''

''நான் ஒண்ணும் மாத்தி மாத்தி பேசலை. என் னாலயும் ஒருவேளை சாப்பிடாமல் இருக்க முடியும்னு உனக்கு காட்ட தான் அப்படி செஞ்சேன். வரேன்.'' என்றவன் அவள் புறம் திரும்பியும் பாராமல் வீட்டை விட்டு வெளியேறி சென்று கொண்டே இருந்தான்.

அவள் ஆ என்று திறந்த வாயை மூடாது பார்த்துக் கொண்டே நின்றாள்.

‘அட லூசு! எப்படி மறந்து போனேன்? சாப்பிடாமல் பட்டினி இருந்து அவரை நம்ம வழிக்கு கொண்டு வரணும்னு நினைச்சதை எப்படி மறந்து போனேன்? இப்படி சொதப்பிட்டேனே! என் பக்கம் அவர் வராரோ இல்லையோ நான் அவர் பக்கம் நல்லாவே சாயுறேன்.’ என்று புலம்பி கொண்டே வீட்டு வேலைகளை பார்க்க ஆரம்பித்தாள்.

அவனுக்கு கொடுத்தனுப்ப வேண்டிய மதிய உணவு டப்பா அங்கே இருப்பதை கண்டவள், ‘அடடா! இதை யும் குடுத்து விட மறந்துட்டேனா? அப்போ எனக்கு மதிய சாப்பாடும் ரெடியா இருக்கா? அவர் மதியம் சாப்பிடுவாரா மாட்டாரா?’ என்று யோசித்தாள்.

‘ஒருவேளை பட்டினி இருக்கிறதா தானே சொல் லிட்டு போனார். அப்போ கேண்ட்டீனில் சாப்பிடுவாரா இருக்கும்.’ என்று தனக்குள்ளே கூறிக் கொண்டு தன் வேலைகளை தொடர்ந்தாள்.

அன்று இரவு வீடு திரும்பியவன் மிகவும் சோர்வோடு களைத்து போய் வந்தான். அவன் சோபாவில் சாய்ந்து தன் கண்களை மூடிக் கொண்டான்.

ஐந்து நிமிடங்கள் கடந்தும் அவன் தன் கண்களை திறக்கவில்லை என்றதும் அவள் அவனருகே சென்று நின்று அவனை மெதுவாய் கூப்பிட்டு பார்த்தாள்.

அவன் விழித்துப் பார்க்கவில்லை என்றதும் சத்தமாக அழைத்தாள்.

"ப்ச்! இப்போ உன் பிரச்சனை என்ன? எதுக்கு நொய் நொய்யுன்னு கூப்பிடுறே?"

"ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?"

"எப்படி இருக்கேன்?"

"சோர்வா இருக்கீங்க."

"நான் டயர்டா இருக்கேன்னு தெரியுது இல்ல. அப்புறம் எதுக்கு என்னை டிஸ்டர்ப் பண்ணுறே?"

"உடம்பு சரி இல்லையா? அதான் இவ்வளவு களைச்சு போய் இருக்கீங்களா?"

"நேத்து நைட் சாப்பிட்டது. அதுக்கு அப்புறம் ஒண்ணும் சாப்பிடலை. அப்போ ஒரு மனுஷன் எப்படி இருப்பான்?" என்று வள்ளென்று விழுந்தவன் எழுந்து தங்கள் அறைக்குள் சென்று மறைந்தான்.

"ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டிங்கிற கதையா இப்ப எதுக்கு என் மேல எரிஞ்சு விழறார்?" என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் பின்னே சென்றாள்.

"நீங்க காலையிலே அவசரமா போனீங்களா... அதான் நான் டிபன் பாக்ஸை குடுக்க மறந்துட்டேன்."

"அது வேண்டாம்னு தான் நான் விட்டுட்டு போனேன்."

"என் சாப்பாடு அவ்வளவு மோசமாவா இருக்கு? அப்படின்னா கேண்டீனில் போய் சாப்பிட வேண்டியது தானே? ஏன் சாப்பிடலை? இன்னைக்கு கேண்டீன் திறக்கலையா?"

லூசா நீ? என்பது போல் அவன் அவளை முறைத்து பார்த்தான்.

''என்னன்னு சொன்னால் தானே தெரியும். சும்மா எல்லாத்துக்கும் முறைச்சு பார்த்தால் நான் என்னன்னு நினைக்கிறது?''

''சாப்பிடாமல் பட்டினி கிடந்து காரியம் சாதிக்கலாம்னு நீ நினைச்ச இல்ல. அது இந்த விக்ரம்கிட்ட செல்லுபடி ஆகாதுன்னு காட்ட தான் நான் விரதம் இருக்கேன். போதுமா?'' என்று கத்தினான்.

இப்பொழுது அவள் 'லூசா நீ?' என்பது போல் அவனை பார்த்தாள்.

''நேத்து நைட் நான் பட்டினி இருந்தேன். இன்னைக்கு காலையில் நீங்க பட்டினி இருந்தீங்க. அதோட கணக்கு சரியாகிடுச்சு தானே. அப்புறம் எதுக்கு மதியமும் சாப்பிடாமல் இருந்தீங்க?''

''அப்போ நீ மதியம் சாப்பிட்டியா?''

''நீங்க இப்படி லூசுத்தனமா யோசிச்சு பட்டினி கிடப்பீங்கன்னு எனக்கு எப்படி தெரியும்? அதான் உங்களோட டிபன் பாக்ஸை நான் காலி பண்ணினேன்.''

''சந்தடி சாக்கில் என்னை லூசுன்னு சொல்லுறே.'' என்று கேட்டுக் கொண்டே அவள் காதை பிடித்து திருகினான்.

''அச்சோ மாமா! வலிக்குது. விடுங்க.'' என்றதும் அவளது காதை விட்டான்.

தன் காதை தேய்த்துக் கொண்டே, ''பின்னே என்ன மாமா சொல்லுறது? இப்படியா சின்ன பிள்ளை மாதிரி சாப்பிடாமல் இருப்பீங்க?'' என்று கேட்டாள்.

''நீ தான் சின்ன பிள்ளை மாதிரி அடம் பிடிக்க பார்த்தே.''

அவள் தன் கைகள் இரண்டையும் தலைக்கு மேல் தூக்கி கும்பிட்டு, ''என்னை ஆளை விடுங்க மாமா. இனி மேல் நான் காரியம் சாதிக்கணும்னு நினைச்சா உண்ணா விரதம் இருக்க மாட்டேன். போதுமா?'' என்று கேட்டாள்.

''யெஸ். அது தான் எனக்கு வேணும்.''

''சரி வாங்க.''

''எங்கே வரணும்? நான் டயர்டா இருக்கேன். என்னால இப்போ உன் கூட எங்கேயும் வர முடியாது.''

''உங்களை சாப்பிட தான் கூப்பிடுறேன். முகம் கழு விட்டு வாங்க. நான் டேபிள் மேல எல்லாத்தையும் எடுத்து வைக்கிறேன்.'' என்றவள் அறையை விட்டு வெளியேறினாள்.

அவன் உணவினை சாப்பிடும் வேகத்தை கண்டவள், 'இவருக்கு பட்டினி கிடந்து பழக்கம் இல்லை போல. பாவம். என்னால தான் இப்படி ஆகிடுச்சு. இன்னொரு தடவை இப்படி நடக்காமல் நான் பார்த்துக்கணும்.' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

## 16

அன்று இரவு அவனிடம் பேச நினைத்தவள் அவன் சோர்வாய் படுத்திருக்கவும், 'இன்று பேசுவதா? இல்லை

நாளை பேசுவதா?' என்று தனக்குள்ளே யோசித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன கேட்கணும்னு நினைக்கிறியோ அதை கேளு. சும்மா என் முகத்தை முகத்தை பார்க்காதே!''

''நான் உங்ககிட்ட பேசணும்னு நினைச்சது உங் களுக்கு எப்படி தெரிஞ்சது?''

''நான் படிக்கிற காலத்துல பொண்டாட்டி காட்டுற முக பாவனைகளுக்கு என்ன அர்த்தம்னு சொல்லிக் கொடுத்தாங்க.'' என்றதும் அவனை முறைத்தாள்.

''என்னை முறைக்கிறதை விட்டுட்டு நீ கேட்க நினைச்சதை கேளு.''

''உங்க முதல் சம்சாரம் உங்ககிட்ட காரியம் சாதிக் கணும்னா என்ன செய்வாங்க?''

அவன் நன்றாக நிமிர்ந்து அமர்ந்து ஒரு புன்னகை யுடன் அவளிடம் கூற ஆரம்பித்தான்.

"அவள் தழைய தழைய புடவை கட்டி, தலை நிறைய பூ வச்சு, என் பக்கத்துல நெருக்கமா வந்து என்னை கட்டிப் பிடிச்சு, என் கண்ணோடு கண் பார்த்து என்ன கேட்டாலும் நான் மறுக்காமல் சரின்னு சொல்லணும்னு எனக்கு ஆசை.''

''டில்லி பொண்ணுங்க கூட தலையிலே பூ வப்பாங் களா?''

''என்னை முழுசா எங்கே சொல்ல விட்டே? நம்ம ஊர்ல மட்டும் தான் தலைக்கு வைக்க சரம் சரமா பூ கிடைக்கும். டில்லில கிடைக்காது. அதனால அவள் பூ வைக்க மாட்டாள். ஆனால் எனக்கு அவள் அப்படி

இருக்கணும்னு ரொம்ப ஆசை. அப்படி அவள் வந்து கேட்கும்போது நான் எதையும் மறுத்து பேசக் கூடாதுன்னு நினைப்பேன்.''

''ஆனால் உனக்கு ஒரு விஷயம் தெரியுமா... நான் ஒரு விஷயத்தை மறுத்துட்டேன்னா.... அவள் உடனே சரின்னு கேட்டுக்குவாள். திரும்ப வாதாடி என்னை மாத்த முயற்சிக்கவே மாட்டாள். அதனால அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை.'' என்று கூறி விட்டு படுத்துக் கொண்டான்.

'அவள் காரியம் சாதிக்கலைன்னா என்ன நான் சாதிச் சுட்டு போறேன். அதுக்கான வழியை தான் சொல்லிட் டீங்களே மாமா' என்று தனக்குள் கூறிக் கொண்டு புன்னகைத்துக் கொண்டாள்.

மறுநாள் மாலை அவனுக்காக புடவை கட்டி தலை நிறைய பூவை வைத்துக் கொண்டு காத்திருந்தாள்.

அலுவலகத்தில் இருந்து வந்தவன் முகம் கழுவிக் கொண்டு வரும் வரை அமைதியாய் இருந்தவளால் அதற்கு மேல் பொறுக்க முடியாமல் அவன் முன்னே சென்று நின்றாள்.

''மாமா! என்னை பார்க்கும் போது என்ன தோணுது?''

''என்ன தோணனும்? ஒண்ணும் தோணலை.''

'ப்ச்! உங்க பொண்டாட்டின்னு கூடவா தோணலை.' என்று மனதிற்குள் சலித்துக் கொண்டாள்.

''அதில்லை மாமா நான் இன்னைக்கு எப்படி இருக்கேன்?''

''எப்பவும் போல தான் இருக்கே.''

''விளையாடாதீங்க. உண்மையை சொல்லுங்க.''

''நான் எதுக்கு உன் கூட விளையாடப் போறேன். நீ அதே கயல்விழி கணேசன் தானே? ஆள் மாறாட்டம் எதுவும் நடக்கலையே.''

''நான் கயல்விழி விக்ரம். அது கூட தெரியலை. நான் கேட்டதுக்கு நேரடியா பதில் சொல்லுங்க.''

''நீயும் நேரடியா கேளு. நான் இப்போ என்ன சொல்லணும்னு நீ எதிர்பார்க்கிறே?''

''நான் பார்க்க நல்லா இருக்கேனா? உங்களுக்கு பிடிச்சு இருக்கா?''

''அட என் மக்கு! உன்னை பிடிக்க போய் தானே உன் கழுத்துல தாலி கட்டி இருக்கேன்.''

''ஐயோ மாமா!'' என்றவள் தன் காலை உதைத்துக் கொண்டு சிணுங்கினாள்.

அவள் தன்னிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறாள் என்று அவனுக்கு மிக நன்றாகவே புரிந்தது.

இருப்பினும் அவள் என்ன தான் செய்கிறாள் என்று பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தபடியால் அவளை சீண்டிப் பார்க்கவே அவன் மனம் ஆசை கொண்டது.

''இன்னைக்கு நல்லா டிரஸ் பண்ணி இருக்கேனா? நான் அழகா இருக்கேனா?''

அவளை மேலிருந்து கீழ் வரை பார்வையிட்டவன், ''தழைய தழைய புடவை கட்டி, தலை நிறைய பூவை

வச்சு என்னை மயக்கிறே. போதுமா?'' என்றதும் அவளது முகம் மலர்ந்தது.

'முதல் ரெண்டும் ஒகே. அடுத்து என்ன சொன்னார்? பக்கத்துல நெருங்கி போய் கண்ணோடு கண் பார்த்து வேண்டியதை கேட்கணும்' என்று தனக்கு தானே மனதோடு கூறிக் கொண்டவள் அவன் அருகே நெருங்கி நின்றாள்.

அவளது செய்கையில் அவனுக்கு சிரிப்பு வந்தது. இருப்பினும் அதனை அடக்கி கொண்டு அவன் அவளை சாதாரணமாய் பார்த்துக் கொண்டு நின்றான்.

''நான் இப்போ நெருக்கமா தானே நிற்கிறேன்.'' என்று அவனிடமே சந்தேகம் கேட்டாள்.

''உங்க அப்பா இல்லைன்னா தம்பி பக்கத்துல இப்படி நீ நிற்ப தானே?''

'எதற்கு இப்படி கேட்கிறார்?' என்று குழம்பினாலும் அவனது கேள்விக்கான பதிலாய் ஆமோதிப்பாய் தலையாட்டினாள்.

''அப்படின்னா நான் சொன்ன நெருக்கம் இது இல்லை.'' என்று அவளை சீண்டினான்.

இதை விட எப்படி நெருங்க? என்று முதலில் விழித்தவள் அதன் பின் இன்னும் அவன் அருகே நெருங்கி நின்றாள்.

அவன் சிறிது அசைந்தாலும் தான் விழுந்து விடுவோம் என்று தோன்றவும் அவனது தோள்களை பற்றிக் கொண்டாள்.

அவளை அணைக்க அவன் கைகள் பரபரத்தாலும் அதை அடக்கி கொண்டு அவளை வேடிக்கை பார்த் தான்.

அடுத்தது அவரை கண்ணோடு கண் பார்க்கணும் என்று மனதினில் உருப்போட்டுக் கொண்டு அவனது கண்களை நோக்கினாள். அவன் அவளை தீர்க்கமாய் பார்த்தான்.

அவனது ஊடுருவும் பார்வையை அவளால் தாங்க முடியவில்லை. அவளுக்கு வெட்கமாக இருந்தது.

''என்னால பார்க்க முடியலை மாமா.'' என்று சிணுங்கினாள்.

''என்னாலயும் இதுக்கு மேல சும்மா இருக்க முடியாது'' என நினைத்தவன் அவளது இடுப்பில் கை போட்டு தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான்.

அவன் தன்னை அணைக்கவும் அவள் நிமிர்ந்து அவன் முகத்தை ஆவலோடும் ஆசையோடும் பார்த்தாள்.

அவன் குனிந்து அவளது இதழ்களை சிறை செய்து நீண்ட முத்தத்தை பதித்தான். அவனது தோள் மேல் வைத்திருந்த அவளது வலது கை அவனது பின்னந் தலை முடியை பற்றி இறுக்கவும் அவனது வேகம் கூடியது.

அவள் மூச்சு விட திணறவும் அவளது உதடுகளை விடுவித்தவன் அவளது கழுத்தில் முகம் பதித்து அவள் சூடி இருந்த மல்லிகையை வாசம் பிடித்தான்.

''என்கிட்ட என்ன காரியம் சாதிக்கணும் கயல்? உனக்கு என்ன வேணுமோ கேளு.'' என்று அவள் காதில் கிசுகிசுப்பாய் மொழிந்தான்.

அவனது செயலில் கிறங்கி நின்றவளிடம் இருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. அவளது நிலையை கண்டவன் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டு அவளை மேலும் தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான்.

அவர்களது மோன நிலையை கலைக்கவென்று அவனது அலைபேசி கிணுகிணுத்தது. அவன் அவளை விடுவித்துவிட்டு அதை எடுத்து பேசிக் கொண்டே நகர்ந்து சென்றான்.

'அடச்சே! நல்ல சான்ஸை மிஸ் பண்ணிட்டேனே! அவர் சொன்ன மாதிரி எனக்கு செய்ய வரலை. ஆனால் அவரே உனக்கு என்ன வேணும்னு கேட்டப்போ ஒண்ணும் சொல்லாமல் இப்படி கோட்டை விட்டுட்டேனே. இப்போ திரும்பவும் அவர் கண்ணை பார்த்து முதல்ல இருந்து ஆரம்பிக்கணுமா?' என்று அலுத்துக் கொண்டாள்.

'நீ ஆரம்பிக்க தெரியாமல் முழிச்சால் அவர் முடிச்சு வைக்க போறார். என்னமோ அவர் பண்ணது பிடிக்காத மாதிரி எதுக்கு இப்படி அலட்டிக்கிறே' என்று மனசாட்சி அவளை சீண்டியது.

அலைபேசியில் பேசி முடித்து விட்டு வந்தவன், ''இப்போ சொல்லு. உனக்கு என்ன வேணும்?'' என்று கேட்டதும் அவள் முகம் மலர்ந்தாள்.

''மாமா! நாம திருச்சிக்கு போவோமா?''

'அட லூசே! இதுக்கா இந்த பில் டப்' என்பது போல் அவளை பார்த்தவன் பதில் ஒன்றும் கூறவில்லை.

''என்ன மாமா ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறீங்க?''

''என்ன சொல்ல சொல்லுறே? திருச்சிக்கு போக வேண்டாம்னு நான் அன்னைக்கே சொன்னேன்ல.''

''நீங்க தானே இப்படி உங்க கண்ணை பார்த்து கேட்டால் எதுவா இருந்தாலும் ஓகே சொல்லுவேன்னு சொன்னீங்க. இப்ப எதுக்கு பேச்சு மாறுறீங்க?''

''மூணு நாள் என் இஷ்டத்துக்கு தூங்கி எழுந்து நான் விருப்பப்பட்டதை சாப்பிட்டு நிம்மதியா இருக்கலாம்னு பார்த்தேன். ஆனால் நீ விட மாட்டேங்கிறே. எதுவும் சொன்னால் புரியாது. பட்டால் தான் புரியும்.'' என்றவன் அங்கிருந்து நகர்ந்து செல்ல ஆரம்பித்தான்.

''ஒண்ணுமே சொல்லாமல் போறீங்க?'' என்று அவள் கேட்டதும் நின்று திரும்பினான்.

''அதான் சொல்லிட்டேனே பட்டு தெரிஞ்சுக்கோன்னு. உன் விருப்பப்படியே திருச்சிக்கு போகலாம்.'' என்றதும் அவள் முகம் மலர்ந்தாள்.

''அப்படியே நான் எங்க...'' என்று ஆரம்பித்தவள் சொல்லாமல் பாதியில் நிறுத்தினாள்.

''திருச்சியில் இருந்து உன்னை மதுரையிலே கொண்டு போய் விடுறேன். அங்கே கொஞ்ச நாள் இருந்துட்டு சென்னைக்கு வா. அதானே கேட்க வந்தே.''

''தாங்க்ஸ் மாமா.'' என்றவள் எம்பி அவனது கன்னத்தில் முத்தம் பதித்து விட்டு சென்றாள்.

# 17

வெள்ளியில் இருந்து தான் விடுமுறை தொடங்கு கிறது என்றாலும் இவர்கள் வியாழன் இரவே திருச்சி வந்து சேர்ந்தார்கள்.

''வாம்மா கயல்.''

''வாடா விக்ரம்.'' என்று சிவகாமி அவர்கள் இருவரையும் முகம் கொள்ளா புன்னகையோடு வரவேற்றார்.

நடராஜனும் தன் பங்கிற்கு இருவரையும் வரவேற்றார்.

மாமியாரும் மருமகளும் பேசிக் கொண்டே நகர்ந்து விட விக்ரமும் அவனது தந்தையும் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து பேச ஆரம்பித்தனர்.

பதினைந்து நிமிடங்கள் ஆனதும் நடராஜன் தன் மனைவியிடம், ''சிவகாமி! மிச்ச கதையை நாளைக்கு பேசிக்கோ. ரொம்ப தூரத்தில் இருந்து வந்திருக்காங்க. மணி பதினொண்ணு ஆகுது. அவங்க ரெண்டு பேரும் தூங்கி ரெஸ்ட் எடுக்கட்டும்.'' என்றார்.

அவர்கள் இருவரும் விக்ரம் அந்த வீட்டுக்கு வந்தால் உபயோகப்படுத்தும் தனி அறைக்குள் வந்தனர்.

அந்த அறை மிக சிறியதாய் இருந்தது. நீள வாக்கில் இருந்தது. ஆனால் அகலம் சிறியதாய் இருந்தது.

அகலவாக்கில் ஒரே ஒரு கட்டில் மட்டுமே போட முடியும்.

பெட்டியை வைப்பதற்கு அலமாரியும் அங்கே இல்லை. துணிகளை அடுக்கி வைக்க பீரோவும் இல்லை.

''நம்மளோட சூட் கேஸை கட்டிலுக்கு கீழே வை. நான் எப்பவும் அங்கே தான் வச்சுக்குவேன்.'' என்றதும் அவள் அப்படியே செய்தாள்.

''அத்தை முகத்துல நம்மளை பார்த்ததும் எவ்வளவு சந்தோஷம் பார்த்தீங்களா? நீங்க தான் இங்கே வரதுக்கு அவ்வளவு பிகு பண்ணீங்க.'' என்று அவள் நொடித்துக் கொண்டாள்.

'உங்க அத்தைகிட்ட ஒப்பனிங் எல்லாம் நல்லா தான் இருக்கும். ஆனா பினிஷிங் சரி இருக்காது. இதை நான் சொன்னால் நீ நம்ப மாட்டே. நீயே பட்டு தெரிஞ்சுக்கோ' என நினைத்தவன் ஒன்றும் சொல்லாமல் அமைதி காத்தான்.

''இந்த ரூம்ல பாத்ரூம் கிடையாது. வெளியே ஹாலில் இருக்கும் பாத் ரூமை யூஸ் பண்ணிக்கோ.''

''அது ஒண்ணும் பிரச்சனை இல்லைங்க. இந்த ரூம் அவ்வளவு வசதியா இருக்காதுன்னு நினைச்சா நம்ம கல்யாணம் முடிஞ்சதும் இங்கே தங்காமல் சென்னைக்கு அவசரமா ஓடினீங்க?''

''என்னமோ நான் மட்டும் போன மாதிரி பேசுறே.''

''என்னையும் தான் இழுத்துட்டு போனீங்க.''

''இழுத்துட்டு போனேனா? சொல்லுறதை சரியா சொல்லு கயல். தாலி கட்டி கூட்டிட்டு போனேன்.''

"அந்த பேச்சை விடுங்க. ஒரு மூணு நாள் இங்கே நாம அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியாதா என்ன?"

"தாராளமா அட்ஜஸ்ட் பண்ணிடலாம். பேசின வரைக்கும் போதும். வந்து படுத்து தூங்கு."

அவள் புடவையில் இருந்து இரவு உடைக்கு கூட மாறாது அப்படியே படுக்க வந்தாள்.

"ஏன் கயல் நைட்டி போடலை? என் முன்னாடி டிரஸ் மாத்த ஒரு மாதிரியா இருக்கா? நான் வேணா வெளியே போகட்டுமா? நீ டிரஸ் மாத்தினதும் உள்ளே வரேன்."

"இல்லைங்க வேணாம். மாமா அத்தை முன்னாடி நைட்டி போட வேண்டாம்னு பார்க்கிறேன்."

"ஓகே அப்போ வந்து படு. நம்ம வீட்டு கட்டில் அளவுக்கு பெருசு கிடையாது. கொஞ்சம் சின்னது தான்."

"மூணு நாள் தானே." என்று சொல்லியவள் அவன் அருகே வந்து படுத்தாள்.

கொஞ்சம் சின்னது இல்லை. ரொம்பவே சின்னது என்று இருவருமே எண்ணிக் கொண்டார்கள்.

திரும்பி படுக்கக் கூட வழி இல்லாமல் இருந்தது. கட்டில் மின் விசிறியின் கீழ் போடப்பட்டு இருந்தது. அதனால் அறையின் நடுவே இருந்தது. திரும்பி படுத்தால் கீழே விழும் அபாயம் இருவருக்குமே இருந்தது.

"மாமா! சுவரோரமா கட்டிலை நகர்த்திடுவோமா? நான் சுவரோரமா ஒட்டி படுத்துப்பேன். உங்களுக்கும் படுக்க கொஞ்சம் இடம் கிடைக்கும்."

"ஓரமா தள்ளிப் போட்டால் சுத்தமா காத்து வராது கயல்."

''கட்டிலை ஓரமா போட்டுட்டு நாம தரையிலே படுத்துக்குவோம்.'' என்றதும் அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

''நீங்க தரையிலே தூங்க மாட்டீங்களா? தூங்கி பழக்கம் இல்லையா?''

''எங்க வீட்டுல பாய் இருக்காது. டைல்ஸ் பதிச்ச தரையிலே படுத்தால் உடம்புக்கு ஒத்துக்காது. அதான் யோசிக்கிறேன்.''

''நாம இன்னைக்கு நைட் பக்கத்து ரூமிலே போய் படுத்துக்குவோமா?''

''அது எங்க அண்ணன் இங்கு வரும் போது யூஸ் பண்ணுற ரூம் கயல். இது வரைக்கும் நான் அந்த ரூமிலே கால் வச்சதில்லை. நீயும் வைக்காமல் இருந்தால் நான் சந்தோஷப்படுவேன்.''

''சரிங்க மாமா. நான் போக மாட்டேன். இப்ப என்ன செய்யலாம்?''

''நீ இங்கே தூங்கு கயல். நான் ஹாலில் உள்ள சோபாவில் போய் படுத்துக்கிறேன்.'' என்றவன் ஒரு தலையணையை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

அவள் எழுந்து அவன் பின்னோடு சென்று கதவு நிலையில் சாய்ந்து கொண்டு நின்றாள்.

அவன் சோபாவில் படுத்துக் கொண்டு கால் நீட்டினான். அவனது கால்கள் சோபாவையும் தாண்டி நீண்டிருந்தன.

'இது மட்டும் வசதியாவா இருக்கு? எப்படி தூங்குவார்? வீட்டிலே இருந்தால் நிம்மதியா தூங்கி இருப்

பாரோ?' என்று அவளால் எண்ணாமல் இருக்க முடிய வில்லை.

கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள். புது இடம் என்பதால் அவளுக்கு தூக்கம் வரவில்லை.

அது மட்டுமன்றி திருமணமான நாள் தொடங்கி கணவன் அருகேயே படுத்து பழகியவளுக்கு அவன் இல்லாமல் தூக்கம் வர மறுத்தது.

எதை எதையோ நினைத்து கொண்டிருந்தவள் வெகு நேரத்திற்கு பின்பு தூங்கிப் போனாள்.

காலையில் வழக்கம் போல் முதல் ஆளாய் நடராஜன் எழுந்து வந்தார். சோபாவில் தூங்கும் மகனை கண்டு குழம்பினார். அவனை நோக்கி செல்ல ஆரம்பித்தார்.

''என்னப்பா அதுக்குள்ளே எழுந்துட்டீங்க?''

''முழிச்சு தான் இருக்கியா விக்ரம்?''

''அப்பவே முழிப்பு வந்துடுச்சு. தூக்கம் வரலை.'' என்று கூறிக் கொண்டே எழுந்து அமர்ந்தான்.

மகன் அருகே அமர்ந்து கொண்ட நடராஜன், ''இங்கே ஏன்பா வந்து படுத்தே?'' என்று கேட்டார்.

''உள்ளே இருக்கிற கட்டில் சிங்கிள் காட். இத்தனை நாளும் நான் மட்டும் தூங்கினதால பிரச்சனை இல்லை. இப்போ நாங்க ரெண்டு பேரா... அங்கே படுத்தால் ரெண்டு பேரும் கீழே விழுந்துடுவோமோன்னு நினைச்சு தான் இங்கே வந்து படுத்துட்டேன்.''

''சாரி விக்ரம். அப்பா அதை கவனிக்காமல் விட்டுட் டேன்.'' என்று அவர் குற்ற உணர்வில் தத்தளித்தார்.

“விடுங்கப்பா. பார்த்துக்கலாம்.”

“ஜன்னலோரமா போட்டு பார்த்தியா?”

“காத்து வராதுன்னு போடலைப்பா. கயல் இருப்பதால ஜன்னலையும் திறந்து போட்டுட்டு தூங்க முடியாதுல.”

“இன்னைக்கு கடை திறந்த உடனே புது கட்டிலும் மெத்தையும் வாங்கிடலாம் விக்ரம்.”

“எதுக்குப்பா வேஸ்ட்டா அவ்வளவு செலவு செய்யணும்? ரெண்டு பாய் மட்டும் வாங்கலாம்னு பார்க்கிறேன். பாய் இருந்தால் தரையிலே படுத்துக்குவோம். ஒண்ணும் பிரச்சனை இல்லைப்பா.”

பெரிய மகனது அறையில் குளிர்சாதன வசதி மற்றும் குளியலறை வசதி உள்ளது.

அது இரண்டும் சின்ன மகனின் அறையில் இல்லை என்றாலும் படுக்கும் வசதியாவது இருக்க வேண்டாமா? இதை எப்படி கவனிக்காமல் விட்டோம்? என்று நடராஜன் ரொம்பவே வருந்தினார்.

தந்தையின் முகம் தெளியாததை கண்ட விக்ரம் அவரது கையை தட்டி கொடுத்து, “நான் பார்த்துக்கிறேன்பா. நீங்க ஃபீல் பண்ணாதீங்க.” என்று சொல்லி விட்டு தன் அறை நோக்கி சென்றான்.

கயல்விழி அசந்து தூங்கி கொண்டிருந்தாள். அவளை எழுப்பாது தாங்கள் கொண்டு வந்த பெட்டியில் இருந்து பிரஷ் மற்றும் துண்டை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

ஆறரை மணிக்கு கயல்விழிக்கு விழிப்பு வந்தது. அவள் அரக்க பரக்க எழுந்து வெளியே வந்தாள்.

"நீங்க எழுந்துட்டீங்களா? என்னை எழுப்பி இருக்கலாமில்லை." என்று விக்ரமை பார்த்து கேட்டாள்.

"நீ இப்போ எழுந்து வரலைன்னா நானே எழுப்பி இருப்பேன். அம்மா வாசலில் கோலம் போடுறாங்க. நீ வேகமா போய் பிரஷ் பண்ணு." என்றதும் குளியலறைக்குள் சென்று மறைந்தாள்.

வெளியே வந்தவள் சமையலறைக்கு சென்று தேநீர் தயாரிக்க ஆரம்பித்தாள்.

அவள் தன் மாமனாருக்கும் கணவனுக்கும் தேநீர் கொடுத்து கொண்டிருக்கும் பொழுது சிவகாமி அங்கே வந்தார்.

"கயல்! நீ போய் குளிச்சுட்டு வாம்மா. நான் சமையலை தொடங்குறேன்." என்ற சிவகாமி சொன்னதும்,

"சரிங்கத்தை. இதோ போய் குளிக்கிறேன்." என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

"ஓசூரில் இருந்து செல்வம் எப்போ வருவான்?" என்று விக்ரம் கேட்டான்.

"அவன் ஒரு கல்யாணத்துக்காக நேத்தே மதுரைக்கு வந்துட்டான். இன்னும் கொஞ்ச நேரத்துல இங்கே வந்துடுவான்." என்று நடராஜன் கூறினார்.

மாமியாரும் மருமகளும் சேர்ந்து காலை உணவை தயாரித்து அதை அனைவருக்கும் பரிமாறினர்.

சாப்பிட்டு முடித்து வெளியே சென்ற விக்ரம் தங்கள் தெரு முனையிலே பாய் விற்பதை பார்த்தவன் இரு பாய்களை வாங்கி கொண்டு வந்து தங்கள் அறையில் போட்டான்.

ஃபேன் காத்து எவ்வளவு தூரம் வரும்னு தெரியலை. பேசாமல் ஒரு டேபிள் ஃபேனை வாங்கிடுவோம். அப்போ தான் இன்னைக்காவது நிம்மதியா தூங்க முடியும் என நினைத்துக் கொண்டான்.

அவன் திரும்பவும் வெளியே சென்று ஒரு சின்ன மேஜை மின்விசிறியை வாங்கி கொண்டு வீட்டிற்கு வந்தான்.

அதைக் கண்ட சிவகாமி தன் சின்ன மகனிடம் கேள்வி எழுப்பினார்.

"இப்போ எதுக்கு விக்ரம் டேபிள் பேன்?"

"அந்த ரூமிலே காத்து சரியா வரலைம்மா. அதான்."

"இருக்கப் போறது ரெண்டு நாள். உன்னால அட்ஜஸ்ட் பண்ண முடியாதா?"

மகன் அதற்கு பதில் அளிக்கும் முன் அங்கே நின்று கொண்டிருந்த நடராஜன் தன் மனைவிக்கு பதில் அளித்தார்.

"சிவகாமி! ரெண்டு நாள் நாம ரெண்டு பேரும் அவன் ரூமிலே தூங்குவோம். விக்ரமும் மருமகளும் நம்ம ரூமிலே தூங்கட்டும்."

"நாம ஏன் அவன் ரூமிலே தூங்கணும்?"

"ரெண்டு நாளைக்கு நீ அட்ஜஸ்ட் பண்ணு சிவகாமி."

"உங்களுக்கு நான் குடுத்த வேலையை செய்யாமல் இப்போ எதுக்கு வெட்டி கதை பேசுறீங்க?"

"என்ன வேலை குடுத்தே?"

"செல்வம் ரூமிலே ஏசி வேலை செய்யலலை. மெக்கானிக்கை கூட்டிட்டு வந்து பார்க்க சொன்னேன்ல."

"நேத்து நீ கோவிலுக்கு போய் இருக்கும் போதே மெக்கானிக் வந்து சரி பண்ணிட்டு போயிட்டான்."

"அதெல்லாம் சொல்ல மாட்டீங்களா?"

"செல்வம் ரூமிலே ஏசி. விக்ரம் ரூமிற்கு டேபிள் பேன் கூட இருக்கக் கூடாதா சிவகாமி?"

"நான் செல்வத்துக்காகவா ஏசியை சரி பண்ண சொன்னேன். நம்ம பல்லவி ஏசி இல்லைன்னா தூங்க மாட்டாள். அவளுக்காக தானே சொன்னேன்."

"நீ செய்யுறது எல்லாம் உனக்கு சரின்னு பட்டால்... இதுக்கு மேல நான் சொல்லுறதுக்கு ஒண்ணும் இல்லை." என்று முணுமுணுத்து கொண்டே நடராஜன் அமைதியானார்.

நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கயல்விழிக்கு தன் மாமியார் தன் கணவனிடம் பாரபட்சமாக நடந்து கொள்வதாக பட்டது.

"பெரிய மகனுக்கு பெரிய ரூம். எங்களுக்கு மட்டும் சின்ன ரூம். ஏன் அப்படின்னு நாங்க சண்டை போட்டோமா? இல்லை ஏசி வேணும்னு கேட்டோமா?"

'ஒரு சின்ன ஃபேன்... அதை கூட இவங்ககிட்ட கேட்கலை. அவரா வாங்கிட்டு வந்திருக்கார். அதுக்கு ஏன் கோவிச்சுக்கிறாங்க? இவரும் தான் ஏன் வாயை மூடிக்கிட்டு பேசாமல் போனார்?' என்று வருத்தமடைந்தாள்.

செல்வம் குடும்பத்தின் வருகை அவளை அதற்கு மேல் யோசிக்க விடாமல் செய்தது.

# 18

கயல்விழி முகம் கொள்ளா புன்னகையோடு வாசலுக்கே சென்று அவர்கள் மூவரையும் வரவேற்றாள்.

செல்வம் அவளை பார்த்து புன்னகைத்து விட்டு நகர்ந்து வீட்டிற்குள் சென்றான்.

கயல்விழி சந்திரலேகாவிடம், ''எப்படிக்கா இருக்கீங்க?'' என்று விசாரித்தாள்.

''ஏதோ இருக்கேன்.'' என்று சந்திரலேகா வேண்டா வெறுப்பாய் பதில் சொன்னாள்.

''நீ எல்லாம் ஒரு ஆள். உனக்கு நான் பதில் சொல்ல வேண்டுமா?'' என்பதே சந்திரலேகாவின் எண்ணம்.

ஆனால் அதை புரிந்து கொள்ளாது கயல்விழி அவளிடம் வெள்ளை மனதோடு பேசி பழக விரும்பினாள்.

''பல்லவி குட்டி எப்படி இருக்க?'' என்று பாசத்தோடு அவளை விசாரிக்க,

அவள் தன் தாயின் பின்னே சென்று ஒளிந்து கொண்டாள். அவர்கள் பின்னோடு கயல்விழியும் வீட்டிற்குள் நுழைந்தாள்.

அப்பொழுது அறையில் இருந்து வெளியே வந்த விக்ரம், எப்படி இருக்க செல்வம்? என்று தன் அண்ணனிடம் விசாரித்தான்.

அதற்கு ஒரு தலையாட்டலே பதிலாக கிடைத்தது.

அதற்கு மேல் விக்ரமும் அவனிடம் எதையும் கேட்கவோ சொல்லவோ முயலாமல் வீட்டை விட்டு வெளியேறி செல்ல ஆரம்பித்தான்.

விக்ரம் சந்திரலேகாவின் புறமும் திரும்பவில்லை. பல்லவியிடமும் பேசவில்லை. கயல்விழிக்கு தான் ஆச்சரியம் தாங்கவில்லை.

என்னங்கடா நடக்குது இங்கே? இவங்க ரெண்டு பேரும் கூட பிறந்த அண்ணன் தம்பி தானே? நான் என் பக்கத்து வீட்டுக்காரனை பார்த்தால் கூட இதை விட நல்லா விசாரிப்பேன். என்று கயல் தன் மனதில் நக்கல் செய்து கொண்டாள்.

இவங்க ரெண்டு பேரும் ஏன் இப்படி இருக்காங்க? இவங்க ரெண்டு பேரும் எப்பவுமே இப்படி தான் பேசு வாங்களா? இல்லைன்னா இப்போ எதுவும் சண்டையா? என்று கயல்விழி குழம்பினாள்.

தாயின் முந்தானையில் ஒளிந்து கொண்டிருக்கும் பல்லவியை இழுத்து தன் முன் நிறுத்தி கயல் அவளிடம் பேச முயன்றாள்.

''பல்லவி குட்டி! என்னை மறந்துட்டீங்களா? நான் உன்னோட சித்தி. அன்னைக்கு கல்யாணத்துல என்னை பார்த்தீங்களே!'' என்று நினைவூட்ட முயன்றாள்.

அவள் அமைதியாய் பதில் ஒன்றும் சொல்லாமல் கயலை முறைத்து கொண்டு நின்றாள்.

''சித்திகிட்ட பேச மாட்டீங்களா?'' என்று பாவமாய் கயல் கேட்டாள்.

‘‘நீ, சித்தப்பா எல்லாம் பேட். நான் உங்க கூட எல்லாம் பேச மாட்டேன்.’’ என்று முகத்தில் அடித்தார் போல் சொல்லிவிட்டு அவள் தன் தாயிடம் சென்று ஒன்றிக் கொண்டாள்.

நீயும் சித்தப்பாவும் கெட்டவர்கள் என்று நான்கு வயது குழந்தை சொல்வதை கேட்டு அதிர்ந்து போய் கயல் சந்திரலேகாவை ஏறிட்டாள்.

அவளோ குழந்தையை சிறிதும் கண்டிக்காமல் அவள் சரியாக தான் சொல்கிறாள் என்பது போல் நின்று கொண்டிருந்தாள்.

நடராஜன் தன் பேத்தியிடம், ‘‘பெரியவர்களை அப்படி எல்லாம் சொல்ல கூடாது பல்லவி. உனக்கு யார் இப்படி எல்லாம் சொல்லி தந்தாங்க? தப்பு. இப்படி எல்லாம் பேசக் கூடாது. சித்தி கிட்ட சாரி சொல்லு.’’ என்றார்.

‘‘நான் சொல்ல மாட்டேன்.’’ என்று பல்லவி அழுத்த மாக மொழிந்தாள்.

‘‘தப்பு செஞ்சால் மன்னிப்பு கேட்கணும். சாரி சொல்லு.’’ என்று நடராஜன் வற்புறுத்தவும்,

‘‘அவள் சின்ன குழந்தை தானே? அவளை எதுக்கு கம்பெல் பண்ணுறீங்க.’’ என்று லேகா இடைபுகுந் தாள்.

பல்லவி தன்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கயல் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அவள் செய்த செயல் தப்பு. அதை திருத்த தன் மாமனார் முயல்கிறார் என்பதாலையே அவள் அமைதி காத்தாள்.

ஆனால் அதை திருத்த வேண்டிய லேகாவோ இப்படி சொல்லவும் கயல்விழிக்கு சற்று அதிர்ச்சியாக தான் இருந்தது.

அப்பொழுது வெளியே கடைக்கு சென்றுவிட்டு அங்கே வந்த சிவகாமி, ''பல்லவி குட்டி! எப்படா வந் தீங்க? நல்லா இருக்கீங்களா?'' என்று கேட்டு அவள் கன்னத்தை கிள்ளி கொஞ்சினார்.

அங்கே நின்று கொண்டிருந்த மருமகள் மற்றும் மகனது நலனையும் விசாரித்தார்.

''ஏன்டா குட்டி உம்முன்னு இருக்கீங்க?'' என்று சிவகாமி பல்லவியிடம் கேட்டார்.

''தாத்தா தான் என்னை திட்டினார்.''

''சின்ன பிள்ளைகிட்ட எப்படி பேசணும்னு உங்களுக்கு தெரியாது? இத்தனை மாசம் கழிச்சு வந்திருக்காள். ஆசையா கொஞ்சலைன்னாலும் பரவாயில்லை. இப்படி தான் திட்டுவீங்களா?'' என்று நடராஜனிடம் கேள்வி கேட்ட சிவகாமி,

தன் பேத்தியின் புறம் திரும்பி, ''தாத்தா கிடக்கார். அவர் எப்பவும் அப்படி தான். நீ அவரை கண்டுக்காதே.'' என்று சொல்லி பேத்தியை அழைத்து சென்று சோபா வில் அமர வைத்து கதை பேச ஆரம்பித்தார்.

என்ன பிரச்சனை? என்ன நடந்தது? என்று எந்த கேள் வியும் கேட்காமல் அவராகவே தீர்ப்பு சொல்லிவிட்டு சென்ற தன் மாமியாரை கண்டு கயல் மேலும் குழம்பினாள்.

இந்த வீட்டுல எல்லோரும் ஒரு மாதிரியா இருப் பாங்களோ?

சின்ன குழந்தை தன் வயசுக்கு மீறின பேச்சை பேசுது. வயசான என் மாமியாரோ, அவங்க வயசுக்கு தகுந்த பக்குவம் இல்லாமல் பேசுறாங்க.

சின்ன குழந்தைகிட்ட போய் தாத்தா அப்படி தான்னு சொல்லி குடுக்குறாங்களே... நாளைக்கு அந்த குழந்தை தாத்தாவை எப்படி மதிக்கும்? இதெல்லாம் யோசிக்க மாட்டாங்களா? என்று அதிசயித்தாள்.

அவள் விழிப்பதை கண்ட நடராஜன், மருமகளே! இது தான் ஆரம்பம். போகப் போக இவங்க வண்டவாளத்தை நீ புரிஞ்சுக்குவே. என்று தன் மனதினில் எண்ணிக் கொண்டார்.

சந்திரலேகாவும் செல்வமும் தங்களின் அறைக்குள் சென்று அடைந்து கொண்டார்கள்.

சிவகாமி தன் பேத்தியுடன் ஐக்கியமானார். நடராஜனோ அன்றைய நாளிதழை கையில் எடுத்துக் கொண்டு அதில் மூழ்கி போனார்.

நான் என்ன செய்ய? யார்கிட்ட பேச? இவர் இருந்தாலாச்சும் இவர்கிட்ட பேசிக்கிட்டு இருக்கலாம். இவர் எங்கே போனார்? என்று குழம்பிய கயல்விழி தங்கள் அறை நோக்கி செல்ல ஆரம்பித்தாள்.

‘‘அம்மாடி கயல்! சிக்கன் வாங்கிட்டு வந்திருக்கேன். அதை குழம்பு வைக்கணும். அதை முதல்ல கழுவி வை.’’ என்று சிவகாமி சொல்லவும், சரியென தலையாட்டி விட்டு சமையலறைக்கு சென்றாள்.

அப்பொழுது நடராஜனிற்கு போன் வந்தது. எடுத்து பேசி விவரம் அறிந்து கொண்டவர் தன் மனைவியிடம் அந்த விவரத்தை பகிர்ந்தார்.

சிவகாமி செல்வத்தின் அறை கதவை தட்டி சந்திர லேகாவை வெளியே வர வைத்தார்.

''லேகா! நம்மளோட சொந்தத்தில் ஒருத்தர் நேத்து நைட்டே இறந்துட்டாங்களாம். நானும் மாமாவும் அந்த துஷ்டிக்கு போறோம். நீயும் கயலும் சேர்ந்து சமையலை பார்த்துக்கோங்க.''

''என்ன அத்தை சமைக்கணும்?''

''சிக்கன் வாங்கிட்டு வந்து வச்சிருக்கேன். அதை எப்படி செய்யணுமோ செஞ்சுடுங்க. எங்க ரெண்டு பேருக்கும் சாப்பாடு வைக்க வேண்டாம். நாங்க வரதுக்கு நைட் ஆகிடும். நைட் சாப்பாடு மட்டும் எங்களுக்கும் சேர்த்து செஞ்சுடுங்க.''

கயலின் புறம் திரும்பியவர், ''நான் சொன்னதெல்லாம் கேட்டுச்சு தானே கயல்?'' என்று கேட்டார்.

அவள் ஆமாம் என்று தலையாட்டியதும், ''வீட்டை பார்த்துக்கோங்க.'' என்று சொல்லிவிட்டு தன் கணவருடன் சென்று விட்டார்.

அவர் சென்ற இரண்டாவது நிமிடத்திலேயே லேகா கயல்விழியிடம் வந்து, ''அத்தை சொன்ன மாதிரி சமைச்சு வச்சுடு. எனக்கு கொஞ்சம் வெளியே வேலை இருக்கு. நான் போயிட்டு வரேன். சாப்பிட வந்துடுவேன்.'' என்றாள்.

''அம்மா நானும் வருவேன்.'' என்று பல்லவி கூறவும்,

''வெயிலில் நீ எதுக்குடா குட்டி அலையணும்? நீ வீட்டிலே விளையாடு. டிவி பாரு. அம்மா வரும் போது

உனக்கு சாக்லேட்ஸ் வாங்கி தரேன்.'' என்று சந்திர லேகா ஆசை காட் டினாள்.

''ஓகேம்மா. நிறைய வாங்கிட்டு வரணும்.'' என்று ஒத்துக் கொண்டு தொலைக்காட்சியின் முன் சென்று பல்லவி அமர்ந்து கொண்டாள்.

''பல்லவியை ஒரு பார்வை பார்த்துக்கோ.'' என்று கயல்விழியிடம் கட்டளை பிறப்பித்து விட்டு தன் கண வனுடன் லேகா வெளியேறினாள்.

கதவை அடைத்துவிட்டு வந்த கயல்விழி சமைய லறைக்கு சென்று கோழியை சுத்தம் செய்யலாம் என நினைத்து அந்த கவரை பிரித்துப் பார்த்தாள்.

''அடி அம்மாடி! இதென்ன இவ்வளவு வாங்கி இருக் காங்க? இது ஒரு குடும்பத்துக்கா இல்லை ஒரு ஊருக்கா? இவ்வளவையும் குழம்பு வச்சால் எப்படி செலவு பண்ணு வாங்க? முதல்ல அவ்வளவு பெரிய பாத்திரம் இருக்கா?'' என்று புலம்பிக் கொண்டே அந்த சமையல் அறையை நோட்டம் விட்டாள்.

அந்த ஆராய்ச்சியை முடித்து கோழியை சுத்தம் செய்து அதை வறுவலுக்கு குழம்பிற்கு என்று இரண் டாக பிரித்து வைத்தாள்.

சமைக்கும் இடம் புதிது என்பதால் ஒவ்வொன்றையும் தேடி எடுத்து சமைப்பதற்குள் அவள் ஒரு வழி ஆகி விட்டாள்.

இதில் இடையிடையே பல்லவி வேறு படுத்தி வைத்தாள். ஒன்று தண்ணீரை கொட்டி வைத்து வீட்டை துடைக்க வைத்தாள். இல்லை என்றால் எதையாவது கொட்டி அதை அள்ளும்படி செய்தாள்.

வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கவும், அச்சோ! யார் வந்து இருக்காங்கன்னு தெரியலையே. எனக்கு யாரை யும் தெரியாதே! என்று புலம்பி கொண்டே சமையல் அறையில் இருந்து வாசல் கதவை நோக்கி சென்றாள்.

கதவை திறந்தாள். வெளியே சென்றிருந்த விக்ரம் தான் வீட்டிற்கு வந்திருந்தான்.

''நீங்க தானா?'' என்று ஆசுவாசப்பட்டுக் கொண்டே கிரில் கேட்டை திறந்து விட்டாள்.

உள்ளே வந்தவன் அங்கே தென்பட்ட நிசப்தத்தை கண்டு, ''என்ன வீடே அமைதியா இருக்கு?'' என்று அவளிடம் விசாரித்தான்.

அவர்கள் ஒவ்வொருவரும் எங்கே சென்றார்கள் என்பதை அவள் விளக்கினாள்.

''வீட்டுல யாரும் இல்லைன்னால் எனக்கு ஒரு போன் பண்ண வேண்டியது தானே?''

''நீங்க என்ன வேலையா வெளியே போனீங் களோன்னு தான் நான் உங்களுக்கு போன் பண்ணலை.''

''என்ன பெரிய வேலை. இங்கே இவங்க போடுற சீனை பார்க்க வேண்டாம்னு தான் வெளியே போனேன்.''

அப்பொழுது அவர்கள் வீட்டில் வேலை செய்யும் பேச்சி அம்மாள் அங்கே வந்தார்.

''என்ன தம்பி நல்லா இருக்கீங்களா? நான் உங்க பின்னாடியே தான் வந்தேன். நீங்க விரசா எட்டு வச்சு வந்துட்டீங்க.''

''அப்படியா? நான் உங்களை கவனிக்கலை. நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க? உங்க

பிரஷர் இப்போ எப்படி இருக்கு? பிரஷர் மாத்திரை எல்லாம் சரியா சாப்பிடுறீங்களா?'' என்று அன்போடு விசாரித்தான்.

அண்ணனை கூட இவ்வளவு பாசமா இவர் விசாரிக்கலையே! என்று கயல்விழி நினைத்துக் கொண்டாள்.

''அதெல்லாம் சரியா சாப்பிடுறேன் தம்பி.''

''உங்க பையன் எப்படி படிக்கிறான்?''

''நல்லா படிக்கிறான் தம்பி. அம்மா எங்கே தம்பி?''

அவன் அவரிடம் விபரம் கூறியவுடன், ''நான் எப்பவும் விரசா வேலைக்கு வந்துடுவேன். இன்னைக்குன்னு நானும் இவ்வளவு நேரஞ்சென்னு வந்திருக்கேன்.'' என்று புலம்பி கொண்டார்.

''தாயி! நீ நல்லா இருக்கியா?'' என்று கயலை விசாரித்தவர் துடைப்பத்தை எடுத்து கொண்டு வீட்டை பெருக்க ஆரம்பித்தார்.

## 19

**சா**தம், இரு வகையான கோழி வகைகள், ரசம் மட்டுமே அவளால் செய்ய முடிந்தது.

இது போதுமா? இல்லை இதுக்கு மேல எதுவும் செய்யணுமான்னு தெரியலையே. ஆனா அத்தை இதை தானே செய்ய சொன்னாங்க என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

அப்பொழுது வெளியே சென்றிருந்த சந்திரலேகாவும் செல்வமும் வீட்டிற்கு வந்தனர்.

உள்ளே வந்தவர்கள் மகளை கூட கண்டு கொள்ளாது நேராக உணவு மேஜையில் சென்று அமர்ந்து கொண்டனர்.

''என்ன கயல்விழி சமைச்சுட்டியா? பயங்கரமா பசிக்குது.'' என்று சந்திரலேகா கேட்கவும்,

''சமையல் முடிச்சுட்டேன்கா.'' என்று பதில் சொன்ன கயல் உணவு வகைகளை மேஜையில் கொண்டு வந்து வைக்க ஆரம்பித்தாள்.

என்னமோ இந்த அம்மா மகாராணி மாதிரி கேள்வி கேட்கிறாங்க. இந்த மக்கு கயலும் அடிமை மாதிரி பதில் சொல்லுறாள். இவள் எல்லாம் சொல்லி திருந்துற கேஸ் இல்லை. பட்டு தான் திருந்தணும் என்று விக்ரம் எண்ணிக் கொண்டான்.

''பல்லவி சாப்பிட்டாளா?''

''இன்னும் இல்லைக்கா.''

''என்னது அவள் சாப்பிடலையா?! அவளுக்கு சாப்பாடு கொடுக்காமல் நீ என்ன வேலையை வெட்டி முறிச்சே?''

''அவள் தான் என்கிட்ட ஒட்ட மாட்டேங்கிறாளே!'' என்று கயல்விழி பதில் கொடுத்தாள் என்றால்,

''பெத்த பொண்ணுக்கு நேரத்துக்கு சாப்பாடு ஊட்டாமல் நீங்க என்ன வேலையை செய்ய போனீங்க?'' என்று கேட்டுக் கொண்டே விக்ரம் அங்கே ஆஜரானான்.

''இப்போ எதுக்கு உங்க தம்பி என்கிட்ட சண்டைக்கு வரார்?'' என்று லேகா செல்வத்திடம் கத்தினாள்.

''அவங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருக்கும் போது நீ எதுக்குடா குறுக்கே பேசுறே?'' என்று செல்வம் தன் தம்பியிடம் கேட்டான்.

''பேசிக்கிட்டு இருக்காங்களா? யாரு? வீட்டுல அம்மாவும் இல்லை. நீங்க ரெண்டு பேரும் வெளியே போயிட்டீங்க. அப்படின்னா சமையல் வேலை மொத்தத்தையும் கயல் தானே செஞ்சிருக்காள். அது அவங்களுக்கு தெரியாதா? வீட்டுல என்ன வேலை வெட்டி முறிச்சேன்னு எதுக்கு கேட்கிறாங்க?'' என்றதும் செல்வம் அமைதியானான்.

''கயல்! எனக்கும் உனக்கும் தட்டு எடுத்துட்டு வா. அவங்க அவங்களா பரிமாறி சாப்பிட்டுக்குவாங்க.'' என்று விக்ரம் கூறினான்.

''பல்லவிக்கு சாப்பாடு...'' என்று கயல்விழி தயங்கினாள்.

''அவளுக்கு அவளோட அம்மா சாப்பாடு ஊட்டிட்டு அப்புறமா சாப்பிடுவாங்க. அவங்களுக்கு இல்லாத அக்கறை உனக்கு எதுக்கு?''

''இல்லைங்க...'' என்று கயல்விழி தயங்கி இழுக்கவும்,

நான் சொன்னதை செய்ய முடியுமா? முடியாதா? என்பது போல் விக்ரம் அவளை முறைத்துப் பார்த்தான்.

கணவனின் முறைப்புக்கு அடங்கியவள் சமையல் அறைக்கு சென்று தட்டை எடுத்து வந்தாள்.

சந்திரலேகாவும் தன் குடும்பத்தினருக்காக மூன்று தட்டுகளை எடுத்து வந்தாள்.

''பல்லவி! வாடா சாப்பிடலாம்.'' என்று சந்திரலேகா அழைக்கவும், பல்லவி உணவு மேஜையின் முன் சென்று அமர்ந்தாள்.

அவர்கள் மூவருக்கும் சாப்பாட்டை பரிமாறிய லேகா சாப்பிட ஆரம்பித்தாள்.

கயல்விழி சாதத்தை விக்ரமின் தட்டில் பரிமாற முனைய

''நான் எனக்கு வேண்டியதை வச்சுக்கிறேன். நீ முதல்ல உன் தட்டை பாரு.'' என்று விக்ரம் அவளை தடுத்தான்.

''எனக்கு சிக்கன் குழம்பு இட்லி தோசைக்கு ஊத்தி சாப்பிட தானேங்க பிடிக்கும். நான் அதை நைட் சாப்பிட்டுக்கிறேன்.''

''தெரிஞ்ச விஷயம் தானே.''

''நான் உங்களுக்கு சாதம் போட்டு குழம்பு ஊத்துறேன்.''

''நானும் இப்போ சிக்கன் சாப்பிட போறதில்லை. நைட்டே சாப்பிட்டுக்கிறேன். நாம ஈவினிங் உச்சி பிள்ளையார் கோவிலுக்கு போகணும். அதனால இப்போ எனக்கும் வெஜ் சாப்பாடே வை.'' என்றான்.

அவள் திருதிருவென்று முழிக்கவும், ''இப்போ எதுக்கு இப்படி முழிக்கிறே?'' என்றான்.

அவள் தனக்கென்று எதையும் தனியாக சமைக்க வில்லை. ரசம் சாதமும் கோழி வறுவலும் வைத்து சாப்பிட்டு கொள்ளலாம் என்று நினைத்திருந்தாள்.

கோவிலுக்கு போகப் போவதால் இப்பொழுது அதையும் சாப்பிட முடியாது. மீதம் இருப்பது ரசமும் தயிரும் மட்டுமே.

காய் எதுவும் அவள் சமைக்கவில்லை என்பதால் 'எதை பரிமாற?' என்று விழித்தாள்.

''என்னன்னு இப்போ சொல்லப் போறியா இல்லையா?'' என்று அவன் அதட்டல் போடவும்,

''காய் எதுவும் செய்யலை. நீங்க கோவிலுக்கு போகணும்னு சொல்லுவீங்கன்னு நான் நினைக்கலை.'' என்றாள்.

''வீட்டுல வடகம் இருக்கான்னு பாரு. இல்லைன்னா தயிரும் ஊறுகாயும் வை. நைட்டிலே நல்லா சாப்பிட்டுக்கலாம்.'' என்றதும் சமையலறையை உருட்டிப் பார்த்தாள்.

அவள் கண்களுக்கு வடகம் எதுவும் சிக்கவில்லை.

பேச்சி அம்மாள் வேலையை முடித்துக் கொண்டு தன் வீட்டிற்கு செல்ல கிளம்பினார்.

''விக்ரம் தம்பி! வந்து கதவை பூட்டிக்கோங்க. சாயங்காலமா வந்து பாத்திரம் கழுவ வரேன்.'' என்று சொல்லிவிட்டு சென்றார்.

வடகத்தை தேடி எடுத்து பொறிக்க சென்ற கயல்விழி ஊறுகாய் பாட்டிலோடு திரும்பி வரவும் விக்ரம் தனக்கு தேவையான சாதத்தை தட்டில் வைத்து தயிர் ஊற்றி, ஊறுகாயை தொட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான்.

இவர்கள் இப்படி சாப்பிட விக்ரமின் அண்ணன் குடும்பமோ கோழி குழம்பையும் வறுவலையும் ஒரு வெட்டு வெட்டினார்கள்.

அதை சப்தம் எழுப்பாமல் சாப்பிட்டு இருக்கலாம். அந்த பழக்கம் எல்லாம் லேகாவிற்கு கிடையாதே!

''இன்னும் கொஞ்சம் குழம்பு ஊத்தவாங்க?''

''இன்னும் கொஞ்சம் வறுவல் வச்சுக்கிறியா?'' என்று நொடிக்கொரு தரம் தன் கணவனையும் மகளையும் கேட்டுக் கொண்டே இருந்தாள்.

விக்ரமும் கயல்விழியும் விரைவாக சாப்பிட்டுவிட்டு எழுந்தார்கள்.

அவர்கள் வரவேற்பறைக்கு சென்று அமர்ந்து கொண்டனர். சாப்பிட்டு முடித்து செல்வமும் பல்லவியும் தங்கள் அறைக்குள் சென்றுவிட்டனர்.

கயல் அருகே வந்த சந்திரலேகா, ''உனக்கு சூப்பரா சமைக்க வரும்னு அத்தைகிட்ட சொன்னியாம். குழம்பும் வறுவலும் ரொம்ப சுமாரா இருந்துச்சு. இதுக்கா அந்த அலட்டு அலட்டினே!'' என்று கேட்டுவிட்டு சென்றாள்.

''உனக்கு இது தேவையா கயல்?''

''நீங்க என் சமையலை சாப்பிட்டு இருக்கீங்க தானே? நல்லா தானே இருக்கும்?''

''உன் சமையல் நல்லா இல்லாமலா உனக்கு சமையல் பிளாக் ஆரம்பிச்சு குடுத்தேன். அதை எத்தனை பேர் பார்க்கிறாங்க. ஒண்ணு ரெண்டு பேர் கருத்து கூட சொல்லுறாங்க தானே.''

"அதை விடுங்க. நீங்க பதில் சொல்லுங்க. உங்களுக்கு பிடிக்குமா? பிடிக்காதா?"

"எனக்கு ரொம்ப பிடிக்கும்."

"எனக்கு அது போதும். அவங்க என்ன வேணா சொல்லிட்டு போகட்டும்."

சாப்பிட்டு விட்டு எதையும் மூடி கூட வைக்காமல் அவர்கள் சென்றிருக்க கயல்விழி அதை எல்லாம் பத்திரப்படுத்தி விட்டு வந்தாள்.

"போய் கொஞ்ச நேரம் தூங்கு. அஞ்சு மணிக்கு கோவிலுக்கு கிளம்புவோம்."

"நீங்க என்ன செய்ய போறீங்க?"

"நான் கொஞ்ச நேரம் டிவி பார்த்துக்கிட்டு இருக்கேன். நீ போய் ரெஸ்ட் எடு." என்றதும் சரியென்று சொல்லி தங்கள் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டாள்.

பொதுவாக அவள் மதியம் தூங்க மாட்டாள். ஆனால் நேற்றைய இரவு சரியாக தூங்காததால் சிறிது நேரம் படுக்கலாம் என நினைத்து சென்றாள்.

மாலையில் ஐந்து மணிக்கு கிளம்பலாம் என்று அவர்கள் நினைத்தபடி கிளம்ப முடியாமல் அரை மணி நேரம் தாமதம் ஆகியது.

ஐந்தரை மணிக்கு அவர்கள் கிளம்பும் நேரம் தெரிந்தவர் ஒருவர் வீட்டிற்கு வந்ததால் அவரை வரவேற்று உபசரித்தனர். அவர் சென்ற பின்பே அவர்களால் கிளம்ப முடிந்தது.

கயல்விழி சந்திரலேகாவிடம் சென்று, "அக்கா! அத்தையும் மாமாவும் வந்ததும் அவங்களுக்கான

குழம்பை பிரிஜ்ஜில் வச்சிருக்கேன்னு சொல்லிடுங்க. எனக்கும் அவருக்கும் சிக்கன் குழம்பு இருக்கு. நான் வந்த பின்னாடி எங்க ரெண்டு பேருக்கும் தோசை ஊத்தி சாப்பிட்டுக்குவோம். கோவிலுக்கு போயிட்டு வரேன்.'' என்று சொல்லிவிட்டு சென்றாள்.

இவர்கள் சென்றதும் நடராஜனும் சிவகாமியும் வீடு திரும்பினார்கள். லேகா கதவை திறந்து விட்டாள்.

''என்னம்மா நீ மட்டும் இருக்கே? கயல் எங்கே?''

''அவள் எங்கே வீடு தங்குறாள்?''

''வீட்டிலே இல்லாமல் எங்கே போயிட்டாள்?''

''ரெண்டு பேரும் ஜோடியா கோவிலுக்கு கிளம்பி போயிட்டாங்க.''

''உச்சி பிள்ளையார் கோவிலுக்கு போய் இருப்பான் சிவகாமி. அவன் இங்கே வந்தால் கண்டிப்பா பிள்ளை யாரை பார்க்க போவான் தானே. வா முதலில் நாம குளிச்சுட்டு வருவோம்.'' என்று நடராஜன் தன் மனை வியை அங்கே இருந்து கூட்டி சென்றார்.

குளித்து முடித்து வந்த சிவகாமி நேரே சமைய லறைக்கு தான் சென்றார்.

''நைட் சமையலுக்கு ஏதாச்சும் செஞ்சியாமா?''

''இல்லை அத்தை மதியம் வச்ச சிக்கன் குழம்பும் வறு வலும் இருக்கு. நீங்க வந்ததும் இட்லி ஊத்திக்கலாம்னு நினைச்சேன். அதான் எதுவும் செய்யலை.''

''இட்லி மட்டும் தான் ஊத்தணுமா? அப்போ நானே ஊத்துறேன்.'' என்ற சிவகாமி தானே செய்ய ஆரம்பித் தார்.

இருப்பதை சூடு பண்ணி அனைவரும் சாப்பிட ஆரம்பித்தனர்.

''குழம்பு நல்லா இருக்கா அத்தை? நானே செஞ்சேன்.'' என்று சந்திரலேகா கேட்டதும்,

செல்வம் தன் மனைவியின் புறம் திரும்பி, ''இப்போ இந்த பொய் உனக்கு தேவையா? நாளைக்கு கயல் உண்மையை சொன்னால் உன் முகத்தை கொண்டு போய் எங்கே வச்சுக்குவே?'' என்பது போல் பார்த்தான்.

''ரொம்ப நல்லா இருக்கு லேகா.'' என்று சிவகாமி உற்சாகமாய் பதில் கூறினார்.

'கல்யாணமாகி இத்தனை வருஷத்திலே உன் மூத்த மருமகள் என்னைக்கு சமையல் அறைக்கு வந்து உனக்கு உதவி செஞ்சிருக்காள்? இன்னைக்கு முழு வேலையும் அவளே செஞ்சாள்னு சொன்னதும் உன்னால எப்படி சிவகாமி நம்ப முடியுது?' என்று நடராஜன் தன் மன தினில் வியந்தார்.

அவர்கள் அனைவரும் சாப்பிட்டு முடித்து அவரவர் வேலையை பார்க்க சென்றனர்.

## 20

ஒன்பது மணிக்கு விக்ரமும் கயலும் வீடு திரும்பினர்.

கதவை திறந்து விட்ட சிவகாமி, ''உங்களுக்காக தான் முழிச்சு இருக்கேன். துக்க வீட்டுல ரொம்ப நேரம்

நின்னதால சோர்வா இருக்கு. நான் போய் தூங்கிறேன்.'' என்று சொல்லிவிட்டு தங்கள் அறைக்குள் சென்று விட்டார்.

''நீங்க போய் டிரஸ் மாத்திட்டு வாங்க. நான் அதுக் குள்ள குழம்பை சூடு பண்ணிட்டு தோசை ஊத்துறேன்.'' என்று சொன்ன கயல்விழி சமையலறைக்குள் விரைந் தாள்.

அவள் பிரிஜ்ஜில் தங்களுக்கான குழம்பை தேடி பார்த்தாள். அதை தான் லேகா ஏற்கனவே காலி செய்து விட்டாளே!

இல்லாத குழம்பை தேடினால் அது எப்படி கிடைக்கும்?

அத்தை சாப்பிடும் போது சூடு பண்ணிட்டு அடுப்பு மேடையில் வச்சுட்டாங்களோ? என்று நினைத்துக் கொண்டே கயல்விழி சமையலறை முழுவதும் தேடிப் பார்த்தாள்.

உணவு மேஜையையும் விட்டு வைக்காமல் தேடி னாள்.

எங்கேயும் இல்லை என்றதும், அவங்களே சாப்பிட்டு காலி பண்ணிட்டாங்க போல. கண்டிப்பா அத்தை மாமா வால அவ்வளவையும் காலி பண்ணி இருக்க முடியாது. லேகா அக்கா குடும்பம் தான் சாப்பிட்டு இருக்கணும். சரி சாப்பிட்டுட்டு போறாங்க. நமக்காக ஒரு சட்னி யாச்சும் அரைச்சு வச்சிருக்கலாமில்ல என்று நினைத் தாள்.

எங்களுக்கு என்று ஒதுக்கி வைத்த சாப்பாட்டை அவர்கள் எப்படி சாப்பிடலாம்? என்று கூட கயல்விழி எண்ணவில்லை.

எங்களுக்கு தொட்டுக் கொள்ள ஏதோ ஒரு சட்னியை அரைத்து வைத்திருக்கலாம் தானே? என்று மட்டுமே எண்ணினாள்.

சட்னி அரைப்பதற்காக கயல் தேங்காயை கீற ஆரம் பித்தாள்.

அப்பொழுது அங்கே வந்த லேகா, ''என்ன பண்ணிக் கிட்டு இருக்கே?'' என்று கேட்டாள்.

''சட்னி அரைக்கலாம்னு ரெடி பண்ணிக்கிட்டு இருக் கேன்கா.''

''என்னது சட்னி அரைக்க போறியா? மணி என்னன்னு பார்த்தியா?''

''மணி ஒன்பதே கால் ஆகுது. அதுக்கு என்னக்கா?''

''அதுக்கு என்னவா? நீ ஊர் சுத்திட்டு லேட்டா வந்து சட்னி அரைக்கிறேன்னு சொல்லி மிக்ஸியை ஓட்டி னால் நாங்க எல்லாம் எப்படி தூங்கிறது? பல்லவி இப்ப தான் தூங்க ஆரம்பிச்சாள். மிக்ஸி சத்தம் கேட்டால் அவள் எழுந்து அழ ஆரம்பிச்சுடுவாள். அப்புறமா அவள் அழுகையை யாராலும் நிறுத்த முடியாது.''

''இப்ப என்ன பண்ண சொல்லுறீங்க?''

''சட்னி ஒண்ணும் அரைக்க வேண்டாம்.''

''அப்புறம் நாங்க எதை தொட்டு சாப்பிடுறது?''

''அதை நீ வெளியே போகும் முன்னாடி யோசிச்சிருக் கணும்.

''எங்க ரெண்டு பேருக்கும் குழம்பை வச்சிட்டு தானே போனேன். நீங்க தானே அதை சாப்பிட்டு காலி பண்ணி இருக்கீங்க.'' என்றதும் லேகாவிற்கு ஆத்திரம் வந்தது.

''என்னமோ உன் வீட்டு குழம்பை சாப்பிட்ட மாதிரி பேசுறே? இது எங்க மாமியார் வீடு. நான் இந்த வீட்டு மூத்த மருமகள். எனக்கு இல்லாத உரிமை இங்க யாருக்கும் இல்லை.''

''இப்ப நான் என்ன சொன்னேன்னு இவங்க உரிமை பிரச்சனையை எழுப்புறாங்க?'' என்று கயல்விழி அயர்ந்து போனாள்.

உடை மாற்றி வந்த விக்ரம் தன் அறை வாயிலில் நின்று கொண்டு அவர்கள் இருவரும் பேசுவதை கேட்டு கொண்டு தான் இருந்தான்.

எவ்வளவு தூரம் போகிறது என்று பார்ப்போம் என்று அமைதியாகவே நின்றிருந்தான்.

''நீங்க ஏன் குழம்பை சாப்பிட்டீங்கன்னு நான் கேட்கலையே. எங்களுக்கு தேங்காய் சட்னியாவது அரைச்சு வச்சிருக்கலாமில்ல.''

''உனக்கு வேலை செஞ்சு வைக்க நான் என்ன உன் வீட்டு வேலைக்காரியா? வெளியே போக தெரிஞ்சவங்களுக்கு வெளியே சாப்பிட்டு விட்டு வர தெரியாதா.'' என்று லேகா கூறிக் கொண்டிருக்கும் பொழுது சிவகாமி தண்ணீர் கூஜாவோடு அங்கே வந்தார்.

''தூங்காமல் இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?'' என்று தன் இரு மருமகள்களையும் பார்த்து கேட்டார்.

'இந்தா வந்துட்டாங்க இல்ல சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ். விசாரிக்காமலே தீர்ப்பு சொல்லுறது தானே இவங்க ஸ்பெஷாலிட்டி.' என்று விக்ரம் தன் மனதினில் நக்கல் பண்ணிக் கொண்டான்.

லேகா தன் மாமியாரிடம், ''பல்லவி தூங்குகிறாள். சத்தம் கேட்டால் அவள் முழிச்சுக்குவாள். அதனால கிட்சனை உருட்டாமல் போய் தூங்குன்னு சொல்லிக்கிட்டு இருக்கேன் அத்தை. கயல்விழி எதிர்த்து பேசிக்கிட்டு இருக்காள்.'' என்று போட்டு கொடுத்தாள்.

''ஏம்மா கயல்! சின்ன குழந்தை தூங்கிறாள்னு சொன்னால் சரின்னு கேட்டுக்க வேண்டியது தானே. இப்படி தான் எதிர்வாதம் செய்வியா? உங்க வீட்டுல உனக்கு இதை தான் சொல்லி குடுத்தாங்களா?''

''நடந்தது என்னன்னே தெரியாமல் இப்போ எதுக்கு எங்க வீட்டு மனுஷங்களை எல்லாம் இழுக்கிறாங்க?'' என்று கயல்விழி அதிர்ந்து போய் பேச முடியாது நின்றாள்.

''போய் தூங்கு.'' என்று இளைய மருமகளிடம் சொன்னவர் தண்ணீர் கூஜாவில் தண்ணீர் நிரப்பும் வேலையை செய்ய ஆரம்பித்தார்.

சிவகாமிக்கு லேகாவை அவ்வளவாக பிடிக்காது தான். அவர் கயல்விழியிடம் இன்னும் பேசி பழகவில்லை. அதனால் அவர் தனக்கு மிகவும் பிடித்த செல்வத்தின் மனைவிக்கே தன்னுடைய ஆதரவை தெரிவிக்க நினைத்தார். அதன் வெளிப்பாடு தான் இந்த தீர்ப்பு.

நடந்ததை எல்லாம் பார்த்த விக்ரம் தன் அறை வாயிலில் நின்று கொண்டே, ''கயல்! இங்கே வா!'' என்று கூப்பிட்டான்.

கணவனின் சொல்லுக்கு கட்டுப்பட்டு அவள் தங்கள் அறை நோக்கி நடந்தாள்.

அவள் உள்ளே வந்ததும் கதவை அடைத்து தாளிட்டான். பாயை தரையில் விரித்தான். தான் புதிதாக வாங்கிய மின்விசிறியை பாயை தாண்டி தரையில் வைத்து ஓட விட்டான்.

''என்னங்க சாப்பாடு....'' என்று கயல் இழுத்தாள்.

''வா வந்து படு.''

''அங்கே என்ன தெரியுமா நடந்துச்சு?''

''நான் எல்லாத்தையும் கேட்டுக்கிட்டு தான் இருந்தேன். பேசாமல் படு.'' என்று சொன்னவன் படுத்துக் கொண்டான்.

''அவன் அருகே வந்து படுத்தவள், உங்களுக்கு பசிக்கலையா?'' என்று கேட்டாள்.

''இந்த வீட்டுக்கு வந்தால் இப்படி தான் ஏடா கூடமா நடக்கும். எனக்கு இது பழகி போன ஒண்ணு தான்.''

அவள் அமைதியாக ஏதோ யோசனையில் இருந்தாள்.

''என்னை இப்படி பட்டினி போட தானே அன்னைக்கு நீ உண்ணாவிரதம் எல்லாம் இருந்து மாமியார் வீட்டுக்கு போக பெர்மிஷன் வாங்கினே?'' என்று நக்கல் செய்யவும், அவனை முறைத்து பார்த்தாள்.

''எதுக்கு இப்போ முறைக்கிற? நான் சரியா தானே சொல்லுறேன். பட்டினியா இருக்கிறதுக்கு எனக்கும் டிரைனிங் குடுத்த தானே?''

அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. சிறிது நேரம் அங்கே அமைதி நிலவியது.

''இந்த அக்கா ஏன் இப்படி இருக்காங்க?''

''அவங்களை பத்தின பேச்சு நமக்கு எதுக்கு? விட்டு தள்ளு.''

அவள் திரும்பவும், ''உங்களுக்கு பசிக்கலையா?'' என்று கேட்டாள்.

''உனக்கு பசிக்குதா? நான் வெளியே போய் சாப்பாடு வாங்கிட்டு வரட்டுமா?''

இங்கே இவருக்குன்னு பைக் கூட இல்லை. ஹோட்டல் எங்கே இருக்குன்னு தெரியலை. எவ்வளவு தூரம் நடக்க வேண்டி இருக்குமோ? என்று எண்ணியவள்,

''எனக்கு பசிக்கலை.'' என்றாள்.

அவளை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான். வேறெதுவும் கேட்கவில்லை.

அவ முகத்திலேயே பசி தெரியுது. இருந்தாலும் பொய் சொல்லுறாள். ஒரு வேளை பட்டினியா இருக்கட்டும். அப்போ தான் இந்த வீட்டுக்கு வரும் எண்ணம் இவளுக்கு வராது என்று அவன் நினைத்துக் கொண்டான்.

மதியமும் சரியா சாப்பிடலை. வெறும் தயிரும் ஊறுகாயும் தான். இப்போ கொலைப் பட்டினி. நான் சென்னையிலே இருந்தால் நல்லா சாப்பிட்டு நிம்மதியா தூங்கி எழுந்துக்குவேன். என்னை எதுக்கு திருச்சிக்கு வர சொல்லுறேன்னு இவர் அன்னைக்கு கேட்ட மாதிரி தானே ஒவ்வொண்ணும் நடக்குது என்று அவள் அவனுக்காக வருத்தப்பட்டாள்.

''ஹேய் மக்கு! என்ன தீவிரமா யோசிக்கிறே?''

''நான் ஒண்ணும் யோசிக்கலை.''

''யோசிக்கிறதெல்லாம் மூளை இருக்கிறவங்க செய்யுற வேலை ஆச்சே! எதுக்கு சம்பந்தமில்லாமல் நீ யோசிக்கிறேன்னு தான் கேட்கிறேன்.'' என்றதும் அவனை முறைத்தாள்.

''மாமனை அப்புறமா முறைச்சு பார்க்கலாம். மாமனுக்கு எப்போ சாப்பாடு போட போறே?''

அவன் புறம் திரும்பி படுத்தவள், ''ரொம்ப பசிக்குதா மாமா?'' என்று பாவமாய் கேட்டாள்.

தன்னுடைய கேள்வி அவளுக்கு புரியவில்லை என்பதை அவன் நொடியில் புரிந்து கொண்டான்.

தனக்கு வந்த சிரிப்பை அடக்கியவன் அவளுக்கு பதில் சொல்ல ஆரம்பித்தான்.

''ஆமா கயல். ரொம்ப பசிக்குது.'' என்று தாபமாய் இழுத்தான்.

தான் பிடிவாதம் பிடித்து இங்கு கூட்டி வந்ததால் தான் அவனால் சாப்பிட முடியவில்லை, நிம்மதியாய் தூங்க முடியவில்லை என்ற குற்ற உணர்வில் அவள் மனம் தத்தளித்ததால் அவனது தாபக் குரல் அவளது மூளையை எட்டவில்லை.

''அச்சோ! இப்போ என்ன மாமா செய்யுறது? அத்தை தான் கிட்சனை உருட்டாமல் போய் படுன்னு சொல்லிட்டாங்களே!''

''உன் மாமியாரே சொல்லிட்டாங்கல்ல. அப்போ அதை தட்டாமல் செய்ய வேண்டியது தானே?''

"அதனால தானே நானும் எதுவும் சமைக்காமல் வந்துட்டேன். நீங்க வேணா ஹோட்டலில் போய் சாப்பிட்டுட்டு வரீங்களா?"

"ஹோட்டல் சாப்பாடு எனக்கு வேண்டாம். வீட்டு சாப்பாடு... அதுவும் கயல் தருவது தான் வேணும்."

"என்னால தான் எதுவும் செய்ய முடியலையே. இன்னைக்கு ஒரு நாள் ஹோட்டலுக்கு போங்க மாமா."

"நான் ரொம்ப நல்ல பையனாக்கும். ஹோட்டலுக்கு எல்லாம் போக மாட்டேன்."

"ஹோட்டலில் சாப்பிடுறவங்க எல்லாம் கெட்ட பசங்களா?"

"கண்டிப்பா. என்னை பொறுத்த வரை ரொம்ப ரொம்ப கெட்ட பசங்க."

"என்ன மாமா உளறுறீங்க?"

"இதுக்கு மேல நான் உன்னை பேசாவிட்டால் நீ இன்னும் என்னவெல்லாம் சொல்லுவியோ. எப்படியும் நான் சொன்னது உனக்கு புரிய போறதில்லை. அதனால நானே செயலில் இறங்கிடுறேன்."

"என்ன செயலில் இறங்கப் போறீங்க?" என்றவளின் கேள்வி பாதியில் நின்று போனது.

அவன் அவளது இதழ்களை சிறை செய்து அவளை பேசவிடாமல் செய்திருந்தான்.

அடக்கடவுளே! இவ்வளவு நேரமும் இதை பத்தியா பேசினார்? என நினைத்தவள் தன் கைகளால் அவனுக்கு சில செல்ல அடிகளை பரிசளித்தாள்.

பின் கணவன் தந்த முத்தத்தில் மூழ்கிப் போனாள்.

அவளது இதழ்களை விடுவித்தவன் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு அவளது காதில், ''எனக்கே எனக்குன்னு என்னோட மக்கு பொண்டாட்டி இருக்கும் போது நான் எதுக்குடி வெளியே போகணும்?'' என்று கேட்டதும்,

''தோசையை பத்தி தானே பேசிக்கிட்டு இருந்தோம். நீங்க திடீர்னு தோசையை திருப்பி போடுவீங்கன்னு எனக்கு எப்படி தெரியும்? நீங்க இப்படி போங்காட்டம் ஆடுவீங்கன்னு எனக்கு தெரியாமல் போச்சு.'' என்று அவள் சிணுங்கினாள்.

''சிணுங்கி சிணுங்கியே என்னை கொல்லுறடி.'' என்றவன் அவளது முகமெங்கும் முத்தமிட ஆரம்பித்தான்.

அவள் தன்னால் முடிந்த மட்டும் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

சற்று முன் எழுந்த மனக்கிலேசம் கூட கணவனின் நெருக்கத்தில் அவளுக்கு மறந்து போனது.

மறுநாள் காலையில் கயல்விழி வேகமாக எழுந்து குளித்து முடித்து சமையலறைக்கு சென்று காலை உணவை தயாரிக்க ஆரம்பித்தாள்.

காலை உணவு எந்த வித பிரச்சனையுமின்றி கழிந்தது.

கயல்விழி கவனித்து பார்த்தவரை விக்ரமும் செல்வமும் அருகருகே அமர்ந்திருந்தால் கூட சரியாக பேசிக் கொள்ளவில்லை.

அவர்கள் இருவருக்கும் இடையே ஒட்டுதல் இல்லை என்பது அவளுக்கு நன்கு புரிந்தது.

இத்தனை நாட்களில் அவன் தன் அண்ணனிடம் போனில் பேசி அவள் பார்த்ததில்லை.

ஒரு சிலருக்கு போன் பேசுவது அவ்வளவாக பிடிக் காது. ஒருவேளை செல்வம் அந்த ரகத்தை சேர்ந்தவன் போல. அதனால் தான் விக்ரம் தன் அண்ணனிடம் போனில் பேசவில்லை என கயல்விழி எண்ணி இருந் தாள்.

ஆனால் இந்த இரு நாட்களில் அவர்களுக்குள் இறுகிய பாசப் பிணைப்பு இல்லை என்பதை அவளால் உணர முடிந்தது.

அத்தைகிட்டயும் பாசமா பேச மாட்டேங்கிறார். ஒரு வேளை இவருக்கு யார்கிட்டயும் அன்பா பாசமா பேசத் தெரியாதோ?

ஆனால் என்கிட்ட நல்லா தானே பேசுறார். பாசமா தானே பழகுறார். இவரோட குணத்தை என்னால புரிஞ்சுக்க முடியாதோ? அவர் சொல்லுற மாதிரி நான் மக்கு தான் போல என்று எண்ணிக் கொண்டாள்.

அன்று பேச்சியம்மாள் விரைவாக வேலைக்கு வந்தாள்.

அவள் வீட்டை பெருக்கி முடிக்கும் பொழுது செல்வம் தன் குடும்பத்தோடு வெளியே சென்றுவிட்டான்.

''வீட்டுல இருக்க போரடிக்குது. பத்து நிமிஷம் நடந் துட்டு வரேன் கயல்.'' என்று சொல்லிவிட்டு விக்ரமும் வெளியே சென்றான்.

சிவகாமி கயல்விழியிடம், ''துவைச்ச துணியை கொஞ்சம் மாடியில காய போட்டுட்டு வா.'' என்று சொல்லி அவளை மாடிக்கு அனுப்பி வைத்தார்

## 21

வீட்டை துடைக்க ஆரம்பித்த பேச்சி சிவகாமியிடம், ''என்னங்கம்மா இன்னைக்கும் உங்க மருமகள் வெளியே கிளம்பி போயிடுச்சா?'' என்று பேச்சுக் கொடுத்தாள்.

நேற்று கயல்விழி வெளியே சென்றதாக லேகா தெரிவித்திருந்ததால் பேச்சி அவளை பற்றி தான் விசாரிப்பதாக சிவகாமி எண்ணிக் கொண்டார்.

''கயல் மொட்டை மாடியில் துணி காய போடப் போய் இருக்காள் பேச்சி.''

''நான் உங்க சின்ன மருமகளை கேட்கலை. பெரிய மருமகளை பத்தி கேட்கிறேன். நேத்தும் வெளியே போயிட்டு சாப்பிடுற நேரத்துக்கு தான் வந்தாக. இன்னைக்கும் சமைக்கிற நேரம் வெளியே போயிட்டாகளான்னு கேட்க வந்தேன்.''

''நேத்து லேகா வெளியே போனாளா? இல்லையே அவள் தானே சமைச்சாள்.''

''யாரு உங்க பெரிய மருமகளா? சமையலா? அப்படி மட்டும் நடந்திருந்தால் திருச்சில மழை கொட்டி

இருக்காது. நீங்க என்னம்மா புரியாம பேசுறீங்க. நம்ம சின்ன மருமகள் தான் பாவம் தனியா சமைச்சு வச்சது. உங்க பேத்தியை வேற வீட்டுல விட்டுட்டு போயிட்டாக. அந்த புள்ளை ஒரு இடத்துல அடங்கி இருக்கா? அதை கொட்டவும் இதை கொட்டவும்னு எல்லாத்தையும் கெடுத்து வச்சது. சின்ன மருமகள் ஒரு சொல் கடிஞ்சு சொல்லலையே. அது குணம் தங்கம்மா.''

'என்ன இது நேத்து லேகா வேற மாதிரி சொன்னாள். இன்னைக்கு பேச்சி மாத்தி சொல்லுறாள்' என்று சிவகாமி யோசனையில் ஆழ்ந்தார்.

நடராஜனோ, 'நான் இதை எதிர்பார்த்தேன்' என நினைத்து கொண்டு அமைதி காத்தார்.

''நம்ம சின்ன தம்பி குணத்துக்கு ஏத்த மாதிரி தங்கமான பொண்டாட்டி வந்து வாய்ச்சிருக்காக.''

''யாரு சின்ன தம்பி தங்கமான பிள்ளையா?'' என்று சிவகாமி மனதில் நினைத்ததை அப்படியே கேட்டு விட்டார்.

அவர் அப்படி கேட்டதும் நடராஜனிற்கு கோபம் வந்து அவர் தன் மனைவியை முறைத்ததோடு இல்லாமல் திட்ட தொடங்கும் முன், அந்த வேலையை பேச்சி பார்க்க ஆரம்பித்தாள்.

''சின்ன தம்பிக்கு என்ன கொறைச்சல்னு கேட்கிறேன்? அவருக்கு என்னம்மா ராசா. வெள்ளை மனசு. மனுசங்களை மதிக்க தெரிஞ்ச மகராசன்.'' என்று அவள் அடுக்கிக் கொண்டே போக,

''விட்டால் இன்னைக்கு நாள் முழுசும் அவன் புகழ் பாடுவ போல. பேச்சை குறைச்சுட்டு வேலையை பாரு.'' என்று சிவகாமி அதட்டினார்.

''பேச்சின்னு பேர் வச்சுட்டு பேசக் கூடாதுன்னு சொன்னால் எப்படிம்மா. பேசிக்கிட்டே வேலை பார்த்தால் தானே அலுப்பு தெரியாது.''

''என்னமோ பண்ணு.'' என்று சிவகாமி முணுமுணுத்தார்.

''நம்ம சின்ன தம்பி பொண்டாட்டி மேல உசிரையே வச்சிருக்காரு?''

'ஆமா காதலிச்சு கைப்பிடிச்சவளோட வாழ முடியாமல் எங்க பேச்சுக்கு கட்டுப்பட்டு இவ கழுத்துல தாலி கட்டினான். அவன் கல்யாணம் முடிஞ்சே சில மாசம் தான் ஆகுது. இதுல அவ மேல இவன் உசிரை வச்சிருக்கானாக்கும்' என்று மனதுக்குள் சிவகாமி அலுத்துக் கொண்டார்.

''அது எப்படி உனக்கு தெரிஞ்சது?'' என்று பேச்சியிடம் கேட்கவும் தவறவில்லை.

''தெருமுனை சோசியர்ட்ட போய் வெத்தலையில மை தடவி பார்த்தேன்.'' என்றதும் சிவகாமி முறைத்தார்.

''அப்புறமென்னம்மா... இது ஒரு கேள்வியா? அவுகளை பார்த்தா தெரியாதா? நம்ம சின்னம்மாக்கு சோத்துக்கு கோழி குழம்பை ஊத்தி சாப்பிட பிடிக்காதாம். அதனால ராத்திரி தோசைக்கு ஊத்திக்கிறேன்னு சொல்லுச்சு. உடனே நம்ம சின்ன தம்பியும் நானும் ராத்திரி சாப்பிட்டுக்கிறேன்னு சொல்லிடுச்சு தெரியுமா?''

'நைட்டிலே சாப்பிடுறோம்னு சொன்னாங்களா? ஆனா நாங்க எல்லோரும் சாப்பிட்டதும் மிச்சம் எதுவும் இல்லையே. அந்த பாத்திரத்தை நான் தானே கழுவப் போட்டேன்' என்று சிவகாமி சிந்தனையில் ஆழ்ந்தார்.

நடராஜனிற்கு மீந்த உணவினை பற்றி எல்லாம் ஒன்றும் தெரியாததால் அவர் அது பற்றி சிந்திக்கவில்லை.

ஆனால் பேச்சியம்மாள் கூற்றில் இருந்த உண்மையை அவர் யோசித்துக் கொண்டிருந்தார்.

விக்ரமும் கயலும் ஒட்டுதலோடு குடும்பம் நடத்துவதாக தான் நடராஜனிற்கும் தோன்றியது.

தன் சின்ன மகன் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்று அந்த தந்தை உள்ளம் மகனுக்காய் கடவுளிடம் பிரார்த்தனை செய்தது.

துணிகளை காய வைத்துவிட்டு மாடியில் இருந்து கயல்விழி வீட்டிற்குள் வந்தாள்.

அப்பொழுது சிவகாமி தன் கணவரிடம் கடைக்கு போய், ''இறால் வாங்கிட்டு வாங்க. இறால் உருண்டை குழம்பு செய்யணும்.'' என்றார்.

''இதோ கிளம்புறேன் சிவகாமி.''

''அத்தை! அவருக்கு இறால் பிடிக்காது.'' என்று தயங்கியவாறு கயல்விழி இழுத்தாள்.

''ம்ம்ம் எனக்கு தெரியும்மா. ஆனா செல்வத்துக்கு ரொம்ப பிடிக்கும். அதனால செல்வம் ஊருக்கு வரும் போதெல்லாம் நான் செஞ்சு தருவேன். அதுக்கு தான் வாங்கிட்டு வர சொன்னேன்.''

''அப்போ உங்க சின்ன பையனுக்கு என்ன செஞ்சு தருவீங்க?'' என்று கேட்க முடியாமல் அவள் தடுமாறி நின்றாள்.

அவள் தடுமாற்றத்தை கண்ட நடராஜன், ''உனக்கு என்ன வேணும்மா? சும்மா தயங்காமல் சொல்லு.'' என்று அவளை பேசுமாறு ஊக்கினார்.

''அவருக்காக கொஞ்சம் சிக்கன் வாங்கிட்டு வரீங்களா மாமா?''

''இவ்வளவு தானேம்மா. அதுக்கு ஏன் தயங்கிறே? விக்ரமுக்காக கொஞ்சம் சிக்கன் வாங்கிட்டு வரேன்.'' என்று நடராஜன் சொன்னதும் கயலின் முகம் மலர்ந்தது.

''அவன் ஒருத்தனுக்கு தானே சிக்கன். கால் கிலோ மட்டும் வாங்குங்க.'' என்று சிவகாமி கூறியதை ஏற்று கொண்டு நடராஜன் கிளம்பினார்.

இருபது நிமிடங்களில் விக்ரம் வீடு திரும்பினான்.

அவனுக்கு வீட்டில் அமர்ந்து கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை. அமைதியாக தங்கள் அறைக்குள் சென்றவனை பின் தொடர்ந்து கயலும் வந்தாள்.

''என்னாச்சு மாமா? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

''ஒண்ணுமில்லை கயல். போர் அடிக்குது. அவ்வளவு தான்.''

''எப்பவும் ஊருக்கு வந்தால் என்ன செய்வீங்க?''

''திருச்சிக்கு நான் அடிக்கடி வர மாட்டேன். அப்ப டியே வந்தாலும் சினிமாக்கு இல்லைன்னா உச்சி பிள்ளையார் கோவிலுக்குன்னு போயிடுவேன்.''

''உங்களுக்கு இங்கே யாரும் பிரண்ட்ஸ் இல்லையா?''

''நான் பத்து வரைக்கும் தானே இந்த ஊரில் படிச்சேன். அதுக்கு அப்புறமா ஹாஸ்டலில் தானே படிச்சேன். அதனால இங்கே பிரண்ட்ஸ் அவ்வளவா கிடையாது.''

''இந்த ஊரிலே உங்களுக்கு பிரண்ட்ஸ் இல்லையா? ஆச்சரியமா இருக்கு மாமா. உங்களுக்கு கைலாஷ்

அண்ணா தானே க்ளோஸ் பிரண்டு. அவர் எப்படி உங்களுக்கு பிரண்ட் ஆனார்?''

''அவனும் திருச்சியில் தான் இருந்தான். என் கூட தான் டென்த் வரைக்கும் படிச்சான். அதுக்கு அப்புறம் அவனோட குடும்பம் சென்னைக்கு மாறிடுச்சு. எங்க வீட்டுல உள்ளவங்களோட எனக்கு அவ்வளவா ஒட்டுதல் கிடையாது. கைலாஷ் தான் என்னோட ஒரே உறவுன்னு கூட சொல்லலாம். அதனால எனக்கு அவனை பிரிய மனசில்லை.

அதனால நானும் சென்னை ஸ்கூலில் சேர ஆசைப் பட்டேன். கைலாஷுக்காக போக ஆசைப்படுறேன்னு சொன்னால் எங்க வீட்டுல என்னை அனுப்ப மாட்டாங்கன்னு நினைச்சு ஐஐடி கோச்சிங்காகன்னு சொன்னேன். எங்க அப்பாவும் அனுப்பி வச்சுட்டார்.''

''அப்பவே இந்த கேடி வேலை எல்லாம் பார்த்திருக்கீங்களா?'' என்றதும் புன்னகைத்தான்.

''பிரண்ட்ஸ் யாரும் இங்கே இல்லைன்னால் எப்பவும் போல சினிமாக்கு போயிட்டு வாங்க.''

''நீயும் வரியா? சினிமாக்கு போகலாம்.''

''நானா? எனக்கு சமையல் வேலை இருக்கே. நான் எப்படி வர முடியும்?''

''அப்போ நான் மட்டும் எப்படி போக முடியும்?''

''சும்மா உட்கார்ந்துகிட்டு நீங்க தான் சிரமப்படுறீங்க. எனக்கு வேலை இருக்கிறதால பொழுது போயிடும். நீங்க போயிட்டு வாங்க.''

''இல்லை கயல். அது சரி வராது.''

"உனக்கு இந்த வீட்டு மனுஷங்களை பத்தி சரியா தெரியலை. நான் இல்லைன்னா உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவாங்க. அதனால உன்னை இங்கே தனியா விட்டுட்டு நான் ரொம்ப நேரம் வெளியே சுத்தமுடியாது." என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

"உங்களுக்காக மாமா சிக்கன் வாங்க போய் இருக்கார். நான் அதை திக்கா கிரேவி மாதிரி பண்ணுறேன். நீங்க அதையே பிசைஞ்சு சாப்பிட்டுக்கிறீங்களா? எனக்கு இறால் உருண்டை குழம்பு வேற பண்ணனும். நிறைய வேலை இருக்கு."

"எனக்காக எதுக்கு தனியா சிக்கன் எல்லாம் செய்ய போறே? அதெல்லாம் வேண்டாம் கயல். நான் நேத்து மாதிரி தயிர் ஊத்தி சாப்பிட்டுக்குவேன். நீ தொட்டுக்க ஏதாச்சும் காய் மட்டும் செய். இல்லைன்னா நான் போய் சிப்ஸ் வாங்கிட்டு வரேன். எனக்கு அது போதும்."

"தயிர் நேத்து உறை ஊத்தினாங்களான்னு தெரியலை. இப்போ காலையிலும் உறை விடலை. மாமா சிக்கன் வாங்க போயிட்டார். நான் உங்களுக்காக சமைச்சு வைக்கிறேன். நீங்க சாப்பிடுங்க."

'இந்த வீட்டுல என் மேல அக்கறைப்பட்டு எனக்காக செய்யவும் ஆள் வந்துடுச்சு டோய்!' என்று அவன் மனம் ஆனந்தம் அடைந்தது.

"கயல்! நீ இவ்வளவு கஷ்டப்பட வேண்டாம். நேத்து நைட் மாதிரி நான் சாப்பிடாமல் இருந்துக்கிறேன்."

"எதுக்கு? ஏன் சாப்பிடாமல் இருக்கணும்?" என்று அவள் ஆவேசமாய் கேட்டாள்.

அப்போ தானே என் மக்கு கயல் என்னை ஸ்பெஷலா கவனிப்பாள். என்று அவன் கண்ணடித்து கொண்டே கூறவும், அவள் முகம் சிவந்தது.

"போங்க மாமா." என்றவள் வெளியே நடராஜின் குரல் கேட்கவும்,

"மாமா வந்துட்டார் போல. நான் போய் சமையலை கவனிக்கிறேன். நீங்க என்ன செய்ய போறீங்க?" என்று கேட்டாள்.

"கொஞ்ச நேரம் அப்பாகிட்ட பேசிக்கிட்டு இருக்கேன். இல்லைன்னா டிவி பார்க்கிறேன். நீ போய் உன் வேலையை பாரு. இதுவே நம்ம வீடா இருந்தால் கிட்சனில் உனக்கு ஹெல்ப் பண்ணலாம். இங்கே எங்க அம்மா ஏதாச்சும் சொல்லுவாங்க."

"கிட்சனில் ஹெல்ப் பண்ண போறீங்களா? யாரு நீங்க?" என்று அவள் தன் இடுப்பில் கை வைத்துக் கொண்டு நக்கலாக கேட்டாள்.

"கொஞ்சம் கொஞ்சம் ரொமான்ஸ் பண்ணுவேன் தான் கயல். அதுக்குன்னு உதவி மட்டுமே செய்வாங்களா? எனக்கு வேண்டியதை நான் தான் எடுத்துக்கணும்."

"ஊகும். உங்ககிட்ட பேசிக்கிட்டு இருந்தால் எனக்கு வேலை ஆகாது. அத்தை கூப்பிடுறதுக்குள்ளே நானே போறேன்." என்றவள் வெளியே சென்றாள்.

அவனும் அறையை விட்டு வெளியே வந்து தன் தந்தையின் அருகே சென்று அமர்ந்து பேச ஆரம்பித்தான்.

"சந்தோஷமா இருக்கியா விக்ரம்?"

"எனக்கு என்னப்பா குறை? நான் ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன்."

''எனக்கு அது போதும்டா. எனக்கு எப்போதும் உன்னை பத்தின கவலை தான். வேலைக்குன்னு ஊர் ஊரா அலைஞ்சதிலே உன்னைக் கவனிக்காமல் விட்டுட்டேனோன்னு எப்பவுமே என் மனசுக்குள்ளே ஒரு குற்ற உணர்ச்சி உண்டு விக்ரம். இந்த தடவை தான் உன் முகத்திலே நான் ஒரு மலர்ச்சியை பார்க்கிறேன். என் மனசுக்கும் நிம்மதியா இருக்கு.''

அவர் வெளிப்படையாய் அவனிடம் பேச முனைந் தாலும் அவன் அவரிடம் எதையும் சொல்லவில்லை.

குடும்பத்துக்காக தான் சம்பாதிக்க ஊர் ஊரா போனேன். ஆனால் என் பிள்ளையை விட்டு ரொம்பவே விலகி போயிட்டேன். என்கிட்ட அவன் வெளிப் படையா பேசுறதே இல்லை.

ஆனால் இந்த குடும்பத்துல என்கிட்ட மட்டும் தான் இந்த அளவுக்காச்சும் பேசுறான். அந்த மட்டிலும் நான் சந்தோஷப்பட தான் வேணும் என்று நடராஜன் நினைத்துக் கொண்டார்.

அவரின் அமைதியை கண்ட விக்ரம் அவரது கையை தட்டிக் கொடுத்து அவரை பார்த்து முறுவலித்தான்.

அதிலேயே அவர் மனம் நிறைந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

அவனது வேலை மற்றும் அரசியல் என்று பொதுப் படையான விஷயங்களை பேச ஆரம்பித்தார்கள். அப்பொழுது செல்வம் அங்கே வந்தான்.

''என்ன செல்வம் நீ மட்டும் வந்திருக்கே. சந்திரலேகா எங்கே?'' என்று நடராஜன் கேட்டார்.

"அவளோட பிரண்டு வீட்டிலே விட்டுட்டு வந்திருக் கேன்பா."

"அவள் எப்போ வருவாள்?" என்று சிவகாமி கேட்ட தற்கு,

"சாப்பிட வந்துடுவாள்மா." என்று செல்வம் கூறிய பதிலை கேட்ட விக்ரமிற்கு ஒரு இகழ்ச்சி முறுவல் தோன்றியது.

செல்வம் அங்கே வந்து அமர்ந்ததும் விக்ரம் எழுந்து சென்று விட தான் எண்ணினான்.

ஆனால் அப்படி எழுந்து சென்றால் அது தவறாகப் படும் என்ற ஒரே காரணத்தால் அங்கேயே அமர்ந்து பொழுதை ஓட்டினான்.

பத்து நிமிடங்களில் செல்வமே அந்த இடம் விட்டு எழுந்து செல்ல விக்ரம் ஆசுவாசப்பட்டுக் கொண் டான்.

நல்ல அண்ணன் தம்பி. வளர்ந்த பின் ஏதாவது ஒரு சண்டையினால் தான் இப்படி பிரிந்து நிற்கிறார்களா என்றால் அது தான் இல்லை.

இவர்களுக்கு இடையே பாசப் பிணைப்பு என்றுமே இருந்ததில்லை என்பது தான் உண்மை.

அறியாத வயதில் சகோதரர்களிடையே சின்னச் சின்ன விஷயங்களுக்கு சண்டை வருவது எல்லா குடும்பத் திலும் நடக்கும் ஒரு இயல்பான விஷயம்.

அது காலப்போக்கில் மாறிவிடும். ஆனால் இங்கே எதுவுமே மாறவில்லை. மாற்ற வேண்டிய பொறுப்பு

அந்தக் குழந்தைகளின் பெற்றவர்களின் கையில் தான் உள்ளது.

நடராஜனோ வெளியூரில் இருந்ததால் அவருக்கு பாதி சண்டைகள் தெரியவே செய்யாது.

அருகில் இருந்து வளர்த்த சிவகாமியோ பெரிய மகன் சொல்லும் பொய்களையே உண்மை என்று நம்பிக் கொண்டு விசாரிக்காமல் சின்ன மகனை குற்றவாளி யாக்கி தண்டனை வழங்கியதில் விக்ரம் அவர்கள் இருவரிடம் இருந்தும் ஒதுங்கி செல்ல ஆரம்பித்தான்.

அறியாத வயதில் தன் பக்க நியாயத்தை எடுத்து உரைக்க அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் வளர்ந்த பின் அவனுடைய நியாயம் வேறு மாதிரி இருந்தது.

இவங்களுக்கு எடுத்து சொல்லி நான் ஏன் புரிய வைக்கணும்? என் மேல இவங்களுக்கு நம்பிக்கை இல்லைன்னா நான் என்ன செய்ய முடியும்?

நான் தப்பு செய்யலைன்னு இவங்களுக்கு நிரூபிச்சு நல்லவன் பட்டம் வாங்கி எனக்கு ஒண்ணும் ஆகப் போறதில்லை.

நான் முரடன், முசுடுன்னே இவங்க நினைச்சுக் கட்டும். அதனால எனக்கு ஒண்ணும் நஷ்டமில்லை என்று ஒரு வறட்டு பிடிவாதத்தை சுமந்து கொண்டு ஒதுங்கி கொண்டான்.

அவனது பள்ளி இறுதியாண்டும், கல்லூரிப் படிப்பும் விடுதியில் கழிந்ததில் அவனது அந்த ஒதுக்கம் அப் படியே நிலைத்து போக அவை உதவி செய்தன.

# 22

கயல்விழி பகல் ஒரு மணி வரை சமையல் அறையே கதி என்று கிடந்தாள்.

சிவகாமி கூட கயல்விழியிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு அவ்வப்போது வரவேற்பறை சோபாவில் வந்து அமர்ந்து தொலைக்காட்சியை பார்வையிட்டார்.

சமையலை முடித்து விட்டு வந்த கயல் தன் கணவனிடம் வந்து, ''சாப்பிடுறீங்களா? சமையல் முடிச்சுட்டேன்.'' என்று கேட்பதற்கும் சந்திரலேகா வீட்டிற்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

''அத்தை! சாப்பாடு ரெடியா? பல்லவிக்கு செம பசி போல. ஆட்டோவில் வரும் போது பசிக்குது பசிக்கு துன்னு சொல்லிக்கிட்டே வந்தாள்.'' என்று உள்ளே நுழைந்ததும் சந்திரலேகா கூறினாள்.

''ரெடியா தான்மா இருக்கு.'' என்று மூத்த மருமகளிடம் உரைத்த சிவகாமி,

தன் இளைய மருமகளிடம் திரும்பி, ''சாப்பாட்டை எல்லாம் டைனிங் டேபிளில் எடுத்து வைம்மா.'' என்று கூறினார்.

சந்திரலேகா தங்கள் அறைக்குள் சென்று சாப்பிடு வதற்கு தன் கணவனை அழைத்து வந்தாள்.

செல்வம் உணவு மேஜை முன் அமர்ந்தான். பல்ல வியோ தொலைக்காட்சி முன் அமர்ந்து கார்ட்டூன் சேனலில் மூழ்கிப் போனாள்.

''என்ன சமையல் இன்னைக்கு?'' என்று கயல் விழியிடம் லேகா விசாரித்தாள்.

அவள் கேட்ட கேள்விக்கு பதில் கூறிய கயலிடம், ''இது என்ன ஒரு பாத்திரம் தனியா இருக்கு.'' என்று விசாரித்தாள்.

''அவர் இறால் சாப்பிட மாட்டார்கா. அதனால அவ ருக்கு மட்டும் சிக்கன் செஞ்சிருக்கேன்.'' என்று சொன்ன கயல் உணவினை மேஜையில் கொண்டு வந்து வைக்க ஆரம்பித்தாள்.

கயல்விழி தன் கணவனிற்காக சமைத்த கோழி குழம்பை தவிர மீதி அனைத்தையும் உணவு மேஜைக்கு எடுத்து சென்று வைத்தாள்.

இந்த கயல் எதுக்கு எல்லாத்தையும் செய்யுறாள். சமைச்சதோட ஒதுங்க வேண்டியது தானே! சமைச்சதை எடுத்துட்டு வந்து இந்த அம்மாவுக்கு பரிமாற வேற செய்யணுமா?. என்று விக்ரம் கடுப்பானான்.

அவன் தங்கள் அறைக்குள் சென்று, ''கயல்! இங்கே வா!'' என்று அழைத்தான்.

''இதோ வரேன் மாமா.'' என்று குரல் கொடுத்தவள்,

''எல்லாத்தையும் எடுத்து வச்சுட்டேன் அத்தை'' என்று சிவகாமியிடம் சொல்லிவிட்டு தங்கள் அறை நோக்கி சென்றாள்.

அறைக்குள் நுழைந்தவள், "எதுக்கு மாமா கூப்பிட் டீங்க?" என்று கேட்டாள்.

"சும்மா தான். இங்கே உட்கார்."

"சும்மா கூப்பிட்டீங்களா? சாப்பிட வர வேண்டியது தானே. வாங்க போவோம்."

"அவங்க சாப்பிட்டு முடிக்கட்டும். அப்புறமா நாம போய் சாப்பிடலாம்."

"அக்கா சாப்பிடலை மாமா. பல்லவிக்கு தான் சாப்பாடு போடப் போறாங்க. உங்க அண்ணன் வந்து உட்கார்ந்து இருக்கார். நீங்க அவர் கூட சேர்ந்து முதல்ல சாப்பிடுங்க."

"நீ இன்னும் பச்சை பிள்ளையாவே இருக்கியே கயல்." என்று கூறி நகைத்தான்.

"இப்போ எதுக்கு சிரிக்கிறீங்க?"

"பல்லவியை கண்டுக்காமல் உங்க அக்கா சாப் பாட்டை ஒரு வெட்டு வெட்டிக்கிட்டு இருப்பாங்க. நீ வேணா இங்கே இருந்தே எட்டிப் பாரு."

"உங்களுக்கு எல்லாத்திலும் விளையாட்டு தான்." என்றவள் அவனை திட்டிக் கொண்டே அறை வாயிலில் இருந்து எட்டிப் பார்த்தாள்.

விக்ரம் சொன்னபடி தான் அங்கே காட்சி ஓடிக் கொண் டிருந்தது. பல்லவி சோபாவில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருக்க லேகாவும் செல்வமும் சாப்பிட்டு கொண்டிருந்தார்கள்.

அறைக்குள் மீண்டும் வந்தவள், "எப்படி பார்க்காமலே கரெக்ட்டா சொன்னீங்க?" என்று ஆச்சரியப்பட்டாள்.

''அவங்களை எனக்கு தெரியாதா? அதை விடு. உன் முகமெல்லாம் எப்படி வேர்த்து வடியுது பாரு. போய் முகம் கழுவிட்டு வா.'' என்றதும் அவள் துண்டை எடுத்துக் கொண்டு சென்று முகம் கழுவி விட்டு வந்தாள்.

''நீங்க சொன்னபடி முகம் கழுவியாச்சு. வாங்க சாப்பிட போகலாம்.''

''அவங்க சாப்பிட்டு முடிக்கட்டும் கயல்.''

''இப்படி ஒதுங்கி ஒதுங்கி போனால் எப்படி மாமா உறவு நிலைக்கும்?''

''நான் பேசாமல் ஒதுங்கி போறதால தான் இந்த அள வுக்காவது உறவு தொக்கிக்கிட்டு நிக்குது. இல்லைன்னா எப்பவோ அந்து போயிருக்கும். அதெல்லாம் உனக்கு சொன்னால் புரியாது. போகப் போக நீயே புரிஞ்சுக்குவே.''

''கால் மணி நேரம் கடந்ததும், அவங்க சாப்பிட்டு முடிச்சுட்டாங்களான்னு பாரு.'' என்றான்.

அவள் அறை வாயிலில் நின்று கொண்டு எட்டிப் பார்த்தாள். செல்வமும் லேகாவும் வரவேற்பறை சோபா வில் அமர்ந்திருந்தார்கள். லேகா தன் மகளுக்கு உண வினை ஊட்டிக் கொண்டிருந்தாள்.

''அவங்க சாப்பிட்டு முடிச்சுட்டாங்க. வாங்க நாம போய் சாப்பிடலாம்.'' என்றதும் விக்ரம் எழுந்து சென்றான்.

சாப்பாட்டு மேஜையை நோக்கி நடந்தவாறே, ''வாங் கப்பா சாப்பிடலாம்.'' என்று விக்ரம் தன் தந்தையை அழைத்தான்.

நடராஜனும் தன் இளைய மகனுடன் உணவு உண்ண நாற்காலியில் அமர்ந்தார்.

''அத்தை! நீங்க வரீங்களா?'' என்று சிவகாமியை கயல் அழைக்க, அவரும் வந்து அமர்ந்தார்.

முதலில் தன் மாமனார் மற்றும் மாமியாருக்கு உணவினை கயல் பரிமாற ஆரம்பித்தாள். அவர்கள் சாப்பிட ஆரம்பித்தனர்.

அதன் பின் விக்ரமிற்கு சாதத்தை தட்டில் வைத்தவள் கோழி குழம்பை எடுப்பதற்காக சமையல் அறைக்கு சென்றாள். அங்கே காலி பாத்திரமே அவளை வரவேற்றது.

இது என்னடா சோதனை? மொத்த குழம்பையும் காணோம்? லேகா அக்கா சாப்பிட்டாங்களா? அவங்க கிட்ட சொல்லிட்டு தானே போனோம். என நினைத்து குழம்பினாள்.

நேரே லேகாவிடம் சென்றவள், ''அக்கா! சிக்கன் குழம்பை காணோம். நீங்க பார்த்தீங்களா?'' என்று இழுத்தாள்.

அவளுக்கு அப்படி கேட்பதற்கு ரொம்பவே தயக்கமாக இருந்தது.

''பல்லவிக்கு சிக்கன் பிடிக்கும்னு எடுத்து ஊட்டிக்கிட்டு இருக்கேன். அது ஒரு குத்தமா? குழம்பை காணோம்னு கேள்வி கேட்டுட்டு வந்து நிக்கிறே?'' என்று கயலிடம் நக்கலாகக் கேட்டவள்,

இருந்த இடத்தில் இருந்து கொண்டே, ''ஏன் அத்தை உங்க பேத்திக்கு இந்த வீட்டுல சமைச்ச சாப்பாட்டை

எடுத்து சாப்பிட உரிமை இல்லையா?'' என்று ஒரு சண்டைக்கான வித்தை தொடங்கி வைத்தாள்.

''என் பேத்திக்கு இல்லாத உரிமை இங்கே யாருக்கு இருக்கு?'' என்று பெரிய மருமகளிடம் சொன்ன சிவகாமி,

''சின்ன பிள்ளை சாப்பிடுறதை எல்லாம் எதுக்கு கணக்கு பார்க்கிறே? உங்க வீட்டுல உனக்கு இதை தான் கத்து குடுத்தாங்களா?'' என்று சின்ன மருமகளிடம் பொரிந்தார்.

கயலுக்கு கண்ணோரம் நீர் துளிர்க்க ஆரம்பித்தது. அதை யாருக்கும் முக்கியமாய் தன் கணவனுக்கு காட்டக் கூடாது என்று நினைத்தாள்.

தன்னுடைய அழுகை கூட ஒரு சண்டைக்கு வித் தாய் அமைந்து விடும் என்று பயந்து அதை உள் இழுத்துக் கொண்டாள்.

விக்ரம் அமைதியாக, ''கயல்! நீ போய் அந்த குழம்பு பாத்திரத்தை எடுத்துட்டு வா.'' என்றான்.

அவள் வெறும் சட்டியை கொண்டு வந்து அவன் முன் நீட்டவும், நடராஜன் குழம்பினார்.

''என்மா சந்திரலேகா! மொத்த பாத்திரமும் காலியா இருக்கு. மொத்த குழம்பையுமா பல்லவி சாப்பிட்டாள்?'' என்று நடராஜன் பெரிய மருமகளிடம் கேட்டார்.

''மதியம் வச்ச இறால் உருண்டை குழம்பு நைட் சாப் பிட்டால் தான் உப்பு உறைப்பு எல்லாம் ஏறி நல்லா இருக்கும். அதனால நானும் இவரும் கொஞ்சம் சிக்கனை டேஸ்ட் பார்த்தோம்.'' என்று மாமனாரிடம் பதில் சொன்ன லேகா,

தன் கணவனிடம் திரும்பி, "என்னங்க பேசாமல் இருக்கீங்க. உங்க வீட்டுல நாம சாப்பிட்டதை எல்லாம் கணக்கு கேட்கிறாங்க. இதெல்லாம் என்ன ஏதுன்னு விசாரிக்க மாட்டீங்களா? உங்க பேச்சை கேட்டு உங்க வீட்டுக்கு வந்ததுக்கு நல்ல மரியாதை கொடுக்கிறாங்க." என்று கடுப்பாய் மொழிந்தாள்.

விக்ரம் தன் கண்களை மூடி தன் கோபத்தை கட்டுப் படுத்திக் கொண்டான்.

"நீ ஏன்மா லேகா கோபப்படுறே? நீ அமைதியா இரு. கயல் புதுசு இல்ல. அதான் அவளுக்கு ஒண்ணும் தெரி யலை." என்று பெரிய மருமகளை சமாதானம் செய்த சிவகாமி,

சின்ன மருமகளிடம் திரும்பி, "கயல்! விக்ரமுக்கு சாதத்தில் ரசம் ஊத்து. நான் எப்போ இறால் உருண்டை குழம்பு செஞ்சாலும் அவனுக்கு ரசம் சாதம் தான் போடு வேன். நீ தான் புதுசா அவனுக்குன்னு சிக்கன் சமைக் கிறேன்னு செஞ்சு வச்சே." என்றதும் கயல்விழி அதிர்ந்தாள்.

கயல்விழி அசையாது நிற்கவும்...

"நான் சொல்லுறது காதிலே விழலையா கயல்? ரசம் ஊத்து. சேப்பங்கிழங்கு சிப்ஸ் பண்ணின இல்ல. அதை குடுத்து சாப்பிட சொல்லு." என்று மீண்டும் வலியுறுத் தினார்.

விக்ரம் தன் மனைவியிடம், "கயல்! நீ அவங்ககிட்ட சிக்கன் எனக்காக சமைச்சிருக்கேன்னு சொன்னியா?" என்று விசாரித்தான்.

"ஆமாங்க. நீங்க இறால் சாப்பிட மாட்டீங்கன்னு உங்களுக்காக சிக்கன் சமைச்சதா அக்காகிட்ட சொன்னேன். அதை மட்டும் கிட்சனில் தனியா தான் வச்சிருந்தேன்."

விக்ரம் தன் தட்டில் இருந்த சாதத்தை பாத்திரத்தில் திரும்ப கொட்டினான். பின் தன் மனைவியை பார்த்து கேள்வி எழுப்ப தயாரானான்.

நடராஜன் அதிர்வோடு தன் மகனை பார்த்தார். மகன் ஏதோ ஒரு முடிவிற்கு வந்து விட்டதாகவே அவருக்கு தோன்றியது.

"உன் மாமியார் ஊருக்கு வாங்கன்னு ஒரு போன் பண்ணி சொன்னதும் திருச்சிக்கு போகணும்னு உண்ணா விரதம் எல்லாம் இருந்தியே. இதுக்கு தானா?"

கணவனின் அடக்கப்பட்ட கோபத்தை கண்ட கயல்விழி மிரண்டு போய் விழித்தாள்.

"இன்னொரு தரம் திருச்சிக்கு போகணும்னு சொல்லுவியா?" என்று மீண்டும் அவளிடமே கேட்டான்.

இதுக்கு நான் என்ன பதிலை சொல்ல முடியும்? ஆமாம்னு சொன்னால் இவர் மேலும் கத்துவார். அத்தை மாமா முன்னாடி திருச்சிக்கு வர ஆசைப்பட மாட்டேன்னு எப்படி சொல்ல முடியும்? என நினைத்து அமைதி காத்தாள்.

அவள் அமைதியாக நிற்கவும், "நான் உன்னை தான் கயல் கேட்கிறேன். நான் கேள்வி கேட்டால் பதில் சொல்லணும். இனிமேல் இங்கே வர ஆசைப்படுவியா?" என்று அழுத்தம் திருத்தமாய் மீண்டும் கேட்டான்.

அவள் தன் மாமனார் மற்றும் மாமியார் மீது பார்வையை பதித்துக் கொண்டு ஒரு பயத்துடனே இல்லை என்று தலையாட்டினாள்.

"போய் பெட்டியிலே நம்ம திங்க்ஸை எடுத்து வை."

"அசைவ சாப்பாடு இல்லைன்னா உனக்கு சாதம் இறங்காதா விக்ரம்? இது ஒரு பிரச்சனைன்னு சண்டை போடுறே?" என்று சிவகாமி கேட்டார்.

"இப்போ பிரச்சனை அசைவ சாப்பாட்டில் இல்லை. உங்களுக்கு என் மேல உள்ள அக்கறையில இருக்கு."

"அப்படி என்ன எனக்கு உன் மேல அக்கறை இல்லாமல் போச்சு?"

"உங்க அக்கறையை நான் படம் போட்டு காட்டட்டுமா? இப்போ என்னை எதை சாப்பிட சொன்னீங்க?"

"ரசமும் சேப்பங்கிழங்கும்." என்று சிவகாமி பதில் அளிக்கவும்,

அங்கே நின்று கொண்டிருந்த கயலிடம், "நீ ஏன் அதை எனக்கு வைக்காமல் பேசாமல் நின்னே?" என்று விசாரித்தான்.

"உங்களுக்கு ரசம் சுத்தமா பிடிக்காது. சேப்பங்கிழங்கு சாப்பிட்டால் அலர்ஜி வரும்." என்று கயல் தயக்கத்தோடு பதிலளித்தாள்.

"எனக்கும் இவளுக்கும் கல்யாணமாகி எவ்வளவு நாள் ஆகுது? எனக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காதுன்னு அவளுக்கு தெரிஞ்சு இருக்கு. ஆனா என்னை பெத்த உங்களுக்கு தெரியலை." என்றதும் சிவகாமி பதில் கூற முடியாமல் வாயடைத்து போய் நின்றார்.

“பெரிய மகனுக்கு பிடிக்கும்னு ஒவ்வொரு தடவையும் இறால் குழம்பு செஞ்ச நீங்க எனக்கு சுத்தமா பிடிக்காத ரசத்தை தான் இத்தனை வருஷமா குடுத்தீங்க. நானும் நாம இந்த வீட்டுக்கு வேண்டாத பிள்ளை தானே. அத னால இப்படி தான் நம்மளை கவனிப்பாங்கன்னு பேசா மல் சாப்பிட்டு விட்டு போய் இருக்கேன்.”

“நீ எங்களுக்கு வேண்டாத பிள்ளையா? என்ன விக்ரம் இப்படி பேசுறே?” என்று நடராஜன் தழுதழுத்தார்.

“வேற எப்படிப்பா நினைக்க சொல்லுறீங்க? என்னைக் காவது அம்மா என் பக்கத்து நியாயத்தை புரிஞ்சுக்கிட்டு இருக்காங்களா? இல்லை என்ன நடந்துச்சுன்னு கேட்டு தெரிஞ்சுக்கணும்னு நினைச்சிருக்காங்களா? எதையுமே விசாரிக்காமல் அவங்களாவே ஒரு தீர்ப்பு சொல்லிட்டு போய்கிட்டே இருப்பாங்க.”

“அப்படி என்னடா விசாரிக்காமல் தீர்ப்பு சொல்லிட் டேன்.” என்று சிவகாமி எகிறினார்.

“பழைய விஷயத்தை எல்லாம் நான் கிளற விரும் பலை. நேத்து நடந்ததையே எடுத்துக்குவோம். நேத்து நீங்க கிளம்பி துக்க வீட்டுக்கு போயிட்டீங்க. நானும் கயலும் சாயங்காலம் கோவிலுக்கு போகணும்னு நான்-வெஜ் சாப்பிட வேண்டாம்னு முடிவு பண்ணி மதியம் தயிர் சாதமும் ஊறுகாயும் சாப்பிட்டோம்.

“கோவிலுக்கு கிளம்பும் போது உங்க பெரிய மருமகள் கிட்ட கயல் என்ன சொல்லிட்டு போனாள். எங்களுக் கான குழம்பு பிரிஜ்ஜில் இருக்கு. நாங்க வந்து தோசை சுட்டு சாப்பிட்டுக்கிறோம். நீங்க உங்க சாப்பாட்டை மட்டும் கவனிச்சுக்கிட்டால் போதும்னு சொன்னாள்.

''ஆனால் அவங்க என்ன செஞ்சாங்க? எல்லாத்தையும் சாப்பிட்டு விட்டு சட்டியை கழுவி வச்சிட்டாங்க. நாங்க ஏதாச்சும் கேட்டோமா?

''சரி போகுது. நாம சாப்பிடாத சிக்கன் குழம்பான்னு நினைச்சு கயலும் சட்னி அரைக்க ரெடி பண்ணிக்கிட்டு இருந்தாள். அதுக்கு உங்க பெரிய மருமகள் என்ன சொன்னாங்க... பல்லவி தூங்கிறாள். சட்னி அரைக் கிறேன்னு மிக்ஸி ஓட்டக் கூடாதுன்னு சொன்னாங்க.

''அங்கே வந்த நீங்க என்ன ஏதுன்னு விசாரிச்சீங்களா? இல்லையே! அது என்ன கயல் எதிர்த்து பேசுறது. இப்படி தான் பேச உங்க வீட்டுல சொல்லிக் குடுத்தாங்களான்னு கேட்டீங்க.

''நான் தெரியாமல் தான் கேட்கிறேன். உங்க அம்மா உங்களுக்கு என்ன சொல்லி குடுத்தாங்க? ஒரு பிள்ளை கண்ணுல வெண்ணெயையும் இன்னொரு பிள்ளை கண்ணுல சுண்ணாம்பையும் வைக்கவா சொல்லி குடுத்தாங்க?

''ஒரு பிள்ளைக்கு ரெண்டு வேளையும் கறி சாப்பாடு போடுறீங்க. இன்னொரு பிள்ளையை பட்டினி போடு றீங்க. இது தான் உங்க நியாயமா?'' என்று சிவகாமி யிடம் கேட்டவன்,

தன் தந்தையிடம் திரும்பி, ''என் வீட்டுல சாப்பாடு இல்லாமலாப்பா இங்கே வந்தோம்? சொந்த வீட்டுல ஒரு வாய் சாப்பாடு கூட எங்களுக்கு இல்லைன்னா நான் இந்த வீட்டுக்கு வேண்டாத பிள்ளை தானேப்பா?'' என்று கேட்டான்.

நடராஜனால் அவனுக்கு எந்த பதிலையும் சொல்ல முடியவில்லை. அவரின் கண்கள் நீரால் நிறைந்தன.

“சட்னியை அரைக்க விடலைன்னதும் நீங்க அப்பவே எங்களுக்காக சட்னி அரைச்சு வச்சிருக்கலாமே அக் கான்னு கயல் கேட்டதுக்கு உங்க மருமகள் என்ன சொன் னாங்க தெரியுமா? நான் எதுக்கு உனக்கு வேலை செய்யணும்? நான் என்ன உனக்கு வேலைக்காரியான்னு கேட்டாங்க.”

“நேத்தும் சரி இன்னைக்கும் சரி சமைக்க வேண்டிய நேரத்திலே அவங்க வெளியே போயிட்டாங்க. கயல் தானே சமைச்சு வச்சாள். அப்போ என் பொண்டாட்டி என்ன வேலைக்காரியா? அவள் எதுக்கு இவங்களுக்காக சமைச்சு வைக்கணும்?”

அதுவரை அமைதியாய் வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்த சந்திரலேகா இடைபுகுந்தாள்.

“என்னோட ஸ்டேட்டஸ் என்ன அவளோட ஸ்டேட் டஸ் என்ன?”

“எப்போ நான் அவளை கல்யாணம் பண்ணிக்கிட் டேனோ அப்பவே இந்த விக்ரமோட ஸ்டேட்டஸ்தான் அவளோடது. அதை புரிஞ்சுக்கிட்டு பேசுங்க.”

“அப்படி பார்த்தாலும் என்னை விட கம்மி தான். எனக்கு ஓசூர்ல சொந்தமா வீடு இருக்கு. ஆனா உங்களுக்கு இருக்கா?”

“இந்த உலகத்திலேயே மிக சிறந்த ஜோக் இது தான். ஓசூர்ல சொந்த வீடு எப்படி வந்துச்சு? எங்க அப்பா வோட ரிட்டயர்மெண்ட் பணம் உங்க வீடா மாறுச்சு.

என்னமோ சொந்தமா சம்பாதிச்சு வாங்கின மாதிரி அலட்டிக்கிறீங்க.''

''ஆனால் நான் என்னோட சம்பாத்தியத்துல வீடு வாங்கி இருக்கேன். நான் டெல்லில இருந்த வீடும் என்னோடது தான். இப்போ சென்னையிலே இருக்கிற வீடும் என்னோடது தான். அதனால கயல் ஸ்டேட்டஸ் தான் உசந்தது. இனிமேல் யோசிச்சு பேசுங்க.''

''ஐ.டி.ஐ படிச்ச நீங்க ரெண்டு வீடு சொந்தமா வச்சிருக்கீங்களா? இதெல்லாம் நம்புற மாதிரியா இருக்கு.''

''என்னது ஐ.டி.ஐ படிச்சேனா? அப்படின்னு யாரு சொன்னது?'' என்று விக்ரம் எகத்தாளமாய் கேட்டதும், லேகா தன் கணவனின் புறம் திரும்பிப் பார்த்தாள்.

''அவன் ஐ.டி.ஐ படிச்சதா நான் எப்போ சொன்னேன்? அவன் ஐ.ஐ.டில இல்ல படிச்சான்.'' என்று செல்வம் விளக்கினான்.

''என்னது! உங்க தம்பி ஐ.ஐ.டில படிச்ச இஞ்சினியரா?! அப்போ சாதாரண கம்பெனில லேபரா வேலை செய்யலையா?'' என்று கேட்கும் பொழுதே அவளது சுருதி இறங்கியது.

''ஓ! இத்தனை நாளா நான் சாதாரண தொழிலாளின்னு நினைச்சுக்கிட்டு தான் என்னை இந்த அளவுக்கு அவமரியாதை செஞ்சாங்களா?''

'எனக்கு மரியாதை தருவதுக்கு செல்வத்தோட தம்பி, இந்த வீட்டில் பிறந்தவன், அவங்களை விட வயதில் பெரியவன் இப்படி எந்த தகுதியும் இவங்க கண்ணுல படலையா? பணம் மட்டும் தான் பட்டுச்சா? எப்படி

தான் இவங்களோட செல்வம் காலம் தள்ளுறானோ?' என்று விக்ரம் மனதிற்குள் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

# 23

சந்திரலேகாவால் பதில் பேசவும் முடியவில்லை. கயல்விழிக்கு வந்த அதிர்ஷ்டத்தை பொறுத்துக் கொள் ளவும் முடியவில்லை.

விக்ரமிற்கு சொந்தமாய் இரு வீடுகள் இருப்பது அந்த வீட்டில் யாருக்கும் தெரியாது. அதனால் லேகா அவனை மிக மிக சாதாரணமானவனாக எடை போட்டிருந்தாள்.

இந்த ஒண்ணும் இல்லாத கயலுக்கு ரெண்டு வீடு சொந்தமா இருக்கா? அப்போ இந்த திருச்சி வீட்டை நம்ம பேருக்கு எப்படியாவது எழுதி வாங்கிடணும். அப்போ தான் அவளும் நானும் ஒண்ணாக முடியும் என லேகா கணக்கிட்டாள்.

அவளை பொறுத்த வரை கயல் தனக்கு கீழ் இருக்க வேண்டும். அதற்கு அவளை விட வசதியில் தான் உயர்ந்தவளாய் இருக்க வேண்டும் என்ற நினைப்பு.

சிறிதளவு பாசத்தை காட்டினாலே இவள் பின்னே நாய்க்குட்டியாய் சுற்றி வரக் கூடியவள் தான் கயல்விழி.

ஆனால் எதையுமே பணம் கொண்டு மதிப்பிடும் லேகா மாதிரி ஆட்களுக்கு இது எங்கே புரியப் போகிறது?

''உன்னை பெட்டியிலே துணியை தானே அடுக்க சொன்னேன். இங்கே எதுக்கு நின்னுக்கிட்டு இருக்கே?'' என்று விக்ரம் கயலை ஒரு அதட்டல் போட்டான்.

அவள் தங்கள் அறைக்குள் சென்று மறையவும் அவனும் பின்னோடு சென்றான். அடுத்த ஐந்தாவது நிமிடம் பெட்டியோடு தங்கள் அறையில் இருந்து வெளியேறினர்.

''சாப்பிடாமல் எங்கேடா போறே? உனக்கு பிடிச்சதா அம்மா வேற சமைச்சு தரேன்.'' என்று சிவகாமி கூறினார்.

'அப்படி சமைக்கிறவங்களா இருந்திருந்தால் இந்நேரம் நீங்க தொடங்கி இருக்க வேண்டும்.' என்று மனதில் தோன்றியதை அவரது கலங்கி இருந்த கண்களை பார்த்து சொல்லாமல் விட்டான்.

ஆனால் அவனையும் அறியாமல் ஒரு இகழ்ச்சியான முறுவல் அவன் உதடுகளில் தோன்றியது.

அதைக் கண்ட நடராஜனுக்கு மகன் என்ன நினைத்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க முடிந்தது.

''அத்தை! அவங்களை சாப்பிட்டுட்டு போக சொல்லுங்க.'' என்று லேகாவும் கூறினாள்.

''பாருடா! லேகா கூட சொல்லுறாள். கொஞ்ச நேரம் பொறுங்க. அம்மா ஏதாச்சும் செஞ்சு தரேன்.''

''அவங்க எங்க மேல பாசமா சாப்பிட சொல்லுறாங்கன்னு நினைக்கிறீங்களா? அதான் இல்லை. இப்போ நாங்க சாப்பிடாமல் போயிட்டால் சமைச்சது மிச்சமாகிடும். அப்புறமா நைட்டுக்கு ஆறின சாதத்தை சாப்பிட

வேண்டி வந்துடுமேங்குற பயத்துல சாப்பிட சொல்லு றாங்க.'' என்று விக்ரம் நக்கலாக உரைத்தான்.

''அப்படி எல்லாம் இல்லைடா'' என்று மறுத்த கூற சிவகாமி நினைக்க...

லேகாவோ ரொம்பவே தெனாவெட்டாய், ''ஆமா. நீங்க சாப்பிடாமல் வேஸ்ட் பண்ணிட்டு போயிடுவீங்க. நான் ஏன் பழைய சாதம் சாப்பிடணும்?'' என்று விக்ரமிடம் கூறியவள்,

தன் மாமியாரிடம் திரும்பி, ''அத்தை! அந்த சாதத்தை அவங்களுக்கு பார்சல் பண்ணி குடுத்திடுங்க. நாம நைட் டுக்கு புதுசா சாதம் வடிச்சுக்கலாம். இறால் குழம்பை குடுத்திடாதீங்க. அது எங்களுக்கு வேணும்.'' என்று சற்றும் அலட்டாமல் கூறினாள்.

இப்படியும் ஒருவரால் பேச முடியுமா என்று கயல்விழி நம்ப முடியாமல் பார்த்தாள் என்றால், நடராஜனோ வெறுப்பாய் பார்த்தார்.

சிவகாமி கலங்கி போய் நின்றிருந்தார். அவரால் லேகா சொல்வதை ஜீரணிக்கவே முடியவில்லை.

கயல்விழியா சந்திரலேகாவா என்ற கேள்வி வந்த பொழுது அவர் சந்திரலேகாவை ஆதரித்தார். ஆனால் சந்திரலேகாவா விக்ரமா என்று வரும் பொழுது அவர் தான் பெற்ற பிள்ளையை தான் ஆதரிக்க நினைத்தார்.

அதனால் சந்திரலேகா விக்ரமை அலட்சியப் படுத்து வதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

என் வீட்டுல இருந்துக்கிட்டு என் பிள்ளையை பார்த்து இப்படி சொல்ல இவள் யார்? என்று அவருக்குள்ளே கேள்வி பிறந்தது.

ஆனால் அதை தைரியமாக வெளியே சொல்லாமல் ஊமையாய் நின்றிருந்தார்.

அவர் அப்படி சந்திரலேகாவை கேட்டிருந்தால் விக்ரம் தன் வெளிநடப்பு திட்டத்தை ரத்து செய்திருக்கக் கூடும்.

என்றைக்கும் ஒதுங்கியே செல்லும் மகன் இன்றைக்கு நிற்க வைத்து தன்னை குற்றம் சாற்றியதும் அவர் ஆடிப் போய் விட்டார். மகனது குற்றச்சாட்டில் இருந்த உண்மை அவரை சுட்டது. அது அவரை நிலை தடுமாற வைத்து விட்டது.

அவர் அமைதியாய் நின்றிருக்க விக்ரம் கயலை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

செல்வம் தன் தம்பியை தடுத்து எதுவும் கூறவில்லை. தம்பிக்கு ஆதரவாய் ஒரு வார்த்தை கூறினாலும் சந்திரலேகாவிடம் இருந்து தனக்கு தண்டனை நிச்சயம் கிடைக்கும் என்று தெரிந்ததால் அவன் அமைதியாய் நின்று விட்டான்.

சிவகாமியும் நடராஜனும் பின்னோடு விரைந்தார்கள். சிவகாமி நிலை வாசலில் சாய்ந்து கொண்டு நின்று விட்டார்.

அதற்கு மேலும் சில அடிகளை வைத்த நடராஜனும் மகன் அருகே செல்ல முடியாமல் தேங்கி நின்றார்.

தெரு வழியே சென்று கொண்டிருந்த ஆட்டோவை நிறுத்திய விக்ரம் அதில் பெட்டியை வைத்து கயல் விழியை ஏறுமாறு பணித்தான்.

அவன் அந்த ஆட்டோவில் ஏறாமல் திரும்பிப் பார்த்தான். கலங்கிய கண்களுடன் நின்றிருக்கும் தன்

பெற்றோரை கண்டவனால் அதற்கு மேல் அப்படியே செல்ல முடியவில்லை.

அவன் தன் தந்தையை நோக்கி இரு எட்டுக்கள் வைத்தான். அவர் வேகமாய் மகனை நோக்கி வந்தார்.

''சாரிப்பா. அட்ஜஸ்ட் பண்ணிட்டு வழக்கம் போல பேசாமல் போயிடனும்னு தான் நினைச்சேன். ஆனால் என்னையும் மீறி வார்த்தையை விட்டுட்டேன்.''

''அம்மா பண்ணது எல்லாம் சரின்னு நான் சொல்ல மாட்டேன். அதுக்காக இப்படி சொல்லிக்காமல் கூட கிளம்பிடுவியா விக்ரம்?'' என்று நடராஜன் தழுதழுத்தார்.

சிவகாமியும் மகன் அருகே வந்து, ''இனிமேல் வீட்டுக்கு வரவே மாட்டியாடா?'' என்று கேட்டு கலங்கினார்.

''அப்படி நான் சொல்லுற அளவுக்கு பெருசா எதுவும் நடக்கலைம்மா. அப்படியே நடந்தாலும் நீங்க தானே என்னோட அம்மா அப்பா. அது மாற போறதில்லையே. ஆனால் உங்க பெரிய மருமகள் இங்கே வரும் போது எங்களை வர சொல்லாதீங்க. அவங்களுக்கு என்னை சுத்தமா பிடிக்காது.''

''அப்படி எல்லாம் இல்லை விக்ரம்.'' என்று சிவகாமி இடைமறிக்க,

''அப்படி இல்லாமலா அந்த குழந்தை மனசிலே கூட அவங்க விஷத்தை கலந்திருக்காங்க. பல்லவி பேச ஆரம்பிச்ச நாளில் இருந்து சித்தப்பா கெட்டவர்னு சொல்லுறாள். யாரும் சொல்லிக் கொடுக்காமல் ஒரு குழந்தை வாயில் இருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வராதும்மா. நான் கிளம்புறேன்.'' என்றவன் அதற்கு மேல்

அங்கே நிற்காமல் திரும்பி சென்று ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டான்.

''பல்லவி ஒரு குழந்தை. அவள் என்ன சொன்னாளோ! அது இவன் காதில் எப்படி விழுந்துச்சோ! அதை போய் தப்பா எடுத்துக்கிட்டு இப்படி பேசிட்டு போறான்.''

''அவன் சொன்னது உண்மை சிவகாமி. பல்லவி நேத்து என் கண் முன்னாடி கூட அப்படி தான் சொன் னாள். கயல் அவளை ஆசையா கூப்பிட்டாள். நீயும் சித்தப்பாவும் ரொம்ப கெட்டவங்கன்னு சொன்னாள். அது தப்புன்னு நாங்க கண்டிச்சோம்.''

வழக்கம் போல அங்கே வந்த நீ என்ன ஏதுன்னு விசா ரிக்காமல் கயலை தான் திட்டினே. பல்லவி மனசிலே கண்டிப்பா நஞ்சை கலந்து இருக்காங்க. இதை செஞ்சது உன் மகனா இல்லை மருமகளான்னு எனக்குத் தெரியாது.''

''இப்போ எதுக்குங்க செல்வத்தை இழுக்குறீங்க?''

''அவன் மட்டும் ரொம்ப ஒழுங்கோ? இவ்வளவு விஷயம் நடக்குது. பார்த்துக்கிட்டு பேசாமல் ஏன் இருக் கான்?''

''அவனுக்கு எப்படிங்க சிக்கன் விக்ரமுக்காக சமைச்சு வச்ச விஷயம் எல்லாம் தெரியும்.''

''நீ சொல்லுறது சரி தான் சிவகாமி. நானும் ஒத்துக் கிறேன். ஆனால் விக்ரம் பேச ஆரம்பிச்ச உடனே அவ னுக்கு விஷயம் தெரிஞ்சது தானே? தப்பு செஞ்சது அவனும் அவன் பொண்டாட்டியும் தான்னு புரிஞ்சிருக் கும் தானே? நியாயமா அவன் என்ன செஞ்சிருக்கணும்? கடையிலே இருந்து ஏதாச்சும் வாங்கிட்டு வரேன்னு ஒரு பேச்சுக்காவது சொல்லி இருக்கணுமா வேண்டாமா?''

"ம்ம்ம் சொல்லி இருக்கலாம்."

"இனிமேல் எதையும் பேசும் முன்னாடி நாலு தடவை யோசி சிவகாமி."

"நான் தப்பு பண்ணுறேனா?"

தப்பை மட்டும் தான் பண்ணிக்கிட்டு இருக்கே என்ற உண்மையை அவரால் சொல்ல முடியாமல் அமைதி காத்தார்.

"வா. வந்து சாப்பிடு."

"அவன் சாப்பிடாமல் போயிட்டானே."

"போகிற வழியிலே சாப்பிடுவான். இன்னைக்கு தேதியில் சாப்பாட்டை வேஸ்ட் பண்ணுறவன் மனுஷனே கிடையாது. அதனாலே தட்டிலே வச்சதை வேஸ்ட் பண்ணாமல் சாப்பிடலாம்." என்று கூறி தன் மனைவியை அழைத்து சென்றார்.

விக்ரம் கயல்விழியை ஒரு உணவகத்திற்கு அழைத்து சென்றான். அங்கே பெயருக்கு சாப்பிட்டு முடித்தவர்கள் பேருந்து நிலையத்திற்கு சென்று மதுரை செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தனர்.

கயல்விழிக்கு தன் தாய் வீட்டிற்கு போவது குறித்த சந்தோஷம் கூட எழவில்லை. மனம் முழுவதும் குழப்பமே எஞ்சி நின்றது.

நடந்த பிரச்சனைக்கு முடிவு எப்படி இருக்கும்? அத்தை என்ன சொல்லுவாங்க? என்கிட்ட போனில் ஏதாச்சும் தனியா சண்டை போடுவாங்களா? நான் என்ன சொல்லி சமாளிக்கணும்?

இனிமேல் இவர் அத்தை வீட்டுக்கு போக மாட்டாரா? என்ன முடிவு எடுப்பார்? என்ற கேள்விகள் அவளுக்குள் வண்டாய் குடைந்தன.

''நான் வந்து தான் பெத்தவங்ககிட்ட இருந்து பிள்ளையை பிரிச்சுட்டேன்னு சொல்லுவாங்களா? அத்தை சொல்லுறாங்களோ இல்லையோ இந்த லேகா அக்கா கண்டிப்பா சொல்லுவாங்க.'' என்று எண்ணி வருத்த மடைந்தாள்.

தன் போக்கில் எதை எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தவள் கணவன் தன்னை தட்டி அழைக்கவும் அவன் புறம் திரும்பி கேள்வியாய் அவனை நோக்கினாள்.

''நான் கூப்பிடறது கூட தெரியாத அளவுக்கு என்ன யோசிக்கிறே?''

''ஒண்ணுமில்லை. சும்மா ஏதோ யோசனை.''

அவளது சமாளிப்பை கண்டு கொள்ளாமல் விட்டவன், ''கயல்! ஏன் நாளைக்கு வராமல் இன்னைக்கே வந்துட்டீங்கன்னு உங்க அம்மா கேட்டால் என்ன சொல்லுவே?'' என்று கேட்டான்.

''நான் என்ன மாமா சொல்லணும்?'' என்று அவள் கேட்கவும் புன்னகைத்தான்.

''இங்கே நடந்த எதையும் நீ உங்க வீட்டுல சொன்னால் எனக்கு பிடிக்காது கயல். எங்க வீட்டுல நடந்த விஷயம்னு இல்லை... நாளைக்கே உங்க வீட்டுல ஒரு பிரச்சனை நடந்தாலும் அதை எங்க அம்மா அப்பாகிட்ட சொன்னாலும் எனக்கு பிடிக்காது. அந்தந்த வீட்டு விஷயம் அங்கேயே நிக்கணும்.''

''ம்ம்ம்.''

''இது வரைக்கும் எல்லாத்தையும் உங்க அம்மாகிட்ட ஒளிவு மறைவில்லாமல் பேசி இருப்பே. ஆனால் இனி கொஞ்சம் கொஞ்சம் மறைக்க பழகு.''

''நான் நமக்குள்ள நடக்கிற எந்த சண்டையையும் எங்க அம்மாகிட்ட சொன்னதில்லை. அதே மாதிரி இதையும் மறைச்சுடுறேன்.''

''நாம எப்போ சண்டை போட்டோம்?'' என அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

''எங்க அம்மாகிட்ட என்ன சொல்லணும்னு நீங்க சொல்லவே இல்லையே.''

''எனக்கு ஒரு அர்ஜென்ட் வேலை வந்ததால நான் அவசரமா சென்னைக்கு போறேன். போறதுக்கு முன்னாடி உன்னை மதுரையிலே விட்டுட்டு போறேன்னு சொல்லு.''

''அப்போ இன்னைக்கே நீங்க ஊருக்கு போறீங்களா?''

''ஆமா. உன்னை உங்க வீட்டுல விட்டுட்டு நைட்டே கிளம்பிடுவேன்.''

''எதுக்கு உடனே போகணும்? எங்க வீட்டுல ஒரு நாள் இருங்க. நான் உங்களை நல்லா கவனிச்சுக்கிறேன். உங்களுக்கு பிடிச்சதா பார்த்துப் பார்த்து சமைச்சு போடுறேன்.''

''இல்லை. அது சரி வராது. நான் இன்னைக்கே கிளம்புறேன்.''

''நீங்க நாளைக்கு கிளம்ப தானே பஸ் டிக்கெட் எடுத்தீங்க.''

''முதல்ல போட்ட பிளான்படி நாளைக்கு மதியம் திருச்சியில் இருந்து கிளம்பி உன்னை உங்க வீட்டுல விட்டுட்டு போகலாம்னு அப்படி டிக்கெட் எடுத்தேன். இப்போ தான் பிளான் மாறிடுச்சே. அதை கேன்சல் பண்ணிட்டு புதுசா வேற டிக்கெட் போடுறேன்.''

அவன் தன் அலைபேசியை இயக்கி அன்று இரவு மதுரையில் இருந்து சென்னை செல்லும் பேருந்து ஏதேனும் ஒன்றில் பயணச் சீட்டு இருக்கிறதா என்று சரி பார்க்க ஆரம்பித்தான்.

படுக்கும் வசதி கொண்ட பேருந்தில் இடம் கிடைக்க வில்லை. உட்கார்ந்து கொண்டே செல்லும் பேருந்தில்... அதுவும் கடைசி வரிசை இருக்கையில் தான் இடம் இருந்தது.

வேறு வழியின்றி அவன் அதையே முன்பதிவு செய்தான்.

''கடைசி சீட்டுல உட்கார்ந்தாச்சும் இன்னைக்கே ஊருக்கு போகணுமா? சென்னைக்கு போய் தனியா நானே இருப்பீங்க. அதுக்கு எங்க வீட்டுல ஒரு நாள் இருக்கலாமில்ல. உங்களுக்கு எந்த குறையும் வராமல் நாங்க உங்களை நல்லா கவனிச்சுக்குவோம்.''

''அது சரி வராது கயல். நான் இன்னைக்கு சென்னைக்கு போகாமல் உங்க வீட்டிலே இருந்தேன்னா உங்க அம்மாவும் அப்பாவும் ஏன் இன்னைக்கே திருச்சியில் இருந்து வந்துட்டீங்கன்னு கேட்டால் என்ன பதில் சொல்லுவே?''

''எங்க அம்மா கேட்டால் வேற ஏதாச்சும் பொய் சொல்லுவோம்.''

''காரணம் கேட்டால் வேற ஏதாச்சும் பொய் சொல்ல லாம் தான். ஆனா நான் உங்க வீட்டுல இருந்தா ஒரு ஒப்பீடு வந்துடும்.''

''நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு எனக்குப் புரியலை.''

''இப்போ நான் உங்க வீட்டுல தங்கினால்... நீங்க மாப்பிள்ளை உபச்சாரம் பண்ணுறேன்னு என்னை நல்லா கவனிப்பீங்க தான். ஆனால் கூடவே நீ என்ன செய்வ? எங்க வீட்டுல அப்படி என்னை கவனிக்கலைன்னு சொல்லி காட்டடவே.''

''நான் ஒண்ணும் அப்படி செய்ய மாட்டேன்.''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்கிட்ட சொன் னியே... எனக்கு எந்த குறையும் வராமல் பார்த்துக் கிறேன்னு. அதுவே என் வீட்டையும் உன் வீட்டையும் உன் மனசு ஒப்பிட்டு பார்த்து சொன்ன வாக்கியம் தான். வேணாம் கயல். விட்டுடு.''

அவள் உம்மென்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள். அவன் அவளது வாட்டத்தை கண்டும் காணாமலும் இருந்தான்.

பேருந்து மதுரையை நோக்கி விரைந்து கொண் டிருந்தது.

'இவர் வீட்டுல இவரை கவனிக்கலைன்னா அதுக்கு எங்க மேல ஏன் கோபிச்சுக்கிட்டு போகணும்? நாங்க ஒண்ணும் இவர் சாப்பிட்டாரா தூங்கினாரான்னு கூடவா பார்க்காமல் இருந்திடப் போறோம்?' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டவள் அதிர்ந்தாள்.

'ஆஹா! இதை தானே அவரும் சொன்னார். உன்னையும் அறியாமல் நீ கம்பேர் பண்ணி பார்ப்பேன்னு. அப்படி எல்லாம் செய்ய மாட்டேன்னு வாய் கிழிய சொல்லிட்டு அடுத்த நொடியே நான் அதை தானே செஞ்சுக்கிட்டு இருக்கேன்.' என்று மானசீகமாகக் குட்டிக் கொண்டாள்.

மனம் நிறைய குழப்பம் இருந்த போதிலும், கடந்த இரு தினங்களாய் இரவில் சரியாய் தூங்காமல் இருந்த காரணத்தாலும், ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்ததால் வீசிய காற்றின் வேகத்திலும் கணவனின் தோள் சாய்ந்து தூங்கிப் போனாள்.

# 24

அவர்கள் பயணம் செய்த பேருந்து மதுரை டுத்தாவணி பேருந்து நிலையத்திற்குள் நுழையவும் ம் அவளை உலுக்கி எழுப்பினான்.

தூக்கம் கலைந்து எழுந்தவள், ''ஊர் வந்துடுச்சா?'' என்று ஆச்சரியப்பட்டாள்.

அவர்கள் இருவரும் பேருந்தில் இருந்து இறங்கி வீடு வதற்காக ஆட்டோ பிடிக்க பேருந்து நிலையத்தில் து வெளியே வர ஆரம்பித்தனர்.

''எப்படி இவ்வளவு நேரம் தூங்கினேன்? நீங்க ன முன்னாடியே எழுப்பி இருக்கலாமில்ல. போச்சு. யா மாட்டிக்கிட்டேன்.'' என்று பதறினாள்.

''இப்போ எதுக்கு இவ்வளவு பதட்டம்?''

''நாம வீட்டுக்கு வரப் போகும் விஷயத்தை எங் வீட்டுக்கு போன் பண்ணி சொல்லவே இல்லையே மாப்பிள்ளை வரதை முன்னாடியே சொல்லலைன்னு எங்க அம்மா என்னை பொறிச்சு எடுத்துடுவாங்க.''

''ஹை சூப்பர்! இன்னைக்கு நைட் உன்னையே பொறிக்க சொல்லு. டேஸ்ட் பண்ணி பார்த்துட்டு எப்ப இருக்கேன்னு சொல்லுறேன்.''

''கேவலமா இருக்கு.''

''டேஸ்ட் பண்ணாமலே சொல்லுறே. நீ ருசிய இருக்க மாட்டியா என்ன?''

''நான் உங்க ஜோக்கை சொன்னேன்னு உங்களுக்கே நல்லா தெரியும். என்னை கடுப்பேத்தாதீங்க. உங் போன் தாங்க. நான் வீட்டுக்கு பேசிட்டு தரேன்.''

''உன் போனுக்கு என்ன ஆச்சு?''

''சார்ஜ் போட மறந்துட்டேன். உங்க போனை தாங்க.''

''நீ சார்ஜ் போட மறந்தது என் போனுக்கும் தான்.''

''போனுக்கு சார்ஜை கூட ஞாபகமா போட மாட்டீங் களா?''

''நீ என் லைஃப்ல வரதுக்கு முன்னாடி வரைக்கும் நான் எல்லா வேலையும் தெளிவா தான் செஞ்சேன். நீ வந்த பின்னால நீ தான் எல்லா வேலையையும் இழுத்து வச்சு செஞ்சே. காலையிலே சார்ஜ் போட மறந்துட்டு இப்போ என்னையவே குறை சொல்லுறே.''

''ப்ச். இப்போ எப்படி எங்க வீட்டுக்கு சொல்லுறது?'' என்று அவள் புலம்பிக் கொண்டு இருக்கும் பொழுதே

அவர்கள் ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் நெருங்கி இருந்தார்கள்.

ஆட்டோவில் ஏறி வீடு வரும் வரை அவள் அமைதியாய் இருந்தாள். வீட்டின் முன் இறங்கியதும் மீண்டும் பதட்டமடைந்தாள்.

"நீங்க எங்கேயும் போகாமல் என் பக்கத்திலே இருக்கீங்களா?"

"எதுக்கு?"

"நீங்க என் பக்கத்துல இருந்தால் உங்க முன்னாடி எங்க அம்மா என்னை திட்ட மாட்டாங்க."

"உங்க அம்மாகிட்ட இருந்து நான் உன்னை காப்பாத்துறேன். ஆனா நீ ஒரு பத்து நிமிஷம் வாயை திறந்து எதையும் பேசக் கூடாது. டீல் ஓகேவா?"

"பேசக் கூடாது. அவ்வளவு தானே?"

"என் மேல சத்தியமா பேசக் கூடாது."

'இதுக்கெல்லாமா சத்தியம்?' என்று நினைத்த போதிலும் தன் தாயிடம் இருந்து தப்ப வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் அவன் சொன்னதிற்கு சம்மதம் தெரிவித்தாள்.

அவர்கள் வீட்டிற்குள் நுழையும் முன்பு பின்பக்கத்தில் இருந்து, "வாங்க மாப்பிள்ளை!" என்ற குரல் கேட்டது.

கணேசன் தான் அப்படி வரவேற்றார். அவர் வெளியே சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தார்.

"நல்லா இருக்கீங்களா மாமா?" என்று விசாரித்துக் கொண்டே விக்ரம் வீட்டிற்குள் நுழைந்தான்.

பேச்சுக் குரல் கேட்டு சமையல் அறையில் இருந்து தங்கம் எட்டிப் பார்த்தார்.

''வாங்க மாப்பிள்ளை!'' என்று அவரும் முகம் கொள்ளா பூரிப்போடு விக்ரமை மட்டும் வரவேற்றார்.

'இந்த அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நான் கண்ணுல படவே இல்லையா? வா கயல்னு சொன்னால் குறைஞ்சா போயிடுவாங்க' என்று கயல்விழி உள்ளுக்குள் நொடித்துக் கொண்டாள்.

அவளால் தன் வாயை திறந்து எதையும் பேச முடியாதே! விக்ரம் தான் அவள் வாயை அடைத்து விட்டானே.

என் கூடப் பிறந்தவன் ஒருத்தன் இருப்பானே. அவனை எங்கே ஆளை காணோம்? என்று கயல் தேடிப் பார்த்தாள்.

அழகர் அவள் கண்களுக்கு தென்படவில்லை.

கணேசன் ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கி இருந்த நாற்காலியை பிரித்து போட்டார். விக்ரம் ஒன்றில் அமரவும் கயலும் அமைதியாய் அவனருகே இன்னொரு நாற்காலியில் அமர்ந்தாள்.

அப்பொழுது அழகர் வீட்டுக்குள் வந்தான். அவன் அவர்கள் இருவரையுமே வரவேற்று அவனது சகோதரியின் முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்தினான்.

''அத்தை! நான் கொஞ்சம் வெளியே போய் டிபன் சாப்பிட்டுவிட்டு வந்துடுறேன்.'' என்று சொல்லிக் கொண்டே விக்ரம் எழுந்தான்.

''எதுக்கு மாப்பிள்ளை வெளியே போறீங்க? வீட்டுல சாப்பிடுங்க. நான் டிபன் பண்ணி வச்சிருக்கேன்.''

‘‘டிபன் ரெடியா? இவ்வளவு லேட்டா சொன்னால் எங்க அம்மாவால எப்படி டிபன் ரெடி பண்ண முடியும். அதனால நீங்க வெளியே போய் சாப்பிட்டுக்கோங்கன்னு கயல் தான் சொன்னாள்.’’ என்று போட்டுக் கொடுத்தான்.

உன்னை காப்பாற்றுகிறேன் என்று சொன்னவன் கூசாமல் பொய் சொல்லி தன் மனைவியை தன் மாமி யாரிடம் மாட்டி விட்டான்.

கண்ணகி பரம்பரையாய் தங்கம் தன் பார்வை யாலையே தன் மகளை பஸ்பமாக்கினார்.

பேச முடியாத கயல் இல்லை எனும் விதமாய் தன் தலையை இட வலமாய் ஆட்டினாள். அதை எல்லாம் ஏற்கும் நிலையில் தங்கம் இல்லை.

அடப்பாவி மனுஷா! நான் எப்போ உங்ககிட்ட அந்த மாதிரி சொன்னேன்? இதுக்கு பேரு தான் காப்பாத் துறதா? நான் ஊருக்கு வருவதை சொல்லாமல் இருந் தால் கூட தண்டனை கம்மியா தானே கிடைச்சு இருக்கும். இப்போ எங்க அம்மா என்னை நாலு நாளைக்கு அட்வைஸ் பண்ணுறேன்னு ரம்பம் போடுவாங்களே. என்று உள்ளுக்குள் நொந்து கொண்டாள்.

தன்னால் முடிந்த மட்டும் விக்ரமை கயல் முறைத்து பார்த்தாள்.

‘‘இப்போ எதுக்கு கயல் என்னை முறைக்கிறே?’’ என்று அதையும் வாய் விட்டு சப்தமாக கேட்டு அவளை திரும்பவும் தங்கத்திடம் மாட்டி விட்டான்.

‘‘கயல்! என்ன பழக்கம் இது? இதையா நாங்க உனக்கு சொல்லிக் கொடுத்தோம்?’’ என்ற அதட்டல் கணேச னிடம் இருந்து வந்தது.

அவரிடமும் சமாதானமாய் எதையும் சொல்ல முடியாமல் கயல்விழி திகைத்து போய் அமர்ந்திருந்தாள்.

ஐயோ! ஒரு முடிவோட கிளம்பி வந்திருக்கார் போல. என்னை வச்சு செய்யுறாரே!

அக்காவின் திருட்டு முழியையும் விக்ரமின் நமுட்டு சிரிப்பையும் கண்ட அழகர் தன் மாமா தன் அக்காவை நக்கல் செய்கிறார் என்பதை புரிந்து கொண்டான்.

அவன் தன் தாயை சமையல் அறைக்கு கூட்டி சென்று, ''அம்மா! மாமா ஏதோ விளையாடுறார். நீங்க அக்காவை வீணா திட்டாதீங்க.'' என்றான்.

''எப்படி அழகர் அப்படி சொல்லுறே?''

''மாமா அக்காவை பார்த்து நக்கலா சிரிக்கிறார். நான் பார்த்தேன். அது மட்டுமில்லை... வாயை திறந்து மழையா பொழியுற அக்கா நீங்க ரெண்டு பேரும் திட்டியும் பேசாமல் இருக்காள்னா என்ன அர்த்தம். அவங்க ரெண்டு பேருக்கு இடையே ஏதோ விளையாட்டு. விடுங்கம்மா.''

''மாப்பிள்ளை ஊருக்கு கிளம்பி போனதுக்கு அப்புறமா உங்க அக்காளுக்கு இருக்கு.''

''அதை அப்புறமா பார்த்துக்கலாம். இப்போ டிபனை கொண்டு போய் குடுங்க.''

தங்கம் சிற்றுண்டியை பரிமாற ஆரம்பிக்கவும் கயல் விழியும் அவருக்கு உதவி செய்தாள். அவர்கள் இருவரும் சாப்பிட்டு முடிக்கும் வரை வேறு எந்த பேச்சும் இடம் பெறவில்லை.

சாப்பிட்டு முடித்த பொழுது விக்ரமின் அலைபேசி அலறியது. அவன் அதை எடுத்து பேச ஆரம்பித்தான்.

சார்ஜ் இல்லைன்னு பொய்யா சொன்னார்? நான் தூங்கும் போது எங்க வீட்டுக்கு போன் பண்ணி நாங்க வர போகிற தகவலை சொல்லி இருப்பார் போல. அதான் யாருமே எங்களை பார்த்து என்ன இன்னைக்கே வந்துட்டீங்கன்னு ஆச்சரியப்படலை.

அது மட்டும் இல்லை கயல். உங்க வீட்டுல என் னைக்கு நெய்யெல்லாம் வாங்கி இருக்கீங்க. இன்னைக்கு உங்க அம்மா செஞ்ச கேசரியில் நெய் வாசனை வந்த போதாவது நீ சுதாரிச்சு இருக்க வேண்டாமா? என தனக்கு தானே மானசீகமாய் கொட்டு வைத்துக் கொண்டாள்.

போன் பேசி முடித்தவன், "கயல்! என் கூட வா. கொஞ்சம் வேலை இருக்கு." என்று அழைத்தான்.

"எங்கே? எதற்கு? என்று எந்த கேள்வியும் கேட்காமல், போயிட்டு வரோம்." என்று தன் வீட்டினரிடம் விடை பெற்று அவன் பின்னே சென்றாள்.

இரு தெருக்கள் தாண்டி அவளை கூட்டிச் சென்றவன் ஒரு வீட்டின் முன்பு வந்து நின்றான்.

"இது யார் வீடுங்க? இங்கே எதுக்கு வந்திருக்கோம்?"

"இரு. சொல்லுறேன்." என்று விக்ரம் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அவர்களை நோக்கி தன் இரு சக்கர வாகனத்தை செலுத்தி வந்த ஒரு ஆள் அதை ஓரமாய் நிறுத்தினான்.

"வந்து ரொம்ப நேரம் ஆச்சா?" என்று கேட்டுக் கொண்டே அந்த ஆள் சாவி ஒன்றை கொடுத்தான்.

அவனிடம் இருந்து சாவியை பெற்றுக் கொண்ட விக்ரம், "இல்லை. இப்போ தான் வந்தோம். ஒரு பத்து நிமிஷம் கழிச்சு வந்து சாவியை வாங்கிக்கிறீங்களா?" என்று கேட்டான்.

"சரி" என்று சம்மதித்து அவன் தன் வாகனத்தை செலுத்தி கொண்டு சென்றான்.

விக்ரம் சாவியை வைத்து கதவை திறந்து அந்த வீட்டிற்குள் தன் மனைவியுடன் நுழைந்தான்.

"இது யாரு வீடு?"

"நாம வாங்கப் போகிற வீடு."

"இன்னும் பார்க்கவே இல்லை. அதுக்குள்ளே வாங்கப் போறேன்னு சொல்லுறீங்க."

"ஏற்கனவே வீட்டோட போட்டோஸ், வீடியோ எல்லாம் பார்த்துட்டேன். எனக்கு பிடிச்சிருந்துச்சு. இன்னும் ரெண்டு வாரத்துல ரிஜிஸ்டர் பண்ண போறேன். இனி டில்லிக்கு போகிறதா இல்லை. அதான் அந்த வீட்டை வித்துட்டேன். அந்த பணத்துல இந்த வீட்டை வாங்க லாம்னு முடிவு பண்ணிட்டேன்."

அவள் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் மேலும் தன் திட்டங்களை விளக்கினான்.

"கீழே உள்ள வீட்டை வாடகைக்கு விட்டுடலாம்னு இருக்கேன். மாடியிலே உள்ள ரெண்டு ரூமை நான் மதுரைக்கு வரும்போது உபயோகப் படுத்திக்கலாம்னு நினைக்கிறேன். உங்க வீட்டுக்கு பக்கத்திலே இருக் கிறதால இது வசதியா இருக்கும்னு நினைச்சேன்."

தான் கூறியதை கேட்டு அவளது முகம் மகிழும் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவளது முகமோ சோகமாக இருந்தது.

"என்னாச்சு கயல்? இந்த வீடு உனக்கு பிடிக்கலையா?"

"இன்னமும் நீங்க வீட்டை சுத்திக் காட்டவே இல்லையே. சுத்திப் பார்த்ததுக்கு அப்புறமா தானே பிடிச்சிருக்கா பிடிக்கலையான்னு சொல்ல முடியும்."

"அப்போ என்னோட யோசனை உனக்கு பிடிக்கலை. அப்படி தானே?"

அவள் அமைதியாய் வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

"கயல்! இங்கே என்னை பாரு!" என்றதும் அவன் புறம் திரும்பினாள்.

"நீ சொன்னால் தான் கயல் எனக்கு தெரியும். உன் மனசுக்குள்ளே புகுந்து நீ என்ன நினைக்கிறேன்னு என்னால பார்க்க முடியாது. எதுவா இருந்தாலும் நேரடியா சொல்லு."

"நான் என்ன சொல்லணும்?"

"இந்த வீட்டுக்குள்ள நுழையுற வரைக்கும் உன் முகம் நல்லா தான் இருந்தது. ஆனா வந்த பின்னால சுருங் கிடுச்சு. அது ஏன்னு சொல்லு."

"என் முகமே அப்படி தான்."

"உன் முகம் எப்போ எப்படி இருக்கும்னு என்னை விட வேற யாருக்கு தெரியும்? இப்போ சொல்லப் போறியா இல்லையா."

''உங்களுக்கு நான் யாரு, மாமா?''

''ஓ! அதுலயே டவுட் வந்துடுச்சா?''

''எனக்கு நல்லா தெரியும். ஆனால் உங்களுக்கு தான் அப்பப்போ மறந்து போகுது.''

''சொல்ல வந்ததை நேரடியா சொல்லுன்னு அப்பவே சொல்லிட்டேன். இந்த சுத்தி வளைச்சு பேசுற வேலை எல்லாம் என்கிட்ட வேண்டாம்.'' என்று கடுப்பாக கூறினான்.

''சொத்து விக்கிறது, வாங்கிறதெல்லாம் எவ்வளவு பெரிய விஷயம். எதையும் என்கிட்ட ஆலோசிக்கணும்னு உங்களுக்கு தோணலை இல்ல?''

''நான் சொத்து வித்ததையும், வாங்கப் போகிறதையும் இப்போ உன்கிட்ட சொல்ல தானே செஞ்சேன்.''

''அது எல்லாத்தையும் செயல்படுத்தும் முன்னாடி ஏன் சொல்லலை?''

''உன்கிட்ட சொன்ன விவரத்தை கூட நான் எங்க அப்பாகிட்ட சொல்லலை. இன்னும் சொல்லப் போனால் சென்னை வீடு பத்தியோ டெல்லி வீடு பத்தியோ கூட நான் சொன்னதில்லை.''

''இப்படி இருந்தால் உங்க வீட்டுல உங்களை எப்படி மதிப்பாங்க?'' என்று முணுமுணுத்தாள்.

''நான் சம்பாதிக்க ஆரம்பிச்சதும் எங்க அப்பாவுக்கு மாசா மாசம் பணம் அனுப்புறேன்னு சொன்னேன். அதுக்கு எங்க அப்பா வேண்டாம் விக்ரம். நீ நல்ல விதமா சேர்த்து வை. பணத்தை சம்பாதிக்கிறதுக்கு ஒரு திறமை வேணும்னா அதை சேமிச்சு வைக்கிறதுக்கும்

தனி திறமை வேணும். என் பிள்ளைக்கு அந்த திற மையும் இருக்கும்னு நான் நம்புறேன். எனக்கு பணம் தேவைப்பட்டுச்சுன்னா நான் உன்கிட்ட கேட்டு வாங்கிக்கிறேன்னு சொல்லிட்டார்.''

அவள் ஒன்றும் பேசாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தாள்.

''சரி. டில்லில வீடு வித்த பணம் மொத்தத்தையும் உன் கையிலே நான் கொடுக்கிறேன். நீயே அதை எல்லாம் பத்திரமா இன்வெஸ்ட் பண்ணு. கிஷான் விகாஸ் பத்திரம் வாங்குவியோ, பிக்ஸட் டெபாசிட் பண்ணுவியோ, மியூட்சுவல் பண்ட், கோல்டு பான்ட் இல்லைன்னா ஷேர் மார்க்கெட்ல இன்வெஸ்ட் பண்ணுவியோ எனக்கு தெரியாது.

நான் எதுலயும் தலையிட மாட்டேன். எங்க அப்பா என் போல நம்பிக்கை வச்ச மாதிரி நான் உன் போல நம்பிக்கை வைக்கிறேன். நல்லவிதமா அதை பாதுகாத்து வை. வா போகலாம்.'' என்றவன் வீட்டை விட்டு வெளியேற ஆரம்பித்தான்.

''வீட்டை பார்க்காமலே போறீங்க?''

''எதுக்கு வீட்டை பார்க்கணும்? அதான் பணம் மொத் தத்தையும் உன்கிட்ட தரப் போறதா சொல்லிட்டேன்ல. அதுக்கு மேல இந்த வீட்டை வாங்க என்கிட்ட வேற பணமெல்லாம் இல்லை.'' என்றவன் அந்த வீட்டை பூட்ட ஆரம்பித்தான்.

''நீ வீட்டுக்கு போ. அந்த ஆள் வந்ததும் நான் சாவியை ஒப்படைச்சுட்டு வரேன்.''

"இல்லை நானும் நிக்கிறேன்."

"நான் சொன்னால் கேட்கணும். அடம் பிடிக்கிறது எனக்கு சுத்தமா பிடிக்காது."

அவன் கோபமாய் வார்த்தைகளை கடித்து துப்பவும் அவனிடம் எதிர்த்து வார்த்தையாடாமல் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

"ஐயோ! ஊருக்கு போகும் நேரம் இப்படி மலை ஏறிட் டாரே. இப்போ எப்படி இவரை மலை இறக்கிறது? எங்க வீட்டுல தனிமையிலே பேசக் கூட இடம் கிடையாதே!"

இதெல்லாம் யோசிச்சு தான் எங்க வீட்டுக்கு பக்கத்திலேயே இந்த வீட்டை பிடிச்சிருப்பாரோ? நான் ஒரு மடச்சி. பேசத் தெரியாமல் பேசி சொதப்பிட்டேன்.

என்கிட்ட பணத்தை கொண்டு வந்து குடுத்தால் அதை வச்சுக்கிட்டு நான் என்ன செய்வேன்? எனக்கு என்ன தெரியும்? மிஞ்சி போனால் பேங்கில் போட தெரியும்.

ஆனால் எது லாபகரமானதுன்னு எல்லாம் யோசிச்சு செய்யுற அளவுக்கு எனக்கு அறிவு கிடையாதே! இதை இப்போ சொன்னாலும் ஒத்துக்குவாரான்னு தெரியலை

## 25

அவள் மட்டும் தனியாக வீடு திரும்பியதை கண் அவளது வீட்டினர் குழம்பினர்.

தனக்குள் பேசிக் கொண்டு அவ்வப்போது மண்டையை ஆட்டிக் கொள்வதை கண்டவர்கள், இவளுக்கு என்ன ஆச்சு? தானா தலையை தலையை ஆட்டிக்கிறாள் என்று விழித்தனர்.

அவளாக எதையாவது சொல்வாள் என்று அனை வரும் சில நிமிடங்கள் அமைதி காத்தனர்.

ஆனால் அவளோ அவர்கள் யாரையும் கண்டு கொள் ளாமல் தனக்குள் மூழ்கி இருந்தாள்.

''கயல்! மாப்பிள்ளை எங்கே?'' என்று கணேசன் அவளை விசாரித்தார்.

அவரது கேள்வி கூட அவள் மூளையில் பதிய வில்லை. மகளை உலுக்கி மீண்டும் அதே கேள்வியை கணேசன் கேட்டார்.

''நீ முன்னாடி போ. பின்னாடி வரேன்னு சொன்னார்பா. வந்துடுவார்.''

''எங்கே போனீங்க?''

இதுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள். அவளை காப்பாற்றும் விதமாக விக்ரம் வீட்டினுள் நுழைந்தான்.

''உட்காருங்க மாப்பிள்ளை.'' என்று கணேசன் நாற்காலியை சுட்டிக் காட்டவும் விக்ரம் அதில் அமர்ந் தான்.

''சரிங்க மாமா. நான் கிளம்புறேன்.''

''இப்பவேவா? நைட் பத்து மணிக்கு தானே பஸ்?'' என்று கயல் அனைவரையும் முந்திக் கொண்டு கேள்வி எழுப்பினாள்.

விக்ரம் அவள் புறம் திரும்பாமல் தன் மாமனாரிடம் பேச ஆரம்பித்தான்.

"ஒரு பிரண்டை பார்க்க போக வேண்டி இருக்கு மாமா. அதனால இப்பவே கிளம்புறேன்."

"நைட் சாப்பாடு?" என்று மீண்டும் கயலே கேள்வி கேட்டாள்.

"மதுரையில் ஹோட்டலுக்கா பஞ்சம்?" என்று சுவரை பார்த்துக் கொண்டே விக்ரம் பதில் கொடுக்கவும், எதுவோ சரி இல்லை என்று வீட்டினர் புரிந்து கொண்டனர்.

அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுக்க கணேசன் முடிவு செய்தார்.

அதனால் அவர் தன் மருமகனிடம், "நீங்க பேசிக்கிட்டு இருங்க மாப்பிள்ளை. நானும் தங்கமும் பக்கத்திலே கோவில் வரைக்கும் போயிட்டு வந்துடுறோம்." என்றார்.

கணவரின் எண்ணப் போக்கை புரிந்து கொண்ட அவர் மனைவியும் அவருடன் வெளியே செல்ல ஆயத்த மானார்.

கணேசன் தன் மகனை குறிப்பாய் பார்க்க அவனும் அதை புரிந்து கொண்டு தன் சைக்கிள் சாவியை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

அப்பான்னா அப்பா தான். என்னடா செய்யுறது? எப் படிடா இவரை வழிக்கு கொண்டு வரதுன்னு யோசிச் சேன். என்று கயல் தன் தந்தையை புகழ்ந்து கொண்டே வீட்டின் கதவை அடைத்து விட்டு வந்தாள்.

விக்ரம் பெட்டியோடு அங்கே வந்து, "எதுக்கு கதவை மூடினே? கதவை திற." என்றான்.

''நீங்க உடனே கிளம்புறதுக்கா எல்லோரும் வீட்டை விட்டு வெளியே போய் இருக்காங்க.''

''அவங்க எதுக்காக போனாங்களோ? எனக்கு வேலை இருக்கு. நான் கிளம்பணும்.'' என்று விறைப்பாய் பதில் கூறினான்.

''நீங்க கோபமா போனீங்கன்னா என்னால இங்கே ஒரு நிமிஷம் கூட நிம்மதியா இருக்க முடியாது. நானும் உங்க பின்னாடியே கிளம்பி வந்துடுவேன்.''

இதுல ஒண்ணும் குறைச்சல் இல்லை என்பது போல் அவளை பார்த்தான்.

அவன் சிறிது இளகி விட்டான் என்பதை அவன் முகமாறுதலை கொண்டு கணித்தவள், ''ரொம்ப பிகு பண்ணாதீங்க.'' என்று சொல்லி அவன் கையில் இருந்த பெட்டியை வலுக்கட்டாயமாய் வாங்கி ஓரமாய் வைத்தாள்.

அவன் அமைதியாய் சுவரோடு சாய்ந்து தரையில் அமரவும் அவன் அருகே சென்று தானும் அமர்ந்தாள். அவனது முகத்தை தன் பக்கம் திருப்பினாள்.

''சாரி. தெரியாமல் பேசிட்டேன். நீங்க சொன்ன மாதிரி எனக்கு இன்வெஸ்ட்மென்ட் பத்தி எல்லாம் எதுவும் தெரியாது தான். வீடு இன்னும் ரிஜிஸ்டர் கூட பண்ணலை. அதுக்கு முன்னாடியே என்கிட்ட சொல்லிட்டீங்க. அது அப்போ புரியலை. இப்போ தான் புரிஞ்சது. நீங்க சொல்லுற மாதிரி நான் மக்கு தான் போல.''

''நீ என் மக்கு தான். அதுல உனக்கு சந்தேகமே வேண்டாம்.'' என்று மலர்வோடு சொன்னான்.

''அதை சொல்லும் போது மட்டும் உங்க முகத்திலே ஒரு மலர்ச்சி வந்துடுமே. என்னை கிண்டல் பண்ணுற துன்னா அவ்வளவு சந்தோஷம்?''

அவளது கேலியை கண்டு கொள்ளாதவனாய் அவளது கையை எடுத்து தன் கரங்களுக்கு இடையே வைத்து அழுத்திக் கொடுத்தவன் அவளிடம் விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

''என்னோட எந்த செயலுக்கும் நான் யாருக்கும் காரணம் சொல்லி எனக்கு பழக்கம் இல்லை கயல். உன்கிட்ட மட்டும் தான் இந்த அளவுக்காவது சொல்லு றேன். என்னை பத்தின எல்லா விஷயத்தையும் தெரிஞ் சுக்கிற உரிமை உனக்கு இருக்குன்னு தான் எல்லாத் தையும் சொல்லிக்கிட்டு இருக்கேன்.''

''இதையும் விட எப்படி பெட்டரா மாறணும்னு எனக்கு தெரியலை கயல். நீ என்கிட்ட என்ன எதிர் பார்க்கிறேன்னும் எனக்குப் புரியலை.''

''ஒண்ணு மட்டும் மனசிலே வச்சுக்கோ. இந்த விக்ரம் இந்த உலகத்திலே கட்டுப்படுறது உனக்கு மட்டும் தான். உன்னோட வார்த்தைக்கு மட்டும் தான்.'' என்றதும் அப்படி ஒரு நிம்மதியும் சந்தோஷமும் அவள் மனதில் எழுந்தன.

அவன் தோள் மீது வாகாய் சாய்ந்து கொண்டாள். அவனும் அவளை தன் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

இருவருமே அந்த நெருக்கம் தந்த நிம்மதியை அனுபவித்துக் கொண்டு சில நிமிடங்கள் அமைதியாய் இருந்தனர்.

"அந்த வீட்டை எப்போ போய் பார்க்க முடியும்?"

"ரிஜிஸ்ட்ரேஷன் முடிஞ்ச பின்னால தான் பார்க்க முடியும்."

"அதுக்கு முன்னாடி பார்க்க முடியாதா?"

"ம்ம்ம் இனிமேல் என்ன சொல்லி சாவி வாங்க சொல்லுறே?"

"எங்க அப்பாக்கு காட்டணும்னு சொல்லுங்க. அப் பாவை கூட்டிட்டு போகலாம்."

"உங்க அப்பாவை கூட்டிட்டு நீ நாளைக்கு போ. சாவி கொண்டு வந்து தர சொல்லுறேன்."

"இன்னைக்கே போனால் நீங்களும் பார்க்கலாம் தானே."

"இன்னைக்கே காட்டுறதா இருந்தால் அப்பவே காட்டி இருக்கலாமேன்னு அவன் சலிச்சுக்க மாட்டானா? அவ னுக்கு வேற வேலை இல்லையா? உனக்கு சாவியை கொண்டு வந்து கொடுத்து வாங்கிட்டு போறது மட்டும் தான் வேலையா?"

"ஆனா நீங்க பார்க்க முடியாதே."

"பாருடா! ரொம்ப தான் அக்கறை படுறாள்."

"உங்க மேல எனக்கில்லாத அக்கறை வேற யாருக்கு இருக்கு. அப்போ நீங்க எப்படி வீட்டை பார்ப்பீங்க?"

"அதை சண்டை போடும் முன்னாடி யோசிச்சு இருக் கணும்."

"நான் சண்டை போட்டால் உடனே கோபிச்சுக்கிட்டு நீங்க வந்துடுவீங்களா? இது தான் வீடு. நல்லா பார்த் துக்கோன்னு என்னை குண்டு கட்டா தூக்கிட்டு போய் காட்டி இருக்க வேண்டியது தானே?"

''என்னது? உன்னை தூக்கிட்டு போய் காட்டணுமா? இதெல்லாம் நடக்கிற காரியமா கயல்?'' என்று அவன் அலறவும்,

''இப்போ எதுக்கு இப்படி அதிர்ச்சி ஆகிறீங்க? உங் களால என்னை தூக்க முடியாதா?'' என்று முறைத்துக் கொண்டே கேட்டாள்.

''கல்யாணத்தப்போ நல்லா ஒல்லியா இருந்தே. ஆனால் இப்போ அப்படியா இருக்கே?''

''நான் குண்டாகிட்டேனா?'' என்று முணுமுணுத்துக் கொண்டே தன்னை குனிந்து பார்த்தாள்.

''அந்த ஆராய்ச்சி எல்லாம் அப்புறமா பண்ணலாம். வீட்டில வேலை செஞ்சுக்கிட்டு இருந்த எங்க மாமி யாரையும் வெளியே அனுப்பி வச்சுட்ட. இப்போ எனக்கு நைட் சாப்பாடு யாரு செஞ்சு தருவாங்க?''

''ம்ம்ம் அதான் ஹோட்டல் நிறைய இருக்குன்னு டயலாக் பேசினீங்க இல்ல.''

''அப்போ வெளியவே சாப்பிட்டுக்கவா?''

''கிண்டலா கேட்கிறீங்களா? இல்லைன்னா சீரியஸா கேட்கிறீங்களா?''

''சீரியஸா தான் கயல் கேட்கிறேன். இந்த வீடு பதி யுறது சம்பந்தமா என் பிரண்டை பார்த்து பேச வேண்டி இருக்கு. அதனால நான் சீக்கிரமா கிளம்பணும்.''

''அச்சோ! சாப்பாடு ரெடியான்னு தெரியலையே. நான் போய் பார்க்கிறேன்.'' என்றவள் சமையல் அறைக்குள் சென்று பார்த்தாள்.

தக்காளி சட்னிக்கு வதக்கி வச்சுட்டு தான் போய் இருக் காங்க. அரைக்க மட்டும் தான் செய்யணும்.

"அப்போ நீ சட்னியை அரை. நான் தோசை ஊத் துறேன்."

"இல்லை. நீங்க இருங்க. ரெண்டையும் நானே செய்யு றேன்."

"லேட்டாகிடும் கயல். நான் கிளம்பணும்."

"சரி" என்று சம்மதித்தவள் தோசை கல்லை அடுப்பில் வைத்து அதை ஆன் செய்தாள். தோசை மாவை கரைத்து அவனிடம் கொடுத்து விட்டு சட்னி அரைக்கும் வேலை யில் ஈடுபட்டாள்.

அவள் சட்னி அரைத்துக் கொண்டிருக்கும் பொழுதே அழைப்பு மணி ஒலிக்க ஆரம்பித்தது.

"நான் போய் பார்க்கவா கயல்?"

"உங்களுக்கு யாரையும் தெரியாது. அதனால நானே போய் பார்க்கிறேன்."

"ஒருவேளை உங்க அம்மாவும் அப்பாவும் வந்துட் டாங்களோ என்னவோ?"

அவள் வாசல் பக்கம் நகர்ந்து கொண்டே, அதுக் குள்ளே எப்படி திரும்பி வருவாங்க? என்று கேட்டாள்.

"உன் மேல அவ்வளவு நம்பிக்கையா இருக்கும். மாப்பிள்ளையை காப்பாத்த ஓடோடி வந்திருப்பாங்க." என்றதும் அவனை திரும்பி பார்த்து முறைத்தாள்.

யார் வந்திருக்கான்னு தெரியலையே என்று நினைத்துக் கொண்டே வாசல் கதவை திறந்தவள் சற்றே அதிர்ந்தாள் என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனெனில் அவளது பெற்றோர் தான் வந்திருந்தனர்.

அதுக்குள்ளே வந்துட்டாங்க? இவர் சொன்ன மாதிரி என்னை நம்பலையோ? என்று நினைத்துப் பார்த்தாள்.

மருமகன் தோசைக் கரண்டியுடன் சமையல் அறை யில் நின்றிருப்பதை பார்த்த தங்கம் மகளை கோபமாய் முறைத்தார்.

''என்னங்க மாப்பிள்ளை நீங்க போய் இதை எல்லாம் செஞ்சுகிட்டு... நகருங்க. நான் தோசை சுடுறேன்.'' என்று தங்கம் சமையல் அறைக்கு விரைந்தார்.

அவரது பதட்டமும் கயலின் திருட்டு முழியையும் கண்டவனுக்கு தன் மனைவியை வம்பிழுக்கும் எண் ணம் எழுந்தது.

''இல்லை அத்தை. கயல்கிட்ட சாப்பாடு கேட்டேன். மதுரைல நிறைய ஹோட்டல் இருக்குன்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சொன்னீங்களே... அங்கேயே போய் சாப்பிட்டுக்கோங்கன்னு சொல்லிட்டாள். உங்க வீட்டுக்கு வந்துட்டு சாப்பிடாமல் போனால் உங்க மனசு கஷ்டப்படுமே! அதான் நானே தோசை சுட ஆரம்பிச் சுட்டேன்.''

தங்கம் தன் மகளின் பக்கம் திரும்பி, ''என்ன கயல் இதெல்லாம்? நம்ம வீட்டுலயே மாப்பிள்ளையை இப்படி நீ நடத்தினால் யாரும் இல்லாத சென்னையிலே என்ன பாடு படுத்தவே?'' என்று திட்ட ஆரம்பித்தார்.

''மாமா! நானும் வந்ததில் இருந்து பார்க்கிறேன். என்னை மாட்டி விடுறதிலேயே ஏன் குறியா இருக்கீங்க? நீங்க பாட்டுக்கு இன்னும் கொஞ்ச நேரத்துல கிளம்பி

போயிடுவீங்க, அப்புறமா நான் இல்ல இவங்ககிட்ட தனியா மாட்டிக்கிட்டு முழிக்கணும். மரியாதையா உண்மையை சொல்லிட்டு போங்க.'' என்று கயல் மிரட்டினாள்.

''உங்க கண்ணு முன்னாடியே எப்படி மிரட்டுறாள்னு பார்த்தீங்களா அத்தை?''

''எங்கே இருந்து கயல் உனக்கு இந்த வாய் வந்துச்சு?'' என்று கேட்டுக் கொண்டே தங்கம் தன் மகளை அடிக்க கை ஓங்க, விக்ரம் தன் மனைவியை தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

''இப்போ எதுக்கு அத்தை கை ஓங்குறீங்க? இப்படி தான் வளர்ந்த பெண்ணை அடிப்பீங்களா? நான் விளையாடுறேன்னு உங்களால புரிஞ்சுக்க முடியலையா?''

மாப்பிள்ளை இப்படி கேட்கவும் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தங்கம் தன் கையை பிசைந்து கொண்டு நின்றிருந்தார்.

''அழகரையும் அடிப்பீங்களா? இல்லைன்னா அவன் ஆண் பிள்ளைன்னு அவனை மட்டும் கொஞ்சுவீங்களா?''

''இல்லை மாப்பிள்ளை. எனக்கு எல்லா பிள்ளையும் ஒண்ணு தான். நீங்க முதல் முறையா வீட்டுக்கு வரீங்களா... உங்களை சரியா கவனிச்சு அனுப்பணுமேன்னு பதட்டமா இருந்தேனா அதான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.''

''என்னை உங்களில் ஒருத்தனா பார்த்தால் போதும் அத்தை. மரியாதை குடுக்கிறேன்னு தள்ளி வைக்கா தீங்க.'' என்று தன் அத்தையிடமும்,

''கயல்! சாப்பாடு எடுத்து வை. எனக்கு டைம் ஆகுது.'' என்று மனைவியிடமும் கூறினான்.

அங்கே நின்று கொண்டிருந்த மாமனாரின் அருகே சென்று, ''மாமா! உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்.'' என்றவன் அந்த புது வீட்டை பற்றிய விபரத்தை எடுத்துரைத்தான்.

அவன் சொன்னதற்கு எல்லாம் கணேசன் தலையை தலையை ஆட்டினார்.

சற்று முன்பு மருமகன் கயலுக்காக அவளை பெற்ற வளிடமே சண்டை போட்டது சந்தோஷத்தை தந்தது என்றால் மகளது செல்வ நிலைமையை கண்டு அந்த தகப்பனின் உள்ளம் குளிர்ந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே சாப்பிட்டு முடித் தவன், ''எனக்கு வேலை இருக்கு. நான் கிளம்புறேன். சனிக்கிழமை கயலை வைகை எக்ஸ்பிரஸில் ஏத்தி விடுங்க. நான் ஸ்டேஷன்ல போய் கூப்பிட்டுக்கிறேன்.'' என்று கூறி விடைபெற்றான்.

''நேரத்துக்கு சாப்பிடுங்க. லேப் டாப்பிலே வேலை பார்க்கிறேன்னு தூங்காமல் இருக்காதீங்க.'' என்று அவனிடம் சொல்ல கயல்விழி ஆசைப்பட்டாள்.

ஆனால் அதை எல்லாம் சொல்வதற்கு அவளுக்கு தனிமையோ அவகாசமோ கிடைக்கவில்லை.

அவன் வெளியேறும் சமயம் அழகரும் அங்கே வந்துவிட விக்ரம் அவனிடமும் விடைபெற்று சென்று விட்டான்.

# 26

வாசலில் நின்று கொண்டு அவன் செல்லும் திசையையே கயல்விழி பார்த்துக் கொண்டிருந்தாள். தெருமுனையில் அவன் ஆட்டோ ஏறும் வரை தெருவில் நின்று கொண்டிருந்தாள்.

கொஞ்சமாச்சும் திரும்பி பார்க்கிறாரா? அவர் பாட்டுக்கு போகிறார். அவரை பார்க்காமல் நாலைஞ்சு நாள் இருக்கணுமேன்னு எனக்கு எவ்வளவு வருத்தமா இருக்கு. ஆனால் அவருக்கு அப்படி வருத்தம் எதுவும் இல்லை போல. அவருக்கு எப்போ அப்படி எல்லாம் தோணும்? என நினைத்து பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

கணவனின் இந்த சில நாள் பிரிவை கூட தாங்காமல் முகம் வாடி வீட்டிற்குள் நுழையும் மகளை கண்ட அவளது பெற்றோர் புன்னகைத்துக் கொண்டனர்.

''என்னங்க உங்க பொண்ணை கவனிச்சீங்களா? அவளும் மாப்பிள்ளையும் ரொம்ப ஒத்துமையா குடும்பம் நடத்துறாங்க என்பதை நினைக்கிறப்போ ரொம்ப சந்தோஷமா இருக்குங்க.''

''ஆமா தங்கம். மாப்பிள்ளை கேலியும் கிண்டலுமா கயல்கிட்ட விளையாடுறதை பார்க்கிறப்போ எனக்கும் சந்தோஷமா இருந்துச்சு.''

''உங்ககிட்ட என்ன பேசினார்? ஏதோ வீடுன்னு என் காதிலே விழுந்துச்சு.'' என்று கேட்டு கணவரிடம் இருந்து விஷயத்தை அறிந்து கொண்டார்.

''ரெண்டாம் தாரத்துக்கா கட்டி குடுக்கிறீங்கன்னு கேலி பேசின எல்லோர் முன்னாடியும் நம்ம பொண்ணு நல்லா வாழ்ந்து காட்டணும்.''

''நம்ம மாப்பிள்ளைக்கு என்ன குறைச்சல்? நம்ம பொண்ணுக்கு நாம நல்லது தான் பண்ணி இருக்கோம்னு நினைக்கும் போது ரொம்ப சந்தோஷமா இருக்கு.'' என்று அவர்கள் தங்களுக்குள் பேசி மகிழ்ந்தனர்.

சிறிது நேரம் கழித்து அனைவரும் இரவு உணவை சாப்பிட அமர்ந்தனர். அழகர் வழக்கம் போல் தன் அக்காவை கேலி செய்து கொண்டிருந்தான்.

தங்கம் நெய் தோசை சுட்டு எடுத்துக் கொண்டு வரவும், ''அம்மா! நெய் தோசை எனக்கு. என் தட்டுல வைங்க.'' என்று அழகர் தன் தட்டை நீட்டினான்.

''உனக்கு இல்லைடா. அக்காக்கு சுட்டுட்டு வந்தேன்.''

''அவளுக்கு எதுக்கும்மா? மாமா வீட்டுல நல்லா பாலும் நெய்யுமா சாப்பிட்டு அவ ஏற்கனவே குண் டம்மாவா ஆகிட்டாள். இனிமேல் அவளுக்கு நோ நெய் தோசை. வளரும் பிள்ளை நான் தான். அதனால எனக்கு போடுங்க.''

''அவள் மேல கண்ணு வைக்காதே!'' என்று கணேசன் மகனை அதட்டினார்.

''முன்னாடி வத்தல் மாதிரி இருப்பாள். இப்ப தான் கொஞ்சம் சதை போட்டு அழகா இருக்காள்.'' என்று தங்கம் தன் மகளை கண்டு பூரித்தார்.

"பார்த்தீங்களா... நீங்களே ஒத்துக்கிட்டீங்க. நீட்ட வத்தலா இருந்த அக்கா இப்போ குண்டு வத்தலா மாறிட்டாள்னு." என்று அழகர் கேலி பேசினான்.

"சம்பந்தப்பட்டவளோ, மாமா சொன்ன மாதிரி நிஜமாவே நான் குண்டாகிட்டேனா?" என்ற சுய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாள்.

சாப்பிட்டு முடித்தவள் தன் அலைபேசியில் இருந்து தன் கணவனை அழைத்தாள்.

அவன் தன் நண்பனுடன் பேசிக் கொண்டிருந்தான். அதனால் அவளது அழைப்பை கண்டுகொள்ளவில்லை.

அவள் திரும்பவும் அழைக்கவும் ஏதேனும் முக்கிய செய்தியோ என நினைத்தவன் அதை இயக்கி பேச ஆரம்பித்தான்.

"நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன். ஏதாச்சும் முக்கியமான விஷயமா?"

"இல்லைங்க. சும்மா தான்."

"அப்போ நான் போனை வச்சுடுறேன்." என்றவன் அவளது பதிலுக்கு கூட காத்திருக்காமல் அழைப்பை துண்டித்தான்.

"ஒன்பதே முக்கால் மணிக்கு..."

பஸ் ஏறும் டைம் ஆகிடுச்சு. அவரோட பிரண்டு கிளம்பி போய் இருப்பார். இவர் மட்டும் தனியா தான் இருப்பார். இப்போ போன் பண்ணுவோம் என்று எண்ணிக் கொண்டே கயல் தன் கணவனை அழைத்தாள்.

"இப்போ எதுக்கு கூப்பிட்டே?"

''சும்மா தான்.''

''சும்மா சும்மா எதுக்கு கூப்பிடுறே?''

''பஸ் ஏறிட்டீங்களான்னு தெரிஞ்சுக்கலாம்னு தான் கூப்பிட்டேன்.''

''இங்கே பாரு... பஸ் திருச்சியை தாண்டிடுச்சா? விழுப்புரம் கடந்திடுச்சான்னு கேட்டு எனக்கு போன் பண்ணக் கூடாது சொல்லிட்டேன். நாளைக்கு காலை யில நான் வீட்டுக்கு போனதும் நானே உனக்கு போன் பண்ணுறேன். நீ நொய் நொய்ன்னு என்னை கூப் பிடாதே.''

அவள் அவனை முணுமுணுப்பாய் திட்டினாள்.

''என்னை தானே திட்டுறே? சத்தமாவே திட்டு.''

''அஞ்சு நாளைக்கு பொண்டாட்டியை பிரிஞ்சு போறோமேன்னு உங்களுக்கு தான் எந்த ஃபீலும் இல்லை. உங்களை மாதிரி மரக்கட்டையாய் என்னையும் இருக்க சொல்லுறீங்களா?''

''அடிப்பாவி! என்னை மரக்கட்டைன்னா சொல்லுறே. உனக்கு வாய் ரொம்ப கூடிப் போச்சு. இரு எங்க மாமி யார்கிட்ட சொல்லி உன் வாயை தச்சு அனுப்ப சொல்லு றேன்.''

''வாயை தச்சால் பேசாமல் இருப்பேன்னு நினைச்சீங் களா? சைகை பாஷையிலே பேசுவேன். இல்லைன்னா பேப்பரில் எழுதி காட்டுவேன். என் தொல்லையில் இருந்து அவ்வளவு ஈஸியா உங்களால தப்பிக்க முடியாது.''

''அதை விடு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எதுக்கு போன் பண்ணினே?''

''அதுவா? நான் நிஜமாவே குண்டாகிட்டேனா, மாமா?'' என்று பாவம் போல் இழுத்தாள்.

''திடீர்னு எதுக்கு இந்த சந்தேகம்?''

''என் தம்பி என்ன தெரியுமா சொன்னான்...'' என்றவள் வீட்டில் நடந்த உரையாடலை அவனிடம் விவரித்தாள்.

''பார்த்தியா. நான் சொன்னப்போ நீ நம்பலை. இப்போ பாரு... உங்க வீட்டுலயும் எல்லோரும் சொல்லிட்டாங்க.''

''......''

''என்ன பேச்சையே காணோம்?''

''நான் வேணா ஒரு வேளை சாப்பிடாமல் இருக்கட்டுமா?''

''எதுக்கு? இப்போ தான் கொஞ்சம் சதை போட்டு பார்க்கிற மாதிரி இருக்க. அது உனக்கு பொறுக்கலையா?''

''பார்க்கிற மாதிரியா? அப்போ நான் அழகா இல்லையா?''

''நீ ரொம்ப ரொம்ப அழகுடி என் மக்கு.''

''நிஜமா?''

''நிஜமா தான். நீ வேணா உன் பழைய போட்டோவை எடுத்து பாரு.'' என்றதும் சமாதானமானாள்.

''சரிங்க மாமா. பத்திரமா போங்க. போனதும் போன் பண்ணுங்க.'' என்று கூறி அழைப்பை துண்டித்தாள்.

அங்கே திருச்சியில்...

அன்று இரவு உணவிற்கு லேகா படுத்திய பாட்டில் சிவகாமி கடுப்பாகிப் போனார்.

எல்லா வேலையையும் செஞ்சுட்டு கயல் வாய் பேசாமல் இருந்தாள். இந்த லேகா என்னடான்னா என்னை வேலை வாங்கிறது மட்டுமில்லாமல் கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் பேசுறாளே என்று சிவகாமி தன் இரு மருமகள்களின் குணங்களை ஒப்பிட்டு பார்க்க ஆரம்பித்தார்.

அன்று இரவு செல்வம் குடும்பத்தினர் தங்கள் அறைக்கு சென்று படுக்கவும் சிவகாமியும் தூங்குவதற்காக அறைக்குள் செல்ல முயன்றார். அவரது படுக்கை அறை தாளிடப்பட்டு இருந்தது.

அங்கே வந்த தன் கணவரிடம், "என்ன ஆச்சுங்க? நம்ம ரூமை திறக்க முடியலை." என்றார்.

"நம்ம ரூமுக்கு மட்டும் ஆட்டோ லாக் இல்லையா? பல்லவி உள்ளே போய் கதவை மூடி மாட்டிக்குவான்னு நினைச்சு லாக்கை ரிலீஸ் பண்ணி தானே வச்சிருந்தேன். யார் அதை எடுத்து விட்டது. இப்போ கதவு தானா மூடிக்கிச்சா?"

"என்னங்க சொல்லுறீங்க? கதவு மூடிக்கிச்சா? இப்போ எப்படி திறக்கிறது? இதோட சாவி எங்கே?"

"சாவி... ஒண்ணு கதவில் இருக்கும்."

"இன்னொண்ணு நம்ம ரூமுக்குள்ளே இருக்கா?"

"ஆமா சிவகாமி. கரெக்ட்டா சொல்லிட்டே."

''உங்களை மாதிரி ஒரு அறிவாளியை எங்கேயும் பார்க்க முடியாது.''

''எங்கேயோ எதுக்கு தேடி போய் பார்க்கணும்? அதான் நேரிலே நிக்கிறேனே. நல்லா பாரு.''

''என்னை நக்கல் பண்ணுறதை விட்டுட்டு கதவை எப்படி திறக்கிறதுன்னு யோசிங்க.''

"இதுல யோசிக்க என்ன இருக்கு சிவகாமி. காலையிலே ஆளை கூட்டிட்டு வந்தால் தான் கதவை திறக்க முடியும்.''

''அப்படின்னா நாம இப்போ எங்கே போய் தூங்கிறது?''

"இருக்கவே இருக்கு இன்னொரு ரூம். நம்ம விக்ரமும் கயலும் நேத்து அதுல தானே தூங்கினாங்க.''

''ம்ம்ம் அங்கேயே தூங்குவோம். வேற வழி இல்லையே.'' என்றவர் அந்த அறையை நோக்கி சென்றார்.

விக்ரம் அந்த அறையில் இருந்த கட்டிலை மீண்டும் அறையின் நடுவிலே மின்விசிறிக்கு கீழேயே போட்டு விட்டு சென்றிருந்தான்.

மனைவியின் பின்னே வந்த நடராஜன் அந்த படுக்கையில் படுத்து கொண்டார். அவர் அருகே படுக்க வந்த சிவகாமி படுக்கையில் இடம் இல்லை என்பதை கண்டு விழித்தார்.

"இடமே இல்லை. நான் எங்கேங்க படுக்க?''

"இந்த கட்டிலில் தான் படுக்கணும் சிவகாமி.''

''இந்தக் கட்டிலில் ரெண்டு பேர் எப்படி படுத்து தூங்க முடியும்?''

''கயலும் விக்ரமும் எப்படி படுத்தாங்களோ அப்படி தான்.'' என்றதும் சிவகாமி அமைதியானார்.

''இதுல எப்படி ரெண்டு பேரும் படுத்தாங்க? ஒரு வேளை தரையிலே படுத்திருப்பாங்களோ? ஆனா தரையிலே விரிக்க வீட்டுல பாய் கூட இல்லையே.''

'நாங்களும் செல்வமும் பெரிய அறையில் பெரிய கட்டிலில் படுத்திருந்தோம். ஆனா இங்கே இவன் கஷ்டப்பட்டானா? நான் எப்படி இதை கவனிக்காமல் விட்டேன்?' என்று யோசித்துக் கொண்டே சிவகாமி அமர்ந்திருந்தார்.

''என்ன சிவகாமி படுக்கலையா? வந்து படு.'' என்றதும் வேறு வழியின்றி படுக்கையில் சாய்ந்தார்.

''திரும்பி படுக்க கூட இடம் இல்லையே. எப்படி ரெண்டு பேரும் ரெண்டு நாள் இங்கே படுத்தாங்க?''

''அவன் எங்கே படுக்கையில் படுத்தான்? உன் பையன் சோபாவில் தூங்கினான்.''

கணவரின் பதிலில் அதிர்ந்தவர் படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்து விட்டார்.

''என்னது சோபாவிலா? அவன் உயரத்துக்கு அதுல எப்படிங்க படுக்க முடியும்?''

''நம்ம வீட்டுல வந்து பையனா பிறந்தால் எல்லா கஷ்டத்தையும் அனுபவிச்சு தானே ஆகணும் சிவகாமி.''

''நீங்க என்ன சொல்ல வரீங்க?''

''நேத்து செல்வம் ரூமிலே ஏசி வேலை செய்யலைன்னு கண்டுபிடிச்ச நீ... இந்த ரூமிலே என்ன இருக்கு என்ன

இல்லைன்னு ஏன் பார்த்து வைக்கலை? விக்ரம் சொன்ன மாதிரி அவன் உனக்கு வேண்டாத பிள்ளையா?''

''என்னங்க நீங்க கூட இப்படி கேட்கிறீங்க?''

''சின்ன வயசுல இருந்து நீ செல்வத்தை தானே அதிகமா கவனிச்சுக்கிட்டே.''

''விக்ரமோட ஒப்பிட்டு பார்த்தால் செல்வம் கொஞ்சம் மக்கு. துறுதுறுப்பு இல்லாதவன். அதனால அவனை கொஞ்சம் அதிகமா கவனிச்சுக்கிட்டேன். அது தப்பா?''

''அது எல்லா அம்மாக்களும் செய்வது தான். அதுக்காக இன்னொரு பிள்ளையை கவனிக்கவே மாட்டேன்னு சொன்னால் அது தப்பில்லையா?''

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிவகாமி அமைதி காத்தார்.

முதல் நாள் அவன் சோபாவில் படுக்க முடியாமல் படுத்திருப்பதை பார்த்துட்டு என் மனசு அவ்வளவு சங்கடப்பட்டுச்சு. நான் அவன்கிட்ட இன்னைக்கே பெரிய கட்டில் வாங்கி போடுறேன்னு சொன்னேன். அதுக்கு உன் பையன் என்ன தெரியுமா சொன்னான்.

எப்பவாச்சும் தானேப்பா வரப் போறோம். அதுக்கு அதுக்கு வேஸ்ட்டா செலவு பண்ணிக்கிட்டு. ரெண்டு பாய் வாங்கிட்டு வந்து தரையிலே விரிச்சு படுத்துட்டு போறேன். கட்டில் மெத்தை எல்லாம் புதுசா வாங்க வேண்டாம்னு சொன்னான்.

அது மாதிரியே ரெண்டு பாயும் வாங்கிட்டு வந்தான். தரையிலே படுத்தால் காத்து சரியா வராதுன்னு நினைச்சு ஒரு சின்ன ஃபேன் வாங்கிட்டு வந்தான். அதுக்கு நீ

என்ன சொன்னேன்னு ஞாபகம் இருக்கா? உன்னால ரெண்டு நாளைக்கு அட்ஜஸ்ட் பண்ண முடியாதான்னா கேட்ட. அப்போ அவன் என்ன நினைப்பான்? தான் இந்த வீட்டுக்கு வேண்டாத பிள்ளைன்னு தானே?''

''நான் நிறைய தப்பு பண்ணுறேனோ?''

''இல்லைன்னு நான் பொய் சொல்ல மாட்டேன் சிவகாமி.''

சிவகாமி யோசிக்க ஆரம்பித்தார். நடராஜன் எழுந்து வெளியே சென்று தான் மறைத்து வைத்திருந்த பாயையும் சின்ன மின்விசிறியையும் எடுத்துக் கொண்டு வந்தார்.

''முதல் நாள் உன் மகன் சோபாவில் படுத்த மாதிரி என்னால படுக்க முடியாது. அடுத்த நாள் தரையிலே பாய் விரிச்சு தூங்கினான். அதை என்னால செய்ய முடியும்னு நினைக்கிறேன்.'' என்று சொல்லிக் கொண்டே தரையில் பாய் விரித்து படுத்தார்.

''தரையோட குளிர்ச்சி என் உடம்புக்கு ஒத்துக்கு மான்னு தெரியலை. ஒண்ணு மேல ஒண்ணா ரெண்டு பாய் விரிச்சிருக்கேன். ஒண்ணும் பண்ணாதுன்னு நினைக்கிறேன்.''

''நீங்க வேணா மேலே படுங்க. நான் தரையிலே படுக்கிறேன்.''

''உனக்கு மூட்டு வலி பிரச்சனை இருக்கு. உனக்கு சரிப்படாது. உன் பிள்ளை பட்டினியா தூங்கினான். நான் வயிறு முட்ட சாப்பிட்டுட்டு தானே படுத்திருக்கேன். அதனால எனக்கு தூக்கம் வந்துடும்.'' என்றவர் தன் கண்களை மூடிக் கொண்டார்.

# 27

சிவகாமியால் தூங்க முடியவில்லை. அவர் அந்த படுக்கையில் படுத்துக் கொண்டு தன் பிள்ளைகளை பற்றி யோசிக்க ஆரம்பித்தார்.

மூத்தவன் செல்வத்திற்கு நடராஜனின் தந்தையின் பெயரை சூட்டினார்கள். அதில் அவனுக்கு அவ்வளவு வருத்தம்.

கொஞ்சம் விவரம் தெரிய ஆரம்பித்தவுடன் செல்வம் தன் பெற்றோரிடம், ''தாத்தா பேரை எனக்கு எதுக்கு வச்சீங்க? தம்பிக்கு வச்சிருக்க வேண்டியது தானே? அவனுக்கு மட்டும் ஸ்டைலா விக்ரம்னு பேர் வச்சிருக்கீங்க. உங்களுக்கு என்னை விட அவனை தானே பிடிக்கும்.'' என்று சண்டையிட்டான்.

இயல்பிலேயே செல்வத்திற்கு படிப்பும் விளையாட்டும் சுமாராக தான் வரும். ஆனால் விக்ரம் அப்படி அல்ல. அதனால் சகோதரன் மேல் செல்வத்திற்கு எப்பொழுதும் பொறாமை உண்டு.

'விக்ரம் ஒவ்வொரு முறை ஜெயிக்கும் பொழுதும், அவனை தானே கொஞ்சுவீங்க. ஏன்னா அவன் தானே பரிசு வாங்கி இருக்கான். நான் உங்களுக்கு வேண்டாத பிள்ளை தானே?' என்று பாவமாய் முகத்தை வைத்துக்

கொண்டு செல்வம் கேட்கும் பொழுது சிவகாமி செல்வத்தை தான் கொஞ்சுவார்.

விக்ரமின் வெற்றி அங்கே கண்டு கொள்ளப் படாமலே போய் விடும். இரு குழந்தைகள் இடையே இப்படி வேற்றுமை வருவது பல குடும்பங்களில் நடக்கும் ஒரு விஷயம் தான்.

அந்த சமயங்களில் தாய் ஒரு பிள்ளையை கொஞ்சினால் தகப்பன் இன்னொரு பிள்ளையை கொஞ்சி சமாதானம் செய்வது வழக்கம்.

ஆனால் நடராஜன் பணியின் காரணமாக ஊர் ஊராய் அலையும் வேலை செய்து கொண்டிருந்தார். அதனால் மாதத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்களே அவர் வீட்டில் தங்குவார்.

பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படக் கூடாது என்று நினைத்து சிவகாமியையும் குழந்தைகளையும் திருச்சியிலே தங்க வைத்தார்.

தான் மட்டும் வேலை செய்யும் ஊரில் சிறு வீடோ, லாட்ஜிலோ தங்கி வேலை பார்த்து வந்தார். வயது ஏறிய பின்பே அவர் திருச்சியில் பணி புரிந்தார்.

அதனால் இங்கே விக்ரம் ஒதுக்கப்பட்டான். இன்னும் சொல்லப் போனால் செல்வத்தின் குணத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டான்.

செல்வம் செய்யும் சிறு தவறுகளை சிவகாமி கண்டிக்க வந்தால் அந்த பழியை தூக்கி அவன் தன் தம்பி மேல் போட்டுவிட்டு தப்பித்துக் கொள்வான்.

எதையும் ஆராயாமல் தீர்ப்பு சொல்லும் சிவகாமியும் செல்வம் செய்யும் தப்புகளுக்கு விக்ரமை தண்டித்தார்.

முதலில் தன் பக்க நியாயத்தை விக்ரம் சொல்ல எவ்வளவோ முயற்சி எடுத்தான். ஆனால் சிவகாமி அவன் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்றதும் நாளடைவில் விக்ரம் எதையும் விளக்க முற்படவில்லை.

''ஆமாம்! நான் தான் அந்த தப்பை செஞ்சேன். இப்போ என்ன அதுக்கு?'' என்ற திமிர் பார்வை பார்க்க ஆரம்பித்தான்.

அதனால் விக்ரம் ஒரு முரடன். சொல் பேச்சு கேட்காதவன் என்று சிவகாமியே அவனுக்கு முத்திரை குத்தினார்.

இன்று வரை சிவகாமிக்கு செல்வத்தின் சிறு வயது தப்புகள் தெரியாது என்பது தான் கொடுமை.

வெகு பல வருடங்களுக்கு பிறகு சின்ன மகனிற்கு தான் அநியாயம் செய்து விட்டோமோ என்று சிவகாமி யோசிக்க ஆரம்பித்தார்.

அப்பொழுதும் அவர், விக்ரம் ஒட்டாமல் இருப்பான். அதனால நான் அவனை பத்தி அதிகமா கண்டுக்காமல் இருந்துட்டேனோ? என்றே எண்ணினார்.

அவன் எப்படி உன்கிட்டே பழகினாலும் அவன் உன் பிள்ளை தானே. நீ அவனிடம் பாரபட்சம் காட்டி இருக்கக் கூடாது என்று அவரது மனம் எடுத்துரைத்தது.

மணி பதினொன்று ஆகி இருந்தது. மணியை கூட கவனிக்காமல் தன் பையனிடம் பேச நினைத்து நடராஜனின் அலைபேசியை எடுத்துக் கொண்டு அந்த அறையை விட்டு சிவகாமி வெளியேறினார்.

வரவேற்பறை சோபாவில் அமர்ந்து கொண்டு தன் மகன் விக்ரமை அழைத்தார்.

பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த விக்ரமோ தந்தையின் எண்ணில் இருந்து வந்த அழைப்பை கண்டு திகைத்தான்.

இந்நேரத்துக்கு அப்பாகிட்ட இருந்து போனா? என்ன ஆச்சு? என்று அவன் பதறி போய் அந்த அழைப்பை ஏற்று காதில் வைத்து படபடத்தான்.

''அப்பா! என்னாச்சுப்பா? எதுக்குப்பா இந்நேரம் கூப் பிடுறீங்க? நீங்க நல்லா இருக்கீங்க தானே? யாருக்காச்சும் உடம்பு சரி இல்லையா? நான் பஸ்ல சென்னைக்கு போய்கிட்டு இருக்கேன்பா. நான் இன்னும் கொஞ்ச நேரத்துல திருச்சியை கிராஸ் பண்ணுவேன். அப்போ இறங்கிடட்டுமா?'' என்று எதிராளியை பேசவே விடா மல் படபடத்தான்.

அவனது படபட பேச்சில் மகன் தங்கள் மீது வைத் திருக்கும் பாசத்தை அந்த தாயால் உணர முடிந்தது. அவரது குற்ற உணர்ச்சி மேலும் அதிகரிக்கவே செய்தது.

இவனா எங்களிடம் ஒட்டாத பிள்ளைன்னு நான் நினைச்சிருந்தேன். இவனுக்கா எங்க மேல பாசமில்லை? அவன் குரலில் இருக்கும் அந்த தவிப்பு பாசமில்லாமல் சாத்தியம் இல்லையே! என்று நினைத்த பொழுது அவரது கண்களில் கண்ணீர் நிறைந்தது.

''அப்பா! ஏதாச்சும் பேசுங்கப்பா. என்னன்னு சொல் லுங்கப்பா.''

''வி..க்..ர..ம்..'' என்ற அந்த நான்கு எழுத்து பெயரையே சிவகாமி கஷ்டப்பட்டு உச்சரித்தார்.

தாயின் குரலை... அதுவும் தழுதழுப்பாய் அந்த இரவு வேளையில் அவன் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

"அம்மா! நீங்களா? எதுக்கும்மா அழறீங்க? அப்பாக்கு என்ன? சொல்லுங்கம்மா." என்று அவன் மீண்டும் படபடத்தான்.

அவனது படபடப்பான அந்த பேச்சால் பக்கத்தில் அமர்ந்திருந்த பயணிகள் அவனை திரும்பி பார்த்தனர்.

"சாரிங்க. வீட்டுல இருந்து போன். அப்பா அம்மா எல்லாம் வயசானவங்களா... அதான் கொஞ்சம் பதட்டத்தில் சத்தமா பேசிட்டேன்." என்று அவன் அவர்களிடம் மன்னிப்பு கேட்டதும் அனைவரும் தங்கள் தூக்கத்தை தொடரும் பொருட்டு கண்களை மூடிக் கொண்டனர்.

தன்னுடைய அமைதியும் அழுகையான அழைப்பும் மகனை சிக்கலில் மாட்டி வைக்கிறது என்று புரிந்து கொண்ட சிவகாமி தன்னை தேற்றிக் கொண்டு மகனுடன் பேச ஆரம்பித்தார்.

"நாங்க எல்லோரும் நல்லா இருக்கோம் விக்ரம்."

"அப்பா எங்கே?"

"அப்பா தூங்கிறார்."

"தூங்கிறாரா? நிஜமாவே யாருக்கும் எதுவும் இல்லை தானே?"

"இல்லைடா. அம்மா உன்கிட்ட சாரி சொல்லணும்னு போன் பண்ணினேன்."

"சாரியா? எதுக்கு? சாப்பாட்டு விஷயத்துக்கா? அது தான் மதியமே உங்க கூட சண்டை போட்டு முடிச்சுட்டேனே. அப்பவே பிரச்சனை முடிஞ்சுடுச்சு. இவ்வளவு

நேரம் கழிச்சு எதுக்கு சாரி கேட்கிறீங்க? அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். போய் தூங்குங்க.''

''அதுக்கு மட்டும் சாரி கேட்க நினைக்கலை.''

''வேற எதுக்கும்மா?''

அவர் தாங்கள் அந்த அறைக்கு தூங்க வந்த கதையை அவனிடம் கூறினார்.

இது எல்லாம் தன் தந்தை நடத்தும் நாடகம் என்பதை நொடியில் விக்ரமின் மனம் கண்டு கொண்டது.

''நீங்க போனை கொண்டு போய் அப்பாகிட்ட குடுங்க.''

''அவர் தூங்கிறார்னு சொன்னேன்ல.''

''பரவாயில்லை. எழுப்பி குடுங்க.'' என்று விக்ரம் பிடிவாதம் பிடிக்கவும், வேறு வழியில்லாமல் தன் கணவரை உலுக்கி எழுப்பினார்.

''என்ன சிவகாமி நீ இன்னும் தூங்கலையா?''

''விக்ரம் உங்ககிட்ட ஏதோ பேசணுமாம். போனில் இருக்கான்.'' என்று சொல்லி சிவகாமி அலைபேசியை நீட்டினார்.

''மணி எத்தனை? இப்போ எதுக்கு கூப்பிடுறான்? ஒண்ணும் பிரச்சனை இல்லையே?'' என்று கேட்டுக் கொண்டே நடராஜன் அதை வாங்கி தன் காதில் வைத்தார்.

''என்ன விக்ரம் இந்நேரத்துல?''

''அப்பா! இது என்ன டிராமா?''

''என்ன டிராமா? எதை சொல்லுறே?''

''ம்ம்ம் சாவி காணோம்னு சொல்லி... ரெண்டு நாளா நான் தங்கின ரூமில் தரையில் படுத்து இருக்கீங்களே... அதை சொல்லுறேன்.''

''நான் எதுவும் செய்யலை விக்ரம்.''

''எனக்கு உங்களை நல்லா தெரியும்பா. முதல்ல ரூமை திறந்து அங்கே போய் தூங்குங்க. வயசான காலத்திலே எதுக்கு ரெண்டு பேரும் கஷ்டப்படுறீங்க.''

''இல்லை. இன்னைக்கு ஒரு நைட் தானே?''

''அப்பா! இப்போ நீங்க அந்த ரூமுக்கு போறீங்க. இல்லைன்னா நான் திருச்சியில் இறங்கி உங்களை உங்க ரூமுக்கு அனுப்பி வச்சுட்டு கிடைக்கிற லாரியை பிடிச்சு சென்னைக்கு போவேன்.''

''.....''

''என்ன நான் சொன்னபடி திருச்சியில் இறங்கவா?''

''வேண்டாம் விக்ரம். நீ பத்திரமா சென்னை போய் இறங்கு.''

''நான் போனில் பேசிக்கிட்டு இருக்கும் போதே அந்த ரூம் சாவியை அம்மாகிட்டே கொடுங்க.''

''சிவகாமி! நம்ம ரூம் சாவி என் சட்டை பாக்கெட்டில் இருக்கு. அதை எடுத்துட்டு போய் நம்ம ரூம் கதவை திற.''

''சாவி சட்டை பாக்கெட்டில் இருக்கா? நான் கேட்டப்போ உள்ளே மாட்டிக்கிச்சுன்னு சொன்னீங்க.''

''சும்மா சொன்னேன்.'' என்று மனைவியிடம் சொன்னவர்,

''சாவியை குடுத்திட்டேன். இப்போ ஓகேவா?'' என்று மகனிடம் அலைபேசியில் கேட்டார்.

''குட் நைட் பா. இனிமேல் இந்த மாதிரி கிறுக்குத் தனம் எதுவும் செய்யாதீங்க.'' என்று தந்தையை கண் டித்தான்.

''குட் நைட் விக்ரம்.'' என்று சொல்லி நடராஜன் அழைப்பை துண்டித்தார்.

''விக்ரம் பட்ட கஷ்டத்தை எனக்கு காட்டணும்னு நினைச்சு பொய் சொன்னீங்களா?'' என்று சிவகாமி தன் கணவரை விசாரித்தார்.

''ஆமா சிவகாமி.''

''அது எப்படி விக்ரமுக்கு தெரிஞ்சது?''

''நமக்கு வேணா அவனை பத்தி எதுவும் தெரியாமல் இருக்கலாம் சிவகாமி. ஆனால் நாம எப்போ என்ன பேசு வோம், என்ன செய்வோம்னு அவனுக்கு அத்துப்படி.'' என்று மகனது பெருமையை எடுத்துரைத்தவர் தங்கள் அறை நோக்கி சென்றார்.

தங்கள் அறைக்கு வந்து படுத்த பின், ''இப்போ எதுக்கு விக்ரம் கூப்பிட்டான்?'' என்று கேட்டார்.

''நான் தாங்க சாரி சொல்லலாம்னு கூப்பிட்டேன். ஆனால் அவன் என்னை சரியா சாரி கேட்க கூட விடா மல் பேச்சை மாத்தி உங்ககிட்ட பேசிட்டு போனையும் வச்சுட்டான்.''

''நீ சாரி எல்லாம் சொல்ல தேவை இல்லைன்னு நினைச்சிருப்பான் சிவகாமி.''

''அவன் நம்ம மேல பாசம் வச்சிருக்கான்.''

''உனக்கு இப்போ தான் அந்த விஷயமே தெரியுதா?''

"நைட்டிலே போன் வரவும் எப்படி பதறிக்கிட்டு பேசினான் தெரியுமா?" என்று மகனது நினைவில் சிவகாமி மூழ்கிப் போனார்.

'நீ விக்ரமை புரிஞ்சுக்கிட்டால் எனக்கு அது போதும் சிவகாமி. இப்பவாது யோசி.' என்று மனதிற்குள் கூறிக் கொண்ட நடராஜன் மனைவியை எந்தக் கேள்வியும் கேட்டு தொந்தரவு தராமல் கண்களை மூடி தன் தூக்கத்தை தொடர்ந்தார்.

## 28

கயல்விழி சனிக்கிழமை மதியம் சென்னை வந்து இறங்கினாள். அவளை அழைத்து செல்ல விக்ரம் ரயில் நிலையத்தில் காத்திருந்தான்.

"டிரைனிலே சாப்பிட்டியா? இல்ல இப்போ எதுவும் சாப்பிடுறியா?" என்று கேட்டான்.

"இல்லைங்க. எனக்கு எதுவும் வேண்டாம். அம்மா புளி சாதம் குடுத்து விட்டாங்க. நான் சாப்பிட்டுட்டேன்."

"கார் சர்வீஸுக்கு போய் இருக்கு. ஆட்டோவில் வீட்டுக்கு போகலாம்." என்றவன் ஆட்டோ ஒன்றை அமர்த்தினான்.

இருவரும் ஆட்டோவில் தங்கள் வீடு நோக்கி பயணம் செய்தனர்.

''பத்திரமா வந்துட்டேன்னு உங்க வீட்டுக்கு சொல்லிடு.'' என்று அவன் சொன்னதும் அந்த தகவலை தன் பெற்றோருக்கு தெரிவித்தாள்.

அதற்கு மேல் ஆட்டோவில் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

வீட்டிற்குள் நுழைந்ததும், ''காலையில சீக்கிரமா எழுந்திருச்சிருப்ப. டிரைனில் ஒரே இடத்துல அசையாமல் உட்கார்ந்து வந்தது வேற உனக்கு டயர்டா இருக்கும். போய் தூங்கு.'' என்றவன் அவளது பதிலை எதிர் பார்க்காமல் தொலைக்காட்சியை இயக்கி பார்க்க ஆரம்பித்தான்.

'அஞ்சு நாள் கழிச்சு ஒருத்தி வீட்டுக்கு வந்திருக்காளே. அவள்கிட்ட பேசுவோம்னு இல்லாமல் டிவி பார்க்கிறதை பாரு!' என்று கயல் தன் மனதினுள் நொடித்துக் கொண்டாள்.

வார்த்தைகளை வெளியே விடாமல் மனதினில் தான் உச்சரித்தாள். ஆனால் வெளியே அவனை முறைத்து கொண்டு நின்றிருந்தாள்.

தற்செயலாக தொலைக்காட்சியில் இருந்து இவள் புறம் பார்வையை திருப்பிய விக்ரம் அவளது முறைப்பை கண்டு புருவம் உயர்த்தினான்.

அவன் பார்த்து விட்டான் என்று தெரிந்தும் அவள் தன் முறைப்பை கைவிடவில்லை.

''இப்போ எதுக்கு வந்ததும் வராததுமா என்கிட்ட சண்டை போட அடிபோடுற?''

''ம்ம்ம் அஞ்சு நாளா உங்ககிட்ட சண்டை போடாமல் எனக்கு மண்டை வெடிக்கிற மாதிரி இருந்துச்சா... அதான் வந்ததும் சண்டையை ஆரம்பிக்கிறேன்.''

''என்ன விஷயம் அதை சொல்லு.''

''அஞ்சு நாள் கழிச்சு ஒருத்தி வந்திருக்காளே... அவளை ஒரு வார்த்தை விசாரிக்கணும்னு உங்களுக்கு தோணுதா?''

''விசாரிக்கணுமா? என்னன்னு விசாரிக்கணும்?''

''நான் நல்லா இருக்கேனான்னு ஒரு வார்த்தை கேட்டால் குறைஞ்சா போயிடுவீங்க?''

''நான் கடைசியா எப்போ உனக்கு போன் பண்ணினேன்?''

''இன்னைக்கு காலையிலே நான் டிரைன் ஏறும் போது.''

''அதுக்கு முன்னாடி எப்போ பேசினேன்?''

''நேத்து நைட்.''

''நேத்து உன்கிட்ட எத்தனை தடவை போனில் பேசினேன்?''

''நீங்க ஒரு தடவை போட்டீங்க. நான் மூணு தடவை போட்டேன். சோ மொத்தமா நாலு தடவை பேசினோம்.''

''ஒரு நாளைக்கு சராசரியா நாலு தடவை போன் பேசிக்கிட்டு இருக்கேன். நீ நல்லா தான் இருக்கேன்னு எனக்கு தெரியாதா? நேரிலே பார்க்கவும் செஞ்சாச்சு. நான் உன்னை எப்படி உங்க அம்மா வீட்டில் விட்டுட்டு வந்தேனோ அப்படியே தான் திரும்பி வந்திருக்க. இதுல என்ன விசாரிக்கணும்?''

என்ன சொல்வதென்று தெரியாமல் அவள் விழித்துக் கொண்டு நின்றாள்.

"நீ என்ன மூணாம் மனுஷியா உன்னை பார்த்ததும் நான் ஃபார்மலா எப்படி இருக்கேன்னு விசாரிக்க."

"சரி நான் ஒத்துக்கிறேன். நான் மூணாம் மனுஷி இல்ல. உங்க மனுஷி தான். என்னை பார்க்காமல் அஞ்சு நாள் இருந்து இருக்கீங்க இல்ல. என்னை மிஸ் பண்ணி னேன்னு அட்லீஸ்ட் சொல்லலாம்ல."

"மிஸ் பண்ணினேன்னு அட்லீஸ்ட் சொல்லணுமா? அப்போ அட்மோஸ்ட் நான் என்ன செய்யணும்னு நீ எதிர்பார்க்கிற?"

அவள் அதை எப்படி சொல்ல என்று தயங்கி கொண்டு பேசாமல் நின்றாள்.

"சொல்லு. எதுவா இருந்தாலும் நீ சொன்னால் தான் எனக்கு தெரியும்."

"ஒரு ஹக், ரெண்டு கிஸ்." என்று அவள் சுருதி இறங்கிய குரலில் கூறினாள்.

"அப்போ நான் வீட்டுக்குள்ள நுழைஞ்சதும் நான் உன்னை கட்டி பிடிச்சு முகம் பூரா முத்தம் குடுத்து நீ இல்லாமல் என்னால இருக்கவே முடியலை. உன்னை எப்போடா பார்ப்போம்னு இருந்துச்சுன்னு சொல்ல ணும்னு எதிர்பார்க்கிறியா?"

"செஞ்சால் என்ன தப்பு?"

"அப்படி எல்லாம் நடந்துக்க இங்கே என்ன சினிமாவா காட்டுறோம். இது வாழ்க்கை கயல்."

'அடப்போடா!' என்று மனதினில் திட்டிக் கொண்டே அவனருகே சென்று அமைதியாக அமர்ந்தாள்.

ஐந்து நிமிடங்கள் ஆகியும் அந்த அமைதி அங்கே நீடித்தது.

அவர்கள் பேச ஆரம்பித்தவுடன் விக்ரம் தொலைக்காட்சியை நிறுத்தி இருந்தான். அதனால் அதை பார்ப்பதாக பாவ்லா கூட அவர்களால் பண்ண இயலவில்லை.

''என்ன கயல் இன்னும் சைலன்ட்டா இருக்க?''

''ஒண்ணுமில்லை.''

''சரி நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு. நீ என்னை பார்த்து எவ்வளவு நாள் ஆச்சு?''

''அதே அஞ்சு நாள் தான்.''

''அப்போ நீயும் அஞ்சு நாளா என்னை பார்க்காமல் தானே இருந்தே. வீட்டுக்குள்ள வந்ததும் என்னை கட்டிப்பிடிச்சு நீ ஏன் கிஸ் பண்ணி நீ நினைக்கிற மாதிரி எல்லாம் என்னை பார்த்து உளறலை?''

''என்னோட எதிர்பார்ப்பு இவருக்கு உளறலா இருக்கா?'' என்று முதலில் அதுகுறித்து அவளது மனம் சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கோழியாய் நின்றது.

அதன் பின்பே அவன் கேட்ட கேள்வியின் அர்த்தம் மூளையில் பதிந்தது. இதுக்கு என்ன பதில் சொல்வது என்பது போல் அவள் திருதிருத்தாள்.

''நான் உன்னோட ஹஸ்பண்ட் தானே. நீ நினைச்சிருந்தால் இதை எல்லாம் செஞ்சு இருக்கலாமே. ஏன் செய்யலை? இது தான் யதார்த்தம் கயல். சினிமாட்டிக்கா எல்லாம் நம்மளால வாழ முடியாது.''

அவள் அதற்கு பதில் ஒன்றும் கூறவில்லை. அவன் பக்கம் திரும்பவும் இல்லை.

''நீயே உன் பிரண்ட்ஸ் யாருக்காவது போன் பண்ணி கேளு. எல்லோரும் நான் சொல்லுறது தான் சரின்னு சொல்லுவாங்க.''

அவள் உடனே தன் இடது கை சுண்டு விரலையும் கட்டை விரலையும் தவிர மீதி இருந்த விரல்களை எல்லாம் மடக்கிக் கொண்டு காதில் வைத்து, ''ஹலோ!'' என்றாள்.

யாரிடம் பேசுகிறாள் என்று அவளை திரும்பி பார்த்தவன் அவள் பண்ணும் அலும்பில் புன்னகைத்துக் கொண்டான்.

''ஹலோ ஏஞ்சல்கா!'' என்று விக்ரமின் முதல் மனைவியின் பெயரை சொல்லி மேல் நோக்கி விட்டத்தை பார்த்துக் கொண்டே அவள் பேசவும்,

அவளது நாடகத்தை தொடர விரும்பிய விக்ரம், ''சொல்லும்மா கயல்விழி.'' என்றான்.

அவன் தனக்கு பதில் சொல்லுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

நாமளே கேள்வி கேட்டு நாமளே பதில் சொல்லுவோம்னு நினைச்சால் இவர் உள்ளே புகுந்து பதில் சொல்லுறார் என்று சில நொடிகள் அமைதியானாள்.

தன் மனதில் நினைப்பதை கேட்டு விடலாம் என நினைத்து தொடர்ந்து பேச ஆரம்பித்தாள்.

''எனக்கு ஒரு டவுட் ஏஞ்சல்கா.''

''என்ன டவுட் கயல்விழி?''

''நீட்டி முழக்கி தான் என் பேரை கூப்பிடுவீங்களோ?'' என்று தன் கணவனிடம் சண்டை போட்டாள்.

''நான் இப்போ ஏஞ்சல் சார்பா தானே பேசுறேன். என்னோட ஏஞ்சல் எதுக்கு உன்னை செல்லமா பேரை சுருக்கி கூப்பிடணும்?''

நியாயமாக பார்த்தால் அவளுக்கு அவனது பதிலில் சந்தோஷம் கிட்டி இருக்க வேண்டும். எப்பொழுதும் விக்ரம் அவளை கயல் என்று சுருக்கி தானே அழைக் கிறான். அப்படி என்றால் அவன் செல்லமாக கூப்பிடுவ தாக தானே அர்த்தம்.

ஆனால் இவளோ என்னோட ஏஞ்சல் என்று அவன் சொன்ன அந்த வார்த்தையில் என்னோட ஏஞ்சலாம்... அப்போ நான் யாரு? என்று கடுப்பாகி போய் அமர்ந் திருந்தாள்.

''கயல்விழி சிஸ்டர்! ஏதோ சந்தேகம் கேட்கணும்னு சொல்லிட்டு இப்போ எதுவுமே பேசாமல் அமைதியா இருக்கே. என்ன விஷயம்?''

கயல் தன் அமைதியை கைவிட்டவளாய், ''உங்க ஹஸ்பண்டை பிரிஞ்சு நீங்க நாலஞ்சு நாள் வெளியூர் போயிட்டு வந்தால் உங்க ஹஸ்பண்ட் உங்களை எப்படி வரவேற்பார்?'' என்று கேட்டாள்.

''ஆஹா! இவளை கலாய்க்கிறதுக்கு எதுடா சாக்குன்னு நான் அலைவேன். இப்படி வலிய வந்து சிக்குறாளே!'' என்று விக்ரம் மனதிற்குள் குதூகலம் அடைந்தான்.

''ஓ! நீ அதை தெரிஞ்சுக்க விரும்புறியா கயல்விழி. நான் திரும்பி வரும் அன்னைக்கு அவர் ஆபீஸுக்கு லீவு போட்டுட்டு வீட்டிலே இருப்பார்.''

‘‘சே! நான் இவரோட லீவ் நாளில் தான் திரும்ப வந் திருக்கேன். திங்கட்கிழமை திரும்ப வந்திருக்கலாமோ?’’ என்று கயல்விழி நினைத்துக் கொண்டாள்.

‘‘சிகப்பு ரோஜாக்களால் செய்யப்பட்ட பொக்கே ஒண்ணை வாங்கி வச்சிருப்பார்’’. என்று விக்ரம் கதை அளக்க கேட்டுக் கொண்டிருந்த கயல்விழிக்கு வயிறு எரிந்தது.

‘‘எனக்கு ஏன் மாமா நீங்க பொக்கே குடுக்கலை?’’

‘‘உனக்கு எதுக்கு கயல் குடுக்கணும்? அவள் என் னோட ஏஞ்சல். மை லவர். நடு நடுவே பேசாதே. அப்புறமா ஏஞ்சல் சொல்ல வந்ததை உன்கிட்ட முழுசா சொல்லாமல் போயிடப் போறாள்.’’ என்றவன் மீண்டும் கதை அளக்க ஆரம்பித்தான்.

‘‘வீட்டுக்குள்ளே நுழைஞ்சதும் அதை என் கையிலே கொடுத்து என்னை இறுக்கி அணைச்சு நச்சு நச்சுன்னு முத்தமா குடுத்து தள்ளுவார்.’’

‘நானும் இதை தானே கேட்டேன். என்கிட்ட மட்டும் சினிமாவா எடுக்கிறோம்னு கேட்டார். ஏஞ்சல்னா மட்டும் அதெல்லாம் கரெக்ட்டா?’ என்று மனதோடு திட்டிக் கொண்டாள்.

‘‘அப்புறம் எங்க பெட் ரூம் முழுசும் கேன்டிலா ஏத்தி வச்சு இருப்பார். அப்படியே ரொமான்ட்டிக்கா ஒரு கேன்டில் லைட் டின்னர் சாப்பிடுவோம்.’’

அவள் ஏகத்திற்கும் அதிர்வாள் என அவன் எதிர் பார்க்க அவளோ நக்கலாய் புன்னகைத்தாள்.

‘‘பெட் ரூம்ல உட்கார்ந்து சாப்பிடுற ஆளை பாரு. எது எதை எங்கே செய்யணுமோ அதை அதை அங்கே

தான் செய்யணும்னு சொல்லுற ஆள் இவர். இவராவது டைனிங் டேபிளை விட்டுட்டு வேற இடத்திலே சாப் பிடுறதாவது?'' என்று சப்தமாகவே முணுமுணுத்தாள்.

''ஆஹா! தப்பா சொல்லி மாட்டிக்கிட்டேனா? ஆனாலும் கயல் நீ என்னை இந்த அளவுக்கு புரிஞ்சு வச்சுக்க கூடாது.'' என்று விக்ரமாய் மாறி பதில் கூறினான்.

''ஏஞ்சல்கா! உண்மையான பதிலை சொல்லுங்க.'' என்று அவள் கூறவும் மீண்டும் ஏஞ்சலாய் பேச ஆரம்பித்தான்.

''நான் என் விக்ரமை விட்டுட்டு எங்கேயும் போக மாட் டேன். எங்க அம்மா வீட்டுக்கு போனால் கூட ஈவினிங் திரும்பி வந்துடுவேன்.''

''அதான் இப்போ ஒரேடியா விட்டுட்டு போயிட்டீங் களே!'' என்று பட்டென்று கயல்விழி பதில் கொடுக் கவும், விக்ரம் தன் கண்களை மூடி அமைதி காத்தான்.

அவன் வந்ததில் இருந்து தன்னை வெறுப்பேற்றும் விதமாக நடந்து கொள்வதால் ஏற்கனவே கயல்விழி செம கடுப்பில் இருந்தாள்.

இதில் அவன் என் விக்ரமை விட்டு பிரியவே மாட் டேன் என்று ஏஞ்சல் சொல்வதாக சொல்லவும் ஏகத் திற்கும் கடுப்பானாள்.

'லவ் பண்ணி கல்யாணம் பண்ணின அவளுக்கு மட்டும் தான் இவர் சொந்தமா! அப்பா அம்மா பார்த்து கல்யாணம் பண்ணி வச்ச எனக்கெல்லாம் இவர் சொந்த மில்லையா? என் விக்ரமாம் என் விக்ரம்.'

'இவளுக்கு அம்மா வீடு டில்லியில் இருந்தால் வாரத்துக்கு நாலு தடவை கூட போய் பார்த்துட்டு

திரும்பிடலாம். நான் அப்படியா?' என்று மனதிற்குள் பொருமியவள் தங்கள் படுக்கை அறைக்குள் சென்று மறைந்தாள்.

கண்களை திறந்த விக்ரம், ''நான் உன்கிட்ட ஒரு விஷயம்...'' என்று பேச ஆரம்பித்தவன், அவள் அங்கே இல்லை என்றதும் தன் பேச்சை நிறுத்தினான்.

'எங்கேயோ ஆரம்பிச்ச பேச்சு எங்கேயோ போயி டுச்சே! கொஞ்ச நேரம் கழிச்சு போய் பார்ப்போம்' என நினைத்தவனாய் மீண்டும் தொலைக்காட்சியில் மூழ்கி னான்.

அவன் சொல்வதெல்லாம் பொய் என்று அவளுக்கு நன்றாகவே தெரிந்தது.

ஆனால் அவன் தன்னிடம் கதை சொன்ன போது ஏஞ்சல் என் லவர் என்று பெருமையோடு கண்கள் ஒளிர சொன்னது அவளுக்கு கோபத்தை உண்டாக்கியது.

'லவர்னா அவ கூடவே வாழ்ந்திருக்க வேண்டியது தானே. அந்த மகராசி போய் சேர்ந்துட்டாள். இங்கே நான் தான் லோல்படுறேன்.'

'இப்போ உனக்கு வாழ்க்கையிலே என்ன கஷ்டம்னு நான் தெரிஞ்சுக்கலாமா? சும்மா பிலிம் காட்டிக்கிட்டு இருக்க. உனக்கு என்ன குறைச்சல்? நல்லா தானே வாழ்ந்துக்கிட்டு இருக்க? பேசாமல் படுத்து தூங்கு' என்று தன்னை தானே அதட்டிக் கொண்டு தூங்கிப் போனாள்.

சிறிது நேரம் கழித்து அங்கே வந்த விக்ரம் அவள் தூங்குவதை கண்டு புன்னகைத்து கொண்டு அங்கே இருந்து சென்றான்.

மாலையில் இருவருக்கும் தேனீர் தயாரித்தவன் தனக்கானதை கப்பில் எடுத்துக் கொண்டான். அவளுக்கு உரியதை பிளாஸ்கில் ஊற்றி வைத்தான்.

அங்கே படுக்கையறையில் தூங்கி எழுந்த கயல்விழி, செம தூக்கம். எழுந்துக்கணுமான்னு இருக்கு. இன்னும் கொஞ்ச நேரம் தூங்கினால் அப்புறமா நைட் தூக்கம் வராது என்று நினைத்துக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தாள்.

அவள் முகம் கழுவி வந்த பொழுது அவளது அம்மா அவளை அலைபேசியில் அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று பேச ஆரம்பித்தாள்.

''சொல்லுங்கம்மா.''

''என்ன கயல் தூங்கிட்டு இருந்தியா? எழுப்பிட்டேனா?''

''இல்லைம்மா தூங்கி எழுந்துட்டேன். இப்ப தான் முகம் கழுவிட்டு வந்தேன். என்ன விஷயம்மா?''

''ஒண்ணும் விஷயம் இல்லை. அஞ்சு நாளா நீ வீட்டுல இருந்தியா... இன்னைக்கு நீ இல்லைன்னதும் வீடு வெறிச்சோடி கிடக்கு.''

''இதை உங்க மாப்பிள்ளை சொல்லுவார்னு எதிர் பார்த்தேன். அந்த மனுஷன் கல்லு மாதிரி இருக்கார். ஒரே நாளில் நீங்க சொல்லுறீங்க'' என்று மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்.

''அப்பா கூட நாலு தடவை சொல்லிட்டார். கயல் இல்லாமல் வீடு எப்படியோ இருக்குன்னு.''

''அப்பா சொன்னார். ஆனா உங்க மாப்பிள்ளை சொல்ல மாட்டேங்கிறார்.''

''மாப்பிள்ளையா? அவர் என்ன சொல்லணும்?''

''கயல் இல்லாமல் எனக்கு வீடே போர் அடிச்சதுன்னு தான்.''

''அதை இந்த உலகத்துல எந்த ஆம்பிளை சொல்லு வான்?''

''எங்க அப்பா சொன்னாரு தானே. அவர் ஆம்பிளை இல்லையா?''

''அங்க் தான் நீ தப்பு பண்ணுற. அவருக்கு அவர் பொண்ணை மட்டும் தான் தேடும். இதே வசனத்தை என்னை பார்த்து சொல்லச் சொல்லு பார்ப்போம். எல்லா ஆண்களும் அப்படி தான் கயல். இதெல்லாம் ஒரு பிரச்சனையா?''

''ப்ச்..''

''எதுக்கு இவ்வளவு சலிப்பு. இதுக்காக மாப்பிள்ளை கிட்ட சண்டை எதுவும் போடலையே.''

'ஆமாம்னு சொன்னால் காதுல ரத்தம் வரும் அள வுக்கு அட்வைஸ் பண்ணுவாங்களே!' என நினைத்தவள் ''அதெல்லாம் சண்டை போடலை.'' என்று பொய் சொன்னாள்.

மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு அவள் அம்மா அழைப்பை துண்டித்தாள்.

தூங்கி எழுந்த கயல் தன் சண்டையை மறந்தவளாய் விக்ரமிடம் பேச ஆரம்பித்தாள். அதனால் அவர்களது அந்த சின்ன மனக்கசப்பு ஒரு முடிவிற்கு வந்தது.

# 29

திங்கட்கிழமை விக்ரம் சற்று முன்னதாகவே வேலைக்கு கிளம்பினான். கயல்விழி நீட்டிய உணவினை வாங்கி கொண்டு சென்றான்.

அதே திங்கட்கிழமை திருச்சியில்...

சிவகாமி தன் கணவரிடம், ''நாம சென்னைக்கு போவோமா?'' என்று கேட்டார்.

''சென்னைக்கா? என்ன விசேஷம்?''

''விக்ரம் வீட்டுக்கு போவோமான்னு கேட்கிறேன்.''

''எனக்கும் அது புரியுது சிவகாமி. அதான் என்ன விசேஷம்னு கேட்கிறேன்.''

''என் பையனை பார்க்க என் பையன் வீட்டுக்கு போகணும்னா விசேஷம் வேணுமா என்ன?''

''பாருடா. எப்போ இருந்து பையன் மேல பாசம் வந்துச்சு?''

''அவன் நான் பெத்த பிள்ளைங்க. நீங்களே இப்படி பேசினால் எப்படிங்க? நான் தப்பு பண்ணி இருக்கலாம். அதுக்காக என் பிள்ளை மேல எனக்கு பாசம் இல்லைன்னு அர்த்தமாகிடுமா?'' என்று கேட்கும் பொழுதே அவர் அழுது விட்டார்.

அதற்கு மேல் கணவர் அருகே நிற்க விரும்பாமல் விலகி சென்றார். மனைவியின் மாற்றத்தை கண்ட நடராஜன் புன்முறுவல் புரிந்தார். அவர் உடனே தன் மகனுக்கு அழைத்து பேசினார். நடந்ததை கூறினார்.

"அவள் சட்னு அழுவாள்னு நான் நினைக்கலை விக்ரம்."

"நீங்க ஏன்பா அப்படி சொன்னீங்க?"

"அவளோட தப்பை அவள் உணர வேண்டாமா விக்ரம்?"

"தப்பை உணர்ந்ததால் தானேப்பா என் வீட்டுக்கு வரணும்னு அவங்களுக்கு தோணி இருக்கு."

"வீட்டுக்கு வந்தால் தப்பை உணர்ந்துட்டாள்னு அர்த்தமா? உன் கல்யாண சமயம் கூட உன் வீட்டுக்கு வர உங்க அம்மா ஆசைப்பட்டாள் தான்."

"அப்படியா? அப்போ ஏன் நீங்க சொல்லலை. சொல்லி இருந்தால் கயல் அம்மா அப்பாவோட உங்களுக்கும் சேர்த்து டிக்கெட் போட்டு இருப்பேன்ல."

"வேண்டாம்னு தான் விக்ரம் நான் உன்கிட்ட சொல்லலை. கயல் வீட்டு மனுஷங்ககிட்ட இவள் எப்படி பேசி பழகுவாள்னு தெரியலை. அவங்களே தன் பெண் எப்படி வாழப் போறாளோன்னு ஒரு கலக்கத்தில் இருப்பாங்க. உங்க அம்மா எக்கு தப்பா ஏதாச்சும் சொன்னாள்னா ஆரம்பமே சொதப்பல் ஆகிடும்னு நினைச்சேன்."

"சரிப்பா போனதை விடுங்க. எப்போ வரீங்க? எப்போ டிக்கெட் போட?"

''நீ ஃப்ரீயா இருக்கியா?''

''நான் ஆபீஸ்ல எவ்வளவு பிஸியா இருந்தாலும் என் வீட்டை எல்லாம் ஆபீஸுக்கு தூக்கிட்டு போக மாட் டேன்பா. அது அங்கேயே தான் இருக்கும். கயலும் கூட வீட்டிலே தான் இருப்பாள்.'' என்று அவன் சிரிக்காமல் சொல்ல,

நடராஜன் சிரித்துக் கொண்டே, ''அப்போ சரி. நாங்க நாளைக்கே கூட கிளம்பி வரோம்.'' என்றார்.

''ராக்போர்ட்ல டிக்கெட் போடட்டுமா?''

''வேண்டாம் விக்ரம். வைகைல டிக்கெட் இருக்கான்னு பாரு. வைகைன்னா மதியம் வந்து சேர்ந்துடுவோம்.''

''சரிப்பா. பார்த்துட்டு கூப்பிடுறேன். நாளைக்கு கிளம்ப தட்கலில் டிக்கெட் கிடைக்குதான்னு பார்க்கிறேன். வாரக் கடைசின்னா கிடைக்காது. நாளைக்கு செவ்வாய் கிழமை தானேப்பா. அதனால கிடைச்சுடும்.''

''சரிப்பா. முயற்சி பண்ணி பாரு. என்னைக்கு கிடைக் குதோ அன்னைக்கு கிளம்பி வரோம்.'' என்று சொல்லி நடராஜன் அழைப்பை துண்டித்தார்.

பத்தே கால் மணிக்கு தன் தந்தையை விக்ரம் அழைத்தான்.

''அப்பா! உங்க மொபைலுக்கு டிக்கெட் வந்துச்சா?''

''நான் குறுஞ்செய்தி எதையும் பார்க்கலையே விக்ரம். டிக்கெட் கிடைச்சுடுச்சா?''

''ஆமாப்பா. நாளைக்கு வைகைல கிளம்பி வர மாதிரி போட்டிருக்கேன். ஒரிஜினல் ஐடி எடுத்து வச்சுக்கோங்க.

டிக்கெட் கூட கேட்க மாட்டாங்க. ஒரிஜினல் ஐடி இல்லைன்னா ஃபைன் கட்ட வேண்டி இருக்கும்.''

''நான் மறக்காமல் எடுத்துக்கிறேன். ஸ்டேஷனுக்கு கயலை வர சொல்லுறியா விக்ரம்?''

''கயலையா?'' என்று அவன் அதிர்ந்தான்.

''எதுக்கு விக்ரம் இவ்வளவு ஷாக் ஆகிற? எனக்கு உன் வீட்டுக்கு வழி தெரியாதேன்னு நினைச்சு தான் அவளை வர சொன்னேன்.''

''எனக்கு அது புரியுதுப்பா. அவள் வழி காட்டி நீங்க என் வீட்டுக்கு வரதுக்கு பதிலா... திரும்ப திருச்சிக்கு போகிறதே சேஃப்னு நினைச்சு நீங்க அவளையும் கூட்டிட்டு திருச்சிக்கே போயிடுவீங்க. ரூட் சொல்லுற திலே மேடம் அம்பூட்டு கில்லாடி.'' என்றதும் நடராஜனும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

''வீட்டை கண்டுபிடிக்கிறது ஈஸி தான்பா. நான் வழி சொல்லுறேன். நீங்க பேப்பரில் நோட் பண்ணிக்கோங்க.'' என்றவன் தன் வீட்டிற்கு எப்படி வர வேண்டும் என்று அவரிடம் விரிவாக எடுத்துரைத்தான்.

மகனிடம் பேசி முடித்த பின் அவனது அழைப்பை துண்டித்த நடராஜன் மனைவியை தேடிச் சென்றார்.

''இவ்வளவு நேரமும் யார்கிட்ட பேசிக்கிட்டு இருந் தீங்க? சிரிப்பு சத்தம் இங்கே வரைக்கும் கேட்டது.''

''உன் பையன் தான் போன் பண்ணினான்.''

''செல்வம் என்ன சொன்னான்? நல்லா இருக்கானா? பல்லவி நல்லா இருக்காளா?'' என்று கேள்விகளை

அடுக்கிய மனைவியை நடராஜன் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தார்.

“என்னங்க பதில் சொல்லாமல் இப்படி பார்க்கிறீங்க? சிரிச்சு சிரிச்சு பேசினீங்க. அப்படின்னா ஏதோ சந்தோஷ மான விஷயம் தானே. அதை சொல்லாமல் இப்படி பார்த்தால் என்ன அர்த்தம்?”

“போன் பண்ணியது விக்ரம்.”

அந்த பதிலை கேட்ட சிவகாமி அப்படியே அமைதி யாகிவிட்டார். அவருடைய மனதில் ஒரு குற்ற உணர்வு தோன்ற ஆரம்பித்தது.

இவ்வளவு நடந்தும் மகன் என்றதும் எனக்கு ஏன் செல்வம் மட்டுமே நினைவில் வந்தான்?

விக்ரம் போனே பேச மாட்டான் என்று சொல்வதற்கு இல்லை. செல்வமும் சரி விக்ரமும் சரி அளவா தான் போன் பண்ணுவானுங்க. நான் தான் செல்வத்துக்கு அடிக்கடி போன் போட்டு பேசுவேன். விக்ரமுக்கு பேச மாட்டேன். அவன் சொன்ன மாதிரி அவனை நான் ரொம்ப தான் ஒதுக்கி வச்சுட்டேனா? என்று சுய அல சலில் ஈடுபட்டார்.

அவள் முகமே சொல்லுது... அவ செஞ்ச தப்பை உணர ஆரம்பிச்சுட்டாளு. இதுல நான் வேற தனியா எதுவும் குத்திக் காட்டி பேசக் கூடாது? என்று முடிவு கட்டிய நடராஜன் அமைதியாக இருந்தார்.

“விக்ரம் என்னங்க சொன்னான்?”

“டிக்கெட் போட்டு இருக்கான். நாம நாளைக்கே சென்னைக்கு கிளம்பணும்.”

"நாளைக்கேவா? அவனே டிக்கெட் போட்டுட்டானா?"

"ம்ம்ம் அவன் எப்போ ஃப்ரீயா இருப்பான்னு கேட்டேன். அதை எல்லாம் பார்க்க வேண்டாம் நீங்க உடனே கிளம்பி வாங்கன்னு சொல்லி டிக்கெட் போட்டு அனுப்பி இருக்கான்."

"அவன் உடனே வர சொல்லுவான்னு நான் எதிர் பார்க்கலைங்க."

"நான் தான் சொன்னேனே சிவகாமி. நீ அவனை சரியா புரிஞ்சுக்கலைன்னு."

"ம்ம்ம்" என்றவர் சில நொடிகள் அமைதியாய் இருந்து விட்டு, என்ன ஜோக் சொன்னான்னு அப்படி சிரிச்சீங்க? என்று கேட்டார்.

விக்ரம் கயலை கிண்டல் செய்ததை அவர் தெரிவித்ததும், "அவங்க ரெண்டு பேரும் சந்தோஷமா வாழுறாங்க தானே? விக்ரம் முகத்திலே எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு சந்தோஷம் தெரியுது தானேங்க?" என்று சிவகாமி சந்தேகம் கேட்டார்.

"இந்த கேள்வியை நான் அவன்கிட்ட நேரடியாவே கேட்டேன் சிவகாமி. அவன் கண்டிப்பா சந்தோஷமா தான் இருக்கான். கயல் ரொம்ப நல்ல பொண்ணா தான் தெரியுறாள்.

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்னு சொல்லுவாங்க. விக்ரமுக்கு அம்மா அப்பா எப்படியோ... பொண்டாட்டி நல்லவளா அமைஞ்சு இருக்காள்.' என்று நடராஜன் மனதோடு கூறிக் கொண்டார்.

சந்திரலேகா நம்மகிட்ட தான் இப்படி நடந்துக்கிறாளா... இல்லை செல்வத்திடமும் அப்படி தான் நடந்துக்கு வாளான்னு தெரியலைங்க. ஆனால் கல்யாணத்துக்கு அப்புறம் செல்வம் முகத்திலே சந்தோஷ களையே இல்லை. அவனை பார்க்கும் போதெல்லாம் தப்பான பொண்ணை கட்டி வச்சுட்டேனோ அப்படின்னு ஒரு உறுத்தல் எனக்கு எப்பவும் இருக்கு.

"இதுல உன்னோட தப்பு என்ன இருக்கு சிவகாமி? நாலு வரன் வந்துச்சு. நாலையும் அவன்கிட்ட காட்டி நீயே முடிவு பண்ணி சொல்லுன்னு சொன்னோம். அவன் தானே சந்திரலேகாவை தேர்ந்தெடுத்தான்."

"நீங்க சொல்லுறது சரி தான்."

"செல்வத்துக்கு ஒரு கஷ்டம்னா உன் காதுல ஓட்டை விழுகிற அளவுக்கு அவன் புலம்புவான் தானே? உன் மபயன் அப்படி எதுவும் செய்யலையே. அப்போ சந்தோஷமா இருக்கான்னு தானே அர்த்தம்."

அவன் அந்த மாதிரி என்கிட்ட ஒரு வார்த்தையும் புலம்பலை தான். ஆனால் செல்வம் கல்யாணத்துக்கு அப்புறம் என்கிட்ட சரியா பேசாமல் ஒதுங்கி போகிற காலை தான் எனக்கு ஒரு சந்தேகம்.

"செல்வம் நம்மகிட்ட எல்லாம் பேசுறது லேகாவுக்கு பிடிக்கலையோ என்னவோ... அதான் எதுக்கு வம்புன்னு அவனும் ஒதுங்கி போகிறான் போல."

"இருக்கலாம்." என்று சொன்ன சிவகாமி தனக்குள் முழ்கி விட்டார்.

அன்று இரவு வீட்டிற்கு வந்த விக்ரமை கயல் உற் சாகத்துடன் வரவேற்றாள்.

''வரவேற்பெல்லாம் பலமா இருக்கு. நான் தப்பான வீட்டுக்குள்ள நுழைஞ்சிடலையே!''

''பக்கத்து வீட்டுக்கு போய் தான் பாருங்களேன். உங்களை வீட்டுக்குள்ள கூட நுழைய விடமாட்டாங்க.'' என்று நக்கல் பண்ணிய கயல் அவனிடம் இருந்து உணவு டப்பாவை வாங்கி கொண்டு சமையல் அறைக்கு சென்றாள்.

''இன்னைக்கு எப்படி பொழுது போச்சு?''

''வழக்கம் போல தான்.''

''நீ இங்கே வந்து உட்கார். உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்.''

அவனருகே வந்து அமர்ந்தவள், ''என்ன விஷயம்? சந்தோஷமானதோ? உங்க முகமே பிரகாசமா இருக்கு.'' என்றாள்.

''என் முகம் என் ஏஞ்சலோடது மாதிரி எப்பவும் பிரைட்டா தான் இருக்கும்.''

''அப்போ என்னோடது?''

''உன்னோட முகமா? ம்ம்ம்... எங்களோட கம்பேர் பண்ணினால் கொஞ்சம் சுமார் ரகம் தான்.''

அவள் சட்டென்று முகம் திருப்பவும் அவன் சிரித்துக் கொண்டே அவளது தாடையை பிடித்து தன் பக்கம் திருப்பினான்.

''நான் கிண்டல் பண்ணுறேன்னு உனக்கு தெரியுதுல. அப்புறம் எதுக்கு இந்த கோபம்? எனக்குன்னு இருக்கிறது நீ மட்டும் தான்டி என் மக்கு'' என்றதும் முகம் மலர்ந்தாள்.

''எனக்குன்னு இருக்கிறது நீ மட்டும் தான்னு நான் பாட்டுக்கு சொல்லிக்கிட்டு இருக்கேன். உனக்கு போட்டிக்கு ஆள் வருவாங்க போல இருக்கு.''

அவன் சந்தோஷமாக பேச ஆரம்பிக்கவும் அவள் விருட்டென்று எழுந்து அங்கே இருந்து செல்ல ஆரம்பித்தாள்.

எட்டி அவள் கையை பிடித்து தடுத்தவன், உன்கிட்ட தானே பேசிக்கிட்டு இருக்கேன். இப்போ எதுக்கு எழுந்து போறே? என்று கேட்டான்.

''ம்ம்ம் எனக்கு போட்டிக்கு ஆள் வரும்னு நீங்க விவஸ்தையே இல்லாமல் பேசுவீங்க. அதை நான் ஈன்னு இளிச்சுகிட்டு கேட்கணுமா?''

''விவஸ்தை இல்லாமலா?'' என்று சில நொடிகள் குழம்பியவன்,

''சீ! சீ! நான் அப்படி சொல்ல வரலை. ஒரு பொண்டாட்டியை வச்சே இங்கே சமாளிக்க முடியலையாம். இதுல இன்னொண்ணு வேறயா? மத்தவங்க எப்படியோ இந்த விக்ரம் அதுக்கு சரிப்பட்டு வர மாட்டான்.'' என்றதும் மீண்டும் அவனருகே அமர்ந்தாள்.

''காலையில எங்க அப்பா போன் பண்ணினார்'' என்று தொடங்கி நடந்ததை விவரித்தான்.

''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா கயல். என்னை தேடி இது வரைக்கும் எங்க வீட்டுல இருந்து யாருமே வந்ததில்லை. நான் பிளஸ் ஒன் படிக்கவே ஹாஸ்டலுக்கு போயிட்டேன்னு சொன்னேனல்ல. அப்போ இருந்தே அப்படி தான். முதல் முறையா எங்க அம்மா அப்பா

வராங்க. ஒருவேளை எங்க அம்மாவுக்கு என்னை பிடிக்க ஆரம்பிச்சிடுச்சோ?''

''நீங்க அவங்களோட பையன் தானே? உங்களை பிடிக்காமல் போகுமா?''

அவளது கேள்விக்கு பதில் அளிக்காமல் அவன் அமைதியாய் இருந்தான். அவனை பார்க்க அவளுக்கு கஷ்டமாக இருந்தது.

அவனது மௌனத்தை கலைக்க விரும்பாமல் எழுந்து சமையல் அறைக்கு சென்று இரவு உணவை தயாரிக்கும் வேலையில் மூழ்கினாள்.

''இத்தனை வருஷமா இல்லாமல் அத்தை இவரை தேடி எதுக்கு வராங்க? உறவை வளர்த்துக்கவா? இல் லைன்னா அன்னைக்கு போட்ட சண்டையை தொடரவா? என்னை ஏதாச்சும் திட்டுவாங்களோ? இத்தனை வரு ஷமா எதிர்த்துப் பேசாமல் இருந்தவன் இப்போ பேசு றான்னா என்ன அர்த்தம்? நீ சொல்லிக் கொடுக்காமலா அப்படின்னு என்னை கேட்பாங்களோ?''

''மீனாட்சி தாயே! இது என்ன எனக்கு புது சோதனை? அவங்க ரெண்டு பேரும் வராங்கன்னு நினைச்சு இவர் சந்தோஷமா இருக்கார். ஆனால் எனக்கு கலக்கமா இருக்கே! இவர் பாட்டுக்கு ஆபீஸ் போயிடுவார். நான் தானே அவங்க கூட நாள் பூராவும் இருக்கணும்.''

'நான் பார்த்த வரைக்கும் மாமா நியாய அநியாயம் தெரிஞ்சவரா இருக்கார். அதனால அவர் கூட எனக்கு, எந்த சண்டையும் வராதுன்னு நம்புறேன். ஆனால் அத்தை எதையுமே ஆராயாமல் தீர்ப்பு சொல்லுறவங் களா இருக்காங்களே!

'ஹேய் லூசு கயல்! எதையாச்சும் பேசி சண்டை இழுத்து விட அந்த சந்திரலேகா தான் பக்கத்திலே இருக்கப் போறதில்லையே. அப்புறமா ஏன் பயப் படுறே?' என்று தன்னை தானே தேற்றிக் கொள்ள முயன்றாள்.

திருச்சியில் இருந்து அவளும் விக்ரமும் சுமுகமாய் கிளம்பி வந்திருந்தால் அவள் வருத்தப்பட்டு இருக்க மாட்டாள்.

இந்த இடைப்பட்ட ஒரு வாரத்தில் அவர்கள் சாதா ரணமாய் போனில் பேசி இருந்தாலும் அவள் இந்த அளவிற்கு கவலைப்பட மாட்டாள். அதுவும் நடக்க வில்லை என்பதால் அவள் பயந்து போய் இருந்தாள்.

தன் யோசனையில் இருந்து மீண்டு தங்கள் அறைக்கு சென்று முகம் கழுவி உடை மாற்றி வந்த விக்ரம் சமையல் அறையில் நின்று கொண்டு சுவரையே வெறித்துக் கொண்டிருந்த கயல்விழியை கண்டு புருவம் உயர்த்தினான்.

'சுவரை எதுக்கு முறைச்சுக்கிட்டு நிக்கிறாள்? பொதுவா என்னை தானே முறைப்பாள். விக்ரம்! இன்னைக்கு நீ எஸ்கேப் போல. சுவர் மாட்டிக்கிச்சு' என்று கிண்டல் பண்ணிக் கொண்டான்.

"கயல்! பசிக்குது. சாப்பாடு ரெடியா?"

"ரெடிங்க. நீங்க டைனிங் டேபிளில் உட்காருங்க. நான் கொண்டு வரேன்."

அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை அங்கே வேற எந்த பேச்சும் இடம் பெறவில்லை.

அவன் சாப்பிட்டு முடித்து தொலைக்காட்சியை இயக்கி பார்க்க ஆரம்பித்தான். பத்து நிமிடங்கள் தொலைக்காட்சியின் சப்தத்தை தவிர அங்கே வேற எந்த சத்தமும் கேட்கவில்லை.

மனைவியிடம் ஒரு விஷயம் சொல்ல நினைத்தவன் அவள் எங்கே என்று திரும்பி பார்த்தான்.

தட்டின் முன் அமர்ந்து கொண்டு சாப்பிடாமல் அவள் எங்கேயோ பார்வையை பதித்து அமர்ந்து இருப்பதை கண்டவன் குழம்பினான்.

இவளுக்கு என்ன ஆச்சு? இப்படி எல்லாம் இருக்க மாட்டாளே! நான் வீட்டுக்குள்ளே வரும் போது நல்லா தானே இருந்தாள். அம்மா வராங்கன்னு சொன்னதுக்கு அப்புறமா தான் இப்படி ஆகிட்டாளா? அவங்க வருவது இவளுக்கு பிடிக்கலையா?

இது என்னடா புது பிரச்சனை! இவளுக்காக நான் அவங்களை விட முடியுமா? இல்லை அவங்களுக்காக நான் இவளை விட முடியுமா? எல்லா உறவையும் மெயின் டைன் பண்ணுறது அவ்வளவு ஈஸியான விஷயம் கிடையாதோ?

நிறைய அடிபட வேண்டி இருக்கும் போல. இவளை இப்போ என்ன சொல்லி சமாளிக்கணும்? என்று குழம்பி போய் அமர்ந்திருந்தான்.

அவளை அப்புறமா சமாதானப் படுத்துவோம். முதலில் சாப்பிட வைப்போம். என நினைத்தான்.

''கயல்! சாப்பிடாமல் எதை வெறிச்சு பார்த்து உட்கார்ந்துக்கிட்டு இருக்க. சாப்பிடு. கை காயப் போகுது.''

என்று அவன் கூறவும் அவள் வேகவேகமாக சாப்பிட ஆரம்பித்தாள்.

இரவு படுக்கைக்கு வரும் வரையிலும் அவள் அவனிடம் எதை பற்றியும் பேசவில்லை. அமைதியாக வந்து அவனருகே படுத்தாள்.

"மேடம்! இப்போ எதுக்கு ஓவர் சைலன்ட்டா இருக்கீங்க?"

"என்னையா கேட்கிறீங்க?"

"இங்கே எத்தனை மேடம் இருக்காங்க? அதுலயும் என்னோட மேடம் நீ தானடி என் மக்கு." என்றவன் அவளது இடையில் கை போட்டு தன்னருகே இழுத்துக் கொண்டான்.

"ஒண்ணுமில்லை மாமா. நான் எப்பவும் போல தான் இருக்கேன்."

"நீ எப்பவும் போல இருந்தால் இந்நேரத்திற்கு நீ போட்ட ரம்பத்துல என் காதுல ரத்தம் வந்திருக்குமே. ஆனா இன்னைக்கு வரலையே."

"ம்ம்ம் இன்னைக்கு என் புருஷன் காது மேல அன்பும் அக்கறையும் ஜாஸ்தியாகிடுச்சு. அதான் பேசாமல் இருக்கேன்."

"அப்போ இத்தனை நாளா என் மேல கடுப்பா இருந்தியா? இது தெரியாமல் நான் உன்னை என் மக்குன்னு எல்லாம் கொஞ்சிக்கிட்டு இருந்தேனா?"

"சும்மா கடுப்பேத்தாமல் போங்க."

"எங்கே போக சொல்லுறே? சரி அதை விடு. என்ன விஷயம்? எதுக்கு உம்முன்னு இருக்கே? அதை சொல்லு."

''நான் தான் அப்படி எதுவும் இல்லைன்னு சொல்லுறேன்ல.''

''எங்க அம்மாவும் அப்பாவும் இங்கே வருவது உனக்கு பிடிக்கலையா?''

''ஐயோ! என்ன இப்படி கேட்கிறீங்க?'' என்று அவள் பதறினாள்.

''நான் அவங்க வரும் விஷயம் சொன்னதில் இருந்து தான் நீ இப்படி அமைதியா இருக்கே. அப்போ நான் அப்படி தானே நினைக்க முடியும்.''

அவள் அமைதியாக இருக்கவும் அவன் கடுப்பானான்.

''கயல்! நான் உனக்கு நிறைய தடவை சொல்லிட்டேன். எதுவா இருந்தாலும் என்கிட்ட நேரடியா கேளு. என்னால உன் மனசிலே புகுந்து கண்டுபிடிக்க முடியாதுன்னு. இப்போ சொல்லப் போறியா இல்லையா?'' என்று அதட்டினான்.

''அது வந்து... அன்னைக்கு திருச்சியில் நாம சண்டை போட்டுட்டு வந்துட்டோமா... நாளைக்கு அத்தை ஏதாச்சும் என்னை திட்டுவாங்களோன்னு எனக்கு பயமா இருக்கு.''

''நாம சண்டை போட்டோமா? எங்க அம்மாவை திட்டி சண்டை போட்டது நான். நானே பயப்படாமல் இருக்கேன். உனக்கு எதுக்கு பயம்?''

''இவ்வளவு வருஷமும் உங்க அம்மாவை எதிர்த்துப் பேசாமல் நீங்க அமைதியா தானே இருந்திருக்கீங்க இப்போ நான் சொல்லிக் கொடுத்து தான் அப்படி பேசுறீங்கன்னு நினைச்சிடுவாங்களோன்னு...''

அவன் எழுந்து படுக்கையில் சாய்ந்து அமர்ந்தான். அவளும் அவனருகே அமர்ந்து கொண்டாள்.

"கயல்! உன்கிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். நான் அன்னைக்கு உங்க வீட்டுல உன்னை விட்டுட்டு பஸ்ல கிளம்பினேன்ல. அன்னைக்கு நைட் பதினோரு மணிக்கு எங்க அம்மா எனக்கு போன் பண்ணி சாரி கேட்டாங்க."

"என்னது அத்தை சாரி கேட்டாங்களா? வயசிலே பெரியவங்கன்னு கூட பார்க்காமல் திட்டி விட்டு வந்தது நீங்க. உங்ககிட்ட அவங்க எதுக்கு சாரி சொன்னாங்க?" என்றதும் அவளை முறைத்தான்.

"என்ன முறைப்பு வேண்டி இருக்கு. அவங்களை சாரி சொல்ல விட்டுட்டு நீங்க இன்பத் தேன் வந்து பாயுது காதினிலேன்னு கேட்டுக்கிட்டு இருந்தீங்களா?"

"மாமியாருக்கு ரொம்ப தான் சப்போர்ட் பண்ணி பேசுற மாதிரி இருக்கு."

"இந்த கயல் எப்பவும் நியாயத்தின் பக்கம். பேச்சை மாத்தாதீங்க. நீங்க என்ன சொன்னீங்க?"

அன்று நடந்ததை அவளுக்கு விளக்கியவன், "அம்மா பேச்சை அப்படியே திசை திருப்பிட்டேன். அதுக்கு அப்புறம் இது சம்பந்தமா நாங்க பேசிக்கலை." என்றான்.

"அப்போ நாளைக்கு என்னை திட்ட மாட்டாங்க தானே?"

"ம்ம்ம் எனக்கு சரியா சொல்லத் தெரியலை, கயல். நான் நாளைக்கு ஆபீஸ் போயிடுவேன் தான். அதுனாலும் நீயும் அம்மாவும் தனியா இருக்கிற சூழ்நிலை வராது. ஏன்னா அப்பா உங்க கூட தான் இருப்பார்.

அதனால உன்னை அம்மா பெருசா கேள்வி கேட்க மாட் டாங்க. அப்படியே திட்டினாலும் ஒரு காதிலே வாங்கி இன்னொரு காதிலே விட்டுடு. இப்போ உங்க அம்மா திட்டினால் பொறுத்து போவ இல்ல... அது மாதிரி கொஞ்சம் பொறுத்துக்கோ. ஆனால் ரொம்ப அநியாயமா ஏதாச்சும் சொன்னாங்கன்னா எதிர்த்து கேள்வி கேளு."

"எதிர்த்து பேசுறதா?! நானா?!" என்று அவள் அதிர்ந் ததை கண்டு புன்முறுவல் புரிந்தான்.

"இந்நேரம் உங்க மாமியாருக்கு ஒரு விஷயம் நல்லா புரிஞ்சிருக்கும் கயல்."

"என்ன விஷயம்?"

"நீ எனக்கு எவ்வளவு முக்கியம்னு. அதனால உன்னை ஒண்ணும் திட்ட மாட்டாங்க. நீ பயப்படாமல் இரு."

அவள் சரி என்று தன் தலையை தலையை ஆட்டினாள். அவன் இவ்வளவு நேரமும் கூறிய விளக்கங்கள் அனைத்தும் தூங்கி எழுந்ததும் அவள் மறந்துவிட்டு திரும்பவும் மனதை குழப்பி கொள்ள தான் போகிறாள் என்று தெரியாமல் அவன் நிம்மதியாய் தூங்கிப் போனான்.

## 30

மறுநாள் காலை விக்ரம் அலுவலகம் கிளம்பி சென்ற பின் கயல்விழி வீட்டை மாமியாரின் வரவிற்காக தயா படுத்த ஆரம்பித்தாள்.

அவள் எப்பொழுதும் சுத்தமாக வைத்து கொள்வாள் என்பதால் அந்த வேலையும் வேகமாக முடிந்தது. அவர்களின் வரவிற்காய் சற்றே பதட்டத்தோடு காத்திருந்தாள்.

மதிய உணவு வேண்டாம் என்று அவர்கள் சொல்லிவிட்டதால் மாலை டிபன் செய்வதற்கு எல்லாம் தயாராய் எடுத்து வைத்தாள்.

நடராஜனும் சிவகாமியும் சென்னை வந்து இறங்கினார்கள். அவர்கள் ஏசி கோச்சில் இருந்து வெளியே வந்ததும் சென்னையின் வெயில் அவர்கள் முகத்தில் அறைந்தது.

''வீட்டுக்கு வழியை நல்லா கேட்டுக்கிட்டீங்களா?'' என்று சிவகாமி கேட்கவும்,

''இதே கேள்வியை எத்தனை தடவை கேட்பே. அதெல்லாம் நல்லா கேட்டுக்கிட்டேன்.'' என்று பதில் அளித்தார்.

''ஹாய் பா!'' என்று ஒரு குரல் அருகில் ஒலிக்கவும்,

விக்ரம் குரல் மாதிரி இல்ல. என்று சொல்லிக்கொண்டே நடராஜன் திரும்பி பார்த்தார்.

அங்கே அவன் தான் நின்று கொண்டிருந்தான்.

அவனை கண்டவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். தாயின் கையில் இருந்த பையை விக்ரம் வாங்கிகொண்டான். நடந்து கொண்டே பேச ஆரம்பித்தார்கள்.

''என்ன விக்ரம் ஆபீஸ் போகலையா?''

''உங்களை வீட்டிலே டிராப் பண்ண தான் ஆபீஸில் இருந்து நடுவிலே வந்திருக்கேன். திரும்பவும் ஆபீஸ் போகணும்.''

''நாங்க ஆட்டோ பிடிச்சு போயிட மாட்டோமா? எதுக்கு சிரமப்படுறே?''

''இல்லைப்பா. நீங்க முதல் முதலா என்னை பார்க்க வரீங்க. அதான் உங்களை ரிஸீவ் பண்ண நேரிலே வரணும்னு எனக்கு தோணுச்சு.''

மகனது இந்த பாசமான வரவேற்பை சிவகாமி எதிர் பார்க்கவில்லை. அவருக்கு ஆனந்தத்தில் கண்கள் சிறிது கலங்கியது.

சிவகாமியின் மனநிலையை புரிந்து கொண்ட நட ராஜன் மனைவியை பார்த்து முறுவலித்து விட்டு மகனுடன் பேசிக் கொண்டே நடந்தார்.

விக்ரம் தன் கார் நிற்கும் இடத்திற்கு அவர்களை அழைத்து சென்றான். பெட்டிகளை டிக்கியில் வைத்து பூட்டினான். அவர்கள் இருவரும் பின் இருக்கையில் அமர்ந்தனர். ஒட்டுநர் இருக்கையில் அமர்ந்த விக்ரம் காரை தன் வீடு நோக்கி செலுத்த ஆரம்பித்தான்.

''இது உன் காரா விக்ரம்?'' என்று சிவகாமி கேட்டார்.

நம்ம கார் தான்மா. என்று மகனது பதிலில் சிவகாமி சந்தோஷம் அடைந்தார் என்றால், நடராஜனோ பெருமை யாக உணர்ந்தார்.

தகப்பனும் மகனும் பேசிக் கொண்டே வந்தார்கள் சிவகாமி வெளியே வேடிக்கை பார்த்த வண்ணம் வந்தார்.

என்னோட கல்யாணம் முடிஞ்ச நாலாவது நாள் நான் என்னோட பிரண்ட்ஸ்க்கு எல்லாம் இங்கே ஒரு பார்ட்டி ஏற்பாடு பண்ணி இருந்தேன். நீங்களும் அதிலே

கலந்துக்கணும்னு நான் ஆசைப்பட்டேன். டிக்கெட் கூட போட்டு வச்சிருந்தேன்.

கல்யாணத்தன்னைக்கு இந்த லேகா அண்ணி பண்ணிய கூத்திலும் அம்மா சொன்ன தீர்ப்பிலும் கடுப்பாகி அந்த டிக்கெட்டை கேன்சல் பண்ணிட்டேன். இப்போ நினைச்சா சின்னப்பிள்ளை தனமா இருக்கு. அன்னைக்கு இருந்த கோபத்தில் அப்படி செஞ்சுட்டேன். சாரிப்பா. என்றான்.

''நான் அன்னைக்கே லேகா என்ன சொன்னாள்னு கேட்டேன். நீ தான் சொல்ல மாட்டேன்னு சொல்லிட்ட. இப்பவாவது சொல்லு விக்ரம்.'' என்று நடராஜன் கேட்டார்.

அவன் உண்மையை சொன்னால் சிவகாமி மேலும் வருந்தக் கூடும் என நினைத்த விக்ரம், ''முடிஞ்சு போனதை கிளற வேண்டாம்பா.'' என்றான்.

அவன் சிவகாமிக்காக தான் உண்மையை சொல்ல மறுக்கிறான் என்பது அவனை பெற்றவர்களுக்கு நன்றாகவே புரிந்தது.

முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும். நடப்பது நல்லதாக இருக்கட்டும் என அவர்களும் நினைத்தனர்.

அவர்களது குடியிருப்பு வளாகத்தில் கார் நுழைந்தது. கயல்விழி அங்கே காத்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரையும் வரவேற்றாள். காரில் இருந்து இறங்கிய விக்ரம் பெட்டிகளை எடுத்து வெளியே வைத்தான்.

''கயல்! நீ இவங்களை வீட்டுக்கு கூட்டிட்டு போ. நான் ஆபீஸ் கிளம்புறேன். எனக்கு டைம் ஆச்சு.'' என்றான்.

விக்ரம் மூவரிடமும் விடை பெற்று அலுவலகம் நோக்கி செல்ல ஆரம்பித்தான்.

"அபார்ட்மெண்ட் ரொம்ப நல்லா இருக்குல்ல." என்று சொல்லிக் கொண்டே சிவகாமி மருமகளை பின் தொடர்ந்தார்.

அவர்கள் மூவரும் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

மூன்று படுக்கை அறை கொண்ட அந்த வீட்டை கண்ட சிவகாமி, சொந்த வீடுன்னு அன்னைக்கே சொன் னானே. நல்ல வீடா தான் வாங்கி போட்டிருக்கான். என்று மகனுக்கு சான்றிதழ் வழங்கினார்.

அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் அறையில் பெட்டிகளை கொண்டு போய் கயல் வைத்தாள். அவர்கள் இருவரும் வரவேற்பறை சோபாவில் சென்று அமர்ந்தனர்.

'வீட்டை சுத்தி பார்க்கலாம் வாங்க.' என்று அழைக்க லாமா என கயல் யோசித்தாள்.

"நேத்து வந்த நீ என் மகன் வீட்டை எங்களுக்கு சுத்தி காட்டுவதா?" என்று சிவகாமி சொல்லி விடுவாரோ என்று தோன்றவும் வாயை மூடிக் கொண்டாள்.

"வீட்டு வேலைக்கு ஆள் வச்சிருக்கியாம்மா?"

"இல்லை அத்தை. இங்கே எனக்கு சும்மாவே பொழுது போகலை. இதுல வேலைக்கு ஆள் வச்சால் சுத்தமா பொழுது போகாதே."

"வீட்டை ரொம்ப நல்லா வச்சிருக்க கயல்." என்று அடுத்த பாராட்டு மருமகளுக்கு கிடைத்தது.

அந்தப் பாராட்டில் அவர்களது மருமகள் வெட்கப்பட்டு போனாள்.

''ஏதாச்சும் சாப்பிடுறீங்களா?''

''இல்லைம்மா. எதுவும் வேண்டாம்.''

''காலை அசைக்காமல் பிரயாணம் பண்ணி வந்து இருக்கீங்க. கொஞ்ச நேரம் படுக்குறீங்களா?''

''இல்லைம்மா. நீ வேணா போய் தூங்கு.''

''நான் பகலில் தூங்க மாட்டேன் அத்தை.''

''அப்போ உட்கார். பேசிக்கிட்டு இருப்போம்.''

அவர்களின் எதிரே அமர்ந்தவள் தன் கைகளை பிசைவதை கண்ட நடராஜன் யோசனையில் ஆழ்ந்தார்.

''என்னம்மா கயல்? ஏதாச்சும் பிரச்சனையா? எங்க கிட்ட எப்படி சொல்லுறதுன்னு தயங்குறியா?''

''அது வந்து... பிரச்சனை எதுவும் இல்லை மாமா.''

''நீ என்ன சொல்ல நினைக்கிறே? தயங்காமல் சொல்லும்மா.''

''அன்னைக்கு திருச்சியில்... அவர் உங்க கூட சண்டை போடுவார்னு நான் எதிர்பார்க்கலை. நான் எதுவும் அவர்கிட்ட சொல்லலை. அவரா தான் அப்படி சண்டை போட்டார். அவரை எதிர்த்து நான் ஏதாவது சொன்னால் அவர் கோபம் அதிகமாகும்னு தான் நான் பேசாமல் அவர் பின்னாடியே போயிட்டேன். நடந்த தப்புக்கு நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்.''

எப்படியோ தன் மனதில் இருப்பதை அவள் போட்டு உடைத்தாள்.

'இதுக்கு நான் பதில் சொல்லுறதை விட சிவகாமி சொன்னால் தான் சரியா இருக்கும். மாமியாருக்கும் மருமகளுக்கும் அப்போ தான் உறவு பலப்படும்' என நினைத்த நடராஜன் அமைதி காத்தார்.

சிவகாமியோ கண்களை மூடி அமைதியாய் அமர்ந் திருந்தார். அவர்கள் இருவரின் மௌனம் கயல்விழியின் வயிற்றில் புளியை கரைத்தது.

அவங்க எதுவும் கேட்காமல் நானே வந்து வான்ட்டடா சிக்கிட்டேனோ? இப்போ என்ன சொல்லுவாங்கன்னு தெரியலையே. அதை விட ஆபீஸில் இருந்து வந்து அவர் என்ன சொல்லுவாருன்னு தெரியலையே.

முந்திரிக்கொட்டை! அவங்க வந்ததும் வராததுமா உன்னை யாரு போய் இப்படி உளறி கொட்ட சொன் னான்னு சத்தம் போடுவாரா? என்று நினைக்கும் போதே அவளுக்கு பயம் அதிகரித்தது.

''எனக்கு யார் பத்தியும் கோள் மூட்டி பழக்கம் இல்லை அத்தை. அம்மாவையும் மகனையும் பிரிக்கிற எண்ணம் எனக்கு என்னைக்குமே இருந்ததில்லை. எங்க அம்மா என்னை அப்படி வளர்க்கலை. நாங்க வசதியில் வேணா உங்களை விட குறைஞ்சவங்களா இருக்கலாம். ஆனா எங்களோட வளர்ப்பில் எந்த குறையும் கிடையாது. எங்க அம்மா எனக்கு நல்லதை சொல்லி தான் வளர்த்தாங்க.'' என்று சொல்லும் போதே அவளது கண்கள் கலங்க ஆரம்பித்தன.

அவள் திரும்பவும் பேச ஆரம்பித்ததுமே சிவகாமி தன் கண்களை திறந்து விட்டார்.

அன்று திருச்சியில் வைத்து உங்க அம்மா உனக்கு இதையா சொல்லிக் கொடுத்தாங்க? என்று தான் கேட்ட கேள்வியே அவளை இவ்வாறு பேச வைக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது. அவரது மனம் மேலும் கலங்கியது.

''என்னை மன்னிச்சுடு கயல்.'' என்று சிவகாமி சொன்னதும்,

''ஐயோ அத்தை! என்ன அத்தை இப்படி சொல்லுறீங்க?'' என்று அவள் பதறினாள்.

''தப்பு செஞ்சா மன்னிப்பு கேட்கணும் கயல். நான் அன்னைக்கு பண்ணினது தப்பு. என்னை மன்னிச்சுடு.''

''அச்சோ! அத்தை நீங்க இப்படி எல்லாம் பேசாதீங்க. நடந்துதுல என்னோட பங்கு எதுவும் இல்லைன்னு நீங்க புரிஞ்சுக்கணும்னு தான் நான் விளக்கம் சொன்னேன்.''

''எனக்கு புரியுது கயல். இருந்தாலும் அன்னைக்கு நான் நடந்துக்கிட்ட முறை தப்பு தானே?'' என்று அவர் மீண்டும் தொடங்கவும்,

''மாமா! என்ன பார்த்துக்கிட்டு சும்மா இருக்கீங்க?''

தன் மாமியாரை தடுத்து நிறுத்துமாறு மாமனாரிடம் கோரிக்கை வைத்தாள்.

''சிவகாமி யோசிக்காமல் பேசுவாள் தான். ஆனா நல்லவள் கயல். நீ பயப்படுற அளவுக்கு அவள் டெரர் பார்ட்டி கிடையாது. போகப் போக உனக்கே புரியும்.''

''என்ன மாமா நீங்களும் அத்தை கூட சேர்ந்துக்கிட்டு இப்படி பேசுறீங்க. சரி நாம அன்னைக்கு நடந்ததை அப்படியே மறந்திடலாம். வாங்க. முதல்ல வீட்டை சுத்தி பாருங்க.'' என்று அவர்களை அழைத்து சென்றாள்.

இவ்வளவு வசதியான வீட்டிலே இருக்கிற தங்கள் மகன் எவ்வித முக சுளிப்பும் இன்றி அந்த டஞ்சன் ரூமிலே எப் படி தங்கினான்? என்று அவர்கள் இருவரும் திகைத்தனர்.

''அடுத்த தடவை விக்ரம் வரதுக்கு முன்னாடி கீழ் ரூமிலே பெரிய கட்டில் வாங்கி போட்டு, ஏசி மாட்ட முடியுதான்னு பார்க்கணும்னு நினைச்சேன். ஆனால் இங்கே அவன் ரூமை பார்த்தீங்களா? எவ்வளவு பெருசா இருக்கு. நம்ம வீட்டுல இருக்கிற அவனோட ரூம் ரொம்ப சின்னது.'' என்று சிவகாமி வருத்தப்பட்டார்.

''அவன் அதை எல்லாம் பெருசா எடுத்துக்க மாட்டான் சிவகாமி. ஆனா அந்த ரூமில் அட்டாச்டு பாத்ரூம் இல்லை. நாளைக்கு அவனுக்கு குழந்தை பிறந்தால் அந்த ரூமிலே இருக்க கஷ்டப்படுவான். பேசாமல் மாடியில் அவனுக்காக ஒரு ரூம் கட்டிடலாம் சிவகாமி.''

''அதான் சரியா வரும். செல்வம் ரூம் மாதிரியே விக்ரம் ரூமும் இருக்கணும்.''

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டது கயல்விழியின் காதில் விழுந்தது.

அவள் சமையல் அறையில் அவர்களுக்காக மாலை டிபனை தயாரிக்க ஆரம்பித்தாள்.

அங்கே வந்த சிவகாமி, ''நான் ஏதாச்சும் ஹெல்ப் பண்ணனுமா கயல்?'' என்று கேட்டார்.

''வேலை எல்லாம் நான் பார்த்துடுவேன் அத்தை. நீங்க தூங்கலைன்னால் என் கூட பேசிக்கிட்டு இருங்க.''

''பேசிட்டால் போச்சு.'' என்றதும் அவருக்கு ஒரு நாற்காலியை சமையலறை வாயிலில் கொண்டு வந்து போட்டாள்.

சிவகாமி அங்கே அமர்ந்து கொண்டு பேச ஆரம்பித்தார். அவர்களது பேச்சில் நடராஜனும் கலந்து கொண்டார்.

விக்ரம் இரவில் தான் வீடு திரும்பினான். கயல்விழி அவனுக்கு கதவை திறந்து விடவும், அவன் மனைவியின் முகத்தை தான் ஆராய்ந்து பார்த்தான்.

அவளது முகம் மலர்ச்சியாய் இருப்பதை கண்டவனின் மனம் நிம்மதி அடைந்தது என்றால் முகம் சந்தோஷத்தை பூசிக் கொண்டது.

அன்று இரவு உணவிற்கு பின் அவர்கள் நால்வரும் வரவேற்பறை சோபாவில் வந்து அமர்ந்தனர். அப்பொழுது விக்ரம் தொலைக்காட்சியை இயக்கினான்.

''எவ்வளோ பெருசா தெரியுது!'' என்று சிவகாமி ஆச்சரியப்படவும்,

''நான் முதன் முதலா பார்த்த போது பயந்துட்டேன் அத்தை.'' என்று கயல் கூறினாள்.

''பயமா? எதுக்கு பயந்தே?''

''எங்கே உள்ளே இருக்கிற ஆளுங்க எல்லாம் வெளியே குதிச்சு வந்துடுவாங்களோன்னு தான்.'' என்று அவள் கூறியதும் அங்கே ஒரு சிரிப்பலை பரவியது.

''டிவி எத்தனை இஞ்சு விக்ரம்?'' என்று நடராஜன் கேட்கவும்,

''நாற்பத்தி ஒன்பது இஞ்சு.'' என்று அவன் பதிலளித்தான்.

''என்னது நாற்பத்தி ஒன்பதா? அன்னைக்கு என்கிட்ட நாற்பதுன்னு சொன்னீங்க? பொய்யா? யாராச்சும் டிவிக்கு அவ்வளவு பணம்...'' என்று கயல் தொடங்கவும்,

''ஒரு நிமிஷம் இரு கயல். நான் போய் பஞ்சை எடுத்துட்டு வந்து என் காதை அடைச்சுக்கிறேன். அப்புறமா நீ என்ன வேணா பேசு.'' என்றான்.

''நாற்பத்தி ஒன்பதா? அதான் ரொம்ப பெருசா தெரியுது.'' என்று நடராஜனும் கூறவும்,

''வந்ததில் இருந்து நீங்க ரெண்டு பேரும் டிவி பார்க்கலையா? தூங்கிட்டீங்களா?'' என்று விக்ரம் விசாரித்தான்.

''இல்லைப்பா கயல்கிட்ட பேசிக்கிட்டு இருந்தோம்.''

''ஓ! கயல்விழி எப்.எம்மை ஆன் பண்ணி கேட்டீங்களா? நடுவிலே விளம்பர இடைவேளை கூட வராமல் தொடர்ந்து பாடி இருக்குமே... சாரி பேசி இருக்குமே.'' என்று அவன் நக்கல் செய்யவும், அவள் அவனை முறைத்தாள்.

''என்னை கிண்டல் பண்ணலைன்னால் உங்களுக்கு பொழுதே போகாதே.'' என்று முணுமுணுத்தாள்.

''அப்பா! எனக்கு தெரிஞ்ச டிரைவரை நாளைக்கு வர சொல்லி இருக்கேன். நீங்க மூணு பேரும் எங்கேயாவது போயிட்டு வாங்க.'' என்று விக்ரம் கூறியதும், கயல்விழி மகிழ்ந்தாள்.

'தேவை இல்லாமல் அது எதுக்குப்பா?' என்று கேட்க நினைத்த நடராஜன் மருமகளின் மலர்ந்த முகத்தை கண்டதும், ''என்னம்மா கயல் வீட்டோட அடைஞ்சு இருக்க ரொம்ப போர் அடிக்குதா?'' என்று கேட்டார்.

''ஆமா மாமா. நாம கோவிலுக்கு போகலாம். இவர் கூட்டிட்டே போக மாட்டார்.'' என்று அவள் குறைபட,

"அடிப்பாவி! வடபழனி முருகன் கோவிலுக்கு கூட்டிட்டு போனேனே! அதுக்கு பேரு என்னவாம்?" என்று அவன் அவளோடு வழக்காடினான்.

"சென்னையிலே பெரிய கோவில்கள் எவ்வளவோ இருக்கு. ஒண்ணே ஒண்ணை மட்டும் காட்டிட்டு நீங்க இப்படி பெருமை பேசக் கூடாது."

"தினமும் உன்னை ஒவ்வொரு கோவிலுக்கா கூட்டிட்டு போறதுக்கு நான் என்ன வயசான கிழவனா?"

"வயசானால் தான் கோவிலுக்கு போய் சாமி கும்பிட ஆசைப்படணுமா என்ன? இப்போ நான் கூட தான் ஆசைப்படுறேன். அப்போ நான் என்ன கிழவியா?"

" அப்படி தானோ என்னவோ? நான் தான் தெரியாமல் உன் கழுத்திலே தாலி கட்டிட்டேன் போல!" என்றதும் முறைத்தாள்.

"நீங்க கூட்டிட்டு போய் காட்டலைன்னா என்ன... நான் அத்தை மாமா கூட போய் எல்லாத்தையும் பார்த்துட்டு வரேன்."

விக்ரம் இந்த அளவிற்கு கேலியும் கிண்டலுமாய் பேசுவானா என்று சிவகாமி மகனையே ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

விக்ரம் மேலும் மேலும் கயலை வம்பு இழுத்து கொண்டிருப்பதை கண்ட நடராஜனும் நெகிழ்வாய் உணர்ந்தார்.

'இந்த உயிர்ப்பு தானே வாழ்க்கையை சுவாரஸ்யமாய் கொண்டு செல்லும். விக்ரமுக்கு வாழ்க்கையிலே கிடைச்ச மிகப் பெரிய பரிசு கயல்விழி' என்று நடராஜன் எண்ணினார்.

புதன், வியாழன் இரு தினங்களும் அவர்கள் வெளியே சுற்றினார்கள். முதல் நாள் கோவிலுக்கு சென்றார்கள். அடுத்த நாள் மால் ஒன்றை சுற்றி வந்தார்கள்.

சிவகாமிக்கு தன் சின்ன மருமகளை மிகவும் பிடித்து விட்டது. லேகா சுத்தமாக ஒட்ட மாட்டாள். அதனால் அவரும் தன் பெரிய மருமகளிடம் சற்று எட்டவே நிற்க பழகிக் கொண்டார்.

கயல்விழி வாய் ஓயாது பேசிக் கொண்டு அவரோடு ஒட்டியே அலைந்ததை கண்டவருக்கு மகள் இல்லாத குறையை தீர்க்க வந்தவளோ இவள்! என்று கூட தோன்றியது.

மறுநாள் வெள்ளி அன்று அவர்கள் எங்கேயும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தனர்.

''இன்னைக்கு நாங்க இருக்கோம். எங்க கூட பேசிக் கிட்டு இருக்க. இல்லைன்னா எப்படி கயல் உனக்கு பொழுது போகும்?'' என்று சிவகாமி விசாரித்தார்.

''எதிர் பிளாட் மாமா மாமிகிட்ட கொஞ்ச நேரம் பேசிக் கிட்டு இருப்பேன். தையல் தைப்பேன். உங்க மகன் எனக்கு ஒரு சமையல் பிளாக் ஆரம்பிச்சு குடுத்தார். அதுல எதையாச்சும் சமையல் குறிப்பு போடுவேன்.''

''அப்படியா? எங்கே காட்டு?'' என்றதும்,

அவள் தங்கள் அறைக்கு சென்று மடிகணினியை எடுத்து வந்தாள். அதை இயக்கி அந்த பக்கத்தை அவரிடம் காட்டினாள்.

''இந்த போட்டோவில் இருப்பதெல்லாம் நீ சமைச்சதா கயல்?''

“ஆமா அத்தை. உங்களுக்கு இதுல எது பிடிச்சிருக்குன்னு சொல்லுங்க. இன்னைக்கு அதையே சமைச்சு தரேன்.” என்றதும்,

“அப்படின்னா அதை என் பக்கம் காட்டும்மா. நான் சொல்லுறேன். உங்க அத்தை சமையல் சாப்பிட்டு சாப்பிட்டு எனக்கு ரொம்ப போர் அடிச்சு போச்சு.” என்று நடராஜன் இடைபுகுந்தார்.

புது புது பதார்த்தங்களை செய்து காட்டி அசத்தினாள். அவர்களும் சந்தோஷமாய் அவற்றை ருசித்தனர்.

அன்று இரவு வீடு வந்த விக்ரம், “இன்னைக்கு வெளியே எங்கேயும் போகலைன்னு சொல்லிட்டீங்க. பொழுது போச்சா? இல்லை போர் அடிச்சதா?” என்று தன் தந்தையிடம் விசாரித்தான்.

“இன்னைக்கு கயல் புதுவிதமா சமைச்சு போட்டாள். அதை சாப்பிட்டுட்டு மதியம் ஒரு தூக்கம் போட்டு எழுந்தால் சாயந்திரமும் எதை எதையோ செஞ்சு சாப்பிட கொடுத்தாள்.”

“ஹேய் கயல்! இங்கே வா. உன்னை நம்பி எங்க அம்மா அப்பாவை விட்டுட்டு போனால் நீ அவங்களுக்கு எதை எதையோ சாப்பிட குடுத்தியாம். என்ன இதெல்லாம்?” என்று வந்ததும் அவளை வம்பிழுத்தான்.

விக்ரம் கயல்விழியிடம் கேலியும் கிண்டலுமாய் வெகு இயல்பாய் பேசி பழகினான். ஆனால் அது போல் அவனை பெற்றவர்களிடம் பேசவில்லை.

தன் பெற்றோர்களிடம் அதீத நெருக்கத்தை காட்டாது போனாலும் முன்பை விட நன்றாகவே பேசினான்.

அதிலேயே அவனது பெற்றோர் மனம் மகிழ்ந்து போனார்கள்.

# 31

அன்று இரவு உணவிற்கு பின் தங்கள் அறைக்கு வந்த விக்ரமும் கயலும் பேசுவதற்கு வசதியாக ஒருவரை ஒருவர் பார்த்தார் போல் படுத்துக் கொண்டனர்.

''காலையிலே என்னை சீக்கிரம் எழுப்பு கயல்.''

''நாளைக்கு சனிக்கிழமை. மறந்துட்டீங்களா?''

''அதெல்லாம் நல்லா ஞாபகம் இருக்கு. வேலை இருக்கு. அதான் எழுப்பி விட சொல்லுறேன்.''

''என்னது நாளைக்கும் ஆபீஸ் போறீங்களா?''

''இல்லை கயல். இன்னும் ரெண்டு நாளைக்கு உங்க கூட தான் இருப்பேன்.'' என்றதும் சற்றே எழுந்து அவன் கன்னத்தில் முத்தம் வைத்து விட்டு திரும்பவும் படுத்துக் கொண்டாள்.

''முத்தம் மாதிரி இல்லையே. இன்னும் கொஞ்சம் ஸ்ட்ராங்கா குடுக்கலாம்ல.''

''ஸ்ட்ராங்கா தானே? குடுத்துட்டால் போச்சு.''

அவன் கன்னத்தை கடித்து வைக்க அவள் முடிவு செய்தாள். அவள் படுத்த வாக்கிலே சற்று எழும்பி

அவனது தோளில் ஒரு கையை ஊன்றிக் கொண்டு அவனது கன்னம் நோக்கி குனிந்தாள்.

அவளது எண்ணம் புரிந்தவனோ அவனது தோளில் படிந்திருந்த அவளது கையை சட்டென்று உருவி தனது கன்னத்தில் பதித்து வைத்தான்.

அவனது இந்த மின்னல் வேக நடவடிக்கையை எதிர்பார்க்காததால் அவள் தன் கையையே கடித்து வைத்தாள்.

"ஐயோ! என்ன மாமா இது!" என்று பதறி எழுந்து அமர்ந்து விட்டாள்.

"என்ன மாமான்னு என்னை கேட்டால்... நீ தானே கடிச்சு வச்சே!"

"என் கையை பாருங்க. எப்படி வலிக்குது தெரியுமா?" என்று சொல்லிக் கொண்டே வாயருகே வைத்து ஊதினாள்.

"இந்தக் கடி என் கன்னத்திலே பட வேண்டியது. உன்னோட பல்லு தடம் என் கன்னத்திலே பதிஞ்சு இருந்தால்... கொஞ்சம் யோசிச்சு பாரு. நாளைக்கு ஊருக்கே வெளிச்சம் போட்டு காட்டி இருக்காது?"

"ஆமா இவர் அனிச்சம் பூ. நான் லேசா கடிச்சு வச்சதும் அப்படியே வாடிப் போயிடுவார்."

"இந்த மேடமோட கை பூ மாதிரி இருக்கு. ஆனா என் கன்னம் மட்டும் இரும்பு மாதிரி இருக்கோ?" என்று அவனும் பதிலுக்கு பதில் அவளை வம்பிழுத்தான்.

"மாமா! வலிக்குதுன்னு சொல்லுறேன். அதை கொஞ்சம் கூட கண்டுக்காமல் என்னை வம்பிழுக்கிறீங்க."

''இப்போ உன் வலியை போக்கணும். அவ்வளவு தானே?''

''ஆமா. எழுந்து உட்காருங்க.''

''படுத்துக்கிட்டே உன் வலியை மறைய வைக்கிறேன் பாரு.''

''எப்படி மறைய வைப்பீங்க?''

''அப்படியே ரொமான்டிக்கா ஒரு கிஸ் குடுத்தால் வலி போயிடும்.''

''இந்த கைக்கு கிஸ் குடுக்கிறதிலே என்ன பெரிய ரொமான்ஸை கண்டுட்டார்?'' என எண்ணியவள் தன் புறங்கையையும் அவனையும் மாறி மாறி பார்த்தாள்.

''நீ உன் கையை நீட்டு கயல்.'' என்றதும் எதற்கென்று தெரியாவிட்டாலும் நீட்டினாள்.

அவன் தன் உள்ளங் கையில் முத்தம் ஒன்றை பதித்து அதை ஊதி காற்றில் பறக்க விட்டான். அவள் அவனையே குழப்பத்தோடு பார்த்துக் கொண்டிருந் தாள்.

''இப்போ நான் காதல் ரசம் சொட்டச் சொட்ட ஒரு பிளையிங் கிஸ் அனுப்பி வைச்சிருக்கேன். அது உன் னோட கைக்கு வந்து சேருதான்னு பாரு. அப்படி அது உன் கையை நோக்கி வரலைன்னா அதை விரட்டி பிடி. இந்த ஊரிலே பட்டாம்பூச்சியை விரட்டுவாங்க பாரு... அது மாதிரி. அப்படி நீ விரட்டி பிடிச்சால் உன் கவன மெல்லாம் அதுல இருக்குமா... அப்போ உன் கை வலி மாயமா மறைஞ்சு போயிடும்.'' என்றவன் தலையணை யில் முகம் பதித்து குப்புற படுத்துக் கொண்டான்.

"உங்களை பத்தி தெரிஞ்சிருந்தும் இப்படி ஒவ்வொரு தடவையும் ஏமாறுறேனே!" என்று கடுப்பாய் மொழிந்து கொண்டே அவனை மொத்தி எடுத்தாள்.

ஒரு பக்கமாய் திரும்பிப் படுத்தவன், "நீ என் மக்குடி." என்று கொஞ்சினான்.

"நான் மக்கா இல்லாமல் அறிவாளியாய் மாறி காட்டுறேன் பாருங்க."

"நீ எப்பவுமே என் மக்கு தான்." என்றவன் அவளை தன்னோடு இழுத்து அணைத்து கொண்டான்.

கணவனிடம் வாகாய் ஒண்டிக் கொண்டவள், "காலை யிலே எதுக்கு சீக்கிரமா எழுப்ப சொன்னீங்க?" என்று கேட்டாள்.

"உங்களை எல்லாம் வெளியே கூட்டிட்டு போக லாம்னு நினைச்சு தான் சொன்னேன்."

"நீங்க நல்லா தூங்கி பொறுமையா எழுந்துக்கோங்க. வழக்கம் போல தலைக்கு மசாஜ் பண்ணி குளிச்சு மதியம் சாப்பிட்டதுக்கு அப்புறமா வெளியே போகலாம்."

"உனக்கு சமையல் செய்வதில் இருந்து ரெஸ்ட் கொடுக்கலாம்னு நினைச்சேன்."

"நைட் ரெஸ்ட். வெளியே சாப்பிட்டுக்குவோம்." என்றதும் அவளது கருத்தை ஏற்றுக் கொண்டான்.

மறுநாள் மதிய உணவிற்கு பின் விக்ரம் மூவரையும் அழைத்து கொண்டு துணிக்கடைக்கு சென்றான். தன் பெற்றோர்களுக்கு ஏகப்பட்ட புது உடைகளை வாங்கி தந்தான்.

''இத்தனை டிரஸ் எதுக்குப்பா?'' என்று நடராஜன் ஆட்சேபணை தெரிவித்தார்.

''கல்யாணமான புதுசுலே எனக்கே நிறைய புடவை எடுத்துக் குடுத்தார். உங்களுக்கு இல்லாமலா?'' என்று கயல் பதில் சொன்னாள்.

''அது என்ன உனக்கே?!'' என்ற கேள்வி மூன்று பேரிடம் இருந்தும் கிளம்பியது.

என்னங்கடா இது மூணு பேரும் சொல்லி வச்ச மாதிரி ஒரே கேள்வியை கேட்டு நம்மளை அட்டாக் பண்ணு றாங்க என்று கயல் திருதிருத்தாள்.

''அவன் சம்பாத்தியத்தை அனுபவிக்கிற உரிமை உனக்கு இல்லையா என்ன? அது என்ன கயல் அப்படி சொல்லுற?'' என்று நடராஜன் தன் மருமகளை கண்டித்தார்.

அவர் தன் மகனிடம், ''இவ்வளவு டிரஸ் தேவை யாப்பா?'' என்று மீண்டும் கேட்டார்.

''எப்பவோ வாங்கி தந்திருக்க வேண்டியது. மனசிலே ஆசை இருந்துச்சுப்பா. ஆனாலும் எனக்குள்ளே ஒரு தயக்கம். அதான் எதுவும் செஞ்சதில்லை. இப்போ செய்யணும்னு தோணுது. மறுக்காதீங்க.'' என்றான்.

அவனது மனநிலையை அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. அதன் பின் அவன் செய்யும் எதையும் அவர்கள் மறுக்கவில்லை.

தன் தாய்க்கு தங்க வளையல்கள் வாங்கி தந்தான். சிவகாமியின் மனநிலையை சொல்ல வார்த்தைகள் இல்லை. அவ்வளவு நிறைவாக உணர்ந்தார்.

ஒட்டவே மாட்டான் என்று நினைத்த பிள்ளை இவ்வளவு அன்பாய் பாசமாய் எனக்கு பார்த்துப் பார்த்து செய்கிறானே. இதை விட எனக்கு வேற என்ன வேண்டும்? என்று சிவகாமி உள்ளம் நிறைந்தார்.

அந்த சந்தோஷத்தை தந்த ஆண்டவனிற்கு அவர் மனம் நன்றி கூறியது. நடராஜனால் விக்ரமின் மன நிலையையும் நடவடிக்கையையும் நன்றாக புரிந்து கொள்ள முடிந்தது.

இத்தனை நாளும் எங்க கூட ஒட்டாமலே இருந்ததால அவனால எங்ககிட்ட ரொம்ப இயல்பா கேலியும் கிண்டலுமா பேச வர மாட்டேங்குது. ஆனா கயல்விழி கிட்ட முதலில் இருந்தே அப்படி பேசி பழகிட்டதால அவகிட்ட மட்டும் இயல்பா இருக்கான்.

ஒருவேளை எங்க வயசுக்கு மரியாதை குடுத்து கூட அவனோட மனசிலே அப்படி ஒரு ஒதுக்கம் வந்திருக்கலாம். ஆனா அப்பா அம்மாங்கிற உறவை அவன் மதிக்கிறான். எங்க மேல பாசம் வச்சிருக்கான். அதனோட வெளிப்பாடு தான் எங்களுக்கு இது மாதிரி துணி மணிகன்னு வாங்கி தரணும்னு அவனுக்கு தோணுது.

ஒருவேளை காலப்போக்கிலே அவன் எங்ககிட்டயும் ரொம்பவே கேலியும் கிண்டலுமா பேசுவானாய் இருக்கும். அவன் இந்த அளவிற்கு எங்ககிட்ட நெருங்கி வந்ததுக்கே அந்த ஆண்டவனுக்கு நான் நன்றி சொல்லணும் என நினைத்தார்.

உங்க அம்மாவுக்கு மட்டும் இவ்வளவு புடவை, நகை எல்லாம் வாங்கி தரீங்க. எனக்கு எதுவும் இல்லையா? என்று எந்தக் கேள்வியும் கேட்காமல், சிறிதளவு கூட

பொறாமை இல்லாமல் முக மலர்ச்சியோட தன்னோடு வலம் வரும் மனைவியை கண்ட விக்ரமிற்கு அவ்வளவு சந்தோஷமாக இருந்தது.

ஷாப்பிங் முடித்த பின் மாலை காபி குடிப்பதற்காக ஒரு உணவகத்திற்கு அழைத்து சென்றான். அங்கே அவனின் மாமா பையன் அரவிந்தனை அவர்கள் சந்தித்தனர்.

''அத்தை! மாமா! விக்ரம்!'' என்று அனைவரையும் உற்சாகமாய் அழைத்து அனைவரின் நலனையும் அரவிந்தன் விசாரித்து அறிந்தான்.

''எப்போடா அரவிந்த் சென்னை வந்தே? வீட்டுக்கு வாயேன்டா.'' என்று விக்ரம் அவனை அழைத்தான்.

''இன்னைக்கு காலையில் தான் வந்தேன். நைட் கிளம்பணும்.''

''காலிலே சக்கரம் ஏதாச்சும் கட்டி இருக்கியாடா? எப்போ பாரு ஊர் ஊரா சுத்துற?'' என்று சிவகாமி நக்கல் செய்தார்.

''என்ன செய்யுறது அத்தை. என் வேலை அப்படி. மும்பையில் இருக்கேன்னு பேரு. ஆனா இந்தியா மொத்தமும் சுத்தி வரேன்.''

''விக்ரம் கல்யாணத்துக்கு கூட நீ வரலை. இவள் தான் உன் தங்கச்சி கயல்விழி. பார்த்துக்கோ.'' என்று சிவகாமி தன் மருமகளை அறிமுகம் செய்து வைத்தார்.

''நான் தான் முன்னாடியே பார்த்து இருக்கேனே!'' என்று அரவிந்தன் கூறவும் அனைவரும் விழித்தனர்.

''எங்கேடா பார்த்தே?''

''விக்ரம் இவங்க கூட சுத்தினதை பார்த்துட்டு வந்து நான் கூட அத்தைகிட்ட சொன்னேன்ல.''

''நான் இவள் கூட சுத்தினேனா? என்னடா உளறுறே?'' என்று விக்ரம் குழப்பத்தோடு கேட்டான்.

''என்ன விக்ரம் இப்படி கேட்கிறே? நீ இவங்களை லவ் பண்ணலையா? நான் உன்னை இவங்க கூட பார்த்தேனே! ஒரு ஒன்றரை இல்லைன்னா ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி...''

''உனக்கு மூளை குழம்பி போச்சாடா? இவள் நாங்க பார்த்து ஏற்பாடு பண்ணின பொண்ணு.'' என்று நடராஜனும் கூறினார்.

''அத்தை! நான் கூட உங்ககிட்ட வந்து ஒரு நாள் சொன்னேன்ல. விக்ரம் ஒரு பொண்ணு கூட சுத்திக்கிட்டு இருக்கான்னு...''

''டேய்! நீ அவனோட முதல் மனைவி கூட அவனை பார்க்கலையா?''

''இல்லையே... இவங்களை தானே பார்த்தேன்.''

கயல்விழி குழப்பத்தோடு, ''நான் இவரை முன்னாடி பார்த்ததே இல்லையே. என்னை பொண்ணு பார்க்க வந்த அன்னைக்கு தான் முதல் தடவையா பார்த்தேன். நான் மதுரையை தாண்டி வேற எந்த ஊருக்கும் போனதே இல்லை.'' என்றாள்.

''நான் உங்க ரெண்டு பேரையும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வச்சு பார்த்தேன். பக்கத்துல வந்து பேச எனக்கு நேரமில்லாமல் போயிட்டேன்.''

மீனாட்சி அம்மன் கோவிலுக்கு நான் வாரா வாரம் போவேன். என்று கயல்விழி கூறினாள்.

கைலாஷ் தங்கச்சி கல்யாணத்துக்காக மதுரைக்கு போய் இருந்த போது நான் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு போனேன். அதுக்கு அப்புறமா நான் மதுரைக்கு போனதே இல்லை. என்று விக்ரமும் யோசனையாய் பதிலளித்தான்.

''அப்போ நீங்க எதேட்சையா பக்கத்து பக்கத்திலே நின்னீங்களா? நானா தான் உங்க ரெண்டு பேரையும் முடிச்சு போட்டு பார்த்தேனா?'' என்று கேட்டு அவன் சிரித்தான்.

''முடிச்சை போட்டது நீ மட்டும் இல்லைடா மருமகனே. அந்த மதுரை மீனாட்சியும் தான்.'' என்று சிவகாமி சொல்ல, அனைவரும் புன்னகைத்தனர்.

அவர்களோடு சேர்ந்து காபி குடித்துவிட்டு அரவிந்தன் அவர்களிடமிருந்து விடைபெற்றான்.

அதன் பின் விக்ரம் அவர்களை அருகில் இருக்கும் கோவிலுக்கு கூட்டி சென்றான்.

சாமியை தரிசித்து முடித்தனர். அங்கே கதாகாலட்சேபம் ஆரம்பம் ஆவதற்கான ஆயுத்தங்கள் நடந்தேறிக் கொண்டிருந்தன.

கயல்விழி விக்ரமின் புஜத்தை தன் ஒரு விரலால் சுரண்டினாள். விக்ரம் அவள் புறம் திரும்பி என்ன என்பது போல் பார்த்தான்.

''உங்களுக்கு ரொம்ப பசிக்குதா?''

"இல்லையே கயல். ஈவினிங் ஹோட்டலில் காபி குடிக்க போன போது வடை சாப்பிட்டேன்ல. அதனால பசிக்கலை."

"நாம இங்கே உட்கார்ந்து கதை கேட்போமா? ப்ளீஸ் மாமா." என்று அவள் தன் கண்களை சுருக்கிக் கொண்டு கெஞ்சினாள்.

அன்று அவள் என்ன கேட்டாலும் சரி என சம்மதித்து அவளுக்கு வாங்கி தரும் அளவிற்கு அவன் சந்தோஷத்தில் இருந்தான்.

அவளோ சிறிது நேரம் கோவிலில் உட்கார ஆசைப்பட்டு அவனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

அவன் ஒரு புன்னகையுடன், "அவ்வளவு தானே? உட்கார்ந்து கதை கேட்போம். உனக்கு எப்போ கிளம்ப லாம்னு தோணுதோ அப்போ கிளம்பலாம்." என்று சம்மதம் வழங்கியதும் அவள் முகம் பிரகாசமாகியது.

"தாங்க்ஸ் மாமா." என்றவள் சிவகாமியை நோக்கி சென்றாள்.

"அத்தை! நாம இங்கே உட்கார்ந்து கொஞ்ச நேரம் கதை கேட்போமா? உங்களால தரையிலே உட்கார முடியுமா? முட்டி வலிக்குமா?"

அவளது ஆர்வத்தை கண்ட சிவகாமி, "அதெல்லாம் வலிக்காதும்மா. நானும் கதை கேட்டு ரொம்ப நாள் ஆச்சு. அதனால உட்கார்ந்து கேட்போம். ஆனால் விக்ரம் என்ன சொல்லுவானோ?" என்றார்.

"அவர் சரின்னு சொல்லிட்டார் அத்தை. உங்களுக்கு கால் வலிச்சதுன்னா சொல்லிடுங்க. நாம எழுந்து

போயிடலாம்.'' என்றதும் அவர் சம்மதமாய் தலையாட்டினார்.

## 32

இவர்கள் நால்வரும் ஒரு ஓரமாய் சென்று அமர்ந்து கொண்டார்கள். இரண்டு நிமிடத்தில் உபன்யாசர் கதையை ஆரம்பித்தார்.

''பகவான் கிருஷ்ணனின் குழந்தைப் பருவம் முதலே அவருக்கு பணிவிடைகள் செய்து, தேரோட்டி பல்வேறு சேவைகள் புரிந்து இறுதி வரை அவருடனே இருந்தவர் உத்தவர்.

''அவர் தனது வாழ்நாளில் தனக்கென எந்தவிதமான உதவியோ, நன்மைகளோ, வரங்களோ கண்ணனிடம் கேட்டதில்லை.

துவாபரயுகத்தில் தமது அவதாரப் பணி முடித்து விட்ட நிலையில், உத்தவரிடம் வந்த ஸ்ரீகிருஷ்ணர், ''உத்தவரே! இந்த அவதாரத்தில் பலர் என்னிடம் பல வரங்களும், நன்மைகளும் பெற்றிருக்கின்றனர். ஆனால் நீங்கள் எதுவுமே கேட்டதில்லை. ஏதாவது கேளுங்கள். தருகிறேன்.'' என்று சொன்னார்.

''சிறு வயது முதலே கண்ணனின் செயல்களை உற்று கவனித்து வந்த உத்தவருக்கு சொல் ஒன்றும், செயல்

ஒன்றுமாக இருந்த பல கண்ணனின் லீலைகள் புரியாத புதிராகவே இருந்தன. அவற்றுக்கான விளக்கங்களை அவர் தெரிந்து கொள்ள விரும்பினார்.

"பெருமானே! நீ வாழச் சொன்ன வழி வேறு. நீ வாழ்ந்து காட்டிய வழி வேறு! நீ நடத்திய மகாபாரத நாடகத்தில், நீ ஏற்ற பாத்திரத்தில், நீ புரிந்த செயல்களில் எனக்கு புரியாத பல விஷயங்கள் உண்டு. அவற்றுக் கெல்லாம் காரணங்களை அறிய ஆவலாக இருக்கிறேன். நிறைவேற்றுவாயா?" என்றார் உத்தவர்.

விளக்கம் தருவதாக கண்ணன் ஆமோதித்தார்.

"கிருஷ்ணா! நீ பாண்டவர்களின் உற்ற நண்பன். உன்னை அவர்கள் ஆபத்பாந்தவனாக கடைசி வரை பரிபூரணமாக நம்பினார்கள். நடப்பவை மட்டுமல்ல, நடக்கப் போவதையும் முன் கூட்டியே நன்கறிந்த ஞானியான நீ 'உற்ற நண்பன் யார்?' என்பதற்கு நீ அளித்த விளக்கத்தின் படி, முன்னதாகவே சென்று, தருமா! இந்தச் சூதாட்டம் வேண்டாம் என்று தடுத்திருக் கலாம் அல்லவா? ஏன் அப்படிச் செய்யவில்லை?

அது போகட்டும்.

"விளையாட ஆரம்பித்ததும் தருமன் பக்கம் அதிர்ஷ்டம் இருக்கும்படி செய்து, வஞ்சகர்களுக்கு நீதி பாடம் புகட்டியிருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை.

"சூதாடியதற்கு தண்டனையாக தருமன் செல்வத்தை இழந்தான். நாட்டை இழந்தான். தன்னையும் இழந்தான். அதோடு அவனை விட்டிருக்கலாம். தம்பிகளை அவன் பணயம் வைத்த போதாவது நீ சபைக்குள் நுழைந்து தடுத்திருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை.

'திரௌபதி அதிர்ஷ்டம் மிக்கவள். குல தேவதை அவளை பணயம் வைத்து ஆடு. இழந்தது அனைத்தையும் திருப்பித் தருகிறேன்' என்று துரியோதனன் சவால் விட்டான்.

''அப்போதாவது உனது தெய்வீக சக்தியால், அந்த பொய்யான பகடைக்காய்கள் தருமனுக்கு சாதகமாக விழும்படி செய்திருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை.

''மாறாக திரௌபதியின் துகிலை உரித்து, அவளின் மானம் பறிபோகும் நிலை ஏற்பட்ட போது சென்று, 'துகில் தந்தேன். திரௌபதி மானம் காத்தேன். ஆடை தந்தேன்' என்று ஐம்பமாக மார்தட்டிக் கொண்டாய்.

''மாற்றான் ஒருவன் குலமகள் சிகையை பிடித்து இழுத்து வந்து சூதர் சபையில் பலர் முன்னிலையில், அவள் ஆடையில் கை வைத்த பிறகு எஞ்சிய மானம் என்ன அவளிடம் இருக்கிறது? அவள் அப்போதே இறந்து விட்டாள். உயிர் மட்டுமே ஊசலாடியது.

''எதனைக் காத்ததாக எண்ணி நீ பெருமைப்படுகிறாய்?''

''ஆபத்தில் உதவுபவன் தானே ஆபத்பாந்தவன்?''

''ஆபத்தான இது போன்ற சமயத்தில் உன் பக்தர்களுக்கு உதவாத நீ எப்படி ஆபத்பாந்தவன்?''

''நீ செய்தது நியாயமா? தருமமா?'' என்று உத்தவர் மிகக் கடுமையான குரலில் குழம்பிய மன நிலையில் கண்ணீர் மல்கக் கேட்டார்.

இது உத்தவரின் உள்ளக் குமுறல் மட்டுமன்று. மகாபாரதம் படித்த நம் அனைவரின் உள்ளத்திலும் எழும் மனவலியோடு உணர்வு மிகுந்த கேள்விகளே இவை.

நமக்காக இவற்றை அன்றே கண்ணனிடம் கேட்டிருக் கிறார் உத்தவர்.

உத்தவருக்கு பகவான் என்ன பதில் சொன்னார்? பதில் எதுவும் சொல்லாது முதலில் சிரித்தார். பின் சொல்ல ஆரம்பித்தார்.

''உத்தவரே! விவேகம் உள்ளவனே ஜெயிக்க வேண் டும் என்பது உலக தர்ம நியதி.

துரியோதனனுக்கு இருந்த விவேகம் தருமனுக்கு இல்லை. அதனால் தான் தருமன் தோற்றான்.''

உத்தவர் ஏதும் புரியாது அதிர்ச்சியுடன் திகைத்து நிற்க, கண்ணன் தொடர்ந்தான்.

''துரியோதனனுக்கு சூதாடத் தெரியாது. ஆனால் பணயம் வைக்க அவனிடம் பணமும், ஏராளமான ஆஸ்தியும் இருந்தன. 'பணயம் நான் வைக்கிறேன். என் மாமா சகுனி பகடையை உருட்டி சூதாடுவார்' என்றான் துரியோதனன். அது விவேகம்.

''தருமனும் அதுபோலவே விவேகத்துடன் செயல்பட்டு 'நானும் பணயம் வைக்கிறேன். ஆனால் என் சார்பாக என் மைத்துனன் ஸ்ரீகிருஷ்ணன் பகடைக்காயை உருட்டு வான்' என்று சொல்லியிருக்கலாமே!

''சகுனியும் நானும் சூதாடியிருந்தால் யார் ஜெயித் திருப்பார்கள்?

''நான் கேட்கும் எண்ணிக்கைகளை சகுனியால் பகடைக் காய்களில் போடத்தான் முடியுமா? அல்லது அவன் கேட்கும் எண்ணிக்கைகளை என்னால் தான் போட முடியாதா?

போகட்டும்.

''தருமன் என்னை ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ள மறந்துவிட்டான் என்பதையாவது மன்னித்து விடலாம். ஆனால் அவன் விவேகமில்லாமல் மற்றொரு மாபெரும் தவறையும் செய்தான்.

'ஐயோ! விதி வசத்தால் சூதாட ஒப்புக் கொண்டேனே! ஆனால் இந்த விஷயம் கண்ணனுக்கு மட்டும் தெரியவே கூடாது. கடவுளே! அவன் மட்டும் சூதாட்ட மண்டபத் துக்கு வராமல் இருக்க வேண்டும்' என்று வேண்டினான்.

''என்னை மண்டபத்துக்குள் வர முடியாதவாறு அவனே என்னை வேண்டுதலால் கட்டிப் போட்டு விட்டான். நான் அங்கு வரக் கூடாதென என்னிடமே வேண்டிக் கொண்டான்.

''யாராவது தனது பிரார்த்தனையால் என்னைக் கூப்பிட மாட்டார்களா என்று மண்டபத்துக்கு வெளியில் காத்துக் கொண்டு வெகு நேரமாக காத்து நின்றேன்.

''பீமனையும், அர்ஜுனனையும், நகுல சகாதேவர் களையும் வைத்து இழந்தபோது அவர்களும் துரியோ தனனை திட்டிக் கொண்டும், தங்கள் கதியை எண்ணி நொந்து கொண்டும் இருந்தார்களே தவிர, என்னைக் கூப்பிட மறந்து விட்டார்களே!

''அண்ணன் ஆணையை நிறைவேற்ற துச்சாதனன் சென்று திரௌபதியின் சிகையை பிடித்தபோது, அவளாவது என்னைக் கூப்பிட்டாளா? இல்லை.

''அவளும் தனது பலத்தையே நம்பி சபையில் வந்து வீண் வாதங்கள் செய்து கொண்டிருந்தாளே ஒழிய, என்னை கடைசி வரை கூப்பிடவேயில்லை !

“நல்லவேளை. துச்சாதனன் துகிலுரித்த போதும் உனது பலத்தால் போராடாமல், ‘ஹரி... ஹரி... அபயம் கிருஷ்ணா!’ அபயம் எனக் குரல் கொடுத்தாள்.

“அவளுடைய மானத்தைக் காப்பாற்ற அப்போது தான் உள்ளே செல்ல எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அழைத்ததும் சென்றேன். அவள் மானத்தை காக்க வழி செய்தேன். இந்தச் சம்பவத்தில் என் மீது என்ன தவறு? என்று பதிலளித்தான் கண்ணன்.

“அருமையான விளக்கம் கண்ணா! அசந்து விட்டேன். ஆனால் ஏமாறவில்லை. உன்னை இன்னொரு கேள்வி கேட்கலாமா?” என்றார் உத்தவர்.

“கேள்” என்றான் கண்ணன்.

“அப்படியானால், கூப்பிட்டால் தான் நீ வருவாயா? நீயாக நீதியை நிலை நாட்ட ஆபத்துகளில், கஷ்டங்களில் உதவ வரமாட்டாயா?”

கண்ணன் புன்னகைத்தார்.

“உத்தவா! மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படி அமைகிறது. நான் அதை நடத்துவதும் இல்லை. அதில் குறுக்கிடுவதும் இல்லை. நான் வெறும் சாட்சி பூதம் மட்டுமே. நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக் கொண்டு நிற்பவனே! அது தான் தெய்வ தர்மம்.”

“நன்றாயிருக்கிறது கிருஷ்ணா! அப்படியானால் நீ அருகில் நின்று நாங்கள் செய்யும் தீமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பாய். நாங்கள் தவறுகளை தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து பாவங்களை

குவித்து, துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித் தானே?'' என்று உத்தவர் கேட்டார்.

''உத்தவரே! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நீங்கள் நன்றாக உணர்ந்து பாருங்கள். நான் சாட்சி பூதமாக உங்கள் அருகில் நிற்பதை நீங்கள் மனப்பூர்வமாக உண்மையில் உணரும் போது உங்களால் தவறுகளையோ, தீவினை செயல்களையோ நிச்சயமாக செய்ய முடியாது.

''அதை நீங்கள் மறந்து விடும் போது தான், எனக்கு தெரியாமல் இது அது என ஏதாவது தீவினையை செய்து விடுகிறீர்கள். நான் உங்களுள் இருப்பதை மறந்து எதையாவது செய்ய நீங்களாகவே முடிவெடுத்து செய்கிறீர்கள்.

''பாதிப்புக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் பெரும்பாலும் தவறாக நிகழ்வதும் அப்போது தான். எனக்கு தெரியாமல் சூதாடலாம் என்று தருமன் நினைத்தானே அதுதான் அவனது அஞ்ஞானம்.

''நான் சாட்சி பூதமாக எப்போதும், எல்லோருடனும் இருப்பவன் என்பதை தருமன் உணர்ந்திருந்தால் இந்த சூதாட்ட நிகழ்ச்சி வேறு விதமாக முடிந்திருக்கும் அல்லவா?''

உத்தவர் வாயடைத்து, பக்திப் பரவசத்தில் ஆழ்ந்தார்.

ஆகா! ஆகா! எத்தனை உள்ளர்த்தம் வாய்ந்த அருமையான ஆழமான தத்துவம்! பகவானை பூஜிப்பதும், பிரார்த்தனை செய்வதும், அவனை உதவிக்கு அழைப்பதும் ஓர் உணர்வு தானே!

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கை நமக்கு வரும் போது, அவன் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை எப்படி உணராமல் இருக்க முடியும்?

அதனை மறந்துவிட்டு எப்படிச் செயலாற்ற முடியும்?

இந்த தத்துவத்தை தான் பகவத்கீதை முழுவதிலும் கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தான். என்று சொல்லி உபன்யாசர் கதையை முடித்துக் கொண்டார்.

கதையை கேட்டு முடித்த நால்வரும் அதில் இருந்து வெளியே வர சில நிமிடங்கள் ஆனது. கொஞ்சம் அசுவாரஸ்யமாய் தான் விக்ரம் கதை கேட்க ஆரம்பித்தான். ஆனால் அந்த கதை அவனை தான் நிரம்பவே பாதித்தது என்று சொல்லலாம்.

நால்வரும் நேரே ஒரு உணவகத்திற்கு சென்று சாப்பிட்டு முடித்து வீடு வந்து சேர்ந்தனர்.

மறுநாள் ஞாயிறன்று விக்ரம் தன் தாய் தந்தையை எதிர்வீட்டு பெரியவர்களுக்கு சந்தோஷமாக அறிமுகப் படுத்தினான்.

அன்று தன் தாயை பற்றி அவர்களிடம் சொல்லும் பொழுது அவன் முகத்தில் இருந்த வாட்டத்தை அவர்கள் கவனித்திருந்தனர்.

வீட்டு கிரஹப்பிரவேசத்திற்கோ அவன் தன் நண்பர்களுக்கு அளித்த கல்யாண விருந்திற்கோ அவர்கள் இருவரும் வரவில்லை என்பதால் அவனுக்கும் அவன் பெற்றோருக்கும் இடையே மனக்கசப்பு இருக்கிறது என்பது அவர்களுக்கு புரிந்தது.

ஆனால் இப்பொழுது அவர்களின் வருகையும் விக்ரமின் முகத்தில் தென்படும் மலர்ச்சியும் அவர்களுக்

கிடையே இருந்த கசப்பு மறைந்து விட்டது என்பதை அவர்களுக்கு படம் போட்டு காட்டின.

''விக்ரம்! ரொம்ப நல்ல பையன். அவனை மாதிரி ஒரு பிள்ளை கிடைக்க ரொம்ப புண்ணியம் பண்ணி இருக்கணும்.'' என்று அந்த பெரியவர்கள் கூறியதை கேட்ட சிவகாமி சந்தோஷத்தையும் குற்ற உணர்வையும் சேர்த்தே அனுபவித்தார்.

'இவர்களுக்கு தெரிந்த இந்த விஷயத்தை நான் ஏன் இத்தனை நாட்களாக உணரவில்லை?' என்ற கேள்வியே அவரது குற்ற உணர்விற்கான காரணம்.

''சொந்த ஊரை விட்டுட்டு இங்கே எங்களால ரொம்ப நாள் தங்க முடியாது. இவங்க ரெண்டு பேரையும் நீங்க பார்த்துக்கோங்க.'' என்று சிவகாமி கூறினார்.

''நாங்க எங்கே அவங்களை பார்க்கிறது? அவங்க தான் எங்களை பார்த்துக்கிறாங்க. கயல் இங்கே வந்து போகிற தால தான் எங்களுக்கு கொஞ்சம் பொழுது போகுது. அவளோட நல்ல மனசுக்கு தான் விக்ரம் மாதிரி ஒரு கணவன் கிடைச்சிருக்கான்.''

தன் மகனையும் மருமகளையும் அவர்கள் ஏகத்திற்கு பாராட்டவும் சிவகாமியும் நடராஜனும் நிறைவாய் உணர்ந்தனர்.

அன்று மதிய உணவிற்கு பின் வீட்டில் அமர்ந்தபடி நால்வரும் பேசிக் கொண்டிருந்தனர். தான் டில்லி வீட்டை விற்றது பற்றியும் மதுரையில் வீடு வாங்கப் போவது பற்றியும் விக்ரம் தன் பெற்றோரிடம் தெரிவித்தான்.

''நல்ல யோசனை விக்ரம்.'' என்று இருவருமே அதை வரவேற்றனர்.

‘‘நாளைக்கு மதுரைக்கு போய் அதை ரிஜிஸ்டர் பண்ணிட்டு வர வேண்டி இருக்கு. இன்னைக்கு நைட் நான் மதுரைக்கு கிளம்புறேன்.’’

‘‘என்னது ஊருக்கு போறீங்களா? சொல்லவே இல்லை.’’ என்று கயல் இடைபுகுந்தாள்.

‘‘அதான் இப்போ சொல்லுறேனே... வெள்ளிக்கிழமை தான் எனக்கே விஷயம் தெரியும்.’’

‘‘சரிப்பா. நீ போய் நல்லபடியா முடிச்சுட்டு வா.’’ என்று அவன் பெற்றோர் கூறினர்.

தங்களின் அறையில் வைத்து கயல் தன் கணவனிடம், ‘‘ஊருக்கு போயிட்டு எப்போ வருவீங்க?’’ என்று கேட்டாள்.

‘‘அங்கே வேலை முடிஞ்சதும் கிளம்ப வேண்டியது தான். இன்னைக்கு நைட் பஸ்ஸிலே போறேன். நாளைக்கு சாயந்திரம் பிளைட்டில் திரும்பிடுவேன். செவ்வாய் கிழமை எனக்கு ஆபீஸ் போயே ஆகணும்.’’

‘‘நான் தனியா இருக்கணுமா?’’

‘‘உனக்கு தான் அப்பாவும் அம்மாவும் துணை இருக்காங்களே கயல். ஒரு நாள் நைட் தானே. இப்போ நான் மாமியாரும் மருமகளும் ஒவரா கொஞ்சிக்கிறீங் களே.’’

‘‘கண்ணு போடாதீங்க.’’ என்று அவள் கூறவும், அவன் முறுவலித்தான்.

அவன் சொன்னபடி மதுரை சென்று அந்த வீட்டை பத்திர பதிவு செய்து விட்டு திரும்பினான்.

ஒரு வாரம் தங்கி இருந்த நடராஜனும் சிவகாமியும் அடிக்கடி வருவதாக வாக்களித்து விட்டு மிகுந்த திருப்தியுடன் திருச்சிக்கு சென்றனர்.

அவர்கள் சென்னையை விட்டு கிளம்பும் முன் விக்ரம் தன் தந்தையிடம் தனியாக பேசினான்.

“நம்ம வீட்டு மாடியிலே ரூம் கட்டணும்னு முடிவு பண்ணி இருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். அது தேவையான்னு முதல்ல எனக்கு தோணுச்சுப்பா. ஆனால் நீங்க சொன்ன மாதிரி நாளைக்கு எங்களுக்கு குழந்தை பிறந்த பின்னால பெரிய ரூம் தேவைப்படும்னு தான் எனக்கும் தோணுது. ரூம் கட்டுறதுக்கு பணம் அனுப்பி வைக்கட்டுமா?”

“என்கிட்ட இருக்குப்பா. நான் அன்னைக்கு சொன்னதை தான் இன்னைக்கும் சொல்லப் போறேன். பணத்தை நல்லபடியா சேர்த்து வை. எனக்கு எப்போ பணம் தேவைப் பட்டாலும் உன்கிட்ட உரிமையா போன் பண்ணி கேட்பேன். நீ என் பையன்டா. உன்கிட்ட எனக்கு என்ன தயக்கம்?”

“தாங்க்ஸ் பா. எனக்கு அது போதும்.”

“போனதும் வேலையை ஆரம்பிக்கப் போறேன்.” என்று சொல்லி நடராஜன் விடைபெற்றார்.

## 33

நாட்கள் பறந்தோடின. விக்ரம் வழக்கம் போல் கயலை கேலி செய்து நாட்களை கடத்தினான்.

கயல்விழி தன் சமையல் பிளாக், தன் தையல் என்று பொழுதை ஓட்டினாள்.

அப்படியே நாட்கள் சென்றிருந்தால் பிரச்சனை இல்லை. யார் கண் பட்டதோ அல்லது கயலின் நாக்கில் தான் சனி குடி வரப் போகிறாரோ எதுவோ ஒன்று.

அவளது வாழ்க்கையில் முதல் சண்டை அரங்கேறப் போகிறது.

தனக்கும் தன் கணவனுக்கும் இடையில் தானே பள்ளத்தை தோண்டப் போவது தெரியாமல் உற்சாக மாய் வலம் வந்து கொண்டிருந்தாள்.

அந்த சண்டைக்கு பிள்ளையார் சுழி போடுவதை போல் விக்ரம் அலுவலகத்தில் இருந்து தாமதமாக வீடு திரும்ப ஆரம்பித்தான். அவனது வேலைப் பளு கூடியதே அதற்கு காரணம்.

அந்த வாரத்தில் ஒரு நாள் கணேசன் தன் அலுவலக வேலையாக சென்னை வந்து இறங்கினார்.

காலையில் மகளது வீட்டிற்கு வந்தவர் குளித்து முடித்து தன் அலுவலக வேலையை பார்க்க போய்விட் டார்.

வேலையை முடித்துக் கொண்டு அவர் திரும்பி வந்த பொழுது இரவு மணி எட்டு. இரவு ஒன்பதரை ஆகியும் விக்ரம் வீட்டிற்கு வரவில்லை.

''என்னம்மா மாப்பிள்ளையை இன்னும் காணோம்?''

''இந்த வாரம் பூராவும் இப்படி தான்பா லேட்டா வரார். ஆபீஸில் வேலை அதிகமா இருக்குன்னு சொன்னார். நீங்க போய் தூங்குங்க. நேத்து பஸ்ஸிலே வந்தீங்க.

ரெஸ்ட் எடுக்காமல் வேலைன்னு வெளியே போய் அலைஞ்சு இருக்கீங்க.''

''மாப்பிள்ளை வரட்டுமேன்னு பார்த்தேன்.''

''அவரை காலையில் பார்த்து பேசிக்கலாம். நீங்க போய் படுங்க.'' என்று அவள் வலியுறுத்தவும், அவருக்கு இருந்த அயற்சியில் அவளது கருத்தை ஏற்றுக் கொண்டு மருமகனுக்காக காத்திருக்காமல் தூங்க சென்றார்.

அன்று இரவு பதினொன்று மணிக்கு தான் விக்ரம் வீட்டிற்கு வந்தான். தன்னிடம் உள்ள சாவியால் தானே கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

கயல்விழி விழித்திருப்பதை பார்த்தவன், ''நீ தூங் கலையா? நீ ஏன் முழிச்சிருக்க?'' என்று கேட்டான்.

''தூக்கம் வரலை.''

''மாமா வந்துட்டாரா? அவர் வந்த வேலை முடிஞ்சதா?''

''முடிஞ்சிடுச்சுன்னு சொன்னார். நீங்க சாப்பிட்டீங் களா?''

''சாப்பிட்டேன் கயல்.'' என்றவன் அதற்கு மேல் எதை யும் பேசாமல் உடையை மாற்றிக் கொண்டு படுக் கையில் விழுந்து தூங்கிப் போனான்.

''என்கிட்ட நின்னு ரெண்டு வார்த்தை பேசுறதுக்கு கூட நேரம் இல்லாமல் அலையுறார். என்ன வேலையோ?'' என்று அவள் தன் மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை அவன் எழுந்ததும், ''இன்னைக்கு ஆபீஸுக்கு லீவ் போடுறீங்களா?'' என்று கேட்டாள்.

''எதுக்கு லீவ் போடணும்?''

''அப்பா வந்திருக்கார்ல. அதான்.''

''நான் வேணா டிரைவரை வர சொல்லுறேன். அன்னைக்கு எங்க அம்மா அப்பா வந்த போது அவங்களோட வெளியே போன இல்ல. அதே மாதிரி உங்க அப்பாவும் நீயும் வெளியே போயிட்டு வாங்க.''

''நீங்களும் எங்ககூட சேர்ந்து வந்தால் தான் நல்லா இருக்கும்.''

''என்னால வர முடியாதே கயல்.''

''அன்னைக்கு எங்க கூட நீங்க வந்தப்போ எவ்வளவு நல்லா இருந்துச்சு.''

''அன்னைக்கு நான் லீவா போட்டேன்? சனி ஞாயிறு தானே உங்களோடு சுத்தினேன்.''

''நான் இல்லைன்னு சொல்லலையே. மாமா ரிட்டையர் ஆகிட்டார். அதனால அத்தையும் மாமாவும் நிறைய நாள் இங்கே இருந்தாங்க. நீங்களும் வாரக் கடைசியில் எங்களை வெளியே கூட்டிட்டு போனீங்க. ஆனா எங்க அப்பாவுக்கு ஆபீஸ் போய் ஆகணுமே. அதனால கண்டிப்பா இன்னைக்கு நைட் கிளம்புறேன்னு சொல்லுவார். அதான் இன்னைக்கு உங்களை லீவு போட சொல்லுறேன்.''

''ஆபீஸில் வேலை டைட்டா இருக்கு. என்னால கண்டிப்பா லீவ் எடுக்க முடியாது.''

''நேத்து எங்க அப்பா வீட்டுக்குள்ளே நுழைஞ்சதுமே நீங்க ஆபீஸ் கிளம்பி போயிட்டீங்க. நைட் அவர் தூங்கிற வரைக்கும் வரவே இல்லை. இப்பவும் ஆபீஸ் போயிட்

டீங்கன்னா வீட்டுக்கு திரும்ப எப்போ வருவீங்களோ? அதுக்குள்ளே அவர் ஊருக்கு கிளம்பி போயிடுவார்.''

''அதுக்கு என்ன கயல் செய்ய முடியும்?''

''அவர் நம்ம வீட்டுக்கு வந்திருக்கார். அவருக்கு நீங்க மரியாதை தர மாதிரி கொஞ்ச நேரம் அவர் கூட இருக்க வேண்டாமா?''

''லீவ் போட்டு அவர் கூட இருந்தால் தான் நான் அவருக்கு மரியாதை தரதா அர்த்தமா? அவர் மேல எனக்கு நிறைய மரியாதை மனசுக்குள்ளே இருக்கு. அதை என்னால லீவ் போட்டு காட்டி எல்லாம் நிரூபிக்க முடியாது.'' என்றவன் தன் மடிகணினி பையை எடுக்கவும்,

''நான் இவ்வளவு தூரம் சொல்லுறேன். நீங்க கேட்க மாட்டீங்களா?'' என்று அவள் கோபமாக கேட்டாள்.

அந்த பையை அங்கே வைத்துவிட்டு அவளருகே வந்தவன், ''என்ன கயல் சின்ன குழந்தை மாதிரி அடம் பிடிக்கிறே?'' என்றான்.

''எங்க அப்பா அடிக்கடியா இங்கே வந்து போகிறார்? வராதவர் வந்திருக்கார்ன்னு தானே சொல்லுறேன். இப்போ லீவ் போட முடியுமா? முடியாதா? அதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க.''

''நான் இவ்வளவு தூரம் விளக்கம் சொல்லியும் நீ பிடிவாதம் பிடிச்சால் என்னால ஒண்ணும் செய்ய முடியாது கயல்.''

''அப்போ இன்னும் ரெண்டு நாள் கழிச்சு ஏஞ்சலுக்காக நீங்க லீவ் போடக் கூடாது.''

என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாது அவளை அவன் பார்த்துக் கொண்டு நிற்க...

''நான் சொல்லி இன்னைக்கு லீவ் போடலை இல்லை. நாளை மறுநாள் உங்க ஏஞ்சலுக்கு திதி குடுக்க நீங்க லீவ் போடக் கூடாது.'' என்றதும் அவன் அவளை அறை வதற்கு கையை ஓங்கி விட்டான்.

ஆனால் கடைசி நொடியில் சுதாரித்து தன் கையை கீழே இறக்கி விட்டான்.

அவன் கையை ஓங்கியதும் கயல் அதிர்ந்து விட்டாள். விக்ரம் தன் கண்களை மூடிக் கொண்டு தன்னை நிதானப்படுத்த முனைந்தான்.

''விக்ரம்! கூல்! உனக்கு என்ன ஆச்சு? நீ எப்படிடா கையை ஓங்கினே? பெண்ணை கை நீட்டி அடிக்கிறவன் மனுஷனே கிடையாதுன்னு சொல்லுவே! நீ எப்படிடா இப்படி ஒரு காரியம் செய்ய துணிஞ்சே!''

'அவள் என்ன வார்த்தை சொல்லிட்டாள். அதைக் கேட்டு டென்ஷன் ஆகாமல் இருக்க நான் என்ன ஞானியா? சாதாரண மனுஷன்.' என்று அவன் தனக் குள்ளே வாதிட்டுக் கொண்டு இருந்தான்.

'முதல்ல அவளை சமாதானப்படுத்து. பயந்து போய் இருப்பாள். அவங்க அப்பா வந்திருக்கிற நேரத்துல இப்படி ஒரு சம்பவம் தேவையா? இவள் கண்ணை கசக்கிட்டு அவர் முன்னாடி போய் நின்னுடப் போறாள்' என்ற எண் ணம் தோன்றியவுடன் அவன் தன் கண்களை திறந்தான்.

கயல்விழி அந்த அறையில் இல்லை. அவன் வேக மாக வெளியே வந்து பார்த்தான். அவள் சமையலறை யில் நின்று கொண்டிருந்தாள்.

கணேசன் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து கொண்டிருந்தார். மரியாதைக்காக அவரிடம் ஒரிரு வார்த்தைகள் பேசினான்.

கயலை சமாதானம் செய்வதற்காக அவளை அழைத் தான். அவள் இவன் புறம் திரும்பி பார்க்கவில்லை.

அதற்குள் அவனது அலைபேசி அழைக்க ஆரம் பித்தது. எடுத்துப் பேச ஆரம்பித்தவன் தன் படுக்கை அறைக்குள் சென்று தன் மடிகணினி பையோடு வெளியே வந்தான்.

''மாமா! சாரி உங்களோடு உட்கார்ந்து பேச எனக்கு நேரமில்லை. எனக்கு அவசரமா ஆபீஸ் கிளம்பணும். நான் வரேன்.'' என்றவன்,

சமையலறையை நோக்கி, ''வரேன் கயல்.'' என்று சப்தமாக சொல்லிவிட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான்.

கணேசன் பதில் சொல்வதற்கு கூட அவன் அவ காசம் கொடுக்கவில்லை.

''சாப்பிடாமல் கூட கிளம்பிட்டாரா?'' என்று கயல்விழி வெளியே வந்து பார்க்கும் பொழுது அவன் படிகளில் இறங்க ஆரம்பித்திருந்தான்.

''வெறும் வயிரோட போகட்டும். எனக்கு என்ன வந் துச்சு. அந்த ஆபீஸையே கட்டி அழட்டும்.'' என்று அவள் சபித்துக் கொண்டே வீட்டிற்குள் வந்தாள்.

''என்னம்மா மாப்பிள்ளை வீடு தங்காமல் ஓடிக்கிட்டு இருக்கார். எப்பவும் இப்படி தானா?''

''இல்லைப்பா. நேத்தே சொன்னேன்ல. இந்த வாரத்தில் இருந்து தான் இப்படி பிஸியா இருக்கார்.''

"நான் ஊருக்கு போறேன்னு சொல்லக் கூட இல்லை. அதுக்குள்ள அவசரமா கிளம்பிட்டார்."

"நாளைக்கு வரைக்கும் இருப்பீங்க தானே?"

"நாளைக்கா? நான் இன்னைக்கு மதியத்துக்கே வைகை எக்ஸ்பிரஸ்ல கிளம்பணும் கயல்."

"இன்னைக்கு மதியமேவா? என்னப்பா.... நேத்து தான் வந்தீங்க. நேத்து முழுசும் வெளியே போயிட்டீங்க. இப்பவும் உடனே கிளம்புறேன்னு சொல்லுறீங்க."

"நேத்து பார்த்த வேலையை பத்தின ரிப்போர்ட்டை ஆபீஸில் நாளைக்கு குடுக்கணும்மா."

அவர் நிறைய நாட்கள் இங்கே தங்க மாட்டார் என்பது அவள் எதிர்பார்த்த ஒன்று தான். ஆனால் மதியமே கிளம்ப வேண்டும் என்று சொல்லுவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

விக்ரமுடன் போட்ட முதல் சண்டை ஏற்கனவே மனதை பிசைந்து கொண்டிருக்கிறது.

இதில் அவளது அப்பாவும் உடனே கிளம்புகிறேன் என்று சொன்னதும் அவளது கண்களில் இருந்து கண்ணீர் வெளியேறி அவளது கன்னத்தில் உருண்டோடியது.

"என்னடா கயல் இது? அப்பா ஊருக்கு போறேன்னு சொன்னதும் சின்ன பிள்ளை மாதிரி அழறே?"

அவள் ஒன்றும் சொல்லாமல் அவள் தந்தையை பார்த்து முறுவலிக்க முயன்றாள்.

அவரிடம் என்னவென்று சொல்ல முடியும்?

என் புருஷன் என்னை அடிக்க கை ஓங்கினார். அவர் ஆபீஸில் இருந்து வந்ததும் எங்களுக்கு இடையே

இன்னும் என்னவெல்லாம் சண்டை வர போகுதோன்னு எனக்கு பயமா இருக்கு என்றா கூற முடியும்?

"நான் அம்மாகிட்ட சொன்னேன். என்னை பார்த்ததும் கயல் என் கூடவே கிளம்பி ஊருக்கு வரேன்னு சொல்ல போறாள் பாருன்னு."

அவர் அப்படி சொன்னதும், பேசாமல் நாம அப்பா கூட கிளம்பி மதுரைக்கு போனால் தான் என்ன? என்று அவளுக்கு தோன்றியது.

"அப்பா! நானும் உங்க கூட ஊருக்கு வரட்டுமா?"

"நான் உனக்கும் சேர்த்து தான் கயல் டிக்கெட் வாங் கினேன். நீ இப்படி ஊருக்கு வரட்டுமான்னு கேட்டால் மட்டும் தான் இந்த விஷயத்தை உன்கிட்ட சொல்ல ணும்னு அம்மா சொன்னாள். அம்மா என்கிட்ட என்ன தெரியுமா சொன்னாள்? நீ மாப்பிள்ளையை விட்டுட்டு எங்கேயும் வர மாட்டேன்னு சொன்னாள். ஆனா நான் சொன்னது தான் சரி." என்று அவர் உற்சாகமாய் கூறி னார்.

கயல் தன் மனதிற்குள், இல்லைப்பா அம்மா சொன்னது தான் சரி. இன்னைக்கு இந்த சண்டை நடக்கலைன்னால் நான் ஊருக்கு வருவதை பத்தி யோசிச்சே இருக்க மாட்டேன். என்று கூறிக் கொண்டாள்.

மாப்பிள்ளைக்கு ஒரு போன் பண்ணி பெர்மிஷன் கேளும்மா. என்றதும் அவரிடம் மண்டையை ஆட்டி விட்டு தங்கள் அறை நோக்கி சென்றாள்.

அவர்கிட்ட எதுக்கு நான் பெர்மிஷன் கேட்கணும்? அவர் பெரிய மகாராஜா! அவர் போன்னு சொன்னால்

நான் நான் போகணுமா? அவர்கிட்ட எதுவும் சொல் லாமல் நான் கிளம்பி எங்க வீட்டுக்கு போறேன். நான் இல்லாமல் இங்கே தனியா கிடந்து அல்லாடட்டும். அப்போ தான் இந்த கயலோட அருமை அவருக்கு புரியும். என்று கறுவிக் கொண்டாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து வெளியே வந்தவள், "என்னை மதுரைக்கு கிளம்ப சொல்லிட்டாருப்பா. முதல்ல சாப்பிடுங்க. அப்புறமா பெட்டியை கட்டுவோம்." என்று சொல்லி சமையல் அறை நோக்கி நகர்ந்தாள்.

அவர்கள் மதியம் ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்த னர்.

இடம் பார்த்து அமர்ந்ததும், "கயல்! நீ மாப்பிள்ளை கிட்ட ஸ்டேஷன் வந்துட்டோம்னு சொல்லிடு. நான் போய் உனக்கு படிக்க ஏதாச்சும் புக் இருந்தால் வாங் கிட்டு வரேன்." என்று சொல்லி கணேசன் ரயிலில் இருந்து இறங்கினார்.

'நல்ல வேளை அப்பா என் பக்கத்தில உட்கார்ந்து கிட்டு அவரிடம் பேசுன்னு சொல்லலை' என்று அவள் ஆசுவாசப்பட்டுக் கொண்டாள்.

அவள் தன் கணவனுக்கு போன் எதுவும் செய்ய வில்லை.

சரியான நேரத்தில் ரயில் கிளம்பியது. விக்ரமிடம் சொல்லிக் கொள்ளாமலே அவள் மதுரையை நோக்கி தன் பயணத்தை தொடங்கினாள்.

மதிய உணவு இடைவேளையில் விக்ரம் எப்பொழுதும் போல் இன்றும் அவளை அழைத்தான். ஆனால் அவள் அதை எடுத்து பேசவில்லை.

அலைபேசியை சைலன்ட்டில் போட்டு தன் கைப் பைக்குள் வைத்திருந்ததால் அருகில் இருந்த கணேசனுக்கு அலைபேசியில் அழைப்பு வந்தது தெரியவில்லை.

அவளது அலைபேசி சப்தம் எழுப்பாது போனாலும் உர் உர்ரென்று உறுமி அழைப்பு வருவதை கயலுக்கு அது அறிவிக்க தான் செய்தது. இவள் வேண்டுமென்றே அதை தவிர்த்தாள்.

இரவு ஒன்பதரை மணிக்கு இருவரும் மதுரை வந்து இறங்கினார்கள். ஆட்டோ ஒன்றை அமர்த்திக் கொண்டு வீடு நோக்கி சென்றனர்.

ஆட்டோவில் செல்லும் பொழுதே கணேசன் விக்ரமை அழைத்தார்.

அவன் அந்தப் பக்கம் அழைப்பை எடுத்ததும், ''ஹலோ மாப்பிள்ளை! டிரைன் சரியான நேரத்திற்கு மதுரை வந்துடுச்சு.'' என்றார்.

''என்னது மதுரைக்கு போயிட்டாரா? அப்போ வைகைல கிளம்பிட்டாரா?'' என நினைத்துக் கொண்ட விக்ரம், ''சாரி மாமா. என்னால உங்ககிட்ட சரியா பேச கூட முடியலை.'' என்றான்.

''எதுக்கு மாப்பிள்ளை இத்தனை தடவை சாரி கேட்கிறீங்க. நீங்க என்ன தப்பு செஞ்சீங்க? வேலைன்னா அப்படி தான் மாப்பிள்ளை. கொஞ்சம் முன்னே பின்னே போக வேண்டி இருக்கும்.

இப்ப என்னையே எடுத்துக்கோங்க. மகள் கூட அங்கேயே இன்னும் ரெண்டு நாளைக்கு இருக்கணும்னு ஆசை தான். ஆனால் நாளைக்கு கண்டிப்பா வேலைக்கு

நான் போயே ஆகணும்னு உடனே அங்கே இருந்து கிளம் பிடலையா. விடுங்க மாப்பிள்ளை. அடுத்த தடவை நீங்க ஃப்ரீயா இருக்கும் போது சென்னைக்கு வந்துட் டால் போச்சு.''

''தாங்க்ஸ் மாமா. நீங்க வீட்டுக்கு வந்திருக்கும் நேரம் இப்படி ஆபீஸே கதின்னு கிடக்க வேண்டி இருக்கேன்னு எனக்கே கொஞ்சம் ஒரு மாதிரி தான் இருந்துச்சு. நீங்க என்னை புரிஞ்சுக்கிட்டதுக்கு தாங்க்ஸ்.''

''என்னங்க மாப்பிள்ளை ஒண்ணு சாரி சொல்லுறீங்க. இல்லை தாங்க்ஸ் சொல்லுறீங்க. நமக்குள்ள எதுக்கு அதெல்லாம்? கயல்கிட்ட போனை குடுக்கவா? அவ கூட பேசுறீங்களா?''

என்னது கயல்கிட்ட போனை குடுக்கிறாரா? என்ன சொல்லுறார்? என்று அவன் அங்கே விழித்துக் கொண் டிருக்க...

இங்கே கணேசன் தன் மகளிடம், ''மாப்பிள்ளைகிட்ட பேசு கயல்.'' என்று தன் அலைபேசியை நீட்டிக் கொண்டிருந்தார்.

''ஆட்டோ சத்தத்தில் எதுவும் கேட்காதுப்பா. வீட் டுக்கு போன பின்னால நான் அவர்கிட்ட பேசிக்கிறேன்.'' என்று கயல்விழி கூறுவது விக்ரம் காதில் தெளிவாக விழுந்தது.

''மாப்பிள்ளை! கயல் அப்புறமா பேசுறாளாம். போனை வச்சுடட்டுமா?''

''சரிங்க மாமா.'' என்றவன் அந்த அழைப்பை துண்டித்தான்.

சோ இவள் என்கிட்ட சொல்லாமல் மதுரைக்கு கிளம்பி போய் இருக்காள். அதை அவங்க அப்பாகிட்ட இருந்தும் மறைச்சு இருக்காள். இல்லைன்னா அவர் இவ்வளவு கேஷுவலா பேச மாட்டார்.

கயல்! உனக்கு அவ்வளவு ஏத்தமா? சரி தான் போடி. என்னை வேண்டாம்னு தூக்கி போட்டுட்டு போயிட்ட இல்ல. உன்னை பார்த்துக்கிறேன் என்று இவன் அவளுக்கு வசை பாட ஆரம்பித்தான்.

## 34

**வீ**டு வந்த கயல்விழியை தங்கமும் அழகரும் வரவேற்றார்கள். சாப்பிட்டு முடித்து அனைவரும் தூங்க சென்றனர்.

கயல்விழி தன் அலைபேசியை தன்னருகே வைத்துக் கொண்டே தூங்க ஆரம்பித்தாள்.

கணவன் தனக்கு போன் செய்து ஏன் சொல்லாமல் போனே என்று கோபித்து கொள்வானோ என அவள் நினைத்தாள். ஆனால் அவன் அவளை அழைக்கவே இல்லை.

''நீ தானே சொல்லாமல் போனே. வேணா நீயே கூப்பிடு.'' என்பது அவன் எண்ணமாய் இருந்தது.

அடுத்த நாள் மாலை ஆகியும் விக்ரமிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை என்றதும் கயல்விழி மனம்

சோர்ந்தாள். வீட்டில் உள்ளவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னாள். அவ்வளவே!

மறுநாள் காலையில் தனது வழக்கமாய் மீனாட்சி அம்மனை தரிசித்து விட்டு வந்தாள். பின் தாங்கள் வாங்கி இருக்கும் வீட்டிற்கு சென்று பார்த்தாள்.

மராமத்து வேலைகள் அனைத்தும் முடிவடைந்து இருந்தன. பெயின்ட்டும் அடித்து முடித்து வீடு தயார் நிலையில் இருந்தது.

கயல்விழியுடன் வந்திருந்த தங்கம், ''ஒரு நல்ல நாள் பார்த்து இதுக்கு பால் காய்ச்சணும் கயல். மாப்பிள்ளை இதை பத்தி ஏதாச்சும் சொன்னாரா?'' என்று கேட்டார்.

''அவர் என்ன சொல்லணும்?''

''கிரகப்பிரவேசம் மாதிரி பண்ணணும்னு சொன்னா ரான்னு கேட்கிறேன்.''

''இல்லைம்மா. பழைய வீடு தானே. அதனால அப்படி எல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டார். அவருக்கு இந்த சடங்கு சம்பிரதாயத்தில் அவ்வளவு நம்பிக்கை கிடை யாதும்மா.''

''சரிம்மா. மாப்பிள்ளை எப்படி பிரியப்படுறாரோ அப்படியே செஞ்சுடலாம்.''

அவர்கள் இருவரும் வீடு திரும்பினார்கள். கயல்விழி அமைதியாய் விட்டத்தை வெறித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

தங்கம் தன் மகளை ஊன்றி கவனிக்க ஆரம்பித்தார். அவளின் அமைதி அவரை கதி கலங்க வைத்தது.

மறுநாள் மாலை கயல்விழி அருகில் இருக்கும் கோவிலுக்கு கிளம்பி செல்லவும் தங்கம் தன் கணவர் மற்றும் மகனிடம் பேசினார்.

''என்னங்க கயலை கவனிச்சு பார்த்தீங்களா? உற்சாகமே இல்லாமல் இருக்காள்.''

''அப்படி எல்லாம் இல்லை தங்கம்.''

''அம்மா சரியா தான் சொல்லுறாங்கப்பா. அக்கா நார்மலா இல்லை.''

''ரெண்டு பேரும் அப்படியா சொல்லுறீங்க? ஒரு வேளை மாப்பிள்ளை பக்கத்துல இல்லாததால் கொஞ்சம் டல்லா இருக்காளோ என்னவோ...''

''அன்னைக்கு மாப்பிள்ளை அவளை இங்கே விட்டுட்டு போனப்போ இவ்வளவு டல்லா எல்லாம் இல்லை. அது மட்டுமில்லை. எனக்கு தெரிஞ்சு அவ மாப்பிள்ளை கூட போனில் பேசுற மாதிரி கூட தெரியலை.''

''நீ சரியா கவனிச்சு இருக்க மாட்டே தங்கம்.''

''அழகர்! நீ எப்பவாச்சும் அக்கா போன் பேசி பார்த்தியா?''

''இல்லைம்மா. போன தடவை நானே மாமாவை வேலை செய்ய விடு. ஒரு நாளைக்கு எத்தனை தடவை போன் பண்ணுவேன்னு அவளை கிண்டல் பண்ணி இருக்கேன். ஆனால் இப்போ நான் பார்க்க அவள் ஒரு தடவை கூட போன் பேசலை.''

''மாப்பிள்ளை அவளை சந்தோஷமா தானே அனுப்பி வச்சார். இல்லை நீங்க கேட்டீங்கன்னு தட்ட முடியாமல் அனுப்பி வச்சாரா?''

"நான் எப்போ தங்கம் கேட்டேன்?"

"என்னங்க சொல்லுறீங்க? மாப்பிள்ளைகிட்ட பெர்மிஷன் வாங்காமலா அவளை கூட்டிட்டு வந்தீங்க."

"நான் அவர்கிட்ட இது சம்பந்தமா பேசவே இல்லை தங்கம்."

"புத்தி இல்லாத இந்த மனுஷனை கட்டிக்கிட்டு.." என்று தங்கம் தன் மனதிற்குள் நொடித்துக் கொண்டார்.

கயலை தான் மாப்பிள்ளைகிட்ட போன் பண்ணி கேட்க சொன்னேன்.

"என்னது போன் பண்ணி கேட்க சொன்னீங்களா? அப்போ மாப்பிள்ளை வீட்டுல இருக்கும் போது ஊருக்கு போகிற விஷயமா பேசவே இல்லையா?"

கணேசன் இல்லை என்று தலை அசைக்கவும், தங்கம் தன் தலையில் அடித்துக் கொண்டார்.

இவர்கள் மூவரும் என்ன செய்யலாம் என்பது குறித்து பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கயல் கோவிலில் இருந்து திரும்பி வந்தாள்.

அவள் நேரே படுக்கை அறைக்குள் நுழைய பார்த்தாள்.

"கயல்! இங்கே வா. நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்." என்று தங்கம் மகளை தங்கள் அருகே அழைத்தார்.

"ஏன் கயல் சோகமா இருக்கே?"

"நான் எப்பவும் போல தானேம்மா இருக்கேன்."

"பெத்தவளுக்கு தெரியாதா? சொல்லு என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை." என்ற போது அவளது குரலில் சுதி இறங்கி இருந்தது.

''மாப்பிள்ளை உன்னை ஊருக்கு போக வேண்டாம்னு சொன்னாரா? அதுக்காக அவர் கூட சண்டை போட்டியா?''

அவள் பதில் சொல்லாமல் இருக்கவும், ''இப்போ சொல்லப் போறியா இல்லையா கயல்.'' என்று தங்கம் தன் குரலை உயர்த்தினார்.

''நான் அவர்கிட்ட ஊருக்கு போகட்டுமான்னு கேட்கவே இல்லை.''

''என்னது மாப்பிள்ளைகிட்ட சொல்லாமல் என் கூட கிளம்பி வந்தியா? அன்னைக்கு அவர் ஊருக்கு போக சொல்லிட்டார்னு என்கிட்ட சொன்னது பொய்யா?'' என்று கணேசன் அதிர்ந்து போய் கேட்டார்.

''...............''

"டிரைன் ஏறிட்டோம்னு உன்னை சொல்ல சொன்னேன்ல. அப்பவும் நீ அவருக்கு போன் பண்ணி பேசலையா?''

அவள் ஆமாம் என்று தலை அசைக்கவும் மொத்த குடும்பமும் கவலையில் ஆழ்ந்தது.

''உங்களுக்கு இடையிலே அப்படி எதுக்கு சண்டை வந்துச்சு?''

''அப்பா ஊருக்கு வந்தார். அவர்கிட்ட நின்னு ஒரு வார்த்தை பேசக் கூட முடியாமல் வேலைக்கு கிளம்பினார். லீவ் போடுங்கன்னு சொன்னேன். முடியாதுன்னு சொல்லிட்டார்.''

'புத்தி கெட்ட மனுஷனுக்கு பிறந்தது மட்டும் புத்தியோடவா இருக்கும்' என்று தங்கம் தன் மனதிற்குள் நொடித்துக் கொண்டார்.

''ஏன்மா இதெல்லாம் ஒரு காரணமா? வேலைக்கு போகிற மனுஷனுக்கு வேலை இடத்திலே ஆயிரத்து எட்டு பிரச்சனை இருக்கும். அதை கூட புரிஞ்சுக்காமல் இப்படி பண்ணலாமா கயல்?'' என்று கணேசன் கூறினார்.

ஆனால் சண்டைக்கான காரணத்தை அறிந்த இரு வரும் சற்று ஆசுவாசப்பட்டனர் என்று தான் சொல்ல வேண்டும்.

பெரிய விஷயம் எதுவும் இல்லை. சின்ன மனஸ்தாபம் என்பதே அவர்கள் இருவரின் நிம்மதிக்கு காரணமாய் அமைந்தது.

இது ஒரு சண்டைன்னு இவள் இங்கே வரைக்கும் கிளம்பி வந்தாளா? என்று அழகர் மட்டும் அவளை நம்பாத பார்வை பார்த்தான்.

அச்சோ! பயபுள்ளை என்னை நம்பாத மாதிரி பார்க் கிறானே! என்று கயல்விழி சற்றே மிரண்டாள்.

அவள் தன் தம்பியின் முகம் பார்ப்பதை தவிர்த்தாள். அவர்களின் பெற்றோர்கள் கயல்விழியை சந்தேகம் கொள்ளவில்லை. அதற்கு காரணம் அவர்களது கவனம் முழுவதும் மருமகனை எப்படி சமாளிப்பது என்பதில் தான் இருந்தது.

''அழகர்! நீ போய் படி.'' என்று தங்கம் அவனை அனுப்பி விட்டு,

தன் கணவரிடம் திரும்பி, ''நீங்க மாப்பிள்ளைக்கு போன் போட்டு பேசுங்க.'' என்றார்.

''போனை ஸ்பீக்கரில் போடுங்க.''

''எதுக்கு தங்கம்?''

''நீங்க ஏதாச்சும் சொதப்பினால் நான் சரி பண்ண தான்.''

''எனக்கு பேசத் தெரியாதுன்னு சொல்லுறியா?''

''இதுக்கு மேலயும் நான் உங்களை எப்படி நம்ப முடியும்?''

''எங்க ஆபீஸில் கேட்டு பார். நான் எவ்வளவு விவர மான ஆளுன்னு சொல்லுவாங்க.''

''அவ்வளவு விவரமானவர்னா உங்க பொண்ணு செஞ்ச தில்லாலங்கடியை அங்கேயே கண்டு பிடிச்சு இருக்கணும்.'' என்றதும் கணேசன் தன் வாயை மூடிக் கொண்டார்.

கணவனின் குரலை கேட்க கயல் ஆர்வமாக இருந் தாள்.

''மாப்பிள்ளை போனை எடுப்பாரா? இல்லை கோபத்தில் போனை எடுக்காமல் விட்டுடுவாரா'' என்று அவர்கள் சற்றே பயந்தனர்.

ஆனால் அவர்களின் பயம் அவசியமற்றது என்று நிரூபிக்கும் வகையில் இரண்டாவது மணியிலேயே அவன் அழைப்பை ஏற்று பேச ஆரம்பித்தான்.

''சொல்லுங்க மாமா.'' என்று அவன் தன்மையாய் பேசவும் நிம்மதி அடைந்தனர்.

''சாரி மாப்பிள்ளை. எங்களுக்கு விஷயம் இப்போ தான் தெரிஞ்சது. இந்த கயல் உங்ககிட்ட சொல்லாமல் என் கூட கிளம்பி வருவாள்னு நான் நினைக்கலை.''

அருகே யாரோ விக்ரமை அழைப்பது இவர்களுக்கு கேட்டது.

''ஒரு நிமிஷம் மாமா.'' என்றவன் அந்தப்புறம் யாரிடமோ மடமடவென ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்தான்.

''மாப்பிள்ளை என்னம்மா இங்கிலீஷ் பேசுறாரு!'' என்று தங்கம் மெல்லிய குரலில் மருமகனின் புகழ் பாடினார்.

அருகில் இருந்த கயல்விழிக்கு பெருமையாக இருந்தது. அவள் முறுவலுடன் அந்த போனையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவளது முகத்தில் தெரிந்த மலர்ச்சியை கண்ட அவளது பெற்றோர் தங்களுக்குள் புன்னகையை பரி மாறிக் கொண்டனர்.

அந்தப்புறம் பேசி முடித்த விக்ரம், ''சொல்லுங்க மாமா.'' என்றான்.

''நான் உங்க வீட்டுக்கு வந்ததுக்காக லீவ் போட சொல்லி சண்டை போட்டாளாமே! மக்கு பய மகள்.''

உண்மை எல்லாம் வாயில் இருந்து வருது. என்று தங்கம் தன் மனதில் நினைத்ததை சப்தமாகவே முணு முணுத்துவிட்டார்.

அந்த பக்கம் கேட்டுக் கொண்டிருந்த விக்ரம், ஐயோ பாவம்! இந்த கயலால இன்னைக்கு மாமா அத்தைகிட்ட செமையா சிக்கிட்டார் போல! என நினைத்து புன் னகைத்துக் கொண்டான்.

''அவள் ஆசைப்பட்டதிலே தப்பு ஒண்ணும் இல்லை மாமா. ஆனால் என்னால லீவ் போட முடியாத

சூழ்நிலை. அதை நான் சொன்னேன். அவ புரிஞ்சுக் கலை.''

''இது எதுவும் தெரியாமல் நான் வேற என் கூடவே கூட்டிட்டு வந்துட்டேன்.''

''நீங்க கூட்டிட்டு போகலைன்னால் நானே கொண்டு வந்து விட்டிருப்பேன்.''

என்ன சொல்கிறார் இவர்? என மூவருமே அதிர்ந்து போய் விழித்தனர். அவன் தன் பேச்சை தொடர்ந்தான்.

''வேலை விஷயமா நான் நாளைக்கு நைட் அமெரிக் காவுக்கு கிளம்புறேன் மாமா.''

''என்னது அமெரிக்காவா?'' என்று திடுக்கிட்ட கயல், அப்பா! அந்த ஸ்பீக்கரை எடுத்துட்டு போனை என்கிட்ட தாங்க. என்றாள்.

இரு தினங்களுக்கு பின் அவள் குரலை கேட்டவன், மேடம்க்கு கோபம் போயிடுச்சு போல என நினைத்து புன்னகைத்துக் கொண்டான்.

அவர் அதே மாதிரி செய்துவிட்டு அலைபேசியை மகளிடம் நீட்டினார். தங்கமும் கணேசனும் அங்கிருந்து நகர்ந்து சென்றனர்.

அவள் வெளியே சென்று வராண்டா தாண்டி வாசல் படியில் அமர்ந்து கொண்டு, ''அமெரிக்காவுக்கு போறீங்களா? எப்போ வருவீங்க?'' என்றாள்.

''என்ன மாமா திடீர்னு பொண்ணு வாய்ஸ்ல பேசு றீங்க?'' என்று அவன் வம்பு வளர்த்தான்.

''நான் உங்க மாமா இல்ல. மாமா பெத்த பொண்ணு.''

'அப்பப்போ மக்கு மாதிரியே பேசுவாள். இவள் தான் பேசுறாள்னு எனக்கு தெரியாதா என்ன?' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

''மாமா! லைன்ல ஏதோ பால்ட் போல. கிராஸ் டாக் கேட்குது. நாம அப்புறமா பேசலாம்.'' என்றவன் அவளது பதிலை எதிர்பார்க்காமல் அழைப்பை துண்டித்தான்.

'இப்போ சிலிர்த்துக்கிட்டு எனக்கு போன் பண்ணுவடி என் மக்கு! எனக்கு அது தான் வேணும்' என்று தனக்குள் கூறிக் கொண்டு தன் அலைபேசியை பார்த்துக் கொண்டு காத்திருந்தான்.

''அப்பா! இந்தாங்கப்பா உங்க போன். என்னோட போன் எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே தன் கைப்பையில் இருந்து போனை தேடி எடுத்து கணவனை அழைத்தாள்.

அவளது அழைப்பை கண்டவன் பெரிய புன்னகை யுடன் அந்த அழைப்பை ஏற்று, ''என்கிட்ட சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்கு போன என் பொண்டாட்டியோட கோபம் மலை இறங்கிடுச்சு போல!'' என்றான்.

''அந்த கோபம் எனக்குள்ள அப்படியே தான் இருக்கு.''

''கீழே இறக்கி வச்சுடாதே. தொலைஞ்சிட போகுது. இன்னைக்கு தேதிக்கு வைரத்தை விட அதுக்கு தான் விலை அதிகம்.''

''உங்களுக்கு கிண்டலா இருக்கா?''

''சே! சே! நான் ரொம்ப சீரியஸா சொல்லுறேன்.''

''என் மேல கோபமா இருக்கீங்களா மாமா?''

''வேற எப்படி இருப்பேன்னு நீ எதிர்பார்க்கிறே?''

அவள் பதில் சொல்லும் முன் அந்தப்பக்கம் யாரோ விக்ரமிடம் எதையோ கேட்டனர்.

அவன் திரும்பவும் அந்தப் பக்கம் வேலை சம்பந்த மாக எதையோ விளக்கிக் கொண்டிருந்தான்.

''யார்கிட்ட பேசிக்கிட்டு இருக்கீங்க விக்ரம்?'' என்று யாரோ கேட்பதும்,

விக்ரம் அந்த நபருக்கு, ''மை பாஸ் ஆன் தி லைன். என் வைஃபை சொல்லுறேன்.'' என்று சொல்லி சிரிப்பதும் இவளுக்கு கேட்டது.

இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை என்று இவள் மனதிற்குள் நொடித்துக் கொண்டாள்.

''சொல்லு கயல். எதுக்கு என்கிட்ட சொல்லாமல் வீட்டை விட்டு போனே?''

''நான் செஞ்சது தப்புன்னே வச்சுக்கலாம்.''

''அது என்ன வச்சுக்கலாம். தப்பு தான். முதல் தடவை அப்படின்னு தான் உன்னை மன்னிச்சு பேசிக்கிட்டு இருக்கேன். அடுத்த தடவை இது மாதிரி செஞ்சேன்னா பேசவே மாட்டேன்.'' என்றதும் அமைதியானாள்.

''நீங்க செஞ்சது மட்டும் சரியா? அடிக்க கை ஓங்கு றீங்க?''

''கை ஓங்கினேன். ஆனால் அடிச்சேனா? ஆனால் அடிக்க கை ஓங்கினது தப்பு தான். நான் உன்னை மாதிரி தப்புன்னே வச்சுக்கலாம்னு எல்லாம் சொல்ல மாட்டேன். நான் செஞ்சது மிகப் பெரிய தப்பு தான்.''

''பெண்ணை கை நீட்டி அடிக்கிறவன் மனுஷன் இல்லைன்னு நினைக்கிற ஆள் நான். அப்படி

மனைக்கிறவனை கை ஓங்க வச்சது உன்னோட வார்த்தைகள். அதுக்கான விளக்கத்தை நான் நேரிலே சொல்லுறேன். இது மாதிரி ஒரு சம்பவம் நம்ம வாழ்க்கையிலே இனி வராமல் நான் பார்த்துக்கிறேன்.''

''ஆனால் நான் செஞ்ச தப்புக்கு உன்கிட்ட சாரி கேட்டுக்கிறேன். இதை அன்னைக்கே கேட்க தான் உன்னை கூப்பிட்டேன். நீ கிட்சனில் இருந்து வர மாட்டேன்னு சொல்லிட்டே. உன்னை வற்புறுத்தினால் உங்க அப்பாவுக்கு நம்மளோட சண்டை தெரிய வரும். என்ன சண்டைன்னு விளக்க வேண்டி இருக்கும். அது தேவையான்னு யோசிச்சேன்.

நைட்ல வந்து விளக்கம் சொல்லி உன்னை சமாதானம் பண்ணலாம்னு நினைச்சேன். ஆனால் நீ என் கிட்ட சொல்லாமல் பெட்டியை கட்டிட்ட. நான் என்ன செய்யட்டும் சொல்லு?''

''சரி அதை விடுங்க. அமெரிக்காவில் இருந்து எப்போ வருவீங்க?''

''.....''

''என்ன பதில் சொல்ல மாட்டேங்கிறீங்க?''

''நீ இன்னும் நான் எதிர்பார்க்கும் ஒரு விஷயத்தை சொல்லலை. நீ அதை சொல்லு. நான் உன் கேள்விக்கு பதில் சொல்லுறேன்.''

''நான் என்ன சொல்லணும்?''

''அது உனக்கு தான் தெரியணும்.''

''எனக்கு நிஜமாவே தெரியலை.''

''நைட் முழுசும் யோசி. நான் காலையில போன் பண்ணுறேன்.''

''போன் பண்ணுவீங்களா?''

''உனக்கு அதுல என்ன சந்தேகம்?''

''நாங்களா போன் பண்ணும் போது தான் நீங்க அமெரிக்கா போகிற விஷயத்தையே சொல்லுறீங்க.''

''நான் அமெரிக்கா போவதால் தான் ஒரு வாரமா வேலை செம டைட்டா இருந்தது. இதை அப்பவே உன் கிட்ட சொல்லி உன்னை மூட் அவுட் பண்ண வேண் டாம்னு தான் நான் இத்தனை நாள் சொல்லாமல் மறைச்சு வச்சேன். ஆனால் நாளைக்கே நான் கிளம்புவேன்னு நானே எதிர்பார்க்கலை.''

''மதியம் தான் விஷயம் சொன்னாங்க. உன்கிட்ட சொல்லாமல் நான் எப்படி அமெரிக்காவுக்கு போவேன்? நமக்குள்ள என்ன சண்டை வந்தாலும் உனக்கு நான் தான். எனக்கு நீ தான். இதுல எந்த மாற்றமும் வரப் போற தில்லை. நீ அதை நல்லா மனசிலே பதிய வச்சுக்கோ. நீ என் மக்கு.''

''இப்போ எதுக்கு என்னை மக்குன்னு திட்டுறீங்க?''

''மக்குன்னு உன்னை கொஞ்சுறேன். மக்குன்னா நீ என்ன நினைச்சே? முட்டாள்னா? அதை இங்கிலீஷிலே எழுதி பாரு Ma-k-ku மனம் கவர்ந்த குமரி அப்படின்னு அர்த்தம். நீ என் மக்கு அப்படின்னு நான் சொன்னதில் என்ன தப்பு இருக்கு சொல்லு.''

''நிஜமாவே அது தான் அர்த்தமா? இல்லை சும்மா சமாளிக்கிறீங்களா?''

''நான் எதுக்கு சமாளிக்கணும்? எனக்கு உன்னை பார்த்து பயமா என்ன?''

அவன் தன்னை இத்தனை நாள் கொஞ்சி இருக்கானா என்று நினைக்கும் பொழுது மனமெல்லாம் அப்படி ஒரு மலர்ச்சி.

அதில் அவன் மேல் இருந்த கோபம், மனத்தாங்கல் எல்லாம் நொடியில் மாயமாய் மறைந்து தான் போனது.

''கயல்! எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் காலையில உனக்கு போன் பண்ணுறேன். இப்போ போனை வைக்கட்டுமா?''

''சரி வேலையை பாருங்க. காலையிலே பேசணும்.'' என்ற கட்டளையோடு அவள் அந்த அழைப்பை துண்டித்தாள்.

கயலின் பெற்றோர் தங்கள் மருமகன் போனில் இயல்பாய் பேசியதாலும் கயல்விழி தன் கணவனுடன் பேசத் தொடங்கி விட்டதாலும் நிம்மதியாய் உணர்ந்தனர்.

கணவனும் மனைவியும் தங்கள் சண்டையை பேசி தீர்த்துக் கொள்வார்கள். இனி நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று நினைத்து ஒதுங்கி கொண்டனர்.

அன்று இரவு கயல்விழிக்கு தூக்கம் வரவில்லை. கணவனின் பேச்சே மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

நான் என்ன சொல்லணும்னு எதிர்பார்க்கிறார். காலை வரைக்கும் கெடு விதிச்சு இருக்கார். அது என்னவா இருக்கும்? ஐ லவ் யூ ன்னு சொல்ல சொல்லுறாரா?

ஹேய் லூசு கயல்! நீ வேணா அப்படி எதிர்பார்ப்பே. அவர் என்ன சொல்லுவார்... வாழ்க்கை ஒண்ணும் சினிமா கிடையாது. அது மாதிரி நான் சொல்லுவேன்னு எதிர்பார்க்காதேன்னு. அப்படி சொல்லுற மனுஷன்

கண்டிப்பா அதை எதிர்பார்க்கலை. அப்படின்னா வேறு என்னவா இருக்கும்?

அவர்கள் பேசிய பேச்சை மனதிற்குள் திரும்பத் திரும்ப ஓட்டிப் பார்த்தாள். அப்பொழுது தான் அவளுக்கு ஒரு விஷயம் புரிந்தது.

ஆஹா! நான் கை ஓங்கினது தப்பு. இனியொரு தரம் நம்ம வாழ்க்கையிலே இது மாதிரி நடக்காமல் பார்த்துக் கிறேன்னு சொன்னாரே! அதே மாதிரி நானும் என் தப்பை ஒத்துக்கிட்டு இனிமேல் சொல்லாமல் வீட்டை விட்டு அம்மா வீட்டுக்கு போக மாட்டேன்னு சொல்ல ணும்னு நினைக்கிறார் என்று அவளுக்குப் புரிந்தது.

அவள் உடனே அந்த விஷயத்தை குறுஞ்செய்தியாய் அவனுக்கு அனுப்பி வைத்தாள்.

'நீ கொஞ்சம் மக்கு தான். ஆனா ஒரேடியா மக்கு இல்லலன்னு நிரூபிச்சுட்ட. கொஞ்சம் லேட்டானாலும் நான் என்ன சொல்ல வந்தேன்னு உனக்குப் புரிஞ்சுடுச்சு போல' என்று அவனிடம் இருந்து பதில் வந்தது.

'இப்போ எதுக்கு என்னை முட்டாள்னு திட்டுறீங்க? நான் ஒண்ணும் மக்கு கிடையாது.' என்று அனுப்பினாள்.

'நீ என்னோட மக்கு இல்லையா?'

அவன் என்ன கேட்க வருகிறான் என்று புரிந்ததும் ஐயோ! என பதறியவளாய், நான் உங்களோட மக்கு தான். அன்னைக்கும் இன்னைக்கும் என்னைக்கும் என்று அனுப்பினாள்.

அதை கண்ட விக்ரமிற்கு அவ்வளவு சிரிப்பு வந்தது.

அது! அந்த பயம் இருக்கணும். என்று பதில் அனுப்பி வைத்தான்.

இருவரும் ஒரு சந்தோஷ மனநிலையோடு அன்றைய இரவை கழித்தார்கள்.

# 35

மறுநாள் காலையில் சொன்னபடி விக்ரம் கயலை அழைத்தான்.

அலைபேசியை கையில் வைத்துக் கொண்டே சுற்றிக் கொண்டிருந்தவள் அவனிடம் இருந்து அழைப்பு வந்ததும் சந்தோஷத்துடன் பேச ஆரம்பித்தாள்.

''என்ன மாமா பண்ணிக்கிட்டு இருக்கீங்க?''

''பெட்டி கட்டிக்கிட்டு இருக்கேன்.''

''நான் இருந்தால் பேக் பண்ணி குடுத்து இருப்பேன்.''

''நான் என்னோட பெட்டியை சொல்லலை. ரெண்டு நாள் முன்னாடி இருந்தே நான் என்னோட பொருளை எல்லாம் எடுத்து வைக்க ஆரம்பிச்சுட்டேன். இது உன்னோட பெட்டி.''

''என்னோடதா? எனக்கு புரியலை.''

''நான் சொன்ன உடனே உனக்கு புரிஞ்சால்தான் அது அதிசயம்.''

''என்னை நக்கல் பண்ணுறதை விட்டுட்டு சொல்ல வந்ததை நேரடியா சொல்லுங்க.''

''நீயே நினைச்சாலும் நாளைக்கு என்னால உன்னை நக்கல் பண்ண முடியாது கயல்.''

''அங்கே போனதும் போன் பண்ண மாட்டீங்களா?''

''பண்ணுவேன். ஆனா எனக்கும் உனக்கும் இரவு பகல் வித்தியாசம் இருக்கும்ல. அதான் சொன்னேன்.''

''எப்போ திரும்பி வருவீங்க?''

''ம்ம்ம்ம்.''

''என்ன மாமா இழுக்குறீங்க? திரும்பி வர நிறைய நாள் ஆகுமா? ஒரு வாரம் இல்லைன்னா பத்து நாள் ஆகுமா?'' என்று அவள் பாவம் போல் கேட்டாள்.

''ஒரு மாசத்துக்கு மேல ஆகும் கயல்.''

''என்னது மாசக் கணக்காகுமா? நீங்க ஒண்ணும் அமெரிக்காவுக்கு போக வேண்டாம்.''

''போகாமல் என்ன செய்ய சொல்லுறே? வேலையை விட்டுடட்டுமா? புவ்வாக்கு என்ன பண்ணுறது? என்னை நம்பி என் பொண்டாட்டி வேற இருக்கா கயல் மேடம்.''

ஒரு மாசம் இவரை பார்க்காமல், நினைச்ச நேரம் போனில் கூட பேச முடியாமல் நான் எப்படி இருக்கப் போறேன்? என நினைத்து அவள் கவலை கொண்டாள்.

''கயல்! நிதர்சனத்தை புரிஞ்சுக்கோ. இந்த மாதிரி பிரிவு வர தான் செய்யும். நீ உங்க வீட்டுல தானே இருக்கப் போறே?''

"ஆனா நீங்க என் பக்கத்திலே இருக்க மாட்டீங்களே."

"என்ன கயல் இப்படி சொல்லிட்டே? நீங்க இல்லாமல் எங்க அம்மா வீட்டுல ஜாலியா பொழுதை ஓட்டு வேன்னு நீ சொல்லுவேன்னு நான் எதிர்பார்த்தேன்."

அவள் பதில் ஒன்றும் சொல்லாமல் அமைதியாகி விட அவன் கெஞ்சி கொஞ்சி அவளை சரிப்படுத்தினான்.

ஊருக்கு கிளம்பும் முன்னாடியே இந்த பாடா இருக்கே... இன்னும் ஒரு மாசம் இவளை எப்படி சமாளிக்க போறேன்னு தெரியலையே! என்று அவன் தன் மன தோடு புலம்பிக் கொண்டான்.

"எனக்கு ஏதோ பெட்டி கட்டுறேன்னு சொன்னீங் களே... அது என்ன?"

"என் கூட சண்டை போட்டுக்கிட்டு கிளம்பி போன கயல்விழி கணேசனை கயல்விழி விக்ரமா மாத்த முடியுமான்னு பார்க்கிறேன்."

"நான் கயல்விழி விக்ரமா எப்பவோ மாறிட்டேன்."

"பார்த்தால் அப்படி தெரியலையே. என் கூட கோபிச்சுக்கிட்டு பேருக்கு ரெண்டு மூணு புடவையை மட்டும் தான் எடுத்துட்டு போய் இருக்க. அதுவும் உங்க அப்பா வாங்கி தந்ததை மட்டும்... அப்படி தானே? என் கூட கோபம்னா நான் வாங்கி தந்ததெல்லாம் வேண் டாம்னு தூக்கி போட்டுடுவியா?"

"..............."

"நீ தூக்கி போட நினைச்சது நான் வாங்கி தந்த பொருளை மட்டுமா இல்லை என்னையும் சேர்த்தா?"

"என்ன மாமா இப்படி கேட்கிறீங்க?"

"நீ செஞ்சதுக்கு வேற எப்படி நான் அர்த்தம் எடுத் துக்கிறது? நான் அடிக்க கை ஓங்கினதுக்கு கோபம் வந்து நீ என்னை திருப்பி ரெண்டு அடி அடிச்சிருந்தால் கூட நான் ஃபீல் பண்ணி இருக்க மாட்டேன். நான் செஞ்சதுக்கு தண்டனையா அதை சந்தோஷமா ஏத்துக்கிட்டு இருப்பேன்."

"ஆனால் நீ என்ன செஞ்ச? நீயும் வேணாம்... உன் வீடும் வேணாம்... நீ வாங்கி குடுத்த எதுவும் வேண் டாம்னு கிளம்பி போய் இருக்க. லேப் டாப் கொண்டு போகலை. அதை கூட விட்டுடலாம். அம்மா வீட்டுல உனக்கு பொழுது ஈஸியா போயிடும். லேப் டாப்கான தேவை உனக்கு இருக்காதுன்னு நினைச்சு நீ இங்கே விட்டுட்டு போனதா வச்சுக்கலாம்."

"டெபிட் கார்டு கொண்டு போகலை. பணம் அப்ப டியே இருக்கு. அப்போ உனக்கு விக்ரம் வேண்டாம். அப்படி தானே?"

அவன் சொல்வதெல்லாம் சரி தான். அவன் மேல உள்ள கோபத்தில் தான் அவன் சம்பந்தப்பட்ட எதையும் அவள் ஊருக்கு எடுத்து வரவில்லை.

அதனால் அவனுடைய குற்ற சாட்டிற்கு பதில் பேச முடியாமல் அமைதி காத்தாள்.

"வலிச்சது கயல். ரொம்ப ரொம்ப வலிச்சது. உன்னோட இந்த உதாசீனம் என்னை அதிகமா காயப்படுத்துச்சு. இத்தனை நாளும் எங்க அம்மா என்னை ஒதுக்கி வச் சாங்க. அந்த வலி எனக்கு பழகிடுச்சு. இப்போ அவங்க நெருங்கி வராங்க. ஆனா நீ விலகி போகிற போலன்னு தோணுச்சு." என்று சொன்ன பொழுது துக்கத்தால் அவனது குரல் தடைபட்டது.

''ஐயோ மாமா! அப்படி எல்லாம் இல்லை. நான் லூசு மாதிரி எதையோ செஞ்சேன். சாரி மாமா! சாரி மாமா!'' என்று அவள் பரிதவித்தாள்.

''நான் கொஞ்ச நேரம் கழிச்சு பேசுறேன் கயல்.'' என்றவன் அழைப்பை துண்டித்து விட்டான்.

அந்த போனையே வெறித்துப் பார்த்து கொண்டு அமர்ந்திருந்தாள். அவனது வருத்தம் தோய்ந்த குரல் அவளை ரொம்பவே பாதித்தது.

அவர் சம்பந்தப்பட்ட எதுவும் வேண்டாம்னு நினைச் சேன். புடவை, பணம், நகைன்னு எல்லாத்தையும் அங்கேயே விட்டுட்டு வந்தேன். கழுத்திலே தொங்குதே இந்த தாலி. இது அவர் சம்பந்தப்பட்டது இல்லையா? இதை வேண்டாம்னு என்னால ஒதுக்கிட முடியுமா?

எப்படி லூசு மாதிரி அப்படி யோசிச்சேன்? சின்ன சண்டைக்கு எல்லாம் இப்படி நான் கிளம்பி வரலாமா!

கல்யாணமான புதுசில் அவரை பார்த்து நான் பயந்ததுண்டு. அவரை பத்தி எதுவும் தெரியாமல் இருந்த போது கூட அங்கே தைரியமாய் இருந்து நிலமையை சமாளிச்ச கயல் எங்கே போனாள்?

இப்போ அவரை பத்தி எனக்கு நல்லாவே தெரியும். அவரை பார்த்து எனக்கு எந்த பயமும் கிடையாது. அப்படி இருந்தும் எதுக்கு அங்கே இருந்து ஓடி வந்தேன்? அப்படி என்ன வீம்பு? நான் என்ன சின்னக் குழந்தையா? என்று நினைத்து வருந்தினாள்.

சூனியத்தை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவளது கன்னங்களை தாண்டி கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அவளது கண்ணீரை கண்ட அழகர் தன் தாயிடம் சென்று விவரம் தெரிவித்து அவரை கூட்டி வந்தான்.

"கயல்! என்னடி ஆச்சு? எதுக்கு அழுகிறே? மாப்பிள்ளை ரொம்ப திட்டிட்டாரா?" என்று தங்கம் கேட்டார்.

மாப்பிள்ளை திட்டி இவள் அழுவதா இருந்தால் நேத்தே இல்ல இவள் அழுதிருக்கணும். என்று அங்கே வந்த கணேசன் பதில் சொன்னார்.

தன் கன்னத்தை துடைத்துக் கொண்டே அவர்கள் புறம் திரும்பிய கயல், "அவர் என்னை திட்டலைம்மா. நான் என்ன தப்பு செஞ்சேன்னு எடுத்து சொன்னார். அவ்வளவு தான். நேத்து ஆபீஸ்ல வச்சு பேசினதால எங்க சண்டையை பத்தி நாங்க பெருசா பேசிக்கலை. இப்போ வீட்டுல இருந்து கூப்பிட்டார். அதான்... வேற ஒண்ணும் இல்லை." என்றவள் எழுந்து சென்று விட்டாள்.

அவள் குளித்து முடித்து வரவும் விக்ரம் அவளை மீண்டும் அழைத்தான்.

''சாரி கயல்.''

''சாரி மாமா.'' என இருவரும் ஒரே நேரத்தில் கூறி னார்கள்.

"தனியா விட்டுட்டு ஊருக்கு போறோம். எதையாச்சும் சொல்லி உன்னை வருத்தப்பட வைக்கக் கூடாதுன்னு நினைச்சேன். ஆனால் என்னையும் அறியாமல் வந்துடுச்சு. சாரி.''

''என்னோட தப்பை நீங்க எடுத்து சொன்னால் தானே எனக்கு தெரியும். சரி அதை விடுங்க. அப்போ என்ன சொல்ல வந்தீங்க. அதை இப்ப சொல்லுங்க.''

''ஒரு பெட்டியில் உன்னோட லேப் டாப் அப்புறம் கொஞ்ச வை எல்லாம் வச்சு டிராவல்ஸ் மூலமா உங்க அப்பா ருக்கு அனுப்பி வைக்கிறேன். மாமாவை போய் டுத்துக்க சொல்லு.''

''சரி அப்பாகிட்ட சொல்லிடுறேன்.''

''உன்னோட டெபிட் கார்டும் கொஞ்ச பணமும் னியா கொரியர் பண்ணுறேன். கொரியர்ல பணம் அனுப் றது ரிஸ்க். அதனால உன் கை செலவுக்கு கொஞ்சம் ட்டும் அனுப்புறேன். அப்புறமா நீ போய் ஏ.டி.எம்ல டுத்துக்கோ.''

''ம்ம் ஓகே.''

''முடிஞ்ச அளவுக்கு நீயே செலவு பண்ணு. உங்க அப்பாகிட்ட பணம் கேட்காதே. என்ன புரிஞ்சுதா?''

''ம்ம் புரியுது.''

அப்புறமா வரும் ஞாயிற்றுக் கிழமை அந்த வீட்டுல போய் பால் காய்ச்சிடுங்க. அன்னைக்கு நல்ல நாள்னு அப்பா சொன்னார். அம்மாவும் அப்பாவும் திருச்சியில் இருந்து வருவாங்க. நீங்க நாலு பேரும் அவங்களோட போய் சாமி கும்பிட்டு பாலை மட்டும் காய்ச்சி குடிச் சுட்டு வந்துடுங்க. நான் கொஞ்ச நேரம் கழிச்சு மாமா அத்தை கிட்ட இது பத்தி பேசிடுறேன்.''

''சரிங்க மாமா.''

''அப்புறம் நீ உனக்கு புது சேலை ஒண்ணு வாங் கிக்கோ. பால் காய்ச்சுற அன்னைக்கு கட்டிக்கோ.''

''எனக்கு புதுசு வேண்டாம். நீங்களே என் பக்கத்திலே இருக்கப் போவதில்லை.''

"நீ உனக்கு வாங்கினால் தான் அதை சாக்கா வச்சு அழகருக்கு ஒரு டிரஸ் வாங்கி தர முடியும்."

"அப்போ அப்பா அம்மாவுக்கு?"

"அவங்களுக்கு நாம புதுசு வாங்கி குடுத்தால் புது வீடு வாங்கினதுக்கு கிஃப்ட் தரேன்னு கிளம்பிடுவாங்க."

அவன் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்வதை கண்டவளுக்கு பெருமையாக இருந்தது.

"ஐ லவ் யூ மாமா."

"பக்கத்துல யாரும் இல்லையா?"

"வீட்டுலயே யாரும் இல்லை."

"அடிப்பாவி. எப்போ வந்து சொல்லுறே? போனை எடுத்ததும் சொல்ல மாட்டியா. எங்கே உன் மாமாவை கொஞ்சம் ஸ்ட்ராங்கா கவனி பார்ப்போம்."

"ப்ச்.." என்று அவள் சலித்துக் கொண்டாள்.

"ஓய்! என்ன பண்ணுறே? உன்னை இச் கேட்டால் நீ ப்ச்னு சலிச்சுக்கிறே."

"ஒழுங்கா அங்கேயே இருந்திருந்தால் நீங்க ஊருக்கு போகும் முன்னாடி நல்லா ஸ்ட்ராங்கா குடுத்து அதை விட டபுள் ஸ்ட்ராங்கா வாங்கி இருக்கலாம். இப்போ பாருங்க ஒண்ணுத்துக்கும் வழி இல்லை."

"போனதை பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை. போனை கட் பண்ணிட்டு வாட்ஸ் அப்ல வீடியோ கால் பண்ணுறேன்." என்றவன் அழைப்பை துண்டித்து விட்டு வாட்ஸ் அப் மூலம் அழைத்தான்.

அவள் அழைப்பை ஏற்றதும் மனைவியின் முகம் பார்த்தவன், மூணு நாளா என்னை பார்க்காமல், என் கூட

பேசாமல் கருவாடு மாதிரி காஞ்சு போய் இருப்பேன்னு பார்த்தால் தள தளன்னு தக்காளி மாதிரி இருக்கே!'' என்று கண்ணடித்துக் கொண்டே கூறினான்.

வழக்கம் போல் அவனுக்கு பதில் சொல்ல முடியாமல் முறைத்து பார்த்தாள். அவன் தனது உதடுகளை குவித்து அவளுக்கு முத்தம் ஒன்றை கொடுத்தான்.

''இப்போ எதுக்கு முறைக்கிற? நிஜமாவே உன் முகத்திலே தனி தேஜஸ் தெரியுது. எங்க மாமியார் உன்னை செமையா கவனிக்கிறாங்களா?''

''என்ன மாமா இப்படி சொல்லுறீங்க? உங்களை பிரிஞ்சு நான் பசலை நோயில் வாடி தெரியலையா? நிஜமாவே நீங்க இல்லாமல் எனக்கு சாப்பிடவே பிடிக்கலை தெரியுமா?'' என்று பாவமாய் சொன்னாள்.

''நான் இல்லைன்னு சாப்பிடாமல் இருக்க கூடாது கயல். அப்புறமா நான் அமெரிக்காவில் இருந்து வந்ததும் உன்னை பார்த்துட்டு இது என் மக்கு கயல் இல்லை. வேற யாரோன்னு சொல்லி உன்னை உங்க வீட்டுலயே விட்டுட்டு போயிடுவேன்.''

''ம்ம்ம் போவீங்க போவீங்க.''

''ஜோக்கடிச்சது போதும். நல்லா சாப்பிட்டு சந்தோஷமா இரு. நான் இந்தியா வந்ததுக்கு அப்புறமா உன்னை உங்க ஊர் பக்கம் எட்டி பார்க்க விட மாட்டேன். அதனால இப்பவே நல்லா என்ஜாய் பண்ணிக்கோ.''

அவள் சம்மதமாய் தலை அசைத்தாள். மேலும் சிறிது நேரம் பேசி அவளை சமாதானம் செய்து அழைப்பை துண்டித்தான்.

விக்ரம் தான் வாக்களித்தபடி கணேசன் மற்றும் தங்கத் திடம் புது வீட்டில் பால் காய்ச்சுவது குறித்துப் பேசினான்.

அலைபேசியிலேயே அனைவரிடமும் விடைபெற்று அமெரிக்காவிற்கு சென்றான்.

## 36

ஞாயிறு காலையில் நடராஜனும் சிவகாமியும் மதுரை வந்து இறங்கினார்கள். கயல்விழியின் வீட்டில் காலை உணவை உண்ட பின் அனைவரும் கிளம்பி புது வீட்டிற்கு சென்றனர்.

குறித்த நேரத்தில் கயல்விழி தன் மாமியாரின் அருகில் இருந்து பாலை காய்ச்சினாள்.

பால் பொங்கப் பொங்க அந்த வாடை அவளை என்னவோ செய்தது. வெளியே சொல்ல முடியாமல் எப்படியோ சமாளித்து கொண்டு நின்றாள்.

கிழக்கு நோக்கி பால் பொங்கியது. நல்ல சகுனம் என்று சிவகாமி கூறினார்.

பால் பொங்கியதும் அப்பாடா என்று ஆசுவாசப்பட்டுக் கொண்டு கயல்விழி அந்த இடம் விட்டு நகர்ந்தாள்.

தங்கமும் சிவகாமியும் பாலில் கல்கண்டு போட்டு ஆற்றி டம்ளரில் ஊற்றி அனைவருக்கும் கொடுத் தனர்.

கயல்விழிக்கு அதை குடிக்கும் மனநிலை இல்லை. ஆனால் வேண்டாம் என்று சொன்னால் தப்பாகி விடுமோ என நினைத்தவள் அதை வாங்கிப் பருகினாள்.

பருகப் பருக உள்ளிருந்த அனைத்தும் வெளியே வந்துவிடுவேன் என்று பயங் காட்டியது. அடுத்த சில நொடிகளில் அது உண்மையானது.

அவள் குமட்டிக் கொண்டு வாந்தி எடுக்கவும் இரு தாய்மார்களும் அவள் பின்னே சென்றனர்.

இவள் வாந்தி எடுத்ததை சம்பந்தி எதுவும் அபசகுனம்னு நினைச்சுக்குவாங்களோ என்று கணேசன் வருத்தப்பட்டார்.

சிவகாமி மலர்ந்த முகத்துடன் அவர்கள் அருகே வந்து, "நல்ல செய்தியா இருக்கும்னு சந்தேகப்படுறோம். கயல் அவங்க அம்மா கூட ஹாஸ்பிட்டலுக்கு போய் செக் அப் பண்ணிட்டு வரட்டும்." என்றார்.

"அட! அப்படிப் போகுதா விஷயம். எனக்கு ஏன் சட்னு அது தோணலை. சம்பந்திகள் முன்னாடி எல்லாம் சரியா நடக்கணும் அப்படிங்கிற பயம் தான் என்னை சிந்திக்க விடலை போல. கடவுளே! நல்ல செய்தியா இருக்கணும்" என்று கணேசன் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்.

"அழகர்! அம்மாவுக்கு துணையா நீ ஹாஸ்பிட்டல் போயிட்டு வா."

"சரிப்பா. நான் போய் ஆட்டோ கூட்டிட்டு வரேன்." என்று அழகர் சொல்லவும்,

"நாங்க வந்த டாக்ஸி சும்மா தானே நிக்குது. அதுல போயிட்டு வாங்க." என்று சிவகாமி முடித்துவிட்டார்.

அவர்கள் மருத்துவமனைக்கு சென்று அவளது கர்ப்பத்தை உறுதி செய்துவிட்டு வந்தனர். அனைவரும் சந்தோஷக் கடலில் திளைத்தனர்.

சிவகாமி தன் மருமகளுக்கு தன் கையால் திருஷ்டி கழித்தார்.

"போய் விக்ரம்கிட்ட பேசு கயல்." என்று நடராஜன் சொன்னதும்,

"நான் வீட்டுக்கு போய் பேசட்டுமா?" என்று அவள் தயங்கி கொண்டே கேட்டாள்.

அவள் தன் கணவனுடன் தனிமையில் பேச விரும்பு கிறாள் என்பதை புரிந்து கொண்டவர்கள் அவளை அழ கருடன் காரில் அவளது தாய் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

அந்த சந்தோஷ செய்தியை எந்த வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தலாம் என யோசித்தாள்.

'நான் அம்மாவாக போறேன்னு சொல்லலாமா? நீங்க அப்பாவாகப் போறீங்கன்னு சொல்லலாமா? இல்ல வேற எப்படி அவர்கிட்ட சொல்லலாம்' என்று சிந்தித்துக் கொண்டே சென்றாள்.

அவர்களது வீடு வந்தது. கார் நின்றதும் அவள் இறங்கி வீட்டிற்குள் சென்றாள். வந்த காரிலேயே அழகர் திரும்பி சென்று விட்டான்.

'இந்நேரம் அவருக்கு என்ன மணி இருக்கும்? எத்தனை மணியா இருந்தால் என்ன... தூங்கிக்கிட்டு இருந்தாலும் பரவாயில்லை. எழுப்பிய தீருவேன். அவருக்கு இப்போ சனிக்கிழமை ராத்திரி தானே? நாளைக்கு பகலில் தூங் கிக்கட்டும்' என தனக்குள் தீர்மானித்துக் கொண்டவள் கணவனுக்கு வாட்ஸ் அப்ல் அழைத்தாள்.

மணி அடித்து ஓய்ந்தது. அவன் எடுக்கவே இல்லை. மீண்டும் ஒரு முறை அழைத்தாள். இம்முறையும் அவன் எடுக்கவில்லை என்றதும் கடுப்பானாள்.

'பாருடா குட்டி உங்க அப்பாவை. சரியான தூங்கு மூஞ்சி. நீயும் நானும் அவர்கிட்ட பேச எவ்வளவு ஆர்வமா போன் பண்ணுறோம். இழுத்து போர்த்தி தூங்குறார் போல.' என்று திட்டிக் கொண்டே மீண்டும் ஒரு முறை அழைத்தாள்.

அப்பொழுதும் அவன் எடுக்கவில்லை என்றதும் ஏமாற்றமாக உணர்ந்தாள்.

எந்த ஒரு பெண்ணும் தன்னுடைய கர்ப்பத்தை முதலில் தன் கணவனுக்கு தான் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புவாள். கயல்விழியும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையால் இரு வீட்டை சேர்ந் தவர்களுக்கும் விஷயம் முதலில் தெரிவிக்கப்பட்டு விட்டது.

முதலில் தெரிந்து கொள்ள வேண்டியவனையோ தொடர்பு கொள்ளவே முடியவில்லை என்றதும் அவளுக்கு ஏமாற்றத்தில் அழுகை வரப் பார்த்தது.

அவளது உதடுகள் அழுகையில் பிதுங்கின நொடி விக்ரம் அவளை வாட்ஸ் அப் வீடியோ கால் மூலமாக அழைத்தான். அந்த அழைப்பை அவள் ஏற்றதும் அவன் மடமடவென்று பேச ஆரம்பித்தான்.

''சாரிடா கயல். போன் சைலன்ட்டில் இருந்திருக்கு. பால் காய்ச்சி முடிச்சுட்டீங்களான்னு கேட்கலாம்னு நினைச்சு பேசுறதுக்கு போனை இப்போ தான் கையிலே எடுத்தேன். நீ மூணு தடவை கூப்பிட்டு இருக்க போல. என்ன விஷயம்?''

தன் கணவனிடம் விஷயத்தை எப்படி சொல்ல வேண்டும் என்று யோசித்து வைத்தது எல்லாம் அவளுக்கு மறந்து போனது.

சற்று முன் ஏற்பட்ட ஏமாற்றமும் அந்த சந்தோஷ செய்தியை அவனிடம் பகிர்வதற்கு அவன் அருகில் இல்லையே என்ற ஏக்கமும் அவளை பெரிதாக தாக்கின.

அதனால் அவளுக்கு அவன் முகத்தை பார்த்ததும் அழுகை தான் வந்தது.

''என்ன ஆச்சு கயல்? ஏன் அழறே?'' என்று அவன் அங்கே பதறினான்.

''ஏதாச்சும் சொல்லு கயல்.''

இவளுக்கு வார்த்தை வருவேனா என்றது. ஒன்றுமில்லை என்பது போல் தன் தலையை இட வலமாக ஆட்டியவளின் அழுகை மட்டும் நிற்கவில்லை.

''சொல்லுடா. நீ என்னன்னு சொன்னால் தானே எனக்கு விஷயம் தெரியும். உன்னை யாராச்சும் ஏதாச்சும் சொன்னாங்களா? உங்க அம்மா இல்லை எங்கம்மா?'' என்று அவன் அடுக்க,

இவர் பாட்டுக்கு இங்கே சண்டை நடந்துச்சுன்னு முடிவு கட்டிடுவார் போல! என நினைத்தவள் அந்த அலைபேசியை கீழே இறக்கி தன் வயிற்றின் முன் நிறுத்தினாள்.

''கயல்! போனை உயர்த்தி பிடி. உன் முகத்தை காட்டு!''

அவள் அலைபேசியை தன் முகம் தெரியுமாறு உயர்த்திப் பிடிக்கவில்லை. அவன் சொல்வதை அவள் கேட்கவில்லை என்றதும் அவன் கடுப்பானான்.

''கயல்! நான் சொல்லுறதை கேட்க மாட்டியா? போனை மேலே தூக்கி பிடி!'' என்று சற்று அதட்டலாக பேசினான்.

இவருக்கு நான் சொல்ல வருவது புரியலை என்று உணர்ந்தவள் தன் வலது கையை தன் வயிற்றில் வைத்து காண்பித்தாள்.

அந்த நொடி விக்ரமிற்கு அவள் சொல்ல வருவது புரிந்தது.

''கயல்! என் மக்கு... நிஜமாவாடா? இது நிஜமா? போனை தூக்கி காட்டு. நான் உன்னை பார்க்கணும்.'' என்றதும் அவள் அலைபேசியை தூக்கி பிடித்து தன் முகத்தை காட்டினாள்.

''நமக்கு பேபி வரப் போகுதாடா?'' என்று அவன் ஆர்வமும் சந்தோஷமுமாய் வினவ,

அவள் புன்னகையும் கண்ணீருமாய் தன் தலையை ஆட்டினாள்.

தொடர் முத்தங்களை அந்த அலைபேசி மூலமாகவே அனுப்பியவன், ''இந்த மாதிரி நேரத்திலே நீ அழக் கூடாது கயல். கண்ணை துடைச்சிக்கோ. நம்மளோட பேபியை நாம சந்தோஷமா வெல்கம் பண்ண வேண்டாமா? போய் முகம் கழுவிட்டு வா. போ.'' என்றான்.

''நீங்க போனை கட் பண்ணிடக் கூடாது.''

''இப்போ போய் எப்படிடா நான் கட் பண்ணுவேன்? நான் லைனில் வெயிட் பண்ணுறேன். நீ போய் முகம் கழுவிட்டு வா. ''

அந்த அலைபேசியை தூக்கிக் கொண்டு கொல்லைப் புறம் சென்றாள். அங்கே இருந்த தொட்டியின் மூடி மேல் அலைபேசியை வைத்தாள். அப்பொழுது அவளுக்கு குமட்டிக் கொண்டு வாந்தி வந்தது.

அவள் வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டு அங்கே அவனுக்கு வருத்தமாக இருந்தது. இரு நிமிடங்கள் ஆகியும் அவள் திரும்ப வரவில்லை என்றதும் பதட்டமானான்.

மருத்துவமனையில் இருந்து திரும்பும் போது தங்கம் தன் மகளுக்கு பழச்சாறு வாங்கி பருக கொடுத்திருந்தார். அது தான் இப்போது வெளியே வந்து கொண்டிருக்கிறது.

"கயல்! என்ன ஆச்சு? உன் பக்கத்துல யாரும் இல்லையா? ஹேய் மக்கு! என்ன ஆச்சு? இங்கே வா. இல்லைன்னா நான் வேற யாருக்காவது போன் பண்ணட்டுமா? கயல்!" என்று அவள் பெயரை சொல்லி கூப்பிட்டுக் கொண்டே இருந்தான்.

அவள் சோர்வாய் அவன் முன் வந்து நின்றாள்.

"வீட்டுல யாரும் இல்லையாடா?"

"நான் உங்ககிட்ட பேசிட்டு வரேன்னு சொல்லி இங்கே வந்தேன். எல்லோரும் அந்த வீட்டுல இருக்காங்க." என்று மிகவும் சோர்வாய் பதில் சொன்னாள்.

"ரொம்ப டயர்டா இருந்தால் போய் படுக்கிறியா? நான் அப்புறமா பேசட்டுமா?"

"போனை கட் பண்ணாதீங்க." என்று சொல்லி முறைத்தவள் படுக்கை அறை நோக்கி நடந்தாள்.

"சரிடா நான் போனை வைக்கலை. நீ பதில் சொல்ல சிரமப்படுறியேன்னு தான் சொன்னேன்."

"நீங்க ஏதாச்சும் பேசுங்க. நான் கேட்கிறேன்."

"நான் என்ன கயல்விழி எஃப்.எம்மா? நானா தனியா பேசிக்கிட்டு இருக்க?" என்று அந்த சூழ்நிலையிலும் அவளை வம்பிழுத்தான்.

ஆனால் அவள் கேட்டுக் கொண்டபடி அவளை மாமாம் இல்லை என்று மட்டும் பதில் சொல்ல வைத்து அவன் பேசிக் கொண்டு தான் இருந்தான்.

அவனை பார்த்ததாலும் அவன் குரலை கேட்டுக் கொண்டு இருந்ததாலும் அவளுக்குள் ஒரு திடம் உருவானதை அவள் மறுப்பதற்கில்லை.

"மாமா! நான் கொஞ்ச நேரம் படுக்கிறேன். நீங்களும் தூங்குங்க." என்று அவள் சொன்ன பின்பே அழைப்பை துண்டித்தான்.

தன்னுடைய குழந்தை உருவான சந்தோஷத்தில் அந்த நடுஜாமத்திலும் அவன் தூக்கத்தை தொலைத்தான். அதே குழந்தை தன் தாயை படுத்திய பாட்டில் நடுப்பகல் பொழுதில் கூட கயல்விழி அயர்ந்து உறங்க ஆரம்பித்தாள்.

சிவகாமியும் நடராஜனும் ஊருக்கு கிளம்பும் முன் ஒரு பழக்கடையையே கயல்விழி வீட்டில் கொண்டு வந்து இறக்கி விட்டு சென்றனர்.

எதையும் உள்ளிருக்கும் சிசு ஏற்க மறுத்தது. சாப்பிடும் அனைத்தையும் வெளியே தள்ளி அவளை படுத்தி வைத்தது.

கயல்விழி மசக்கையில் பாதி வாடினாள் என்றால் தன் கணவனை பார்க்காததால் ஏற்பட்ட பசலையில் மீது வாடினாள் என்று தான் சொல்ல வேண்டும்.

முன்னதை விட பின்னது தான் அதிகம். அவனும் தன்னால் முடிந்த மட்டும் அவளிடம் பேசிக் கொண்டு தான் இருந்தான். அவளை கிண்டல் பண்ணி அவளிடம்

இருந்து முறைப்பை பரிசாக பெற்றுக் கொண்டு தான் இருந்தான்.

சென்னையில் அவனோடு அவள் இருப்பது போல் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க தன்னால் முடிந்த அளவு முயற்சித்தான்.

ஆனால் என்றுமே நிழலும் நிஜமும் ஒன்றாகிவிடாது அல்லவா?

அதனால் விக்ரமின் வருகைக்காக அவள் ஆவலோடு காத்திருக்க ஆரம்பித்தாள்.

பத்து நாட்களுக்கு ஒரு முறை சிவகாமியும் நடராஜனும் மதுரைக்கு வந்து தங்கள் மருமகளை பார்த்து விட்டு சென்றனர்.

கயல்விழியின் உடல் எடை இறங்கி கொண்டே இருந்தது. வாந்தி நின்றதும் சரியாகி விடும் என்று மருத்துவர் ஆறுதலளித்தார். தங்கமும் தன்னால் முடிந்த அளவிற்கு மகளை கவனித்துக் கொண்டார்.

சென்னையில் இருந்து கிளம்பி சென்று நாற்பத்தி ஐந்து நாட்கள் கழித்து விக்ரம் இந்தியாவிற்கு திரும்பி வந்தான்.

சென்னை வந்தும் அவனால் மதுரைக்கு வர முடிய வில்லை. அமெரிக்காவில் செய்து முடித்துவிட்டு வந்த வேலையின் தொடர்ச்சி இங்கே அவனை நகர வி வில்லை.

கணவனுக்காக காத்திருக்கும் பொறுமை கயல் விழிக்கு சுத்தமாக இல்லை. அவள் தன் தந்தையிடம் சென்று பேசினாள்.

''அப்பா! நான் சென்னைக்கு போகணும்.''

''மாப்பிள்ளை வரேன்னு சொல்லி இருக்காரே கயல்.''

''அவர் எப்போ வந்து என்னை பார்க்கிறது? நான் அவரை பார்க்கணும். என்னை டிரைன் ஏத்தி விடுங்க.''

''நீ ரயிலில் அவ்வளவு தூரம் போகலாமான்னு தெரிய லையே!'' என்று தங்கம் இடைபுகுந்தார்.

''நான் ஏற்கனவே டாக்டர்கிட்ட கேட்டுட்டேன். மூணு மாசம் ஆச்சுன்னா பிரயாணம் பண்ணலாம்னு சொன் னாங்க. அதான் எனக்கு மூணு மாசம் ஆகப் போகுதே. நான் கிளம்புறேன்.''

''சரிம்மா. மாப்பிள்ளைகிட்ட ஒரு வார்த்தை கேட் டுட்டு கிளம்பலாம்.''

''அவர்கிட்ட ஒண்ணும் கேட்க வேண்டாம். எனக்கு அவரை பார்க்கணும்.''

''நீ இப்படி தான் சொல்லுவேன்னு நான் எதிர்பார்த் தேன். அதனால தான் நம்ம ரெண்டு பேருக்கும் பாண் டியன் எக்ஸ்பிரஸில் டிக்கெட் போட்டு வச்சிருக்கேன்.''

''நீங்களும் என் கூட வரீங்களா? எதுக்குப்பா கஷ்டப் படுறீங்க? இங்கே நீங்க டிரைன் ஏத்திவிட்டால் நான் சென்னை போய் இறங்கிட மாட்டேனா?''

''இந்த நிலமையில் உன்னை தனியா எல்லாம் அனுப்ப முடியாது கயல். வழியிலே உனக்கு ஏதாச்சும் சிரமம் ஏற்பட்டுச்சுன்னா... மாப்பிள்ளை என்னை தானே கேள்வி கேட்பார்.''

அவர்கள் அன்று இரவே சென்னைக்கு கிளம்பினார்கள். காலையில் சென்னை வந்து இறங்கி ஆட்டோவில் வீடு சென்றார்கள்.

கயல்விழி அழைப்பு மணியை கூட ஒலிக்க விடாமல் தன்னிடம் உள்ள சாவியை கொண்டு வீட்டை திறந்தாள். பின்னே வரும் தந்தையை கூட கண்டு கொள்ளாமல் தங்களது படுக்கை அறையை நோக்கி விரைந்தாள்.

அந்தோ பரிதாபம்! விக்ரம் அங்கே இல்லை. கண வனை காணவில்லை என்றதும் கடுப்பானாள்.

அதுக்குள்ளே ஆபீஸ் போயிட்டாரா? இல்லை ஆபீஸ் லயே தூங்கிட்டாரா? இவருக்கு சர்ப்பரைஸ் கொடுக்க லாம்னு நான் நினைச்சா... இவர் எனக்கு அல்வா குடுக்கிறார்? என்று திட்டிக் கொண்டாள்.

அப்பொழுது அவளது கைப்பேசிக்கு ஒரு குறுஞ் செய்தி வந்தது. விக்ரம் தான் அனுப்பி இருந்தான்.

ஆபீஸ்ல கொஞ்சம் வேலையா இருக்கேன். இன்னும் கொஞ்ச நேரத்துல வீட்டுக்கு போயிடுவேன். அப்புறமா உன்கிட்ட பேசுறேன் என்று அது சேதி சொன்னது.

வழக்கமாய் அவளுக்கு பேசும் நேரம் இன்று அவ ளுடன் பேச முடியாது என்பதால் அவன் குறுஞ்செய்தி அனுப்பி இருந்தான்.

அப்பாடா! இன்னும் கொஞ்ச நேரத்துல வீட்டுக்கு வந்துடுவார் என அவள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

தங்கள் அறையில் இருந்து வெளியே வந்தவள், அப்பா! அவர் நேத்து நைட் வீட்டுக்கு வரலை. இன்னும் கொஞ்ச நேரத்துல வரேன்னு மெசேஜ் அனுப்பி இருக் கார். என்றாள்.

''நான் போய் நம்ம எல்லோருக்கும் சாப்பாடு வாங் கிட்டு வரட்டுமா கயல்?''

"வேண்டாம்பா. அம்மா இட்லி மாவு குடுத்து விட்டு இருக்காங்க. நீங்க போய் கொஞ்சம் காய் மட்டும் வாங்கிட்டு வரீங்களா? நான் வீட்டுல சமைக்கிறேன். அவர் வீட்டு சாப்பாடு சாப்பிட்டு ரொம்ப நாள் ஆச்சு."

"நான் வாங்கிட்டு வரேன்மா. அது பிரச்சனை இல்லை. உன்னால இப்போ செய்ய முடியுமா? உனக்கு டயர்டா இல்லையா?"

"இல்லைப்பா. நான் செஞ்சுடுவேன்."

தன் கணவனுக்காக அவள் செய்ய விரும்புவதை கணேசன் புரிந்து கொண்டார். அதனால் வேறு எதையும் சொல்லி அவளது ஆசைக்கு தடை விதிக்காமல் அவள் சொன்னதை செய்தார்.

அவள் சாம்பார் வைத்து இட்லி ஊற்றி வைத்தாள். அவள் குளித்து முடித்த பொழுது தான் விக்ரம் வீட்டிற்குள் வந்தான்.

இவர்கள் இருவரும் வீட்டில் இருப்பது தெரியாமல் தன் சாவியால் வீட்டை திறந்து கொண்டு வந்தான். கணேசன் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து அன்றைய செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்தார்.

"மாமா! நீங்க எப்போ வந்தீங்க?" கயல் என்கிட்ட சொல்லவே இல்லை. என்று ஆச்சரியமாய் வினவினான்.

"இப்போ தான் வந்தேன். ஆபீஸ்லயே தூங்கிட்டீங்களா மாப்பிள்ளை?"

"இல்ல மாமா. இனிமேல் தான் தூங்கணும்."

"என்னது இனிமேல் தான் தூங்கப் போறீங்களா? இப்படி இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும் மாப்பிள்ளை."

''ஆபீஸ் வேலையா வந்தீங்களா? நீங்க மட்டும் தான் வந்தீங்களா? இல்ல கயலும் கூட வந்திருக்காளா?''

''ஆபீஸ் வேலை எதுவும் இல்லை மாப்பிள்ளை. கயலை கொண்டு விட தான் வந்தேன்.''

அவன் தன்னுடைய பைகளை அங்கே கீழே வைத்து விட்டு, ''கயல் ரூமிலே இருக்காளா?'' என்ற கேள்வியோடு காணாமல் போனான்.

சற்று முன் தன் மகள் தன் கணவனை காண விரைந்த வேகத்தை விட அதிக வேகத்தில் சென்ற தன் மாப்பிள்ளையை கண்டு புன்னகைத்துக் கொண்டே கணேசன் தனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அறைக்குள் சென்று மறைந்தார்.

கணவனின் குரலை கேட்ட கயல் அவசர அவசரமாய் புடவையை கட்டி முடித்து வெளியேற நினைக்க அதற்குள் அவனே அறைக்குள் நுழைந்திருந்தான்.

அவளருகே வந்தவன் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான். பின் அவளை விடுவித்து முகமெங்கும் முத்தங்களை பதிக்க ஆரம்பித்தான்.

பின் அவளை மீண்டும் அணைத்தவன், ''ஐ மிஸ் யூ சோ மச் கயல். என்னால முடியலைடா. சுத்தமா முடியலை. நான் இப்படி சொல்லணும்னு தானே எதிர்பார்த்தே. இதுக்காக கடவுள்கிட்ட வேண்டினியா என்ன? அதான் உன்னை பார்க்க விடாமல் என்னை அமெரிக்காவுக்கு பேக் பண்ணி அனுப்பி வச்சுட்டாரா?'' என்று கேட்டு அவளை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டான்.

''இதை சொல்லுறதுக்காக நீங்க ஒண்ணும் என்னை பிரிய வேண்டாம். என்னாலயும் உங்களைப் பார்க்காமல்

ஒரு வேலையும் செய்ய முடியலை. பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருந்துச்சு தெரியுமா?'' என்றவள் அவனோடு ஒண்டிக் கொண்டாள்.

அவன் தனது அணைப்பை விலக்கி அவளது முகத்தை நிமிர்த்தி பார்த்தவன் ஒரு முறுவலுடன் மேலும் சில முத்திரைகளை பதித்து விட்டு மீண்டும் அவளை தன்னோடு அணைத்துக் கொண்டான்.

இருவருமே அதற்கு மேல் எதையும் பேச முற்படவில்லை. இத்தனை நாள் தவிப்பையும் அந்த அணைப்பு போக்கியது என்று தான் சொல்ல வேண்டும். சில நிமிடங்கள் அந்த அணைப்பிலேயே கட்டுண்டு இருந்தனர்.

அதன் பின்பே அவன் குனிந்து அவளது வயிற்றில் முத்தம் பதித்து, ''பேபி! அப்பா வந்திருக்கேன்டா.'' என்று தன் குழந்தையிடம் கொஞ்சினான்.

''மாமா! நீங்க மட்டும் வந்ததும் என்னை கொஞ்சாமல் உங்க பிள்ளையை கொஞ்சி இருந்தீங்க... உங்களை உண்டு இல்லைன்னு ஆக்கி இருப்பேன். தப்பிச்சுட்டீங்க.''

''நீ என் மக்கு. உன்னை கொஞ்சாமல் எப்படிடா நான் நம்ம பேபியை கொஞ்சுவேன்.'' என்று தன் தலையை மட்டும் நிமிர்த்தி அவளிடம் சொன்னவன்,

மீண்டும் வயிற்றை நோக்கி குனிந்து, ''பேபி! நான் சும்மா சொன்னேன். இல்லைன்னா அவள் உன்கிட்ட கோபிச்சுக்கிட்டு உனக்கு சரியா சாப்பாடு போட மாட்டாள். நீ வெளியே வரும் வரைக்கும் அம்மா தயவு நமக்கு ரொம்ப தேவைடா பேபி. ஐ லவ் யூ டா என் செல்லக் குட்டி.'' என்று கொஞ்சினான்.

மேலும் சில முத்திரைகளை அவளது வயிற்றில் பதித்தவன் நிமிர்ந்து நின்றான். அவள் தன் கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு அவனை பார்த்து முறைத்தாள்.

''ஹேய் மக்கு! இப்பவே பாரு நீ எவ்வளவு மெலிஞ்சு போய் இருக்க! உனக்கு வாந்தி ஓவரா இருக்கு. இதுல நீ என் பேபியை பகைச்சுக்கிட்டால் யாருக்கு கஷ்டம்? உனக்காக தான் நான் நம்ம பேபியை கொஞ்சுறேன் தெரியுமா?''

''நீங்க சரியான கேடி மாமா. உங்களை பத்தி தெரிஞ்சிருந்தும் நானும் எப்போ பாரு ஏமாந்து போறேன்.''

''அதை விடு. ரெண்டு பேரும் எப்போ வந்தீங்க? எதுல வந்தீங்க?'' என்று விசாரித்து அறிந்து கொண்டான்.

''டிராவல் பண்ணி வந்தது உனக்கு ரொம்ப சோர்வா இருக்கா?''

''அது உங்களை பார்க்கிறதுக்கு முன்னாடி. இப்போ எல்லாம் பறந்து போயிடுச்சு.''

''நீங்க வந்திருப்பது தெரியாததால் நான் எனக்கு மட்டும் சாப்பாடு வாங்கிட்டு வந்தேன். நான் போய் உங்க ரெண்டு பேருக்கும் சாப்பாடு வாங்கிட்டு வரேன்.''

''இல்ல மாமா. நானே சமைச்சுட்டேன்.''

''ஏன்டா வந்ததும் வராததுமா கிட்சனில் வேலை பார்த்தே?''

''உங்களுக்காக சமைக்கணும்னு ஆசையா இருந்துச்சு அதான்.''

''நீ வரேன்னு என்கிட்ட சொல்லி இருந்தால் நான் சீக்கிரமா வீட்டுக்கு வந்திருப்பேன்ல.''

''சர்ப்ரைசா இருக்கட்டும்னு நினைச்சேன். அதான் சொல்லலை. சரி சாப்பிட வாங்க.''

''நான் குளிச்சுட்டு வரேன் கயல்.''

அவன் குளிக்க சென்றதும் அவள் வெளியே வந்தாள். அவனது மடிகணினி பையை எடுத்து அவன் தினமும் வைக்கும் இடத்தில் வைத்தாள்.

அவன் வாங்கி வந்த உணவு பொட்டலத்தை பிரித்தவள் அதனுள் இருந்த இரு இட்லிகளை கண்டு, ''இதான் இவரோட சாப்பாடா?'' என்று திட்டிக் கொண்டாள்.

தன் தந்தையை அழைத்து வந்து உணவு உண்ணுமாறு கூறினாள். அவர் தன் மருமகன் வந்த பின்னால் உண்ணுகிறேன் என்று மறுத்துப் பார்த்தார்.

''நீங்க முதல்ல சாப்பிடுங்கப்பா. அவரும் நானும் சேர்ந்து சாப்பிடுறோம்.'' என்று சொன்னதும் அவர்களுக்கு தனிமை கொடுக்க விரும்பிய கணேசனும் உடனே சாப்பிட அமர்ந்து விட்டார்.

''ஏன்மா மாப்பிள்ளை இப்படி நைட் எல்லாம் வராமல் இருந்தால் நீ எப்படி இங்கே தனியா இருப்பே?''

''எனக்காகவாவது வீட்டுக்கு வந்துடுவார்பா. அப்படி எல்லாம் என்னை தனியா விட்டுட மாட்டார்.''

''நீ இங்கே சமாளிச்சுடுவ இல்ல. அப்போ அப்பா கிளம்பட்டுமா?''

''நைட் நீங்க கிளம்புங்கப்பா. அவர் என்னை பார்த்துக்குவார்.'' என்று கூறினாள்.

ஒன்றரை மாதத்திற்கு பின் மகளின் முகத்தில் தெரிந்த மலர்ச்சியும் தெளிவுமே அந்த தகப்பனுக்கு நம்பிக்

கையை அளித்தன. அதனால் அவர் அன்று இரவே பயணம் செய்ய முடிவு செய்தார்.

குளித்து முடித்து வந்த விக்ரம் வரவேற்பறை சோபா வில் அமர்ந்து தன் மாமனாரிடம் பேச ஆரம்பித்தான்.

பத்து நிமிடங்கள் கடந்ததும், "போய் சாப்பிட்டு தூங் குங்க மாப்பிள்ளை. நைட்டெல்லாம் தூங்காமல் வேலை பார்த்தேன்னு சொன்னீங்களே..." என்றார்.

"என்னது நைட் தூங்கலையா?" என அதிர்ந்த கயல்விழி, "வாங்க. சாப்பிடப் போகலாம்." என்று அவனை அழைத்துச் சென்றாள்.

கணேசன் திரும்பவும் அந்த அறைக்குள் சென்று அடைந்து கொண்டார். அவர்கள் இருவரும் உணவு மேஜை முன் அமர்ந்தனர்.

"நீயும் சாப்பிடு கயல்."

"நான் அப்புறமா சாப்பிடுறேன் மாமா. சாப்பிட்டதும் எனக்கு வாந்தி வந்துடும்."

"நான் ஊட்டிவிடுறேன். என் பேபி அதை வெளியே தள்ளாது." என்றவன் தானும் சாப்பிட்டு அவளுக்கும் ஊட்ட ஆரம்பித்தான்.

"நைட் எல்லாம் தூங்கலைன்னால் வீட்டுக்குள்ள வந்ததும் சாப்பிட்டு தூங்க வேண்டியது தானே. அப்பா கிட்ட அப்புறமா பேசி இருக்கலாமில்ல."

"நான் முதல்ல அப்படி தான் கயல் நினைச்சேன். ஆனால் எனக்கு இருக்கும் அசதியில் நான் படுத்தால் எப்போ எழுந்துப்பேன்னு எனக்கு தெரியாது. நீ பாட் டுக்கு... எங்க அப்பாவை மதிச்சு ரெண்டு வார்த்தை

பேசாமல் போயிட்டீங்கன்னு சொல்லி நான் தூங்கும் போது உங்க அப்பா கூட கிளம்பி போயிட்டேன்னா?" என்றதும் முறைத்தாள்.

இனிமேல் அப்படி செய்ய மாட்டேன்னு வாக்கு கொடுத்திருக்க தான். நான் உன்னை அவ்வளவா மிஸ் பண்ண மாட்டேன். ஆனா என் பிள்ளையை பிரிஞ்சு என்னால இருக்க முடியாதே. அதான் அவர்கிட்ட உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தேன்.

"என்னை விட்டுட்டு இருந்துடுவீங்க. ஆனா உங்க பிள்ளையை விட்டு இருக்க மாட்டீங்களா?"

"இல்லையா பின்ன? நானும் என் பேபியும் அவ்வளவு க்ளோஸ். என் பேபியும் என்னை விட்டுட்டு இருக்காது. என்னடா பேபி அப்பாவை விட்டுட்டு நான் மதுரைக்கு வர மாட்டேன்னு நீ அடம்பிடிச்சு உங்க அம்மாவை இங்கே இருந்து நகர விடாமல் செய்வே தானே?" என்று அவள் வயிற்றை பார்த்துக் கேட்டான்.

"என் பேபி ஆமாம்னு சொல்லிடுச்சு." என்று தன் மனைவியை பார்த்துக் கூறி முறுவலித்தான்.

"உங்க பிள்ளை ஆமாம்னு சொல்லுச்சா? எப்போ? எனக்கு எதுவும் கேட்கலை."

"என்னை மாதிரி புத்திசாலிகளுக்கு தான் கேட்கும். உன்னை மாதிரி மக்குக்கு கேட்காது."

"நான் மக்கா?"

"நீ என் மக்கு இல்லையா கயல்?"

அவன் தன் முகத்தில் இருந்த இலகு தன்மையை கை விட்டுவிட்டு சற்றே தன் முகத்தை தீவிரமாக்கி அவளை

பார்த்து ஆழ்ந்த குரலில் இப்படி கேட்கவும் அவள் என்ன பதில் சொல்வதென்று புரியாது குழம்பினாள்.

கொஞ்ச நாட்களுக்கு முன் மக்குக்கு அவன் அளித்த விளக்கத்தை கேட்ட பிறகு நான் உங்க மக்கு இல்லை என்று எப்படி அவளால் சொல்ல முடியும்.

''நான் உங்க மக்கு தான் மாமா.'' என்று அவள் பாவம் போல் சொல்லவும் அவன் முறுவலித்தான்.

''என் வாயாலயே என்னை மக்குன்னு சொல்ல வைக்க தானே இப்படி ஒரு விளக்கத்தை கண்டுபிடிச்சு இருக்கீங்க?''

''ஓ! அதே உனக்கு இப்போ தான் புரிஞ்சதா?'' என்று அவன் நக்கலாகக் கேட்கவும் அவனை முறைத்தாள்.

''நீங்க எப்போ எப்படி பேசுவீங்கன்னு என்னால கண்டுபிடிக்கவே முடியலையே.''

''அப்படி ஒண்ணு நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.'' என்று கிண்டல் செய்தவன் கை கழுவி விட்டு வந்தான்.

''நான் போய் தூங்குறேன் கயல். ரொம்ப நாள் கழிச்சு உன் கையால செஞ்ச சாப்பாடுன்னு வயிறு நிறைய சாப்பிட்டு விட்டேன். மதிய சாப்பாட்டுக்கு என்னை எழுப்பாதே. எப்போ முழிப்பு வருதோ அப்போ நானே எழுந்துக்கிறேன்.'' என்று சொல்லி சென்றான்.

அவளும் அவன் பின்னோடு தங்கள் அறைக்குள் வந்தாள். அவன் உடனே படுத்துவிட்டான். அவளும் அவனருகே படுக்கையில் அமர்ந்தாள்.

“நீ கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுக்கிறியா?”

“இல்லை. சாப்பிட்டதும் என்னால படுக்க முடியாது. நீங்க தூங்குங்க.” என்றதும் அவளை பார்த்து முறுவலித்தான்.

அவள் அவனது தலை முடியை கோதிக் கொடுக்க ஆரம்பித்தாள். அடுத்த சில நொடிகளில் தூங்கிப் போனான்.

“எப்பவும் சாப்பிட்டதும் படுக்கவே மாட்டார். இன்னைக்கு உடனே தூங்கிட்டார். இவரை யார் இப்படி கண்ணு முழிச்சு உழைக்க சொன்னது” என்று திட்டிக் கொண்டாள்.

அன்று இரவு கணேசன் மதுரைக்கு கிளம்பி சென்றார்.

## 37

நாட்கள் பல பறந்தோடின. கயல்விழி கர்ப்பமாகி ஐந்து மாதங்கள் முடிவடைந்தன. அவளது மசக்கையும் ஓரளவிற்கு குறைந்து இருந்தது.

ஒரு நாள் நடராஜன் விக்ரமை அழைத்துப் பேசினார். அவனை திருச்சிக்கு வருமாறு அழைத்தார்.

அவனும் வருவதாக வாக்களித்து விட்டு அழைப்பை துண்டித்தான். அவனது முகம் சற்று குழம்பிப் போய் இருந்தது.

தன் தந்தை என்ன சொன்னார் என்று அவன் கயல் விழியிடம் விவரம் எதுவும் தெரிவிக்கவில்லை. அவளும் அது என்னவென்று அறிய முற்படவில்லை.

ஊருக்கு போனால் தெரிந்து விடப் போகிறது என்று நினைத்துக் கொண்டாள். அவர்கள் இருவரும் விமானத்தின் மூலம் திருச்சி வந்து சேர்ந்தனர்.

முதல் விமானப் பயணத்தை அவளால் சந்தோஷமாய் அனுபவிக்க கூட முடியவில்லை.

இவ்வளவு அவசரமாய் கிளம்பி போகும் அளவுக்கு என்ன பிரச்சனையாய் இருக்கும்? என்று அவளது மனம் அதிலேயே சிக்கி திளைத்தது.

இவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் சந்திரலேகா பல்லவியுடன் வந்து இறங்கினாள். அவளுடன் அவளது பெற்றோரும் வந்திருந்தார்கள். சந்திரலேகாவின் பெற்றோரும் ஒசூரில் மகள் வீட்டிற்கு அருகே தான் வசித்து வருகிறார்கள்.

கயல்விழி சந்திரலேகாவை பார்த்து, ''வாங்கக்கா. நல்லா இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''உனக்கு என்னம்மா மகராசி. சாப்பாட்டுக்கு வக்கில்லாத குடும்பத்திலே பிறந்தாலும் இன்னைக்கு மகாராணி மாதிரி வாழுறோம்கிற திமிர். அதான் என்னை பார்த்து எகத்தாளமாய் இப்படி ஒரு கேள்வி கேட்கிற.'' என்றதும் கயல்விழி அதிர்ந்தாள்.

அவள் தன் கணவனை திரும்பிப் பார்க்க அவன் அவளை தன்னருகே வரும்படி சைகை செய்தான். அவளும் அவனை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

லேகா! அவளுக்கு விஷயம் எதுவும் தெரியாது. அவள் உன்னை எதார்த்தமா தான் கேட்கிறாள். என்று சிவகாமி இடைபுகுந்தார்.

''ஏன் அவள்கிட்ட உங்க பிள்ளையோட வண்ட வாளத்தை பத்தி சொல்ல வேண்டியது தானே? பிள்ளை பாசம் தடுக்குதோ?''

''செல்வம் வரட்டும் லேகா. அவன் வந்து சொல் லட்டும். அப்புறமா பேசிக்கலாம்.''

''அவர் வந்து புதுசா என்ன சொல்லப் போறார்? அதான் என்கிட்ட ஒத்துக்கிட்டாரே... ஆமா எனக்கு இன்னொரு பொண்டாட்டி இருக்காள்னு. என்று அவள் விஷயத்தை போட்டு உடைத்தாள்.

கயல்விழியால் காதில் விழுந்த உண்மையை ஜீர ணிக்க முடியவில்லை. அவளது உடல் நடுக்க ஆரம் பித்தது. அவளது கையை பற்றிய விக்ரம் அவளது உள்ளங்கையை அழுத்திக் கொடுத்தான்.

அவளது காதருகே குனிந்து, ''ரொம்ப எமோஷனல் ஆகாதே கயல். பேபிக்கு நல்லதில்லை.'' என்றதும் தன் தலையை ஆட்டினாள்.

கணவனின் கையை இறுக பற்றிக் கொண்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முயற்சித்தாள். மீனாட்சி அம்மனை மனதில் துதிக்க ஆரம்பித்ததும் அவள் இயல்பு நிலைக்கு திரும்பினாள்.

''இந்த பஞ்சாயத்துக்கா நாங்க வந்திருக்கோம்? செல்வம் மாமா பார்க்க அப்பாவியா தானே இருக்கார். அவரா இப்படி?! லேகா அக்கா பாவம் தான். இப்படி

ஒரு சூழ்நிலையிலே போய் நீங்க நல்லா இருக்கீங்களான்னு கேட்டால் யாருக்கா இருந்தாலும் கோபம் வரத் தான் செய்யும். என்று கயல்விழி நினைத்துக் கொண்டாள்.

''சம்பந்தி! நீங்க தான் உங்க பிள்ளையை கண்டிச்சு வைக்கணும். அந்த பொண்ணை அத்து விட்டுட்டு என் பெண்ணை வாழ வைக்கணும்.'' என்று லேகாவின் தாயார் தன்மையாய் கேட்டார்.

''நாங்க உங்க சம்பந்திக்கிற விஷயம் இப்ப தான் உங்க கண்ணுக்கு தெரியுதா? அன்னைக்கு நாங்க எங்க பையனை பார்க்க வந்தப்போ என்ன சொன்னீங்கன்னு ஞாபகம் இருக்கா? வந்தோமா ரெண்டு நாள் இருந்தோமான்னு போகாமல் இங்கேயே டேரா போட்டால் என்ன அர்த்தம்னு கேட்டவங்க தானே நீங்க! இத்தனைக்கும் அந்த வீட்டை வாங்க நாங்க தான் பணம் கொடுத்தோம். எல்லாம் தெரிஞ்சு இருந்தும் அன்னைக்கு அப்படி பேசினீங்க.''

''இதெல்லாம் உனக்கு தேவையா?'' என்று லேகாவின் தந்தை தன் மனைவியை முறைத்தார்.

''நான் என்னங்க செய்யுறது. உங்க பொண்ணு வெடுக்கு வெடுக்குன்னு பேசுவாள். அவள் குணத்துக்கு மாமனார் மாமியாரை எல்லாம் அனுசரிச்சு போக மாட்டாள். அதனால அவங்களை தள்ளி வைக்கலாம்னு நினைச்சு அன்னைக்கு அப்படி சொன்னேன்.'' என்று மெல்ல முணுமுணுத்தார்.

''இன்னைக்கு நேரம் பார்த்து சொல்லி காண்பிக்கிறாங்க இல்ல. இப்போ நம்ம மூஞ்சியை கொண்டு

போய் எங்கே வச்சுக்கிறது?'' என்று அவரும் முணு முணுத்தார்.

விக்ரம் தன் தந்தையிடம், ''செல்வத்துக்கு போன் பண்ணி கேட்டீங்களாப்பா? என்ன சொன்னான்?'' என்று வினவினான்.

''கேட்டேன் விக்ரம். ஆமாம்னு சொல்லலை. அதே சமயம் இல்லைன்னு மறுத்தும் சொல்லலை. நேரிலே வரேன்னு மட்டும் தான் சொன்னான்.''

''அப்போ அவன் தப்பு பண்ணி இருப்பானோ? அந்த அளவுக்கு அவனுக்கு துணிச்சல் இருக்கா?'' என்று சிவகாமி கேட்டாள்.

''எனக்கு எதுவும் புரியலை சிவகாமி.''

''நீ என்ன நினைக்கிற விக்ரம்?''

''என்னைக் கேட்டால் நான் என்ன சொல்ல? சின்ன வயசிலே அவன் எல்லா தப்பையும் பண்ணிட்டு பழியை தூக்கி என் மேல போடுவான். நீங்களும் விசாரிக்காமல் எனக்கு தண்டனையை குடுப்பீங்க. அவனை பத்தி எனக்கு அவ்வளவு தான் தெரியும்.''

''அவன் செஞ்ச தப்புக்கு நான் உன்னை தண்டிச் சேனா? அது எப்போ?''

''எப்பவுமே அப்படி தான் நடந்திருக்கு. ஒரு தடவையா ரெண்டு தடவையா?''

இவன் என்ன புதுசா கிளப்பி விடுறான். செல்வம் எந்த தப்பும் செய்யாத அமைதியான பிள்ளை தானே. இவன் தானே கொஞ்சம் முரடன். எதையாச்சும் செஞ்சு என்கிட்ட திட்டு வாங்கிக்கிட்டே இருப்பான். இவன் சொல்லுறதை

பார்த்தால் செல்வம் ஊமை குசும்பு பண்ணுறவனா? இது என்ன புது குழப்பம்? என்று சிவகாமி தன் தலையை பிடித்துக் கொண்டார்.

''ஏன்மா அன்னைக்கு மொட்டை கடிதம் வந்துச்சுன்னு சொன்னீங்களே... ஒரு வேளை அது செல்வத்தை பத்தி தான் வந்திருக்குமோ?''

''எந்த மொட்டை கடிதம் பத்தி கேட்கிற விக்ரம்?'' என்று சிவகாமி குழம்பினார்.

''அதான்மா... உங்க பையன் வேற மாநிலத்தில் ஒரு பெண்ணோடு சுத்திக்கிட்டு இருக்கான். கண்டிச்சு வைங்கன்னு சொல்லி ஒரு லெட்டர் வந்துச்சுன்னு சொன்னீங்களே. அதை சொல்லுறேன்.''

''அது உன்னை பத்தி வந்த லெட்டர் தானே விக்ரம். உன்னையும் உன் முதல் பொண்டாட்டியையும் பத்தி வந்தது தானே?''

''அட நீங்க வேற... எனக்கு ரெண்டு பொண்டாட்டி எல்லாம் கிடையாது. எனக்கு இதுக்கு முன்னாடி எந்த கல்யாணமும் நடக்கலை. எனக்கு இருக்கிற ஒரே பொண்டாட்டி கயல் மட்டும் தான்.'' என்றதும் அனைவரும் அவனை குழப்பத்தோடு ஏறிட்டனர்.

''நீ என்ன விக்ரம் சொல்லுறே?'' என்று சிவகாமி பதட்டத்துடன் கேட்டார்.

''மொட்டை கடிதம் வந்ததும் நீங்க என்ன செஞ்சீங்க? வழக்கம் போல விசாரணை எதுவும் பண்ணாமல் நீங்களே உங்க இஷ்டத்துக்கு கெஸ் பண்ணி என்னை கேள்வி மேல கேள்வியா கேட்டீங்க. அது என்னன்னு

ஞாபகம் இருக்கா? இல்லை நானே சொல்லட்டுமா?'' என்றவன் மடமடவென அடுக்க ஆரம்பித்தான்.

''யார் கூட விக்ரம் சுத்திக்கிட்டு இருக்க? யார் அந்த பொண்ணு? வடநாட்டுக்காரியா? அவளை லவ் பண்ணுறியா? அவள் எல்லாம் நம்ம குடும்பத்துக்கு செட் ஆக மாட்டாள். லவ் தான் பண்ணுறியா இல்லை கல்யாணமே பண்ணிக்கிட்டியான்னு கேட்டீங்க. நானும் உங்க மேல இருந்த கடுப்பில் ஆமா கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அவள் ஒரு ஹிந்திக்கார பொண்ணு தான்னு சொன்னேன்.''

அங்கே ஒரு மயான அமைதி நிலவியது. அவனை பெற்றவர்கள் அதிர்ந்து போய் இருந்தனர்.

கயல்விழியோ ஆனந்த அதிர்ச்சியில் திகைத்து போய் அமர்ந்திருந்தாள். லேகாவோ கயல்விழியை கண்டு பொறாமையில் பொசுங்கி போய் அமர்ந்திருந்தாள்.

கயல்விழியின் கண்களில் இருந்து கண்ணீர் வர ஆரம்பித்தது. விக்ரம் அவள் புறம் திரும்பவில்லை. அவன் தன் தாயை மட்டும் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

தான் அவள் புறம் திரும்பினால் அவளை சமாதானம் செய்வது ஒன்று மட்டுமே தன் வேலையாய் நினைத்து அவளை அழைத்து கொண்டு அங்கே இருந்து எழுந்து சென்றுவிடுவோம் என்பது அவனுக்கு நன்றாக தெரியும்.

பேச்சு வந்துவிட்டது. இன்றாவது அதை முழுவதுமாக சொல்லி விடுவது என்ற தீர்மானத்திற்கு அவன் வந்து விட்டான். தொடங்கியதை பாதியில் விட்டு செல்ல அவனுக்கு மனமில்லை.

''அவள் இறந்துட்டாள்னு கூட சொன்னியேடா?''

"இல்லாத பொண்டாட்டியை கூட்டிட்டு வான்னு சொன்னீங்க. ஒரு ஹிந்தி பொண்ணுக்கு நான் எங்கே போவேன்? அதான் உண்மையை சொல்லலாம்னு நினைச்சு அப்படி ஒருத்தி இந்த உலகத்துல இல்லைன்னு சொன்னேன்."

"அதையும் நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டு அவள் இறந்துட்டாளான்னு கேட்டீங்க. சரி கற்பனை கதாபாத்திரம் தானே. அவள் செத்ததாவே இருக்கட்டும்னு நினைச்சு போட்டு தள்ளிட்டேன்."

"எதுல பொய் சொல்லுறதுன்னு இல்லையா விக்ரம்?" என்று நடராஜன் தழுதழுப்போடு கேட்டார்.

"நானா என் வாயை திறந்து எந்த பொய்யும் சொல்லலைப்பா. அம்மாவா அப்படியா இப்படியான்னு கேட்டாங்க. நான் மறுக்கலை. என் மேல சுத்தமாவே இவங்களுக்கு நம்பிக்கை இல்லையா? இவ்வளவு பெரிய காரியம் நம்ம பிள்ளை செய்வானா அப்படின்னு இவங்க யோசிக்கவே மாட்டங்களான்னு எனக்கு ஒரு கோபம் வந்துச்சு.

அதான் எதுக்கு உண்மையை சொல்லணும்னு நினைச்சு அமைதியாகிட்டேன். அவங்க கேட்டதுக்கு எல்லாம் ஆமாம்னு சொல்லிட்டேன்.

அன்னைக்கு அந்த மொட்டை கடிதம் வந்த போது என்னை மட்டும் ஏன் அம்மா சந்தேகப்பட்டாங்க? ஏன் செல்வத்தை எந்த கேள்வியும் கேட்கலை?"

"வெளி மாநிலம்னு போட்டு இருந்துச்சே விக்ரம். நீ தானே டில்லில இருந்தே. அதான் எனக்கு உன் ஞாபகம் வந்துச்சு."

"செல்வம் கூட தான் மாசத்துல பாதி நாள் பெங்களூருக்கு போறான். அது வெளி மாநிலம் இல்லையா?"

'இதுக்கு என்ன பதிலை சொல்ல?' என்று சிவகாமி திகைத்து போய் அமர்ந்திருந்தார்.

''நம்ம அரவிந்தனும் அந்த லெட்டர் வரதுக்கு ரெண்டு நாள் முன்னாடி தான் நீ ஒரு பொண்ணு கூட சுத்துறதா சொன்னானா... அதான் நான் உன்னை நினைச்சுட்டேன் விக்ரம்.

அப்படின்னா அந்த லெட்டர் வந்ததுக்கு அப்புறமா நீங்க அரவிந்தனுக்கு போன் பண்ணி... அவன் என்னை எங்கே வச்சு பார்த்தான் என்ன ஏதுன்னு தெளிவா விசாரிச்சீங்களா?

இல்லை என்னும் விதமாய் சிவகாமி தலை அசைத்தார்.

''அவன் சொன்ன அன்னைக்காவது அவன்கிட்ட தெளிவா விசாரிச்சீங்களா?''

''அவன் ஒரு கல்யாண வீட்டில் வச்சு விஷயம் சொன்னான் விக்ரம். சுத்திலும் நம்ம உறவு ஜனங்க நிறைய பேர் இருந்தாங்க. அதனால என்னால தெளிவா பேச முடியலை. அப்புறமா விசாரிக்கலாம்னு நினைச்சேன். அவன் விஷயம் சொன்ன ரெண்டாவது நாள் மொட்டை கடிதம் வந்துச்சு. அதனால நான் அவன்கிட்ட அதுக்கப்புறம் பேசலை.''

அங்கே ஒரு கனத்த அமைதி நிலவியது.

''உன் கல்யாணத்துக்கு பொண்ணு பார்க்கும் போதாவது சொல்லி இருக்கலாமில்ல.''

''அப்போ தான் உண்மையை சொல்லணும்னு நான் நினைச்சிருந்தேன். எனக்காக நீங்க கயலை தேர்ந்தெடுத்தீங்க. அவளோட போட்டோவை பார்த்த எனக்கு அவளை ரொம்ப பிடிச்சு இருந்துச்சு. நடக்கப் போவது

என்னோட ரெண்டாவது கல்யாணம்னு நினைச்சு தானே நீங்க அவளோட வசதியை கணக்குல எடுத்துக்காமல் எனக்காக அவளை பார்த்து வச்சீங்க.''

''நான் உண்மையை சொன்னால் வேற பொண்ணு பார்க் கலாம்னு சொல்லி இருப்பீங்க. அதான் நான் அப்போ கூட சொல்லலை. இதுநாள் வரை உங்க பேச்சுக்கு நான் கட்டுப்பட்டு தான் நடந்து வந்திருக்கேன். ஆனால் நான் வீட்டுக்கு அடங்காத பிள்ளைன்னு உங்க மனசிலே ஒரு மாயத் தோற்றத்தை நீங்க உருவாக்கி வச்சிருந்தீங்க.''

அங்கே ஒரு பேரமைதி நிலவியது. அவனை பெற்ற வர்கள் குற்ற உணர்வில் தத்தளித்தனர். சில நொடி களுக்கு பின் அவன் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

''எனக்கு கல்யாணம் ஆகலைங்கிற உண்மையை சொல் லிட்டு எனக்கு கயலை தான் பிடிச்சிருக்கு. நீங்க சம்மதிச் சாலும் சம்மதிக்கலைன்னாலும் நான் அவளை தான் கல் யாணம் பண்ணிக்குவேன்னு நான் சொல்லி இருக்கலாம். ஆனால் என்னைக்குமே உங்க பேச்சை மீறும் துணிச்சல் எனக்கு வந்ததில்லை. அது தான் உண்மை.

அதனால கயலை கல்யாணம் பண்ணின பிறகு உண் மையை சொல்லலாம்னு நினைச்சேன். என் கல்யாணத் துக்கு அப்புறம் உண்மையை சொல்லியே ஆகணும்கிற கட்டாயம் எதுவும் வரலை. அதனால அதை அப்படியே விட்டுட்டேன். உண்மையை சொல்லுறதுக்கான சந்தர்ப்பம் எனக்கு இன்னைக்கு தான் கிடைச்சது.

அவனுடைய இந்த கூற்றை கேட்டு அவர்களுக்கு சந்தோஷமும் துக்கமும் ஒருங்கே தோன்றின.

இவனா எனக்கு அடங்காத பிள்ளை! நான் இவ்வளவு தப்பு செஞ்சும் என் பேச்சை எதிர்க்க கூடாதுன்னு

நினைச்ச இவனா எங்க மேல பாசம் வைக்காத பிள்ளை! என்னுடைய நினைப்பெல்லாம் பொய்யாக்கிட்டானே! இவனை பிள்ளையாய் பெற நான் புண்ணியம் தான் பண்ணி இருக்கேன் என்று சிவகாமி நினைத்தார்.

கயல்விழிக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் இதயம் தான் துடிப்பதை நிறுத்தி விடுமோ என்று கூட பயமாக இருந்தது.

தாயே மீனாட்சி! இப்படி ஒரு விஷயம் இருப்பதை எனக்கு சொல்லாமல் விட்டுட்டியே. உன்னை நம்பின என்னை நீ கைவிடலை. உனக்கு என் ஆயுளுக்கும் நான் நன்றி சொல்லிக்கிட்டே இருப்பேன் என்று அவளது மனம் விடாமல் பிரார்த்தித்தது.

லேகாவிற்கு பொறாமையில் வயிறெல்லாம் காந்தியது. அவளால் நடந்ததை ஜீரணிக்கவே முடியவில்லை.

''வசதியில் என்னை விட இவள் கூடுதலா இருந்தாலும் ரெண்டாந்தாரம் தானேன்னு நினைச்சேன். இப்போ அதுவும் இல்லையா? இவளுக்கு வந்த வாழ்வை பாருங்களேன். இவள் வாழ்ந்த வாழ்க்கை என்ன... இவள் இப்போ வாழுற வாழ்க்கை என்ன?'' என்று லேகா சப்தமாக புலம்பினாள்.

விக்ரம் ஏகத்திற்கும் கடுப்பாகிப் போனான். விளக்கம் சொன்ன வரைக்கும் போதும் என்று அவன் முடிவு கட்டினான்.

''அம்மா! செல்வம் வந்ததும் நான் கீழே வரேன். நாங்க மேலே எங்க ரூமிலே இருக்கோம்.''

மாடியில் விக்ரமிற்காக கட்டப்பட்ட அறை தயார் நிலையில் இருந்தது. அதனால் அவன் கயல்விழியை அழைத்துக் கொண்டு மேலே சென்றுவிட்டான்.

லேகா தன் பெற்றோரை அழைத்து கொண்டு தான் இந்த வீட்டிற்கு வந்தால் தங்கும் அறைக்கு சென்றுவிட்டாள்.

சிவகாமிக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. அவர் தன்னை மிக கேவலமாக உணர்ந்தார்.

''நான் எல்லாம் என்ன ஒரு அம்மா? வந்தது ஒரு மொட்டை கடிதம். நான் என்ன செஞ்சு இருக்கணும்? என் பிள்ளையை பத்தி எனக்கு தெரியாதான்னு நினைச்சு அதை தூக்கிப் போட்டு இருக்கணும்.

இல்லையா... இப்படி ஒரு லெட்டர் வந்திருக்குப்பா? யார் உங்க மேல பொறாமைப்பட்டு இப்படி தப்பா அனுப்பி இருக்காங்க? உங்களுக்கு யார் எதிரி? கவனமா இருங்கன்னு சொல்லி இருக்கணும். நான் அதையும் செய்யலை.

இல்லைன்னா மூணாவதா நான் ஒண்ணு செஞ்சிருக் கலாம். ரெண்டு பிள்ளையையும் இன்னைக்கு வர சொன்ன மாதிரி அன்னைக்கு வர சொல்லி... யாருக்கு என்ன பிரச்சனைன்னு தீவிரமா விசாரிச்சு இருக்கணும். இப்படி எதையுமே செய்யாமல் விட்டுட்டேனே!'' என்று தன்னை தானே குற்றம் சாட்டிக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார்.

''சிவகாமியின் எண்ணம் இப்படி என்றால் நட ராஜனின் எண்ண ஊர்வலம் வேறு மாதிரி இருந்தது.

இந்த சிவகாமி செஞ்ச தப்பால விக்ரம் சின்ன சின்னதா தான் இழந்திருக்கான்னு நினைச்சேன். இப்படி ரெண்டு கல்யாணம் பண்ணினவன் என்ற பெயரையும் அவன் சம்பாதிக்க சிவகாமி தான் காரணமாய் இருப்பாள்னு நான் நினைக்கலை.

இந்த பையனுக்கும் அப்படி என்ன வீம்பு வேண்டி இருக்கு? இன்னைக்கு சொன்னதை அன்னைக்கே சொல்லி இருக்கலாமில்ல. ரெண்டாம் கல்யாணம்னு நினைச்சு கோவில்ல வச்சு எவ்வளவு சிம்பிளா பண்ண முடியுமோ அவ்வளவு சிம்பிளா பண்ணினோம்.

செல்வத்துக்கு மண்டபத்திலே வச்சு எவ்வளவு கிராண்டா கல்யாணம், ரிசப்ஷன் எல்லாம் நடந்தது. இந்த விக்ரம் இப்படி என்னை புலம்ப வச்சுட்டானே என்று மகனை திட்டினார்.

''கல்யாணம் சிம்பிளா நடந்தால் என்ன பிரம்மாண்டமா நடந்தால் என்ன... அதுவா முக்கியம்? அவங்க எப்படி வாழுறாங்க என்பது தானே முக்கியம்? அந்த வகையில் பார்த்தால் விக்ரமிற்கு என்ன குறை? அவன் அன்னைக்கு பொய் சொன்னதால இப்போ என்ன குறைஞ்சு போயிட்டான்?''

'நம்மளோட எண்ணங்களும் செய்யும் செயலும் நல்லதா இருந்தால் நமக்கு நல்லது மட்டும் தான் நடக்கும். இதுக்கு விக்ரம் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு இல்லையா?' என நினைத்து தன்னை தேற்றிக் கொள்ள ஆரம்பித்தார்.

## 38

மாடிக்கு சென்ற கயல்விழி விக்ரமை மொத்த ஆரம்பித்தாள்.

''எதுக்கு இவ்வளவு பொய் சொன்னீங்க? அத்தைகிட்ட ஒரு தடவை தான் சொல்லி இருப்பீங்க. ஆனா என்கிட்ட எத்தனை தடவை அந்த பொய்யை சொன்னீங்க.'' என்று சொல்லி அவள் அடிக்கும் அந்த செல்ல அடிகளை அவன் ஏற்றுக் கொண்டான்.

பின் அவன் முகம் முழுவதும் முத்தமிட்டு தன்னால் முடிந்த மட்டும் தன் கணவனை இறுக்கி அணைத்தாள்.

அவளது மனநிலையை புரிந்து கொண்டவனும் அவளை தன்னோடு அணைத்துக் கொண்டு சில நிமிடங்கள் அமைதி காத்தான்.

பின் அவனிடம் இருந்து விலகியவள் அவன் முகம் பார்த்து, ''ஏன் அப்படி பண்ணீங்க? இப்பவாது சொல் லுங்க.'' என்றாள்.

''நீ முதல்ல போய் முகத்தை கழுவிட்டு வா. அழாமல் நான் சொல்வதை கேளு.'' என்றதும் குளியலறைக்கு சென்றாள்.

அவள் முகம் கழுவி துடைத்துவிட்டு வந்ததும் அவளை படுக்கையில் அமர வைத்தவன் தானும் அருகே சென்று அமர்ந்தான். அவளது கையை தன் கையில் பொத்தி வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

''கீழே அம்மாகிட்ட சொன்ன மாதிரி அவங்க மேல உள்ள கோபத்துல தான் கயல் நான் அந்த மாதிரி ஒத்துக்கிட்டேன். எனக்கு கல்யாணம்... சாரி சாரி ரெண்டாவது கல்யாணம் பண்ணி வைக்கணும்னு முடிவு பண்ணி எங்க அம்மா உன்னோட போட்டோவை அனுப்பினாங்க.

அன்னைக்கு என்னோட மாமா பையன் அரவிந்த் என்ன சொன்னான்னு ஞாபகம் இருக்கா? நீயும் நானும்

லவ்வர்ஸ்னு சொன்னான்ல. அவன் ஏன் அப்படி சொன்னான்னு தெரியுமா?

நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே நான் உன்னை பார்த்தேன். உன்னை முதன் முதலில் மீனாட்சி அம்மன் கோவில் பொற்றாமரை குளத்துக்கு அருகே வச்சு பார்த்தேன். பார்த்தேன் என்ன பார்த்தேன்... இந்த பொண்ணு சூப்பரா இருக்காளேன்னு சைட் அடிச்சேன். உண்மையை ஒத்துக்கிறதிலே இப்போ என்ன வந்துச்சு.'' என்று அவன் கூறவும் அவள் முறுவலித்தாள்.

''சாமி தரிசனம் பண்ண போனேன். அங்கேயும் என் பக்கத்துல நீ! நான் உன்னை ஆர்வமா பார்த்ததை தான் அந்த பயபுள்ள பார்த்துட்டு எங்க அம்மாகிட்ட அப்படி போட்டு குடுத்து இருக்கான்.

அன்னைக்கு நான் கோவிலில் இருந்து நேரா திருமலை நாயக்கர் மஹாலுக்கு போனேன். அங்கேயும் நீ. என்னடா இது விட்ட குறை தொட்ட குறையாய் இந்த பொண்ணு நம்ம பின்னாடியே வராள்னு நினைச்சேன்.''

''யாரு நானு உங்க பின்னாடியே வந்தேனா?'' என்று அவள் முறைக்கவும்,

''நீ அப்படி பின்னாடி வந்திருந்தேன்னா நான் தலை தெறிக்க ஓடி இருக்க மாட்டேன்.'' என்றான்.

''இவர் மட்டுட் பின்னாடி வருவாராம். நாங்க வந்தா தெறிச்சு ஓடுவாராம். ஏன் அப்படி?''

''நான் எப்போ உன் பின்னாடி வந்தேன்? தற்செயலா நடந்ததுன்னு தானே சொல்லுறேன்.''

''ஏன் தெறிச்சு ஓடி இருப்பீங்க. அதுக்கு காரணத்தை சொல்லுங்க.''

''அது வேற ஒண்ணுமில்லை மக்கு. மாமன் செம ஸ்மார்ட்டா இருக்கேனா... நீ என்னை ஆர்வமா பார்த்து... உனக்கு எவனாவது முறைப்பையன் இருந்து அவன் என்னை பார்த்து பொறாமைப்பட்டு என்னை வெட்ட அருவாளை தூக்கிட்டா... எதுக்கு வம்புன்னு தான் தெறிச்சு ஓடி இருப்பேன்னு சொல்லுறேன்.''

'இவர் பெரிய உலக அழகன்' என்று மனதிற்குள் பழிப்பு காட்டினாள்.

''சரி நாம டிராக் மாற வேண்டாம். அன்னைக்கு மூணு தடவை பார்த்தேன். அத்தோட நான் உன்னை சுத்தமா மறந்து போயிட்டேன். எங்க அப்பா பொண்ணு போட்டோவா உன்னோடதை அனுப்பினாரா... இந்த பொண்ணை நாம எங்கேயோ பார்த்து இருக்கோம்னு அப்போ எனக்கு தோணுச்சு.''

''சட்னு ஞாபகம் வரலை. அன்னைக்கு நைட் தூங்கும் வரைக்கும் கூட எனக்கு ஞாபகம் வரலை. மறுநாள் காலையில் டிவியில் மீனாட்சி அம்மன் கோவிலை காட்டினாங்களா... அப்போ தான் எனக்கு பளிச்சுன்னு ஞாபகம் வந்துச்சு.''

''ஆஹா! நிஜமாவே உனக்கும் எனக்கும் விட்ட குறை தொட்ட குறை ஏதோ இருக்கு போல. உனக்கும் எனக்கும் முடிச்சு போட அந்த அம்மன் நினைக்கிறாங்க போலன்னு எனக்கு தோணுச்சு. உன்னை ஏற்கனவே பிடிச்சு போய் தானே அன்னைக்கு சைட் அடிச்சேன். அதனால உன்னையே கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச்சேன்.

''உன்னை பத்தின விவரத்தை எல்லாம் அப்பா சொல்லி இருந்தார். உங்க குடும்பம் ரொம்ப சாதாரண மானதுன்னு எனக்கு புரிஞ்சது. ரெண்டாம் கல்யாணம்னு நினைச்சு தான் எங்க அம்மா இப்படி பொண்ணு பார்த்து இருக்காங்கன்னு எனக்கு புரிஞ்சது. அதனால எங்க அம்மாகிட்ட உண்மையை சொல்ல வேண்டாம்னு நான் முடிவு பண்ணினேன்.

''ஒருவேளை உன்னை நேரில் பார்த்து பேசி உன்னோட நடவடிக்கையில் எனக்கு ஏதாச்சும் பிடிக்காமல் போய் வேற பொண்ணு பார்க்கும் சூழ்நிலை வந்தால் எங்க அம்மாகிட்ட எனக்கு கல்யாணம் எதுவும் நடக்க லைன்னு உண்மையை சொல்லிக்கலாம்னு நினைச்சேன்.

''இந்த முடிவோட தான் நான் உன்னை பார்க்க வந்தேன். உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருந்துச்சு. அதனால எங்க அம்மாகிட்ட உண்மையை மறைச்சுட் டேன்.

''ஆனாலும் உண்மையை உன்கிட்ட மட்டுமாவது சொல் லிடலாம்னு தோணுச்சு. பொண்ணு பார்க்க வந்தப்போ நீ என்ன சொன்னே? உன்னோட ஜாதகத்திலே ரெண் டாம் தாரமா தான் கல்யாணமாகி போவதுக்கு உனக்கு யோகம் இருக்குன்னு சொன்னியா... அப்படியே நான் என் வாயை ஜிப் போட்டு மூடிட்டு போயிட்டேன். கல் யாணம் முடியுற வரைக்கும் வாயை திறக்கக் கூடாதுன்னு முடிவு கட்டினேன்.''

''நம்ம கல்யாணத்துக்கு அப்புறமாச்சும் சொல்லி இருக்கலாமில்ல. இல்லாத ஒருத்திக்கு ஏஞ்சலுன்னு பேர் வச்சு எவ்வளவு ரீல் சுத்தினீங்க.''

''ஏஞ்சல் ரீல் கதாபாத்திரம்னு உனக்கு யார் சொன்னது? அவ ரியல்மா. ரியல்.''

''என்னது உண்மையா? அப்போ யார் அந்த ஏஞ்சல்?'' என்று அவள் பதைப்புடன் கேட்டாள்.

அவளை நகர்த்தி தன் மடி மேல் அமர வைத்தவன் அவளது இரு கைகளையும் தன் இரு கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டு கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தவாறே பேச ஆரம்பித்தான்.

''அந்த ஏஞ்சல் வேற யாருமில்லை. நீ தான்டி என்மக்கு. நீ என் வாழ்க்கையில் வந்த தேவதை! அதனால தான் ஏஞ்சல்னு பேர் வச்சேன்.'' என்று கூறி அவளது கன்னத்தில் அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்தான்.

அவள் அவனை திரும்பி பார்த்து, ''இது நிஜமா? நானா ஏஞ்சல்?'' என்று தன் கண்களை விரித்து ஆச்சரியமாய் கேட்டாள்.

அவன் அவளை ஒரு பக்கமாய் அமர வைத்துக் கொண்டு அவளது முகம் பார்த்து தன் கதையை தொடர ஆரம்பித்தான்.

''உனக்கு சந்தேகமே வேண்டாம். நீ தான்டா அது. நான் ஏஞ்சல் பத்தி சொன்னதெல்லாம் உன்னை பத்தி தான். உன்னை பத்தி உன்கிட்டயே பேச எனக்கு சுவாரஸ்யமாய் இருந்துச்சு. அதான் உண்மையை சொல்லாமல் அப்படியே பொய்யை தொடர வேண்டியதா போச்சு.''

''அன்னைக்கு நீ ஏஞ்சலுக்கு திதி கொடுக்கணும்னு சொன்னியா... உயிரோடு இருக்கும் உனக்கு திதி குடுக்கிறதான்னு செம கடுப்பாகிட்டேன். அதான் கை ஓங்கிட்டேன்.''

இப்பொழுது கூட அவனது உடலில் ஓடிய நடுக்கத்தை அவளால் உணர முடிந்தது. அந்த நடுக்கம் அவன் தன் மீது வைத்திருக்கும் காதலால் தானே என்று அவள் மனம் பெருமிதம் கொண்டது.

''என் முதல் மனைவியோட திதி பத்தி உனக்கு யாரு சொன்னது? எங்க அம்மாவா?''

''ஆமாம். அவங்க தான் சொன்னாங்க. அவங்களுக்கு எப்படி இறந்த தேதி தெரியும்?''

''எதையாச்சும் கேட்டு இருப்பாங்க. நானும் கடுப்பில் ஆமாம்னு சொல்லி இருப்பேன்.''

''நீங்களும் உங்க கடுப்பும். அதனால எவ்வளவு குழப்பம். என்னை பிடிக்கலைன்னால் உண்மையை சொல்லலாம்னு இருந்ததா சொன்னீங்களே நீங்க சொல்லுற அந்த உண்மையை உங்க அம்மா அப்பா வேணா நம்பலாம். ஆனாஊர் உலகம் நம்பணுமே. ஒருவேளை பொண்ணு வீட்டுக்காரங்க நம்பலைன்னால் என்ன பண்ணி இருப்பீங்க?''

''டில்லில போய் விசாரிச்சு தெரிஞ்சுக்க சொல்லுவேன். இல்லைன்னா நானே யாரையாவது லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்குவேன்.''

''புரியலை... தெளிவா சொல்லுங்க.''

''சொந்தக்காரங்க தான் எனக்கு ஒரு கல்யாணம் ஆகிடுச்சுன்னு நினைச்சுக்கிட்டு இருக்காங்க. ஆனா என் கூட வேலை பார்க்கிற எல்லோருக்கும் எனக்கு கல்யாணம் ஆகலை என்ற விஷயம் தெரியும்ல. வேலை பார்க்கிற இடத்தில உன் மாமனுக்கு சில பல ஃபேன்ஸ்

இருக்காங்க தெரியுமா?'' என்றதும் அவனை கிள்ளி வைத்தாள்.

''ஆ'' என்று பொய்யாய் அலறியவன், அவர்களில் யாரையாவது லவ் பண்ணி கல்யாணம் பண்ணி இருப்பேன். என்றான்.

''இந்த உண்மை யாருக்குமே தெரியாதா?''

''கைலாஷ் குடும்பத்துக்கு நடந்த எல்லாமே தெரியும். மீதி பிரண்ட்ஸுக்கு இப்படி ஒரு விஷயம் உலவுதுன்னே தெரியாது.''

சிறிது நேரம் அங்கே அமைதி நிலவியது. விக்ரம் மீண்டும் தன் கதையை தொடர ஆரம்பித்தான்.

''நான் நிறைய முறை உன்கிட்ட உண்மையை சொல்ல வந்தேன் கயல். நான் வாய் திறந்து சொல்ல வரும் போதெல்லாம் நீ அந்த இடத்தை விட்டு காணா மல் போய் இருப்ப. நானும் அப்புறமா சொல்லிக்க லாம்னு அப்படியே விட்டுடுவேன்.

நீ கோபிச்சுக்கிட்டு ஊருக்கு போனதும் இதுக்கு மேல இந்த உண்மையை சொல்லாமல் இருக்கக் கூடாதுன்னு நினைச்சேன். ஆனால் அதை நேரில் தான் சொல்ல ணும்னு நினைச்சேன்.

ஆனா ஊரில் இருந்து வந்ததுக்கு அப்புறமா நமக் கிடையே ஏஞ்சல் பத்தின பேச்சு வரலையா... நானும் சொல்ல மறந்துட்டேன். ஆனா என்னைக்கிருந்தாலும் உன்கிட்ட மட்டுமாவது உண்மையை சொல்லி இருப்பேன் கயல்.''

''அன்னைக்கு அமெரிக்கா கிளம்பும் முன்னாடி போனிலேயே சொல்லி இருக்கலாமில்ல.''

"எவ்வளவு பெரிய விஷயம்! அதை இப்படி உன் முகம் பார்த்து சொல்லணும்னு ஆசைபட்டேன். ஆனா நான் எதிர்பார்த்த ரியாக்ஷனை காணோம். இதுக்கு நான் போனிலேயே சொல்லி இருக்கலாம் போல." என்றதும் அவள் முறுவலித்தாள்.

"ஸ்பெஷலா கவனிக்கணுமா? கவனிச்சுடலாம்." என்றவள் அவனை வம்பு இழுக்க முடிவு செய்தாள்.

அவள் தன் உள்ளங்கையில் முத்தம் வைத்து பறக்க விட்டு, "பிடிச்சுக்கோங்க மாமா." என்று நக்கலாய் சொன்னாள்.

அவன் அதை பிடிப்பதாக பாவனை காட்டி அவள் வாய் அருகே தன் கையை கொண்டு வந்து நிறுத்தி, "பாரு! என் கையிலே சிக்காமல் உன் உதட்டுல போய் ஒட்டிக்கிச்சு. அதை அங்கே இருந்து எடுத்துக்கிறேன்." என்றவன் அவளது உதடுகளை சிறை செய்தான்.

அவனது முதுகில் ஒரு அடி போட்டவள் அவனின் முத்தத்தில் கிறங்கி தான் போனாள்.

அவன் அவளது உதடுகளை விடுவித்ததும், "நீங்க சரியான கேடின்னு தெரிஞ்சிருந்தும் உங்களை ஏமாத்த பார்த்தேன் பாருங்க." என்று அலுத்துக் கொண்டாள்.

"எனக்கு வரப் போகிறவர் என்னை நெஞ்சார நேசிக்கிறவரா இருக்கணும்னு நான் எதிர்பார்த்தேன். உங்க முதல் மனைவியை நீங்க லவ் பண்ணி கல்யாணம் பண்ணுனீங்கன்னு கேள்விப்பட்ட போது உங்க மனசிலே ஒரு ஓரத்திலாவது எனக்கு இடம் குடுப்பீங்களான்னு நான் பயந்ததுண்டு. ஆனா உங்க நெஞ்சமெல்லாம்

எனக்கான நேசம் தான் இருக்குன்னு தெரியுறப்போ... எப்படி இருக்கு தெரியுமா?'' என்று கேட்டவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

''மாமா! என்னை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு கூட்டிட்டு போறீங்களா? உங்களை ரெண்டாவதா கல் யாணம் பண்ணனுமான்னு நான் அவ்வளவு யோசிச் சேன். வருத்தப்பட்டேன்னு சொல்லுறது தான் சரி.'' என்றவள் அன்றைய தன்னுடைய மனநிலையையும் கோவிலில் வைத்து தான் எடுத்த முடிவையும் தெரி வித்தாள்.

''உன் மனசிலே எனக்கு மண்டகப்பிடி நடத்தி இருக் கியா? இது தெரியாமல் உனக்காக உண்மை எல்லாம் மறைச்சு சிம்பிளா கல்யாணம் பண்ணினேனே! இதெல் லாம் தேவையாடா விக்ரம்!'' என்று நக்கல் செய்தவன்,

அவளது உச்சியில் முத்தமிட்டு, ''கோவிலுக்கு கண் டிப்பா கூட்டிட்டு போறேன்டா. எனக்கு இப்படி ஒரு மக்கு பொண்டாட்டியை குடுத்ததுக்கு நானும் ரொம்ப நாளா அந்த அம்மனுக்கு நன்றி சொல்லணும்னு நினைச்சுகிட்டு தான் இருந்தேன்.'' என்றான்.

"நான் இந்த விஷயத்தை எங்க வீட்டுல சொல்லட்டுமா?"

''ம்ம்ம் சொல்லிக்கோ.'' என்றதும் தன் அலைபேசியை எடுத்து அவர்களின் வீட்டில் உள்ள அனைவரிடமும் பேசினாள்.

இப்படியும் நடக்குமா? என்று அவர்கள் முதலில் ஆச்சரியப்பட்டனர். பின்னர் கயல்விழி தான் விக்ரமின் முதல் தாரம் என்பதை நினைத்து ஆனந்தப்பட்டனர். அழகரின் மனம் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

சிறிது நேரம் பேசிவிட்டு அந்த அழைப்பை துண்டித்தாள்.

''என்ன வீட்டுல எல்லோரும் ஹாப்பியா?''

''இதை விட எங்களுக்கு வேற என்ன வேணும்? எல்லோருக்கும் அவ்வளவு சந்தோஷம். அழகர் அழறான்னு நினைக்கிறேன்.''

''ம்ம்ம் சொட்டை மண்டையனை எதிர்பார்த்தவன் தானே! இன்னைக்கு அது எதுவுமே இல்லைன்னு தெரிய வரும் போது கொஞ்சம் எமோஷன் ஆவது சகஜம் தான். அவனுக்கு உன் மேல ரொம்ப பாசம்ல.''

''ஆமா மாமா. எனக்கு அண்ணா பிறந்து இருக்கணும்னு அன்னைக்கு ரொம்ப வருத்தப்பட்டான்.''

''நீ அவனோட அக்காவா இல்லாமல் அம்மாவா இருந்து அவனை நல்லா பார்த்துக்கோ.'' என்றதும் தலையாட்டினாள்.

''அந்த மொட்டை கடிதத்தை யார் எழுதினா?''

''யாருக்கு தெரியும். செல்வத்தை பிடிக்காத யாராச்சும் எழுதி இருக்கலாம்.''

''அந்த லெட்டரால உங்களுக்கு இவ்வளவு பிரச்சனை வந்திருக்கு. அவன் யார் என்னன்னு விசாரிக்கணும்னு உங்களுக்கு தோணினதே இல்லையா?''

''எனக்கு அவன் மேல எந்த கடுப்பும் இல்லை. என்னை நம்பாத எங்க அம்மா மேல தான் கோபம். நீ என் வாழ்க்கையில வந்த பின்னால அந்த கோபமும் மறைஞ்சிடுச்சு.''

"அந்த மொட்டை கடித விஷயத்திலே ஒருவேளை செல்வம் மாமா உங்க மேல பழி போட்டு இருப்பாரா?"

"எனக்கு அப்படி தோணலை கயல். சின்ன வயசிலே தப்பெல்லாம் அவன் செஞ்சுட்டு என் மேல பழி போட் டான் தான். ஆனா நான் வீட்டை விட்டு ஹாஸ்டல் போனதுக்கு அப்புறமா எங்களுக்கு இடையே அப்படி எந்த சண்டையும் வந்ததில்லை."

வளர்ந்து பெரியவன் ஆன பின்னாடி அவனுக்கே ஒருவித குற்ற உணர்ச்சி தோன்றி இருக்கலாம். அதனால என்கிட்ட நெருங்கி பேச முயன்றதில்லை. சைலன்ட்டா ஒதுங்கி போக ஆரம்பிச்சான். அதனால அவன் எதுவும் எங்க அம்மாகிட்ட சொல்லி இருக்க மாட்டான். எங்க அம்மா தான் வழக்கம் போல தப்பு தப்பா கெஸ் பண்ணி இருப்பாங்க.

"அதை விடுங்க. லேகா அக்கா சொல்லுற மாதிரி உங்க அண்ணன் இப்படி ஒரு தப்பை பண்ணி இருப்பார்னு உங்களுக்கு தோணுதா?"

"தப்பு பண்ணலைன்னா அப்பா போன் செஞ்சு கேட்ட போதே அவன் மறுத்து சொல்லி இருக்கணுமே. அவன் அமைதியா இருந்ததை பார்த்தால் தப்பு ஊர்ஜிதம் ஆகுது தானே?"

"அப்படி தப்பு பண்ணுறவர் லேகா அக்காவுக்கு சப்போர்ட் பண்ணி உங்களை எதிர்த்து கேள்வி எல்லாம் கேட்டாரே!"

"அது கூட குற்ற உணர்ச்சியில் செய்ததாய் இருக்க லாம் கயல். அண்ணிக்கு செய்யுற துரோகம் அவன்

மனதை உறுத்தி இருக்கும். அந்த தப்பை சரி பண்ண முடியாது. அதனால மீதி விஷயங்களில் அண்ணியை சப்போர்ட் பண்ண நினைச்சு இருக்கலாம்.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது, விக்ரம்! என்று அழைத்து நடராஜன் கதவை தட்டினார்.

''இதோ வரேன்பா.'' என்று குரல் கொடுத்தவாறே விக்ரம் கதவை திறக்க சென்றான்.

தாயும் தந்தையும் அங்கே நிற்பதை கண்டவன், ''உள்ளே வாங்கப்பா. உள்ளே வாங்கம்மா.'' என்று உள்ளே அழைத்து அவர்களை அமர வைத்தான்.

''சாரிடா விக்ரம்.'' என்று சிவகாமி தழுதழுப்பான குரலில் மன்னிப்பு கேட்டார்.

''அம்மா ப்ளீஸ்! நடந்த தப்புல என்னோட பங்கும் இருக்கு. நீங்க கேட்ட உடனே உண்மையை சொல் லாமல் ஆமாம் சாமி போட்டது நான் தானே. அதனால நீங்க மட்டும் தப்பு செய்யல. நானும் தான் தப்பு செஞ்சிருக்கேன். நீங்க ஃபீல் பண்ணாதீங்க.''

''இன்னும் சொல்லப் போனால் நாம ரெண்டு பேரும் செஞ்ச தப்பால தான் எனக்கு கயல் கிடைச்சாள். அவ என் வாழ்க்கையிலே வந்த பின்னால தான் என்னோட வாழ்க்கை ரொம்ப அழகாச்சு. நான் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழணும்னு கனவு கண்டேனோ அது சாத்திய மாச்சு. அதனால நாம இந்த கல்யாண பொய்யை நினைச்சு எதுவும் வருத்தப்பட வேண்டாம்மா.''

''நீ சொல்லுறது சரி தான் விக்ரம். ஆனா ஊரெல்லாம் நீ ரெண்டு கல்யாணம் பண்ணினவன்னு சொல்லுறாங் களே... அந்த பேர் என்னால தானே உனக்கு வந்துச்சு.''

''அம்மா! அதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. உண்மை என்னன்னு கயலுக்கும் அவ குடும்பத்துக்கும் தெரிஞ்சால் போதாதா? ஊர் பூராவும் எதுக்கு தெரியணும்? விடுங்கம்மா.''

''சாரிடா விக்ரம்.'' என அவர் மீண்டும் மன்னிப்பு கேட்டார்.

''சின்ன வயசிலே நீங்க செல்வம் பண்ணின தப்புக்கெல்லாம் என்னை தண்டிச்சீங்க இல்ல... அதுக்காக நீங்க மன்னிப்பு கேட்கிறதா இருந்தால் நான் உங்க மன்னிப்பை ஏத்துக்கிறேன்மா.''

''என்னைக்காவது நீ உண்மையை சொல்லி இருக்கலாமே விக்ரம். ஏன் இப்படி எதையுமே அம்மாகிட்ட சொல்லாமல் இருந்துட்டே?''

''அன்னைக்கு கதாகலட்சேபத்துல கிருஷ்ணர் கதை கேட்டோம்ல. ஏன் வந்து காப்பாத்தலைன்னு கேட்டப்போ கிருஷ்ணர் என்ன சொன்னார்?''

''யாராச்சும் என்னை கூப்பிட மாட்டாங்களான்னு நான் மண்டபத்துக்கு வெளியே தான் காத்துக்கிட்டு இருந்தேன். ஆனா யாருமே என்னை கூப்பிடலை. நான் என்ன செய்யட்டும்னு கேட்டார் இல்ல.''

''அது தான்மா நம்ம வாழ்க்கையிலும் நடந்துச்சு. எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது என்ன நடந்ததுன்னு என்னை பார்த்து கேட்பீங்கன்னு நான் பல முறை காத்திருந்தேன். ஆனா நீங்க என்கிட்ட கேட்டதே இல்லை.''

''நம்ம ரெண்டு பேருக்கும் இடையிலே ஒரு கோடு இருந்துச்சு. நீங்க உங்க மூத்த பையன் செல்வத்தின் மேல வச்ச பாசம் என்கிற கோடு.''

''அந்த பரந்தாமன் கிருஷ்ணன் மண்டபத்துக்கு வெளியே நின்ன மாதிரி நானும் கோட்டுக்கு அந்தப் பக்கமா நின்னுக்கிட்டு நீங்க என்னை கூப்பிட்டு விசாரிக்கும் அந்த நொடிக்காக காத்துக்கிட்டு இருந்தேன்.''

''ஆனா நீங்க உங்க பெரிய மகன் மேல வச்ச பாசத்தால கோட்டுக்கு இந்தப் பக்கம் வரவே இல்லைம்மா. நீங்க என்னைக்காவது என்கிட்ட நடந்தது என்னன்னு விசாரிச்சால் நான் உண்மையை சொல்லி இருப்பேன். ஆனால் நீங்க என்னைக்குமே செல்வத்தை தான் நம்பினீங்க. உண்மையை தெரிஞ்சுக்க விரும்பலை. நான் என்ன செய்யட்டும்?''

சிவகாமி பாவமாய் தன் மகனை பார்த்தார். அவரது கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிந்தோடியது. விக்ரம் எழுந்து அவர் அருகே சென்று அவர் முன் மண்டியிட்டு அமர்ந்தான்.

''அம்மா! ப்ளீஸ் அழாதீங்க. சின்ன வயசிலே எனக்கு உங்க மேல கோபம் இருந்துச்சும்மா. ஏன்னா அது அறியாத வயசு. ஆனா இப்போ எனக்கு எந்த கோபமும் இல்லை.''

''தப்பு செஞ்சால் நீங்க அடிப்பீங்கன்னு செல்வத்துக்கு உங்க மேல பயம். அவன் ஆள் நோஞ்சானா இருப்பானா.. நீங்க அடிச்சால் செமையா வலிச்சு இருக்கும். அதான் அவன் எஸ்கேப் ஆக என்னை கோர்த்து விட்டு தப்பிக்க ஆரம்பிச்சான். அப்புறம் அதுவே தொடர் கதையா போயிடுச்சு.''

''உங்க மேல எனக்கு என்னைக்கும் வெறுப்பு வந்ததில்லைம்மா. நான் நம்ம வீட்டுலயே இருந்திருந்தால்...

பெரியவன் ஆனதும் உங்ககிட்ட இயல்பா பேசி சிரிச்சு இருப்பேனா இருக்கும்.''

''ஆனா ஹாஸ்டல் வாழ்க்கை என்னை உங்ககிட்ட இருந்து கொஞ்சம் விலக்கி வச்சதுல எனக்குள்ளே ஒரு ஒதுக்கம் வந்துடுச்சு.''

''நான் என்னைக்கும் உங்க ரெண்டு பேரையும் மீறி எந்தக் காரியமும் செய்ய நினைச்சதில்லை. அப்படி இருக்கிறப்போ நீ கல்யாணம் பண்ணிக்கிட்டியான்னு கேட்டதும்... ரொம்ப வருஷத்துக்கு அப்புறமா எனக்கு உங்க மேல அன்னைக்கு செம கோபம் வந்துச்சும்மா.''

''அதனால உங்ககிட்ட இருந்து இன்னும் கொஞ்சம் ஒதுங்க ஆரம்பிச்சேன். ஆனால் அப்பவும் நான் உங் களை வெறுத்திடலை. கயல் எனக்கு கிடைச்சதும் உங்க மேல இருந்த கோபம் என்னை விட்டு போயிடுச்சு.''

''எந்த ஒரு விஷயமும் காரண காரியம் இல்லாமல் நடப்பதில்லைன்னு நான் அன்னைக்கு புரிஞ்சுக்கிட்டேன்.''

''நீங்க எப்படி நடந்துக்கிட்டாலும் இந்த ஜென்மத்துல நீங்க தானேம்மா எனக்கு அம்மா. அந்த உறவு மாறி டாதே.''

இத்தனை வருடத்தில் அவன் இந்த அளவிற்கு மனம் திறந்தோ உருக்கமாகவோ பேசிக் கேட்டறியாத அவனது பெற்றோர் இருவரும் மனம் நெகிழ்ந்து தான் போயினர்.

நடராஜன் தன் மகன் அருகே வந்து அவனது தலை மேல் கை வைத்து அழுத்தினார்.

''நான் எப்பவுமே உன்னை பத்தி ரொம்ப பெருமையா நினைப்பேன் விக்ரம். உன்னோட படிப்பாலும் பதவி

யாலும் சமூகத்துல உனக்கு கிடைச்ச மரியாதையை பார்த்து ஒரு தகப்பன் அடைஞ்ச பெருமை அது! ஆனா இன்னைக்கு நீ எங்க மேல வச்சிருக்கிற பாசத்தை பார்த்து இவன் என் பிள்ளைன்னு கர்வமா ஃபீல் பண்ணுறேன்டா.'' என்று நடராஜன் தழுதழுப்பாய் கூறினார்.

சிவகாமி தன் மகனின் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டார். கண்களில் நிறைந்த நீரோடு மகனை பார்த்து புன்னகைத்தார்.

''இந்த அம்மாவை மன்னிச்சதுக்கு ரொம்ப தாங்க்ஸ்டா விக்ரம்.''

தன் கண்களில் வழியும் ஆனந்தக் கண்ணீரை கயல்விழி துடைத்துக் கொண்டாள்.

# 39

அப்போது கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. நடராஜன் வெளியே சென்று மாடியில் இருந்து கீழே பார்த்தார்.

திரும்பி வந்தவர், ''செல்வம் வந்துட்டான். வாங்க கீழே போகலாம்.'' என்று அழைத்தார். அனைவரும் கீழே இறங்கி வந்தனர்.

இவர்கள் அனைவரும் மாடியில் இருந்து கீழே இறங்கி வந்த பொழுது செல்வம் ஒரு பெண்ணுடன் வீட்டிற்குள்

நுழைந்தான். அந்த பெண்ணின் கையில் இரண்டில் இருந்து மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை இருந்தது.

இவர்கள் அனைவரும் வீட்டினுள் நுழைந்தனர்.

அந்த குழந்தை அப்படியே செல்வத்தின் சாயலில் இருந்தது. அக்குழந்தையின் சாயலே அவர்களுக்கு உண்மையை விளக்கி விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

தன் பையனா இப்படி செய்தான்? என்று சிவகாமி யால் நம்பவே முடியவில்லை.

விக்ரமை கூட கவனிக்காமல் நான் இவனை தானே கண்ணுக்குள்ள வச்சு பார்த்துக்கிட்டேன். விக்ரம் என் கிட்ட ஒட்டாத பிள்ளை. இவன் தான் என்கிட்ட பாசமா இருக்கிற பிள்ளைன்னு நான் நினைச்சதெல்லாம் பொய்யா?

இவ்வளவு பெரிய காரியத்தை எப்படி இவனால செய்ய முடிஞ்சது? முதல் கல்யாணம் அப்பா அம்மாவுக்கு தெரி யாமல் பண்ணி இருந்தால் கூட மன்னிச்சு ஏத்துக்கலாம்.

ஊரும் உலகமும் பார்க்க நாங்க தானே இவனுக்கு ஒரு பெண்ணை கட்டி வச்சோம். யாருக்கும் தெரியாமல் இப்படி இன்னொரு வாழ்க்கையை அமைச்சிருக் கான்னா... அந்த கல்யாணத்தையும் அதை நடத்தி வச்ச எங்களையும் இவன் மதிக்கலைன்னு தானே அர்த்தம்.

இப்படி ஒரு தப்பு செய்யும் முன்னாடி எங்க யாரையுமே அவன் நினைச்சு பார்க்கலையா? நான் இதுவரைக்கும் இவனை நம்பி எதையுமே விசாரிக்காமல் தப்பான தீர்ப்பு

சொல்லி இருக்கேன். அதனால பாதிக்கப்பட்டது விக்ரம் மட்டும் இல்லை. செல்வமும் தான்.

தப்பு செஞ்சுட்டு பழியை தூக்கி இன்னொருத்தர் மேல போட்டுட்டால் தண்டனை கிடைக்காதுங்கிற தப்பான அபிப்ராயம் செல்வம் மனசிலே உருவாக நான் தான் காரணமாய் இருந்திருக்கேன். என்னால தான் இவ்வளவு பெரிய தப்பை இவ்வளவு அசால்ட்டா செஞ்சிருக்கான்.

இத்தனை நாளும் செல்வம் செஞ்ச தப்புக்கு நான் தண்டனை குடுத்தது இல்லை. ஆனா இப்போ இவன் செஞ்சு இருக்கும் காரியத்துக்கு நான் தண்டனை குடுக்கலைன்னால் நான் நல்ல அம்மா இல்லை என நினைத்த சிவகாமி செல்வத்தின் கன்னத்தில் மாறி மாறி நாலு அறை கொடுத்தார்.

இந்த முறையும் அவர் விசாரிக்காமல் தான் தீர்ப்பளித்தார். ஆனால் முதல் முறையாக சரியான தீர்ப்பை கொடுத்தார்.

சிவகாமி செல்வத்தை அறைவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அதனால் அனைவரும் ஸ்தம்பித்தனர்.

அந்த பெண் சிவகாமியிடம், ''யாருங்க நீங்க? எதுக்கு என் ஹஸ்பண்டை அறையுறீங்க?'' என்று கேட்டாள்.

சிவகாமி செல்வத்தை பார்த்து, கேட்கிறாள் இல்ல... ''நான் யாருன்னு சொல்லுடா. என்ன சொல்லுறதுன்னு யோசிக்கிறியா? இத்தனை நாளா நான் செஞ்ச தப்புக் கெல்லாம் ஒரு அப்பாவியை தண்டிச்ச சூப்பர் நீதிபதின்னு சொல்லு. இன்னைக்கு தான் என்னை பத்தி முழுசா தெரிஞ்சுக்கிட்ட ஒரு முட்டாள்னு சொல்லு.'' என்றார்.

சிவகாமியின் பதிலையும் செல்வத்தின் அமைதியையும் கண்டு அந்த பெண் ரொம்பவே குழம்பி போனாள்.

அவள் செல்வத்திடம், ''இது யாரு வீடுங்க? இங்கே எதுக்கு என்னை கூட்டிட்டு வந்தீங்க? இவங்கயெல்லாம் யாரு?'' என்று கேட்டாள்.

''இவங்க என்னோட அம்மா. இவர் என்னோட அப்பா. இவன் என்னோட தம்பி.'' என்று செல்வம் மெல்லிய குரலில் தன் குடும்பத்தினரை அறிமுகப்படுத்தினான்.

''என்னது அம்மா அப்பாவா?! உங்களுக்கு யாருமே இல்லைன்னு இத்தனை நாளா சொன்னீங்களே. அது பொய்யா?!'' என்று அவள் அதிர்ச்சியோடு கேட்டாள்.

இதுக்கே இப்படி அதிர்ந்து போகுதே இந்த பொண்ணு... இன்னும் லேகாவை பார்த்தால் எப்படி அதிர்ந்து போவாளோ என்று அனைவரும் யோசித்தனர்.

வெளியே கேட்ட சப்தத்தால் படுக்கை அறையில் இருந்து லேகாவும் அவளது பெற்றோரும் பல்லவியை கூட்டிக் கொண்டு வரவேற்பறைக்கு வந்தனர். செல்வம் இன்னொரு பெண் மற்றும் குழந்தையுடன் வந்திருப்பதை கண்டு அதிர்ந்தனர்.

லேகாவின் தாய் சிவகாமியிடம், ''உங்க பையன் லட்சணத்தை பார்த்தீங்களா சம்பந்தி? அந்த பொண்ணை வீட்டுக்கே கூட்டிட்டு வந்து நிக்கிறார். குழந்தை வேற இருக்கா? அப்போ என் பொண்ணு வாழ்க்கை? உங்க பையனை நம்பி ஒரு பெண்ணை பெத்து வச்சிருக்காளே! அவளோட வாழ்க்கை என்ன ஆவது?'' என்று பல்லவியை காட்டி ஒப்பாரி வைத்தார்.

அந்த பெண் அதிர்வோடு செல்வத்தை பார்த்து, ''இவங்க என்ன சொல்லுறாங்க?'' என்றாள்.

''அவர்கிட்ட என்ன கேள்வி. என்னை கேளு நான் சொல்லு றேன். நான் தான் அவரோட பொண்டாட்டி. இவள் என்னோட பொண்ணு. எங்களுக்கு கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆகுது.'' என்று லேகா இடைபுகுந்தாள்.

அந்தப் பெண் செல்வத்தின் சட்டை காலரை பற்றி, ''அவங்க சொல்லுறதெல்லாம் உண்மையா?'' என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

செல்வம் ஆமாம் என்று தலையாட்டவும் அவனது சட்டையில் இருந்து கையை எடுத்தவள் அப்படியே பொத்தென்று சோபாவில் அமர்ந்து விட்டாள்.

செல்வம் அவள் அருகே அமர்ந்து, ''இங்கே பார்.'' என்று அவளது தோள்களில் கை வைத்தான்.

அவள் பட்டென்று அதை தட்டி விட்டாள். அவனை தீ பார்வை பார்த்தாள்.

''என்னைக்கு இருந்தாலும் நீ தான் என் மனைவி.'' என்று செல்வம் அவளிடம் வசனம் பேசவும்,

''லேகா சப்தமாக, அப்போ நான் யாரு?'' என்று கேட்டாள்.

''அதேயே தான் நானும் கேட்கிறேன். நீ யாரு எனக்கு? என்னைக்காவது என்னை புருஷனா... வேண்டாம் ஒரு மனுஷனா மதிச்சு நடந்து இருக்கியா?'' என்று செல்வம் தன் குரலை உயர்த்தி லேகாவிடம் சண்டையிட ஆரம் பித்தான்.

''நான் ஏன் உன்னை மதிக்கணும்? நீ எல்லாம் எனக்கு இணையா?'' என்று சட்டென்று ஒருமைக்கு தாவிய லேகா எகத்தாளமாய் கேட்டாள்.

''இந்த நினைப்பு தான் என்னை இன்னொரு கல்யாணம் பண்ண வச்சது. நான் தெரியாமல் தான் கேட்கிறேன்.. என்னை விட எதுல நீ உசந்துட்டே? எங்க வீட்டை விட வசதியான வீட்டுல பிறந்தியா? இல்லைன்னா என்னை விட படிப்பிலே உசந்து நிக்கிறியா? இல்லை குணத்துல? எதுல நான் உனக்கு இணையா இல்லைன்னு சொல்லுறே.''

''நான் நல்லா அழகான, பணக்கார மாப்பிள்ளையா எதிர் பார்த்தேன். உன்னை மாதிரி சுமாரான வரனை இல்லை.''

''கட்டினால் உன்னை தான் கட்டுவேன்னு நான் என்ன ஒத்தை காலில் தவமா இருந்தேன். என்னை பிடிக்கா தவள் என்னை எதுக்கு கல்யாணம் பண்ண சம்மதிச்சே?''

''எங்க அம்மா அப்பா தான் உன்னை கல்யாணம் பண்ணியே ஆகணும்னு வற்புறுத்தினாங்க.''

''அப்போ அந்த கோபத்தை நீ அவங்ககிட்ட காட்டி இருக்கணும். என்னைக்கு நீ பல்லவியை உண்டா னாயோ அன்னைக்கோட உனக்கும் எனக்குமான பந்தம் அறுந்து போச்சு. அதுக்கு அப்புறம் என்னைக்காவது நீ என்னை தொட விட்டிருப்பியா? ஒரு மனுஷனா மதிச்சு சமைச்சு தான் போட்டிருப்பியா? எப்போ பாரு உங்க அம்மா வீட்டுல போய் உட்கார்ந்துக்குவே. அங்கேயே சாப்பிட்டுட்டு வந்துடுவ. என்னை பத்தி என்னைக்கு கவலைப்பட்ட?''

''அத்தை! உங்க பிள்ளையை பார்த்தீங்களா? அவர் செஞ்ச தப்பை மறைக்க என்னையே குத்தம் சொல்லுறார். நான் என்னோட இஷ்டத்துக்கு தான் இருப்பேன். அதுக் காக இவர் என்னை விட்டுட்டு இன்னொரு பொண்ணு கழுத்திலே தாலி கட்டிடுவாரா? இந்த வீட்டை என்

போல எழுதி வைங்க. ஒசூர் வீட்டை பல்லவி போல எழுதி வைங்க.''

இதை கேட்ட லேகாவின் தாய், ''உனக்கு கிறுக்காடி பிடிச்சிருக்கு. இங்கே உன் வாழ்க்கை தத்தளிச்சுக்கிட்டு இருக்கு. இப்போ உட்கார்ந்து சொத்துக் கணக்கு பேசிக்கிட்டு இருக்க.'' என்று திட்டினார்.

''எனக்கு ஒரு பாதுகாப்பு வேண்டாமா? சொத்து என் பேர்ல இருந்தால் தான் இவரை என் கைக்குள்ள வச்சுக்க முடியும்.'' என்று அவள் வாதிட்டாள்.

லேகாவின் பெற்றோர் தங்கள் பெண்ணை கண்டு கடுப்பாகி தங்கள் தலையில் அடித்துக் கொண்டனர். அவர்களின் சண்டை தொடர ஆரம்பித்தது.

விக்ரம் தன் தாய் தந்தையை தனியே அழைத்து சென்று பேசினான்.

''அப்பா! நான் கிளம்புறேன்பா.''

''என்ன விக்ரம்... பாதியிலே போறேன்னு சொல்லுறே?''

''அப்பா! செல்வம் பண்ணினது தான் தப்பு. லேகா அண்ணி தப்பு செஞ்சு இருக்கலாம். இவன் பிரச்சனையை பெரியவங்ககிட்ட கொண்டு வந்து பஞ்சாயத்து பண்ணி அவங்களை சரி பண்ணி இருக்கணும். இல்லைன்னா முறையா தள்ளி வச்சதுக்கு அப்புறமா இன்னொரு பொண்ணு கழுத்திலே தாலி கட்டி இருக்கணும். இவன் அதையும் செய்யலை.

பாவம் அந்த பொண்ணுக்கு நம்ம யாரை பத்தியும் தெரியலை. லேகா அண்ணி பத்தி தெரிஞ்சிருந்தும் செல்வத்தோடு வாழ்க்கையிலே நுழைஞ்சிருந்தால்

கூட... எப்படி நீ இன்னொரு பெண் வாழ்க்கையை கெடுக்க போச்சு. அதுக்கு தண்டனையா ஒதுங்கி போன்னு சொல்லலாம்.

ஆனா அவங்க எதையும் தெரிஞ்சுக்காத அப்பாவியா இருக்காங்க. நாம யார் பக்கம் தீர்ப்பு சொல்ல முடியும்? உரலுக்கு ரெண்டு பக்கம் இடிங்கிற மாதிரி செல்வம் வாழ்நாள் முழுக்க கஷ்டப்படத் தான் வேணும்.'' என்றான்.

''நீ என்ன சிவகாமி சொல்லுறே?'' என்று நடராஜன் கேட்டார்.

''விக்ரம் சொல்லுறது சரி தான். செல்வம் செஞ்ச தப்புக்கு காரணம் லேகாவா இருக்கலாம். அதுக்காக செல்வம் பண்ணினதை சரின்னு எப்படி ஒத்துக்க முடியும்?''

''இந்த லேகா நம்மகிட்ட ஒட்டினதே இல்லை. சரி நம் மளை அவளுக்கு பிடிக்கலை போலன்னு நினைச்சேன். ஆனா இப்படி செல்வத்தையே பிடிக்காமல் இருந்திருப் பாள்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை. வாழ்க்கையை விட பணம் பெருசுங்கிற மாதிரி பேசுறாள்.''

''ஒசூர் வீட்டை மட்டும் கேட்டால் பரவாயில்லை. ஆனா அவள் இந்த வீட்டையும் இல்ல கேட்கிறாள். இதை எப்படி குடுக்க முடியும்? இந்த வீட்டுல என் ரெண்டு பிள்ளைகளுக்கும் இல்ல பங்கிருக்கு.'' என்று சிவகாமி அங்கலாய்த்தார்.

''அம்மா! இந்த பிரச்சனை ஒரு முடிவுக்கு வர இந்த வீடு தேவைப்பட்டால் நீங்க விட்டு குடுத்துடுங்க. எனக்கு இது வேண்டாம். உங்க ரெண்டு பேருக்கும் நான் இருக்கேன். நான் உங்களை பார்த்துக்குவேன்.''

“நீ சொல்ல வருவது எனக்கு புரியுது விக்ரம். நீ சொன்ன மாதிரி இதுக்கான தீர்வை அவங்க மூணு பேரும் தான் எடுக்கணும். நான் பார்த்துக்கிறேன். நீ கிளம்பு.” என்று சொல்லி நடராஜன் அவனையும் கயல்விழியையும் அனுப்பி வைத்தார்.

(இந்தக் கதையை பொறுத்த வரை செல்வமும் லேகா வும் துணை கதாபாத்திரங்கள் தான். அதனால் இந்த சண்டையையும் பிரச்சனையும் நான் இந்த இடத்தோடு நிறுத்திக் கொள்கிறேன்.)

கயல்விழியை அழைத்துக் கொண்டு விக்ரம் மதுரைக்கு வந்தான். அவர்கள் இருவரும் மீனாட்சி அம்மனை சென்று வணங்கினர். தங்கள் இருவரையும் வாழ்வில் இணைத்ததற்காக அந்த அம்மனிற்கு மனதார நன்றி கூறினர்.

# 40

ஒன்பதாவது மாதம் கயல்விழிக்கு வளைகாப்பு மிக சிறப்பாக நடந்தது. அவளை மதுரையில் கொண்டு போய் விட்டுவிட்டு விக்ரம் கிளம்பினான்.

“மாமா! டெலிவரிக்கு சரியா வந்துடுவீங்க தானே?”

அது எப்போ எப்படி வரும்னு யாருக்கு தெரியும். அது என் கையிலா இருக்கு என்று நினைத்தாலும் அவளிடம்,

''கண்டிப்பா வந்துடுவேன் கயல்.'' என்று கூறி சென்றான்.

அடுத்த பத்தாவது நாள் வார கடைசி விடுமுறை என்று அவன் மதுரைக்கு அவளை பார்க்க வந்த பொழுது அவளுக்கு பிரசவ வலி வந்தது. சுகப்பிரசவத்தில் கயல்விழி பெண் குழந்தையை பெற்றெடுத்தாள்.

அவள் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பும் வரை விக்ரம் மதுரையில் தங்கி இருந்தான். அதன் பின் மகளை பிரிய மனமே இல்லாமல் பிரிந்து சென்றான்.

அழகரின் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானது. அவன் இஞ்சினியரிங் பிரிவில் மிக நல்ல மார்க் வாங்கி இருந்தான்.

அவனுக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் கண்டிப்பாக இடம் கிடைக்கும் என்று விக்ரம் நம்பினான். விக்ரம் கணேசனிடம் பேசி அவனை சென்னையில் சேர்ப்பதற்கு சம்மதம் வாங்கினான்.

விடுதியில் தங்கி படிக்க அவரும் ஒப்பு கொண்டார். அதற்கு செலவாகும் பணத்தை விக்ரம் தருவதற்கு முன்வந்தான். கடனாக வேண்டுமானால் பெற்று கொள்வதாக கணேசனும் ஒத்துக் கொண்டார்.

தம்பியின் கனவு நிறைவேறப் போவது குறித்து கயல்விழி மிகுந்த சந்தோஷம் அடைந்தாள்.

குழந்தை பிறந்து பதினாறு நாட்கள் கழியவும் கயல்விழி குழந்தையுடன் சென்னைக்கு கிளம்பி

விட்டாள். அவளது பெற்றோரும் தம்பியும் அவளுடன் வந்தனர்.

சென்னை வந்து இறங்கியவர்களை அழைத்துக் கொண்டு விக்ரம் தன் வீட்டிற்கு சென்றான். சிவகாமி மகனையும் மருமகளையும் சேர்த்து நிற்க வைத்து மூவருக்கும் ஆலம் சுற்றி வரவேற்றாா்.

விக்ரமின் குழந்தையை பார்க்க கைலாஷ் தன் மனைவியோடு வந்தான். கைலாஷிற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு பையன் பிறந்திருந்தான். அவனையும் தூக்கிக் கொண்டு தான் வந்திருந்தார்கள்.

கைலாஷ் விக்ரமிடம், ''என் மருமகளை கையிலே குடுடா!'' என்று கேட்டு வாங்கி தன் கையில் வைத்து கொஞ்சினான்.

''மருமகளா? என்னடா புதுசா உறவு முறை சொல்லுறே?''

''கயல் என் தங்கச்சின்னா அவள் பொண்ணு எனக்கு மருமகள் தானே?''

''அப்படி சொல்லுறியா? நான் கூட பயந்துட்டேன். உனக்கு ஒரு பையன் இருக்கானே.... அதான் அட்வான்ஸ் புக்கிங் போடுறியோன்னு...'' என்று விக்ரம் நக்கல் செய்தான்.

கைலாஷின் குழந்தையை மடியில் வைத்து கொஞ்சிக் கொண்டிருந்த கயல், ''என் மருமகனுக்கு என்ன பொண்ணா கிடைக்காது? நாங்க ஏன் உங்க பொண்ணை அட்வான்ஸா புக் பண்ண போறோம்?'' என்றாள்.

கைலாஷ் கயலிடம், ''இது கூட நல்லா ஐடியாவா இருக்கேன்னு நான் நினைச்சேன். நீ ஏன் கயல் அப்படி சொல்லுறே!'' என்று கேட்டான்.

''அண்ணா! இவர் பொண்ணு இவரை மாதிரி இருந்தாள்னா... இப்படி ஒரு சம்பந்தியும் மருமகளும் உங்களுக்கு தேவையான்னு யோசிங்க.''

''அட ஆமா! நான் அதை யோசிக்கலையே. உன்னை மட்டும் நினைச்சு பார்த்தேன். இவனை மறந்துட்டேன்.'' என்று அவர்கள் இருவரும் கூட்டணி அமைத்து விக்ரமை கிண்டல் பண்ணினார்கள்.

கைலாஷின் அருகே அமர்ந்து தன் மகளின் தலையை வருடிக் கொடுத்த விக்ரம், ''கிரேட் எஸ்கேப்டா பேபி.'' என்றான்.

''ஆமா மருமகளே! உங்க அப்பன் உனக்கு உலகத்திலேயே சிறந்த மாப்பிள்ளையை பார்த்து தருவான்.'' என்று கைலாஷும்,

''குட்டி! உங்க அப்பாக்கு கண்ணுக்கு முன்னாடி இருக்கிற என் மருமகனை பார்த்தால் நல்லா மாப்பிள்ளையா தெரியலை. இவர் எப்படி உனக்கு சூப்பர் மாப்பிள்ளை பார்த்து தருவார்?'' என்று கயலும் கிண்டல் செய்தனர்.

ஒரு சூப்பர் பிரண்டையும் சூப்பரான பொண்டாட்டியையும் தேர்ந்தெடுக்க தெரிஞ்ச எனக்கு என் பொண்ணுக்கு ஒரு சூப்பர் மாப்பிள்ளை பார்க்க தெரியாதா என்ன? என்று கேட்டு விக்ரம் தன் புருவம் உயர்த்தவும்,

இதுக்கு என்ன பதிலை சொல்ல முடியும்? என்று கைலாஷும் கயல்விழியும் திருதிருத்தனர்.

கைலாஷ் மனைவி, ''விக்ரமண்ணா! யூ ஆல்வேஸ் ராக்.'' என்று சொல்லி சிரித்தாள்.

அனைத்து உறவுகளும் ஒரே இடத்தில் ஒன்று கூடிய தால் வீடே கலகலவென்று இருந்தது. மேலும் சிறிது நேரம் அரட்டை அடித்துவிட்டு கைலாஷின் குடும் பத்தினர் கிளம்பி சென்றனர்.

விக்ரம் தங்கள் அறையில் தன் மகளை மடியில் வைத்து கொஞ்ச ஆரம்பித்தான்.

''பேபி! அப்பாவை தேடி நம்ம வீட்டுக்கு வந்துட் டீங்களா?''

''இவரை பார்க்கணும்னு ஆசைப்பட்டு எங்க அம்மா கிட்ட சண்டை போட்டு சென்னைக்கு வந்தது நான். இவர் என்னடான்னா இவர் பொண்ணை கொஞ்சுறார்.''

கயலின் பேச்சு காதில் விழாத தினுசில் விக்ரம் தன் மகளை கொஞ்சுவதை தொடர்ந்தான்.

''என் அம்முக்குட்டி அப்பாவை ரொம்ப மிஸ் பண் ணீங்களா? அப்பாவும் என் பேபியை ரொம்ப மிஸ் பண்ணினேன்.''

அவன் ஆசையோடு கொஞ்சுவதை அவனது மகள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என் செல்லக்குட்டி... என் புஜ்ஜு குட்டி... என் அம்முக்குட்டி...''

''உங்களுக்கு இத்தனை வார்த்தை தெரியுமா மாமா? என்னைக்காவது இப்படி என்னை கொஞ்சி இருக் கீங்களா?

''நீ என்ன என்னோட பொண்ணா? நான் எதுக்கு உன்னை கொஞ்சணும்? எங்களை பார்த்து கண்ணு வைக்காமல் உங்க அப்பாகிட்ட போய் சண்டை போடு. போ!''

''அப்பா எங்கே விட்டேன்? என் புஜ்ஜு குட்டி என் அம்மு குட்டி...'' என்று அவன் தனது கொஞ்சலை தொடர்ந்தான்.

''என் செல்லக் குட்டி என் ஏஞ்சல்'' என்றதும் கயல் தன் கணவனை நறுக்கென்று கிள்ளி வைத்தாள்.

''ஆ'' என்று பொய்யாய் அலறியவன், ''பாருடா பேபி! உங்க அம்மா என்னை அடிக்கிறாள்.'' என்று மகளிடம் வத்தி வைத்தான்.

அவன் சொன்னது புரிந்தது போல் அவள் மகளும் தன் உதடு பிதுக்கி அழ ஆரம்பித்தாள்.

''பார்த்தே இல்ல என் பொண்ணை. என்னை அடிச்சால் அவளுக்கு வலிக்குது.'' என்று மனைவியிடம் பெருமை பேசியவன்,

''ஒண்ணும் இல்லைடா பேபி.'' என்று மகளை கைகளில் இப்படியும் அப்படியும் ஆட்டி சமாதானம் செய்தான்.

''ஆன்னு அலறுகிறேன்னு முகத்தை அஷ்ட கோணலா வச்சீங்க இல்ல.. அதை பார்க்க சகிக்காமல் தான் உங்க பொண்ணு அழறாள்.''

''அம்மா என்னை மட்டும் தான் அடிக்கிறாளா? இல்லை அப்பா இல்லாதப்போ உன்னையும் அடிக்

கிறாளா? அப்படின்னா சொல்லு. அவளை அவங்க அப்பா கூட பேக் பண்ணி அனுப்பிடுவோம்.''

கயல்விழி எதுவும் சொல்லாமல் அவன் மேல் சாய்ந்து கொண்டு தன் மகளை முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன கயல் ஒரு சண்டை போடுவேன்னு பார்த்தேன். இப்படி அமைதியா இருக்கே.''

''ம்ம்ம் என்னை எங்க அப்பா கூட அனுப்பிட்டு உங்க பொண்ணுக்கு பசி வந்தால் புவ்வாக்கு என்ன பண்ணுவீங்க? அதனால நீங்க என்னை அனுப்ப மாட்டீங்கன்னு எனக்கு தெரியும் மாமா. நான் எப்பவும் முட்டாளாவே இருப்பேனா?''

'அப்படியா சங்கதி. நீ என் மக்கு தான்னு இப்போ நிரூபிக்கிறேன் பாரு' என்று மனதில் கூறிக் கொண்டவன் அவளை ஏமாற்ற தயாரானான்.

''பேபி! நீ இன்னும் ஒரு வாரம் தானே இங்கே இருப்ப. அதனால அப்பா உன் கூடவே இருக்கேன். வீட்டில் இருந்தே வேலை செஞ்சுக்கிறேன். நீ முழிச்சு இருக்கும் நேரமெல்லாம் உன்னை என் கையிலயே தூக்கி வச்சுக்கிறேன்.''

''என்னது ஒரு வாரமா? ஏன் அப்படி சொல்லுறீங்க?'' என்று கயல் குழப்பத்தோடு கேட்டாள்.

''நான் விரிக்கிற வலையிலே கரெக்ட்டா வந்து சிக்குறாள் பாரு'' என்று மனதில் சிரித்துக் கொண்டவன் அவளுக்கு பதில் சொல்ல ஆரம்பித்தான்.

''என்ன கயல் தெரியாத மாதிரி கேட்கிற? பேபியோட பேர் சூட்டும் விழாக்காக தானே நீங்க எல்லோரும் வந்திருக்கீங்க.''

''அது சரி தான் மாமா. ஆனால் நான் ஏன் திரும்ப மதுரைக்கு போகணும்? இங்கேயே உங்க கூட இருக்க முடியாதா?''

''நீ குறைஞ்சது மூணு நாலு மாசம் ரெஸ்ட் எடுக்கணும் கயல். உனக்கு பத்தியமா சாப்பாடு பண்ணி போட எனக்குத் தெரியாது. உங்க அம்மாவால இங்கே மூணு மாசம் தங்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க.''

''அத்தை இங்கே நம்ம கூட இருப்பாங்கன்னு முன் னாடி சொன்னீங்களே.''

''நான் அப்படி சொன்னேன் தான். அம்மாவுக்கு கண்ணிலே காட்டராக்ட் ஆபரேஷன் பண்ண வேண் டிய சூழ்நிலை வரும் முன்னாடி அப்படி சொன்னேன். இப்போ தான் நிலைமை தலைகீழா மாறிடுச்சே.''

''அத்தைக்கு காட்டராக்ட் ஆபரேஷனா? நீங்க சொல்லவே இல்லை.''

''என்ன கயல் மறந்துட்டியா?'' என்று அவளிடம் கேட்டவன்,

குனிந்து தன் மகளிடம், ''என்னடா பேபி அம்மாவை ரொம்ப படுத்தி வைக்கிறீங்களா? இப்படி அப்பா சொன்ன முக்கிய விஷயத்தை கூட அம்மா சரியா காதிலே வாங்காமல் இருக்காள்.'' என்று கேட்டான்.

''ஏற்கனவே அம்மாவை பார்த்துக்கவே ஒரு ஆள் வேண்டி இருக்கும் கயல். இதுல உன்னையும் இங்கே வச்சு பார்த்துக்கணும்னா கஷ்டம் இல்லையா.''

அப்போ ஒரே வாரத்தில் மதுரைக்கு போயிடணுமா? இன்னும் மூணு மாசத்துக்கு இங்கே வர முடியாதா? என வருத்தப்பட்டவள் தங்கள் அறையில் இருந்து வெளி யேறி சென்றாள்.

''அப்பாவை தனியா சமாளிக்க சொல்லிட்டு அம்மாவை இங்கே இருக்க சொல்வோமா? ஆனால் அத்தையும் நோயாளி... நானும் வேலை செய்ய முடி யாதுன்னால்... அம்மாவால எங்களை பார்த்துக்க முடி யாதே.''

'அப்ப என்ன செய்யுறது? அத்தையோட ஆப ரேஷனை ஒரு மூணு மாசம் தள்ளி போட சொல்லு வோமா? அதுக்குள்ள நானும் தேறிடுவேன். நானே உங்களை பார்த்துக்கிறேன்னு சொல்லிப் பார்ப்போமா?' என நினைத்தவள் சிவகாமியிடம் சென்றாள்.

அவர்கள் குடும்பம் மொத்தமும் அங்கே தான் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அத்தை! உங்களுக்கு கண்ணு ரொம்ப உறுத்துதா?''

''கண்ணா? எனக்கா? இல்லையே!'' என்று குழம்பிய வாறு சிவகாமி பதில் அளித்தார்.

''டிவி பார்க்கும் போது கண்ணுல தண்ணி வருதா?''

''அப்படி எதுவும் இல்லையே கயல்.''

''கண்ணாடி போட்டு தானே புக் படிப்பீங்க. எழுத் தெல்லாம் நல்லா தெரியுதா? கண்ணு ஓவரா ஸ்ட் ரெயின் ஆகுதா?''

''கண்ணை வருத்திக்கிட்டு படிக்கிறதுக்கு நான் என்ன பரீட்சையா எழுதப் போறேன்?''

இவளுக்கு என்ன ஆச்சு. நல்லா தானே இருந்தாள் என்று அருகில் இருந்த நடராஜனும் மருமகளை குழப்பத்தோடு ஏறிட்டார்.

கயல்விழி வெளியே சென்றவுடன் குழந்தையை படுக்கையில் படுக்க வைத்து விட்டு விக்ரம் தங்கள் அறைக் கதவை மெலிதாக திறந்து வைத்துக் கொண்டு அவள் பேசுவதை கேட்டு சப்தமில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தான்.

இந்த அக்காக்கு என்ன ஆச்சு? எதுக்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுறாள்? இவள் இப்படி ஏதாச்சும் உளறினால் அதுக்கு பின்னாடி எங்க மாமாவோட திருவிளையாடல் இருக்கணுமே என நினைத்த அழகர் தன் அக்காவின் அறை பக்கமாய் எட்டிப் பார்த்தான்.

அறை வாயிலில் நின்று கொண்டு விக்ரம் வேடிக்கை பார்ப்பதை கண்டதும் அழகருக்கு தன் எண்ணம் சரி தான் என்று புரிந்தது.

ஒண்ணும் சொல்லாதே என்று விக்ரம் சைகை செய்தான்.

இருப்பினும் அழகர் தன் அக்காவை காப்பாற்றும் பொருட்டு, ''அக்கா! பாப்பா அழறாள். போய் என்னன்னு பாரு.'' என்றான்.

''அவள் அழற சத்தம் எனக்கு கேட்கலை. உங்க மாமா உள்ளே தான் இருக்கார். அவள் அழுதால் அவர் வந்து சொல்லுவார். உனக்கு உன் மருமகளை கொஞ்சணும்னா உள்ளே போய் அவளை தூக்கிட்டு வா.'' என்று கயல்விழி சொல்லவும்,

''இன்னைக்கு நீ பல்ப் வாங்குவதை யாராலும் தடுக்க முடியாது. நீ நடத்துக்கா!'' என்று நினைத்த அழகர் தன் தோள்களை குலுக்கி கொண்டான்.

கயல்விழி தன் மாமியாரிடம் மீண்டும் கேள்விகளை கேட்க ஆரம்பித்தாள்.

''அத்தை! நாங்க எல்லோரும் நல்லா தெரியுறோமா? இல்லை மங்கலா தெரியுறோமா?''

''என் கண்ணுல எந்த வித்தியாசமும் இல்லை கயல். எப்பவும் போல தான் இருக்கு.''

அப்பொழுதாவது அவள் கொஞ்சம் சுதாரிச்சு இருக்கலாம். அப்பொழுதும் அவள் விக்ரம் செய்த திருகு தாளத்தை கண்டுபிடிக்கவில்லை.

''எல்லாம் நார்மலா இருந்தால் நீங்க காட்டராக்ட் ஆபரேஷனை ஒரு மூணு மாசம் கழிச்சு பண்ணிக்கலாம் தானே அத்தை. இந்த மூணு மாசம் நீங்க என்னை பார்த்துக்கோங்க. நான் அதுக்கு அப்புறம் உங்களை பார்த்துக்கிறேன்.'' என்று டீல் பேசினாள்.

''என்னது கண்ணுக்கு ஆபரேஷன் பண்ணப் போறாங்களா? யாருமே சொல்லவில்லையே'' என்று கயலின் பெற்றோர் சிவகாமியை குழப்பத்தோடு ஏறிட்டனர்.

''நல்லா இருக்கிற என் கண்ணுக்கு ஆபரேஷன் செய்யணும்னு உன்கிட்ட ரீல் சுத்தின புண்ணியவான் யாரு? உன் புருஷனா? அவனுக்கு உன்னை வம்பு இழுக்கலைன்னால் பொழுது நகராதே!'' என்று சிவகாமி சொல்லவும், நடராஜன் நகைக்க ஆரம்பித்தார்.

''என்னது ரீலா?!'' என்று கயல் அதிர்ந்ததும், அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

''நீ பல்ப் வாங்க வேண்டாம்னு நினைச்சு தானே உன்கிட்ட பாப்பா அழறாள் இங்கே இருந்து போன்னு நான் சொன்னேன்.'' என்று அழகர் கூறினான்.

''அது என்ன சங்கேத பாஷையாடா? ஆனா இது கூட நல்லா இருக்கு. நான் பல்ப் வாங்க போறது உனக்கு முன்னாடியே தெரிஞ்சால் பாப்பா அழறாள்னு சொல்லு. நான் புரிஞ்சுக்கிட்டு உஷார் ஆகிக்கிறேன். ஆனா பாப்பா பெரியவள் ஆன பின்னாடியும் பாப்பா அழறாள்னு சொன்னால் நல்லா இருக்காதுல.''

''அப்போ எத்தனை வருஷம் ஆனாலும் நீ மாற மாட்டேன்னு சொல்லுறியா?'' என்று அழகர் கேட்டதும், அவர்கள் அனைவரும் நகைக்க ஆரம்பித்தனர்.

''அது...'' என்று விழித்தவள், ''அதை விடுடா. உனக்கு எப்படிடா தெரிஞ்சது? உன்கிட்ட மாமா முதல்லயே சொன்னாரா?'' என்று கேட்டாள்.

''மாமா என்கிட்ட எதுவும் சொல்லலை. எனக்கு உன்னையும் தெரியும். மாமாவையும் தெரியும்.''

''உங்க மாமாவுக்கு இருக்கு.'' என்று சொல்லிக் கொண்டே தங்கள் அறை நோக்கி சென்றாள்.

விக்ரம் அறையின் வாயிலில் நின்று கொண்டே, ''அம்மா! உங்களுக்கு ஆபரேஷன்னு சொன்னதுக்கு சாரி.'' என்று சப்தமாக உரைத்துவிட்டு தன் அறைக்குள் சென்று விட்டான்.

''எம்.ஜி.ஆர் செத்துட்டாரா ரேஞ்சுக்கு இவள் அப்பாவியாய் முகத்தை வச்சுக்கிட்டு கதை கேட்பாள். இவள் முகத்தை பார்த்து சிரிக்காமல் எப்படி தான் அவ னால ரீல் விட முடியுதோ தெரியலை.'' என்று சிவகாமி கூறவும், மீண்டும் எல்லோரும் நகைத்தனர்.

அறைக்குள் நுழைந்தவளை சிரிப்புடன் வரவேற்ற விக்ரம், ''என்னங்க மேடம் கொஞ்ச நேரத்துக்கு முன் னாடி தான் என்கிட்ட ஏமாற மாட்டேன்னு பெருமையா பேசின. எப்பூடி? அடுத்த நொடியே ஏமாத்திட்டேனா!'' என்றான்.

''அதுக்காக இப்படியா புளுகுவீங்க? ஒரு வரைமுறை இல்லை.'' என்று கேட்டு அவள் முறைக்க,

அவளது இடுப்பில் கை போட்டு தன்னருகே இழுத்துக் கொண்டவன், ''அது என்னமோ தெரியலை. என்ன மாயமோ தெரியலை... உன் முகத்தை பார்த்ததும் எனக்கு பொய் அருவி மாதிரி கொட்டுது.'' என்றான்.

''கொட்டும். கொட்டும். நல்லா நடுமண்டையில் நாலு கொட்டு வைக்கிறேன். அதுக்கு அப்புறம் பொய் எப்படி வருதுன்னு பார்ப்போம்.''

அவள் அவ்வாறு சொன்னதும் அவன் குனிந்து தன் தலையை அவளிடம் காட்டினான்.

''நீ என்னை என்ன செய்தாலும் எனக்கு சம்மதமே'' என்று தன்னிடம் சரணாகதி ஆகும் கணவனை கண்டு முறுவல் செய்தவள் அவனது தலையை கோதிக் கொடுத்தாள்.

அவள் தன் தலையில் கொட்டு வைக்காமல் கொஞ் சவும் நிமிர்ந்து அவளை பார்த்து முறுவலித்தான்.

தன் இரு கைகளால் அவனது கன்னம் தாங்கி, "நீங்க என் வாழ்க்கையில் வரலைன்னா நான் என்னவாகி இருப்பேன் மாமா?" என்று கேட்டாள்.

அதையே தான் நானும் கேட்கிறேன். "நீ இல்லைன்னா நான் என்னவாகி இருப்பேன்?"

"நான் இப்பெல்லாம் மீனாட்சி அம்மன்கிட்ட என்ன தெரியுமா வேண்டிக்கிறேன். நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அத்தனை ஜென்மத்திலும் என் மாமா கூடவே என்னை சேர்த்து வச்சுடுன்னு வேண்டிக்கிறேன். ஐ லவ் யூ மாமா." என்று சொல்லி அவனது கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

அவளுக்கான நேசம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்க அகமும் புறமும் மலர்ந்தவன் அவளை தன்னோடு அணைத்துக் கொண்டு அவளது உச்சியில் தலை சாய்ந் தான்.

★


நெஞ்சமெல்லாம்
நேசிப்பாயா
பிரேமா